திருமந்திரக்கருத்து



திருவாவடுதுறை ஆதீனம்

உ

சிவமயம்

திருவாவடுதுறை ஆதீனம்

பதினொன்றாவது

திருமந்திரமாநாட்டுமலர்

சோபகிருது—மார்கழி—29

1964

15-X



ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்

வெளியீடு எண் 185.

உ

சிவமயம்

திருமந்திரக்கருத்து

இது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்


கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்

1964

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

முன்னுரை

திருமுறைகளுக்குள்ளே 'திருமந்திரம்' என்று பெயர்பெற்று விளங்குவது பத்தாந்திருமுறையாகும். இதனையே 'திருமந்திரமாலை' என்று கூறுவதும் உண்டு. இது ஒன்பது தந்திரங்களைக் கொண்டது. இவ்வொன்பது தந்திரங்களும் காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களிலுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவாகும். இதனை,

'பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே'

என்னும் பாடலால் அறியலாம்.

காரண ஆகமத்தின் சாரமாக முதல்தந்திரமும், காமிகத்தின் சாரமாக இரண்டாந்தந்திரமும், வீராகமத்தின் சாரமாக மூன்றாந்தந்திரமும், சிந்தியத்தின் சாரமாக நான்காந்தந்திரமும், வாதுளத்தின் சாரமாக ஐந்தாந்தந்திரமும், வியாமளத்தின் சாரமாக ஆறாந்தந்திரமும், காலோத்தரத்தின் சாரமாக ஏழாந் தந்திரமும், சுப்பிரபேதத்தின் சார்மாக எட்டாந் தந்திரமும், மகுடாகமத்தின் சாரமாக ஒன்பதாந் தந்திரமும் அமைந்திருப்பதாக ஆசிரியரே கூறுகிறார். ஒன்பது ஆகமங்களையும் திருநந்திதேவர், ஸ்ரீகண்ட பரமேசுராிடத்தில் உபதேசம் பெற்று, அவைகளைத் திருமூலர் முதலான சீடர்களுக்கு அருளினார்.

திருமூலரது இயற்பெயர் 'சுந்தரன்' என்பதாம். இவருக்கு 'நாதன்' என்னும் பட்டம், நந்தியெம் பெருமானல் அளிக்கப்பட்டதாகும். ஆகவே, 'சுந்தர நாதன்' என்னும் பெயர், மூலனுடலில் புகுவதற்கு முன்பு இருந்ததாகத் தெரிகிறது. அறுபத்துமூன்று நாயன்மார்களில் திருமூலரும் ஒருவராவர். திருமூல ருக்குச் சீடர்கள் ஏழுபேர் உண்டு என்பதனை,

'மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனேடு
இந்த எழுவரும் என்வழி யாமே'

என்ற திருமந்திரப் பாடல் உணர்த்துகிறது.

தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற முறைப்படி, உலகத்தவர் உய்யும்படிக்குத் திருமூலர், திருமந்திரத்தை ஆண்டுக்கு ஒரு பாட்டாக, மூவா யிரம் ஆண்டு யோகிருந்து மூவாயிரம் பாடல்களைத் திருவாய்மலர்ந்தருளினர். திருமந்திரம் :- யாக்கை நிலையாமை, இளமைநிலையாமை, செல்வநிலையாமை இவைகளை உணர்த்தி, நிலையுடைப் பொருளை அறி வித்து உபதேசத்தைத் தொடங்குகிறது. மேலும், ஆன்மாக்களின் உள்ளத்துள்ளே இறைவன் எழுந் தருளியுள்ளான் என்பதனையும், அன்பினுல் அவனை வழிபட்டால் அவ்விறைவன் வெளிப்பட்டு அருள் புரிவான் என்பதனையும் அடிக்கடி பல பாட்டுக்களால் வற்புறுத்திக் கூறுகிறது. பின், கடவுள் தத்துவம் கூறி அவரது இயல்பையும் அறிவிக்கிறது. ஆன்மாக் களுக்குள்ள பாசத்தின் தடையையும் அத்தடையின் நீக்கத்தையும் அறிவிக்கிறது. சரியை கிரியை யோகம் ஞானம் இவைகளைத் தெரிவித்து, யந்திர தந்திரங் களையும் தெரிவிக்கிறது. ஞானகுரு தரிசனத்தை அறிவித்து, பின் சமாதிநிலையினையும் அறிவிக்கிறது.

திருக்கூத்துத் தரிசனத்தைக்கூறி, முத்தான்மாக்கள் மோனசமாதியில் வீற்றிருப்பார்கள் என்பதனையும் கூறுகிறது. இறுதியில் முத்தான்மாக்களின் தன்மையையும் தெரிவித்துத் தோத்திரத்துடன் முடிவு பெறுகிறது.

இத்துணைச் சிறப்புடைய திருமந்திரத்தை மக்களனைவரும் பயிலவேண்டும் என்ற திருவுளங்கொண்ட திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள் அவர்கள் ஆண்டுதோறும் திருமந்திர மாநாடு கூட்டியும், திருமந்திர நூலை வெளியிட்டும் வருகின்றார்கள்; இதனைத் தமிழுலகம் நன்கு அறியும். அம்முறையில் இவ்வாண்டு (சோபகிருது ஆண்டு) மகரத்தலைநாட் குருபூஜைவிழாவில் நடக்கும் திருமந்திர மாநாட்டு வெளியீடாகத் 'திருமந்திரக் கருத்து' என்னும் இந்நூலை வெளியிடும்படிக்கு அருளாணை வழங்கினார்கள். அவ்வாணையின்வண்ணம், திருமந்திரம் ஒன்பது தந்திரங்களுக்கும் கருத்துரை எழுதியுள்ளேன். இந்நூல், திருமந்திர மாநாட்டு வெளியீடாக வெளிவருகிறது. அன்பர்கள் படித்துப் பயன்பெறுவார்களாக.

அடியேனையும் இப்பணியில் பணித்த ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் பொன்னார் திருவடிகளுக்கு என்றென்றும் கடப்பாடுடையேன்.

இங்ஙனம்,

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்

உபயபாத சேகரன்,

திருவாவடுதுறை
6—1—1964.

ஞானானந்தா.

உ


சிவமயம்

திருமூலர் வரலாறு


அளவில்லாத பலவூழிக்காலங்கள் இறைவனது அண்மையிலிருந்து வணங்கித் தவத்தில் இருந்த புண்ணியனும், மூன்று காலமும் உணரும் புனிதனும், அருளைப்பொழியும் கண்களையுடையவனும், கிருபையே பரிணாமமாகி விளங்கும் திருவுருவை உடையவனும், விபூதி உருத்திராக்கம் முதலிய வேடப்பொலிவினால் எல்லாவுயிர்களின் குற்றங்கள் அனைத்தையும் போக்குகின்ற திவ்விய தேஜஸை உடையவனும், வேதம் சிவாகமம் இவைகளின் உண்மைப்பொருள்களின் நுட்பங்களையெல்லாம் இறைவனது அருள்பெற்ற நந்தியின் திருவருளால் அடைந்த நன்மையுடையோனும் ஆகிய எண்வகைச் சித்திகளைப்பெற்ற சிவயோகி (சுந்தர நாதன்) ஒருவன், திருக்கயிலையைவிட்டுவந்து, பொதிய மலையை அடைந்து அகத்திய முனிவரைத் தரிசிக்க எண்ணங்கொண்டான். இதனை,

'எண்ணில்பல வூழிக்கா லங்களெலாம் ஈசனடிக்கு
அண்ணியனு யிருந்துபணிந்து அளவிலாத் தவமேவும்
புண்ணியன்முக் காலமுணர் புனிதனருள் பொழிவிழியன்
தண்ணளியே பரிணமித்துத் தயங்குதிரு வுருவானேன்.

பூதிசா தனவேடப் பொலிவினால் கண்டவுயிர்க்
கோதெலாம் அகற்றுமெழிற் குறியுடைய தேசுடையான்
வேதமுடி வாகமத்தின் மெய்ப்பொருளின் நுட்பமெலாம்
நாதனருள் நந்தியரு ளாற்பெற்ற நலமுடையோன்.



நந்தி அருள்பெறு செந்தமிழ்யோகி



சிவயோகியார் தென்திசைக்கேகுதல்

எண்வகைச்சித் தியுமேய்ந்த சிவயோகி யொருவன்இன்பப்
பண்மருவு மொழிபாகன் பதியெனும்நற் கயிலையைவிட்டு
அண்மையுறப் பொதியமலைக் கணுகியகத் தியமுனியைக்
கண்மகிழத் தரிசிக்குங் கருத்துடைய னாயொருநாள்'

எனவரும் துறைசைப்புராணத்திலுள்ள திருமூலரைத் தடுத்தாட்கொண்ட அத்தியாயத்தால் அறியலாம். (மற்றும், பின்வரும் பாட்டுக்களனைத்தும், துறைசைப் புராணத்திலிருந்தே எடுத்து ஆளப்பட்டனவாகும்.)

ஒருநாள், அச்சிவயோகியாகிய சுந்தரநாதன், சிவபிரானது திருவடிகளை வணங்கி விடைபெற்றுத் தெற்குப்பக்கமாகவந்து இமாசலம், கேதாரம் முதலான க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு அங்கிருந்தும் புறப்பட்டு, கோதாவரியில் நீராடி அங்குள்ள பல தலங்களையும் வணங்கி, காளத்தியப்பரையும் தொழுது, தொண்டைநாடு அடைந்து அங்குள்ள பல பதிகளையும் வணங்கி, சோழநாடு அடைந்து காவிரி நீராடி, பல பதிகளை வணங்கிக்கொண்டு காவிரியின் தென்கரையாக வந்துகொண்டிருந்தார். இதனை,

'பசுபதிபொற் பதம்பணிந்து விடைபெற்றுப் பரிவொடுந்தென்
திசையினிற்போந் திலகுமிமா சலங்கடந்து சென்றுகதி
வசையறுவோர்க் கருள்கேதா ரம்பணிந்து வந்துகங்கை
இசையொடுசூழ் காசிவிசு வேசரடி தொழுதேத்தி.

திரிவேணிப் பிரயாகை சென்றுடி யமுனைகடந்து
அருள்மேவு நருமதைநீ ராடியமர் வானலிங்கப்
பெருமைகண்டு தொழுதுகோ தாவிரிநற் பெருங்கரையில்
மருவிநீர் படிந்துபருப் பதம்பணிந்து வந்திப்பால்.

இடபநந்தி வளர்கிருட்ண வேணிவீ மேசுரர்தாள்
படியுறத்தாழ்ந் தருள்நீலப் பருப்பதமும் தொழுதேத்தித்
திடமருவு பொன்முகலி சூழ்திருக்கா ளத்தியில்வந்து
அடல்மருவுதிண்ணர்கட்போ தணிந்தவரைப்புகழ்ந்திறைஞ்சி.

ஆலவனத் தினிற்காளி யுடனுட வெடுத்தபதஞ்
சிலமுடன் பணிந்துதிருக் காஞ்சிமா வடிநிழலில்
பாலனைய மொழியுமையாள் பயோதரம்பாய்ந் திடக்குழைந்த
சூலபா ணியின்மலர்த்தாள் துதித்திறைஞ்சிப் போந்திப்பால்.

அன்னமும்வெண் பன்றியுமாய் அயனுமரி யுந்தேட
இன்னமுங்கண் டிடற்கரிதா யிருந்தவடி முடியுடைய
மின்னவிர்செஞ் சடையருனே சரைத்தொழுது விருத்தகிரிப்
பொன்னனைய திருமேனிப் புண்ணியனைப் புகழ்ந்தேத்தி.

அருட்டுறையுங் கெடிலவீ ரட்டமுநற் கழுக்குன்றும்
பொருட்டிறஞ்சேர் நெல்வாயி லரத்துறையும் புகழ்ந்தேத்தி
இருட்டறவெவ் வுலகினுக்கும் ஒளிபரப்பி யிலகுபொற்கோ
புரப்பொன்வரைநான்குடையபொற்சபைநன்னடம்பணிந்து.

மலருமருட் டிருத்தோணி புரம்பணிந்து வயித்தீசர்
குலவுதிருத் தாளிறைஞ்சிக் கடவூர்மன் குங்குலியக்
கலையருக்கு நிமிர்ந்தசடை யப்பர்கழல் தொழுதுபொன்னி
இலகுநதி மூழ்கிச்சென் றிடைமருதர் அடிபோற்றி.

காவிரியின் தென்கரைமேல் போம்பொழுது கவின்மேவு
பூவிரியும் பொழில்சூழுஞ் சாத்தனூர்ப் பூசுரர்கள்
ஆவனுடன் புரிமகத்துக்கு ஐந்துதவும் ஆனினமேய்த்து
ஏவல்புரி வானெருவன் ஆயர்குலத் தினிற்பிறந்தோன்'

எனவரும் பாடல்களாலறியலாம். சாத்தனூர் என்னும் ஊரில் உள்ள பிராமணர்கள் செய்யும் யாகத்துக்குப் பஞ்சகவ்வியத்தை உதவுகின்ற பசுக்களை மேய்த்து அப்பிராமணர்களது ஏவலைச்செய்யும் ஆயர்குலத்தில் பிறந்தவனுன 'மூலன்' என்னும் பெயரைக்கொண்ட யாதவன், அம்முனிவர் வருகின்ற வழிக்குப் பக்கத்தில் பசுக்களை மேய்த்துக்கொண்டிருப்பானுயினுன். அவ்வண்ணம் மேய்த்துக்கொண்டிருக்கும்போது, அவன் விஷமயக்கம் ஏறி, மூர்ச்சித்து, ஆங்கு ஓர் மரநிழலில்

விழ்ந்து இறந்து இறைவன் திருவருளால் சிவலோகம் அடைந்தான்.

'அப்பதிக்கு வடபால்சேர் ஆவடுதண் துறையரனுக்கு
ஒப்பிலா வுட்பத்தி யுடையனெழில் மிகுமுருவன்
செப்புதிரு மூலனெனுந் திருப்பெயர்பெற் றிடுதவத்தோன்
ஒப்பறுநன் முனிவன்வரும் நெறியிலுறு புறவதனில்.

பசுநிரைமேய்த் திடும்பொழுது படிவினைமுற் பான்மையினல்
அசைவுறுதே கத்தில்விட மயக்கமுற அயர்ந்துவிழும்
திசைவுறுமோர் மரநிழலிற் கிடந்துமரித் திறையருளால்
வசையறுநற் சிவலோகம் அடைந்தனனம் மண்மீதில்.'

அதனைக்கண்ட பசுக்களெல்லாம் ஓலமிட்டு, அம் மூலனின் உடலை மோந்து உள்ளம் கசிந்து, வாலை நிமிர்த்தி உடல் பதற, இருகண்களினின்றும் நீர் ஒழுக அலறித் துன்புறுவதை அவ்வழியாகச் சென்ற சிவ யோக முனிவரானவர் பார்த்து அருகிலே போய், உயிர் நீங்கிக் கிடந்த மூலனது தன்மையையும் பசுக் களின் துயரத்தையுங்கண்டு கருணைமிகுதியால் தரியா தவராய், இப்பசுக்களை மேய்த்த இந்த மூலன் எழுந் திருப்பானேயானல் இப்பசுக்களின் துன்பம் நீங்குமே யல்லாமல் வேறென்றுலும் நீங்காது என நினைத்து, தன்னுடலை ஒரு மரப்பொந்தில் ஒளித்துவைத்துப் பர காயப் பிரவேசவகையால் பிராணவாயுவுடன் கரணங் களையெல்லாம்கொண்டு இறந்த மூலனுடைய நாசியின் வழியாக உட்புகுந்து சரீரமெல்லாம் பரவி, இறைவனை உணர்ந்த அம்முனிவன் பசு மேய்ப்பவனுகிய மூலன் போன்று எழுந்தான்.

'தாலவுடற் பாம்புரித்த சட்டைபோற் றுலங்குதல்கண்டு
ஓலமிட்டா னினங்களெலாம் உடல்தனைமோந் துளங்கசிந்து
வாலைநிமிர்த் துடல்பதற இருகண்ணீர் வழிந்தொழுகச்
சிலமுறு குழக்கன்றுக் கிரங்குதல்போல் திகழ்ந்தலறி.

துன்புறுத லந்நெறியில் தோன்றுசிவ யோகமுனி
அன்பொடுகண் டருகினிற்போய் ஆவியறக் கிடந்தவுடல்
தன்பரிசும் ஆவினங்கள் தன்முகம்பார்த் தலறுவதும்
முன்புறக்கண் டருட்கருணை முதிர்ச்சியினல் தரியாஞய்.


இன்னிரைகள் மேய்த்தவிவன் எழுந்திருந்தால் பசுக்கள்துயர்
அன்னியமாம் அல்லதுமற் றென்ருலும் அகலாதென்று
உன்னிஅங்ஙன் தன்னுடலை ஒருபொதும்ப ரினிலொளித்து
மன்னுபர காயப்பிர வேசஞ்செய் வகையதனல்.

பிராணவளி யுடன்கரணப் பெருமையெலாம் கொடுமூலம்
விராவுமுடல் நாசிவழி புகுந்துமெய் யெலாநிறைந்து
பராபரனை யுணர்முனிவன் பசுமேய்ப்பான் றனைப்போலத்
தராதலமிந் தானிரையின் சஞ்சலந்தீர்த் திடவெழுந்தான்.'

தூங்கியெழுந்தவன்போல மூலன் எழுந்திருப்பதைப் பார்த்து, இறந்துவிட்டான் என்று அழுத பசுக்களெல்லாம் இன்பத்துடன் தங்கள் முலைக்காம்புகளிலிருந்து பால் பெருகி ஓட, நிலத்தில் துள்ளிக் குதித்து மூலனைக் கண்டு மனங்களித்துத் திரியலுற்றன. அதனைப் பார்த்த முனிவனும் களிப்படைந்து பசுக்களுக்கெல்லாம் நீர்காட்டி இளம்புற்களை வயிறுர மேயும்படிச்செய்து, மாலை நேரம் வந்ததும் அப்பசுக்களையெல்லாம் சாத்தனூரில் உள்ள அதனதன் விடுகளில் போய்ச் சேரும்படியாகச் செய்தான்.

'உறங்கியெழுந் தவன்போல மூலனுணர் வொடுமெழக்கண்டு
இறந்தனனென் றரற்றியஆ னினங்களெலாம் இன்பமுடன்
நிறைந்தமடுப் பால்பீர்விட் டோடநிலத் தினிற்குதித்துச்
சிறந்ததிரு மூலனைக்கன் டுளங்களித்துத் திரிந்தனவால்.

உளங்களிந்த ஆனினம்போல் தானுமுளங் களித்துமுனி
வளர்ந்திடுநீர் பசுக்கள்குடித் திடஅருத்தி வயிறுர
இளந்தளிர்ப்புல் மேய்த்தந்தி யெய்திடுங்கால் பசுவையெலாம்
விளங்குபுகழ்ச் சாத்தனூர் மனைகள்தொறும் புகவிடுத்து.'



மூலனைக்கண்ட முனிவர் இரக்கம்



மூலன் உடம்பிற் சிவயோகியார்

பின்பு, அம்மூலன் சாத்தனூருக்குப் பக்கத்திலுள்ள ஒரு மடத்தைச் சார்ந்து அதிலிருக்க, தன் கணவன் இன்னும் விடுவந்துசேரவில்லையென்று இறந்துபட்ட மூலனின் மனைவியானவள் அம்மடத்திற்குச் சென்று பார்த்து, விடுவந்து சேராமல் இப்படி இருப்பது ஏன்? என்று அழைக்க, மூலன் வாய் பேசாதவனாய் யோகம் செய்துகொண்டிருப்பதைப் பார்த்து, அவள் வேக மாகச் சென்று, சுற்றத்தார்களிடத்திலே தனது கணவ னுடைய செய்கையைச் சொல்லி, அவர்களையெல்லாம் அழைத்துவந்து மடத்திற்குப் போய் எல்லோருமாக அழைக்க, மூலன் 'எம்மை நீங்கள் அறியமாட்டீர்கள்; உம்முடைய சம்பந்தம் எமக்கு இல்லை; எல்லோரும் போங்கள்' என்று சொல்லி மீண்டும் யோகத்திலிருப் பதைப் பார்த்து, உறவினர்களெல்லாம் முன்பு பழகின அடையாளங்கள் எவையுமே பார்க்க முடியவில்லையே; இம்மாயை நம் அறிவால் அறிய முடியாதது என்று சொல்லி மூலனைவிட்டுத் திரும்பிவிட்டார்கள்.

'அப்பதியிற் புறத்திலொரு பொதுமடத்தில் அணைந்திருப்ப
ஒப்பறுதன் கணவனினும் உற்றிலனென் றவன்மனைவி
செப்பமுறு மடத்தினிற்போய்க் கண்டிலத்திற் சேராமல்
இப்படிநீர் இருப்பதென்னே என்றழைப்பப் பேசாமல்.

விடலரும்யோ குற்றிருத்தல் கண்டுவிரை வுடனேகி
உடல்பழகு முறவுடைய சுற்றத்தா ருடன்றனது [வந்து
தொடர்புடைய கணவனுறுந் தொழில்சொல்லி யழைத்துடன்
இடமருவு மடத்தினிற்போய் எல்லாரும் அழைத்திடலும்.

எமையறியீர் உமதுதொடர் பெமக்கில்லை போமெனவே
அமைவினெடு மூலருரைத் திருப்பதுகண் டவர்களெலாம்
கமைவொடுமுன் பழகுகுறி கண்டிலேம் இம்மாயை
நமதறிவால் அறியவொணு தெனநழுவிப் போயினரால்.'

அதுசமயம் சூரியன் மறைந்து இருள்வர, அதனல் மூலரானவர் அந்த மடத்திலேயே அமர்ந்து துயில் கொள்ளும்போது, கோமுத்தீசுரரானவர் முன்பு சிவ யோகியானவர் மரப்பொந்தில் ஒளித்துவைத்த உடலைப் பக்குவமாகப் பூதகணத்தால் எடுத்துவரச்செய்து திருவாவடுதுறையில் போதிவனத்தின் வடமேற்குப் பக்கத்தில் அருட்பூரணத்தில் கலப்பித்து அங்கிருக்கச் செய்தருளினர். விடிந்தபின் திருமூலர் தாம் ஒளித்து வைத்த மரப்பொந்தில் வந்துபார்க்கத் தனது தூல வுடலைக் காணுதவராய் மிக்கதுயரம் அடைந்து திரும்பி வந்து முன்பு இருந்த மடத்தில் யோகத்தில் இருக்கும் போது, மாசிலாமணிப்பெருமான், திருமூலரது அறிவிலே (ஞானத்திலே) பதிந்து, 'உன்னுடைய தூல உடலினை இத்துறைசைப்பதியிலுள்ள அரசவனத்தில் மறைத்துவிட்டோம்; உனக்கு மூலனுடைய உடம்பில் பொருந்துகின்ற பிறவி இருக்கின்றபடியால் இந்த உடம்பே அழகாகும்; இவ்வுடம்போடு நீ எம்மை நினைந்திருந்து, இவ்வுலகத்திலுள்ள மக்கள் அனைவரும் இன்பத்தை அடையும்படியான - இனிதான திருமந்திரம் சொல்லிப் பொருந்தல் வேண்டும்; கயிலாயமும் இவ்வரசவனமேயாகும்; ஆதலால், நவகோடி சித்தர்களுடன் இங்கு வாழ்வாயாக; அகத்திய முனிவனையும் இங்கேயேகாணலாம். ஆகையால், கோமுத்தி க்ஷேத்திரத்தில் வந்து இருப்பாயாக' என்று உணர்த்தியருளினர்.

'கதிர்மறைந்து கங்குல்வரக் கண்டதனல் மூலரந்த
முதிர்மடத்தி லமர்ந்துதுயில் புரிந்திடக்கோ முத்தீசர்
பதனமுற அவர்பொதும்பர் ஒளித்தவுடல் படிவத்தை
இதமுறநற் பூதகணத் தாலெடுத்தா வடுதுறையில்.

போதிவனத் தினில்வடமேற் புறத்திலருட் பூரணத்தில்
ஏதமறக் கலப்பித்தங் கிருத்தியிட விடிந்தபின்பு

நாதரடி புணர்ந்ததிரு மூலரந்த விடநணுகிச்
சோதியுடல் தனைத்தேடிக் கண்டிலராய்த் துயர்மிகுந்து.

திரும்பிவந்து கவலையொடு முன்பமர்ந்த திருமடத்தில்
பொருந்திமிகு சிவயோகம் புணர்ந்திருக்கும் போதருளால்
விரும்புசிவ மாசிலா மணிநாதன் வியாபகமாய்ப்
பரந்ததிரு மூலரறி வினிற்பதிந்தீ துணர்த்துவனால்.

பரந்த வுடலைத் துறைசையெனும்
பதிப்போ தியினிற் பதுக்கினோம்
மைந்த வுனக்கு மூலனுடல்
மருவு பவமுண் டாதலினால்
இந்த வுடலே உனக்கழகாம்
இதனோ டெம்மை நினைந்தென்றும்
அந்த மிலதாய் நித்தியமாய்
அமர்ந்து நமதா வடுதுறையில்.

இருந்திவ் வுலகத் தோருணர்ந்தெம்
இன்ப மருவும் படிக்கினிதாய்த்
திருந்து சிலாங் கச்சுருதி
யாகுந் திருமந் திரமுரைத்துப்
பொருந்தல் வேண்டும் கயிலாயப்
பொருப்பும் போதி வனமாகும்
வருந்த லின்றி நவகோடி
சித்த ரொடுநீ வாழ்ந்திடுதி.

கும்ப முனிவன் றனையுமிங்கே
காண லாகும் கோமுத்திப்
பண்பு மிகுநற் றலத்தில்வசித்
திருவா வென்று பரனுணர்த்தச்
சம்பு வடிக்கீழ்ப் புணர்ந்திருந்த
மூல ரியோகந் தனிலுணர்ந்து
நம்பும் உவகை யுடன்மகிழ்ந்து
நவின்ற படிக்கா வடுதுறையில்.'


சிவபிரானுடைய திருவடிக்கமலத்திலேயே தமது மனத்தைப் பதியவைத்திருந்த திருமூலர், யோகத்தினல் உணர்ந்து மகிழ்ச்சியுற்று இறைவனது சொற்படியே திருவாவடுதுறைக்கு வருகின்றபோது, அகத்தியர் போகர் முதலான யோக வித்தக சித்தர்கள் அனைவரும் எதிர்கொண்டுபோய்ப் பார்த்துத் துதித்து வணங்கி அழைக்க, அவர்களுடன் வந்து, திருவாவடுதுறையில் கோமுத்தித் தீர்த்தத்தில் படிந்து வெண்ணீறணிந்து அக்கமாலை புனைந்து கல்லாடை தரித்து, திருக்கோயிலினுட்சென்று வலம் வந்து அங்குள்ள துணைவந்த விநாயகர், அழகிய விநாயகர், தருமவிடை முதலியவர்களை வணங்கி, மாசிலாமணிப்பெருமானை வணங்கும் போது, இறைவன் திருமூலரது குறிப்பறிந்து குருவடிவாய்த் திருவடிதீட்சை, ஞானச்சிவதீக்கை இவைகளைச் செய்து காட்சி கொடுக்க, அதனைக்கண்டு தரிசித்துத் துதிப்பாராயினர்.

'வரும்போ தெதிர்கொண் டகத்தியரு
மதிசேர் போகர் முதலான
பெருஞ்சீர் யோக வித்தகசித்
தரும்போய்ப் பிரிய முடன்கண்டு
பொருந்து முகமன் பலபேசிப்
போற்றி யழைப்ப வுடன்போந்து
சுரும்பார் பொழில்சூழ் ஆவடுதன்
டுறையின் மருவித் திருமூலர்.

'அருட்கோ முத்தித் தீர்த்தநீ
ராடித் திருநீ றணிந்துமெய்யில்
உருத்தி ராக்க மணிவடங்கள்
பூண்டு காவி யுடையுடுத்துச்
செருக்கி னெடும்போய்ப் போதிமுதற்
றிகழ்பொற் கோயில் தனைச்சூழ்ந்து
விருப்ப முடன்முன் தாயினுடன்
வியந்து வருங்கன் றடிபணிந்து.



மூலன் மனைவி முறையீடு



தொடர்பெல்லாம்விட்டுப் படரரசின்கீழ்
திருமூலதேவர் சிவயோகத்திருத்தல்

தரும நந்தி பதம்போற்றித்
தயங்கும் போதி யம்பலத்துள்
கருணை நடஞ்செய் பரனடியைக்
கண்டு வணங்கி ஒப்பில்லாக்
குருநன் மணிப்பூண் இலகுமுலைக்
கோதை பாதம் தொழுதழகு
கருணை மகவி னடிபணிந்து கந்தன்
மலர்ப்பூங் கழலேத்தி.

முத்தித் திருமா தேந்திவினை
யாடு மலர்ச்செண் டெனமுளைத்துப்
பத்திக் கடற்குள் விளையமுதின்
பாகந் திரண்ட தெனவிளங்கும்
சுத்தக் கருணைப் பிரகாச
மணிநா யகனைத் தொழும்போது
பத்தர்க் கெளிய பரஞ்சோதி
பணியு மூலர் குறிப்பறிந்து.

கயிலை மலையிற் குருவடிவாய்க்
கமலத் திருத்தாள் முடியில்வைத்துப்
பயிலு ஞானச் சிவதீக்கை
பண்ணு நந்தி தனைப்போலத்
தயவி னுடுமெய்க் காட்சியளித்
தருளக் கண்டு தனைமறந்து
செயலற் றுயரா னந்தவெள்ளத்
தமிழ்ந்திப் புளகஞ் சிலிர்ப்பெய்த.

கண்கள் தரள மழைபொழியக்
காயம் விதிர்ப்பக் கைமுகிழ்ப்பப்
பண்க ளுடன்சொல் மொழிகுழறப்
பண்டை வசம்போய்ப் பரவசமாய்
எண்கொள் சுருதிக் கெட்டாத
இறைவன் முன்பு விழுந்தெழுந்தே
ஒண்கண் நுகர்ந்த சுரும்பினைப்போல்
உயர்ந்து குதித்தா டித்துதிப்பான்.


எனையும் பொருளாய்த் தடுத்தாட்கொண்டு
இன்பம் அருள்செய் எழில்மலையே !
பனிவெண் திங்கள் கொழுந்துதவழ்
படர்செஞ் சடைக்கா டுடையானே !
புனிதம் பெருகும் அதுலதனப்
பூவை கணவா ! எனமுமோர்
அனமும் காணுக் குருமணியே !
அப்பா! யானுன் அடைக்கலமே.'

இவ்வண்ணம் துதித்தபின், சிவபிரான் கட்டளைப் பணியைச் சிரமேற்கொண்டு போதிவனத்திலுள்ள மண்டபத்தை அடைந்து வடமேற்குத் திசையிலே கிழக்குமுகம் நோக்கி, சுகாசனத்திருந்து யோகத்தில் அமர்ந்து, இரண்டு கைகளையும் மடியில் வைத்து, கண்கள் மூக்கின் நுனியைப் பார்க்க, சரீரம் அசையாமல் பிராணவாயு அடங்க, செய்கையிழந்து, தற்போதமானது திருவருளில் ஒடுங்கச் சிவத்தோடும், மும்மல ரகிதனுகிச்சேர்ந்து கலந்திருப்பாராயினுர்.

இவ்வண்ணமாக இருந்துகொண்டு ஓராண்டிற் கொருமுறை விழித்துக் கருணையோடும் சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நான்கும் திருமந்திரச்செய்யுளாக, எல்லோரும் உணர்ந்து அறியும் பொருட்டு ஒவ்வொன்ருக, மூவாயிரம் ஆண்டிற்கு மூவாயிரம் பாடல்களை விளம்ப, அவைகளையெல்லாம் சித்தர்கள் வெள்ளேட்டில் எழுதி அவரவர்களே நெறியால் தெரிந்து களிப்புற்று, உலகத்திலுள்ளவர்கள் அனைவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் பரப்பினுர்கள்.

சிவபோகத்தை நுகர்கின்ற திருமூலர், இன்னும் எம்பிரான் திருவடியில் யோகுற்று இருக்கின்ருர்.

வரலாறு முற்றிற்று.



திருமூலதேவ நாயனர்

திருச்சிற்றம்பலம்

திருமந்திரக்கருத்து

பாயிரம்

விநாயகர்காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

ஐந்து திருக்கரங்கள், ஆனைமுகம், ஒற்றைக் கொம்பு ஆகிய இவைகளை உடையவரும், சிவபிரானது மூத்தகுமாரரும், ஞானத்தின் சிகரமாக விளங்குபவரும் ஆகிய விநாயகப்பெருமானுடைய இரண்டு திருவடிகளையும் மனத்தில்வைத்து வணங்குகின்றேன்.

1. கடவுள் வாழ்த்து

(1 முதல் 50 வரை)

ஒன்று: இறைவன் ஒருவனே; இரண்டு: இறைவனும் அவனது இன்னருளாகிய சத்தியும்; மூன்று: அயன் அரி அரன் என்னும் இம்மூவருள்ளும் நிற்கும் நிலை; நான்கு: உலகாதீதன், உலககாரணன், உலகிற்கு அந்தர்யாமி (உயிராய் நிற்றல்), உலகரூபி; ஐந்து: ஐம்

பொறிகளை வென்றவன்; ஆறு: ஆறு ஆதாரங்களாக வும் அவ்வாதாரங்கட்குரிய தேவதைகளாகவும் ஆறு அத்துவாக்களாகவும் விரிந்தவன்; ஏழு: ஏழாவதான துவாதசாந்தத்தில் இருப்பவன்; எட்டு: அட்டமூர்த்தி யாக உணரப்பெற்று அவற்றுள்ளே கலந்திருப்பவன் இறைவன்.

அடியார்களின் மனதில் குடிகொள்பவன்; திசை களுக்கும் உமாதேவிக்கும் தலைவன்; இயமனை உதைத் தவன்; ஆன்மாக்களுடன் கலந்திருப்பவன்; திருவருள் இல்லாதவரால் அறியப்படாதவன்; பரந்த உலகில் நிறைந்துள்ள மெய்ப்பொருளானவன்; அண்டங்களுக் கெல்லாம் வித்தாக இருப்பவன்; நம்மையெல்லாம் மோட்சத்தில் செல்லவிடுபவன்; எல்லா உலகிற்கும் அப்பாற்பட்டவன்; அன்பர்களின் இருதய கமலத்தில் குடிகொண்டவன்; சிவனுக்குச் சமமான தெய்வம் எங்கும் இல்லை; அவனுக்கு ஒப்பாவாரும் இல்லை; சிவனையல்லாமல் வேறு எந்தத் தேவரும் இல்லை; அவ னருள் இல்லாமல் எந்தத் தவமும், அயன், அரி, அரன் ஆகிய மூவரால் செய்யப்படும் செயல்களும் இல்லை; பேரின்ப வீடாகிய மோட்சநகருள் செல்வதற்கும் அவனருள்வேண்டும்.

மூவருக்கும் மூத்தவன்; அப்பா! என்று அழைப்ப வர்களுக்கு மாத்திரம் தந்தையாக அவர்களது மனதில் நிலைபெற்றவன்; நெருப்பைக்காட்டிலும் வெப்பம் உடையவன்; தண்ணீரைவிடக் குளிர்ச்சியானவன்; குழந்தையைவிட நல்லவன்; அன்புடையாருக்குச் சமீப மாக உள்ளவன்; தாயினும் இனியவன்; அவன் பெயர் நந்தி என்பதாம்.

இறைவன் யாவராலும் தொழப்படுபவன்; அவன் யாரையும் தொழமாட்டான். உலகைத்தாங்கி ஆகாய வடிவமாகவும், அக்கினி, சூரியன், சந்திரன் என்னும் முச்சுடர்களாகவும், மழையைப் பெய்விக்கும் திருவருட்சத்தியாகவும், மலையாகவும், கடலாகவும் இருப்பவன்.

எவ்விடத்தில் தரிசிக்கப்போனாலும் சிவனையன்றி வேறு தலைமைத்தெய்வம் இல்லை; நமது முயற்சியும் முயற்சியின் பயனும், மழையும், மேகமும், சிவனே யாவன். எப்படிப்பட்டவர்களும் இறைவனை மனத்தால் நினைப்பதில்லை; ஆனால், அவனோ ஆன்மாக்களுடன் கலந்து அருள்செய்கின்றான். அயன் அரி அரன் இம்மூவரையும் கடந்துநிற்கும் இறைவன், பற்றற்ற ஞானிகளுக்கு மாத்திரம் வெளிப்பட்டு நிற்கின்றான். தோற்றமும் ஒடுக்கமும் செய்தருள்பவன் அப்பரமனே ஆவன்; அவன் ஜோதிமயமானவன்.

ஆன்மாக்களுக்கு இறைவனோடு உறவுகொள்ளுதலைக் காட்டிலும் சிறந்ததொரு இன்பம் இல்லை. சுடுகாட்டையே தனது இருப்பிடமாகக்கொண்ட இறைவன், குபேரனை அளகாபுரிக்கும் நிதிக்கும் தலைவனாக்கியதைக்கண்டு, திருமாலும் தனக்கு நிதித்தலைமை வேண்டும் என வேண்ட, அவ்விறைவனும் திருமாலை இலக்குமி நாயகனாக ஆக்கினான். மேலும் பரமசிவன் சந்திரனுக்கு வாழ்வளித்து அவனைத் தன் தலையில் சூடினான்.

பலருடைய பிறவிகளை ஒழிக்கின்றவன்; தாருகவன ரிஷிகளின் வேள்வியில் தோன்றிய காட்டு யானையைக் கொன்றவன்; தன்னைத் தோத்தரிப்பவர்களுடன்

இரண்டறக்கலந்து நிற்பவன்; திக்கடவுளை, கடல்நீர் பொங்கி மேலே வராமலிருக்கும்படி, அந்தக் கடலின் நடுவில் நிறுத்திவைத்தவன்; அறநெறி உடையவன்; பிறப்பு இறப்பு இல்லாதவன்; அஞ்ஞானத்தை நீக்கு பவன்; அழிவில்லாதவன்; வழிபடுவோரது அறிவினுள் கலந்திருப்பவன்; கயிலாயத்தில் இருப்பவன்; தன்னை வணங்குகின்றவர்கட்கு வழித்துணையாக இருப்பவன்; ஞானரூபியாய் உள்ளவன்; தேவாதிதேவன்; எங்கும் வியாபித்தும் எல்லாவற்றையும் கடந்தும் நிற்பவன்; ஆயிரம் திருநாமங்களை உடையவன்.

தனக்குத்தானே சமானமானவன்; ஆன்மாவுக்கு ளிருந்து பிராணனாக இயங்குகின்றவன்; புண்ணிய மூர்த்தி; விஷத்தையுண்டவன்; உலகம் நடைபெறு வதற்கும் நாம் அடையும் இன்பத்திற்கும் அவனது ஆணையே காரணம்; மெய்யடியார்களால் வணங்கித் துதிக்கப்படுபவன்; அருட்பெருஞ்சோதி; பசு பாச ஞானங்களைக் கடந்து பதிஞானத்தை அறிகின்றவர் களுக்கு, திருவடிப்பேறாகிய இன்பத்தை அளிப்பவன்.

இப்படிப்பட்ட தன்மைவாய்ந்த இறைவனது திருவடிமலரைத் தலையில் சூடிக்கொண்டும் மனதில் தியானித்தும் - அர்ச்சித்தும் வணங்குவேன்; பாடி ஆடுவேன்; இதுவே நான் (திருமூலர்) அறிந்து பணி செய்வதாகும்.

2. வேதச்சிறப்பு

(51—56)

அறங்களைக்கூறும் வேதநூல்களைத் தர்க்கவாதம் செய்யாமல் அறிஞர்கள் ஓதியே முத்தியடைந்தார்கள்.

மக்கள் ஒழுக்கநெறியில் நிற்கவும், வேதியர்கள் யாகங்களைச் செய்யவும், அனைவரும் உண்மைப்பொருளை அறியவும் இறைவன் வேதத்தை அருளிச்செய்தான். வேதத்தை ஓதுகின்றவன் வேதியனாகமாட்டான். வேதத்திற்குச் சிவபெருமானே மூலகுரு ஆவர்.

அறிவிக்க அறியும் சித்தும், அறிவித்தாலும் அறிய முடியாத அசித்தும் ஆகிய இரண்டும் அல்லாத பேரறிவுடைய சிவனை அறிவுறுத்துவது திருநெறி என்பதாகும்; இது ஆசாரியனால் உணர்த்தப்படும் பெருநெறியாம். இதனையே சிவநெறியென்றும் கூறுவர். வேதமுடிபில் ஒன்றே என்று கூறுவதெல்லாம் திருநெறி - பெருநெறி - குருநெறி என்ற மூன்றினையே ஆகும்.

மேற்சொன்ன மூன்று நெறிகளையும் ஒரேநெறியாக வேதமும் வேதமுடிபும் எடுத்துக்கூறினாலும் வேதத்தைத் தெளிவாக அறிந்து ஓதுவதற்காக ஆறு அங்கங்கள் அமைந்தன. இவ்வங்கங்களை - வேதத்தின் பாகுபாடுகளை அறிவிக்கும் கருவிகளாகக் கொண்டு ஒருநெறி இன்னதெனத் தெளிந்து சிவநெறியில் யாரும் பழகாமல் பல பேதங்களைப் பெருகச் செய்துவிட்டார்கள்; இதனால் பயனில்லை. ஒரு நெறிகொண்டு ஒரு பொருள்கொண்டு ஒரேபயனை அடைதலே சிறந்ததாகும்.

வேதாங்கங்களான ஆறனுள் சந்தோபசிதம், நிருத்தம் என்னும் இரண்டிலும் ஆடல் பாடல்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றன. அப்படிக்கூறப்பட்டது மக்களுக்குத் தெய்வ உணர்ச்சியை உண்டுபண்ணுவதற்காகவேயாம். உருத்திர கணிகையரும் தங்கள் ஆடல்

பாடல்களால் அந்நெறியை விளக்கினர். ஆக, பாமரர்களும் மெய்ந்நெறியை உணர்தற்காகவே பாடலும் ஆடலும் வேதத்தில் இடம்பெற்றுள்ளன. எல்லாக் கிளைநெறிகளும் வேதம் கூறும் ஒரேநெறிக்குத் தக்க கொள்கைகளைக்கொண்டன ஆகும்.

3. ஆகமச்சிறப்பு

(57—66)

சிவபெருமான் இருபத்தெட்டு ஆகமங்களையும் தனது ஈசானமுகத்திலிருந்து அருளினன். அவற்றை அறுபத்தாறுபேர்கள் கேட்டார்கள். தேவர்கள், இவ்வாகமங்களின் துணைகொண்டே இறைவனுடைய பெருமையினைக் கூறினர்கள். ஆகமங்களின் பாடல் தொகை எழுபதுகோடியே நூறுயிரம் ஆகும். ஞான சொருபியான இறைவன் ஆகமவடிவமாகவே விளங்குகின்றவன். சிவபிரானிடமிருந்து சத்தியும், சத்தியிடமிருந்து சதாசிவமும், அவர்பால் உமாமகேசுரரும், அவரிடமிருந்து ஸ்ரீகண்ட உருத்திரரும், அவர்பால் திருமாலும், திருமாலிடமிருந்து பிரமனும், அவர்பால் உருத்திரரும் உபதேசம்பெற்றனர். இவர்கள் முறையே அடைந்த காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களையும் நந்திபெற்ருர்.

ஆகமங்கள் அனைத்தும் சிவ உணர்வு பெற்றவர்களே அறிந்துகொள்ளமுடியும். ஏரிகளெல்லாம் நீர் வற்றியிருக்கும் சமயமான பனிக்காலத்தில் இறைவன், வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிகளையும் உமையம்மைக்கு அறிவித்துக் கருணைசெய்தான்.

பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களை அவ்விரு மொழியும் தெரிவிக்கும். இவற்றை நாம் உணர்ந்தால் இறைவனை உணரமுடியும்.

4. குருபாரம்பரியம்

(67—72)

சனகாதி நால்வர், சிவயோகமுனி, தில்லையில் நடனம்கண்ட பதஞ்சலி, வியாக்கிரமர், திருமூலர் ஆக எண்மரும் நந்திதேவரின் அருளைப்பெற்ற பரம்பரையினர் ஆவர். இறைவன் அருளாலே "நாதன்" என்ற பெயர்பெற்றோம்; மூலனது உடலைக்கண்டு அவ்வுடலுள் புகுந்து நிட்டைகூடியிருந்தேன் (என்று திருமூலர் கூறுகின்றார்).

மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கன், கஞ்சமலையன் என்னும் எழுவரும் திருமூலநாதரது பின்வழி வந்தவர்கள். இவ்வெழுவருள் நால்வர் நான்குதிசைகளில்தங்கி அங்குள்ள மக்களுக்கு உபதேசம் செய்து தலைவரானார்கள். இவ்வெழுவருக்கும் இறைவன் மேலாம்வழியை உபதேசித்ததல்லாமல் சனகாதி நால்வருக்கும் பெருமழையிலும் நியமங்களைத் தவறாமல் செய்யும்படிக்கும் ஆணையிட்டான்.

5. திருமூலர் வரலாறு

(73—94)

குருநாதர், சிவபிரான் ஆக இருவர்களுடைய திருவடிகளைச் சிரசில் சூடியும் தியானித்தும் திருமந்திர நூலைச் சொல்லத்தொடங்குகிறேன் என்று திருமூலர் திருமந்திர நூலைத் தொடங்குகின்றார் :- கோடியுகம்

நான் சிவயோகத்தில் இருந்தேன்; புவனேச்வரியை மிக்க பயபக்தியுடன் வழிபட்டுவந்ததால் நான் கோடி யுகம் இருந்தேன்; வேதாகமஞானம் எனக்கு உண் டாக அந்த உணர்விலேயேயிருந்து உடலையும் மறந் தேன்; இதனுல் அனுபவிப்பவனையும் அனுபவிக்கப் படும் பொருளையும் வேருகக்கொள்ளும் விகற்பநிலே கெட்டு ஏகனுகி (அவனே தானேயாகி) நின்றேன்; அதன்பின் எல்லாப் பொருள்களும் உணரப்பட்டன; நான் பூமிக்கு வந்தகாரணம் என்னவென்றுல், எல்லா ஆகமங்களுக்கும் ஐந்தொழிற்கும் அடிப்படையாவ தும் ஆதாரமாவதுமான திருக்கூத்தின் இயல்பை விளக்கும் வேதத்தைத் தமிழ்வேதமாகச் சொல்லவே வந்தேன்.

மாசிலாமணிப்பெருமானும் ஒப்பிலாமுலையம்மை யும் எழுந்தருளியிருக்கும் திருவாவடுதுறையில் சிவ மயமான படர் அரசமரத்தின் நிழலிலே பெருமானது திருநாமங்களை உச்சரித்துக்கொண்டிருந்தேன். தமிழ் வேதத்தைச் செய்யும்பொருட்டே இறைவன் என்னைப் படைத்தருளினன். இறைவன் அருளிய வேதத்தில் விளங்கும் மந்திரம் ஸ்ரீ பஞ்சாக்கரமேயாகும். அம்மந் திரத்தையே பற்றுக்கோடாகக் கொண்டேன்; அதனுல் சிவம் வெளிப்பட்டது. நான் இன்பம்பெற்றேன். அவ் வின்பத்தை உலகத்தவர்களும் பெறுவார்களாக.

இறைவன் ஆணையே உலகத்தை நடத்துகிறது. அறியப்படும்பொருள், அறிவு, அறிபவன், மாயைகள், பரை முதலிய சத்திகள், சிவம், பீஜங்கள் ஆகிய இவைகளையெல்லாம் திருமந்திரத்துள் விளக்கினேன். இறைவன் ஆணையின்வண்ணம் திருக்கயிலை வழியே -

பரம்பரையிலே வந்து மூலனுடைய உடலில் புகுந்து உண்மைஞானமடைந்து பல்லாண்டுகள் இருந்தேன்.

6. அவையடக்கம்

(95—98)

இறைவனுடைய பெருமையினையும் அகலம் நீளம் முதலிய பரந்த எல்லைகளையும் எவராலும் அளந்து அறியமுடியாது. அவன், இணையில்லாதவனும் பெருஞ் சோதியும் ஆவன். மால் அயன் இவர்களால் அறிய முடியாதவனும் இன்னிசையாயுள்ளவனும் ஆகிய இறைவனை நான் எப்படிப் புகழ்ந்து கூறுவது!

7. திருமந்திரத் தொகைச்சிறப்பு

(99—100)

திருமந்திரத்திலுள்ள மூவாயிரம் தமிழ் மந்திரங்களையும் மக்கள் காலையில் ஓதினால் இறைவனை அடைந்து இன்பம் பெறலாம். திருமந்திரம் பொதுவும் சிறப்பும் என இரண்டு பிரிவுகளை உடையது; முத்தியாகிய முடிவைக் கூறுவது.

8. குருமடவரலாறு

(101—102)

தோன்றிய ஏழு மடங்களுள் சிறந்து முன்னே - முதலில் தோன்றியது திருமூலர் மடாலயமாகும். காலாங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர், திருமூலர் என்ற எழுவரும் ஏழுமடத்தின் தலைவர்கள் ஆவார்கள்.

9. மும்மூர்த்திகளின் முறைமை

(103—112)

இறைவன், இளமையையும் அழகையும் உடையவன்; காலங்கடந்தவன். உருத்திரன், திருமால், அயன் இம்மூவரும் ஒருவரே என்று கருதாமல் தொழில் வகையில் அவர்களை வேறுபடுத்தி மக்கள் பிணங்குகின்றார்கள். அவனே தெய்வம் இவனே தெய்வம் என்பவர்கள் உண்மைஞானம் இல்லாதவர்கள். உலகிற்கு வித்தாய் இருப்பவன் பரமசிவன். சிவபரம் பொருளே ஒன்றாகியும் பலவாகியும் விரிந்து ஐந்தொழிலையும் ஆற்றி அருள்செய்கின்றது.

அயனும் மாலும் இறைவனது அடியார்களே ஆவர். சிவனருள் ஒன்றினையே தேவர்களும் மக்களும் உணரவேண்டும். சிவம் ஒன்றே நம்மையெல்லாம் படைத்துக் காத்து அழிக்கின்றது; ஆதலால் மூவரும் ஒன்றே எனக் கொள்ளல்வேண்டும்.

பாயிரம் முற்றிற்று

முதல் தந்திரம்

1. உபதேசம்

(113—142)

இறைவன் எனக்கு (திருமூலர்) ஞானம் அளிப்ப தற்காக நிலவுலகம்வந்து தீட்சைபுரிந்தான்; அதனால் ஞானக்கண் திறந்தது; அடியேனது ஆணவமலமும் கழிந்தது.

பதியைப்போலவே பசுவும் பாசமும் அநாதி நித்தி யப் பொருள்கள். இவ்விரண்டும் பதியை அணுகாது. பதி. பாசத்தை அணுகின் பசுவைப்பற்றியுள்ள பாசம் விலகும். சிவபிரான் ஒருவரே நமது மும்மலநோயைப் போக்கவல்லவர். அப்பிரானது சந்நிதியிலே மலங்கள் அனைத்தும் தம் வலியிழந்துவிடுகின்றன. இறைவன், ஞானகாயத்தினிடமாக இருந்து ஆன்மாக்களின் அவா அறுத்து ஆட்கொள்கின்றான். அறிவானும் அறி பொருளும் அற்றிருக்கும் நிலையினை உணர்த்துபவனே குருபரன் ஆவன்.

நடராஜப்பெருமானது திருநடன தரிசனத்தால் பிறப்பறும். நாம் மாறானவழியிலே செல்லாமல் இறை வனது திருவடியை அடையும்பொருட்டு நமது ஆசா ரியன் நமக்குச் சிவராஜயோகத்தை அளித்தான்.

தமக்குள்ளே ஆகாயம், நெருப்பு, நீர் இம்மூன் றும் ஒடுங்கியிருப்பதை அறிபவர்களே சிவசித்தர்கள்

ஆவார்கள். இச்சிவசித்தர்கள் இம்மையிலேயே சிவ லோகத்தையும், தம்முள்ளேயே நாதத்தையும் நாத முடிவையும் கண்டவர்கள்; அழியாதவர்கள்; மலமில் லாதவர்கள்; உருவற்றவர்கள்; மேலாம் பரமுத்தியை அடைபவர்கள். சிவசித்தர்கள் அனைவரும் சிவானந்த ஒளியுள்ளே கலந்து சிவமேயாக விளங்கியும், எங்கும் தாமாகவும் முக்காலம் உணர்பவராகவும் இருந்தனர். இப்படிப்பட்ட சித்தர்களுடைய நிலையை நாம் அறிந்து எப்படிச் சொல்லமுடியும்!

நடராஜப்பெருமான், சிவயோகியின் நிலைக்கேற்ற வாறு வந்து அருள்செய்வான். பல்லாண்டு வாழ்வை யும், பிறவாமையும், ஞானசபையிலே இருக்கும் பேற் றினையும், சிவத்துடன் கலந்திருக்கும் பெருமையையும் அச்சிவயோகியர்கள் பெற்றார்கள்; மேலும், அச்சிவ யோகியர்களது உடல் வீழ்ந்தாலும் திருவருட்சோதி யிலே கலந்து அழியாப்பொருள் ஆவார்கள்.

ஆன்மாக்கள் அனைத்தும் சிவத்துள் ஒடுங்கும். ஆன்மாக்கள் அடையும் இடம் இறைவனது திரு வடியே ஆகும்.

குருவினது திருமேனி தரிசித்தல், அவரது நாமம் சொல்லுதல், உபதேசமொழி கேட்டல், அவரது உரு வைத் தியானித்தல் ஆகிய இவைகளெல்லாம் தெளிந்த ஞானத்தை அளிக்கும். பக்குவம் அடைந்த ஆன்மா இறைவனிடத்திலேயே நிலைத்திருக்கும். எப்போதும் கூடுவதும், சிந்திப்பதும், புகழ்வதும், நிலைபெற்றிருப் பதும் முறையே இறைவனது திருவடியும், திருமேனி யும், திருநாமமும், சிவஞானமுமே ஆகும்.

2. யாக்கை நிலையாமை

(143—167)

ஒரேமண்ணில் சுடப்பட்டதும் சுடப்படாதது மான இரண்டுவகைப் பாத்திரங்கள் உண்டாயின. சுடப்படாத பாத்திரம் மழையினால் கரைந்து மண்ணோடு மண்ணாய்விடுவதுபோல அளவில்லாத மக்கள் இறக்கின்றனர். இவ்வுடம்பு அழிந்தபின், தான் கடைப்பிடித்திருந்த விரதமும் ஞானமுமே உடன்வரும். இறந்தபின், சுற்றத்தார்கள் அனைவரும் அழுவார்கள்; பிணமென்றும் பெயரிடுவார்கள்; கொளுத்திவிட்டு நீராடி இறந்தவரை மறந்தேவிடுவார்கள். உடலாகிய கூரை அழிந்துவிட்டால் மீண்டும் உயிர் அதனுள் புகமுடியாது.

மாளிகைகட்டிச் சிறப்புடன் வாழ்ந்தவன் இறந்தான். மனைவியும் அன்பை மறந்தாள். உயிர் கட்டவிழ்ந்துபோயிற்று; ஒன்பது வாயிலும் அடைபட்டுவிட்டன; அன்புடையவர்கள் அழுதுவிட்டு நீங்கினார்கள். இப்படி உடல் நிலையாமையைக் கண்டும் மக்கள் பொருள் தேடுவதிலேயே கருத்துடையவர்களாய் உள்ளார்கள். குடமுடைந்தால் அவ்வோட்டையாவது சிலநாள் வீட்டில் வைத்திருப்பார்கள்; உடல் அழிந்தால் உடனே அகற்றிவிடுவார்கள். பிறந்தவர் இறந்தார். எழுபதாவது வயதில் உடல் அழிந்துவிடும். அரசனாக இருந்தாலும் அழியவேண்டியதே. உடல் அழிந்தபின் அதைப்பழித்தாலும் புகழ்ந்தாலும் ஒன்றே. ஆகையால், இதனை அறிந்து தெளிந்து இறைவனது திருவுருவை வணங்கல்வேண்டும்.

3. செல்வம் நிலையாமை

(168—176)

ஒரு அரசன், தன்னுடைய அரச உறுப்புக்களைப் பிறர் பிடுங்கிக்கொள்ளும் முன்பே நல்லுணர்வோடும் சிவபிரானின் திருவடியை அடைதல்வேண்டும்; அது அருந்தவமாகும். செல்வம், பெருகியும் தேய்ந்தும் வரும் இயல்பினையுடையது. இறைவனை வணங்கினால் பெருஞ்செல்வம் உண்டாகும்.

தேனிக்கள் சம்பாதித்துவைத்த தேனடையை வலிமையுடையவர் கொண்டுபோவதுபோல, உடலி லுள்ள உயிரைக் காலன் கொண்டுபோகின்றான். செல் வத்தின் நிலையாமையைத் தெளிந்துகொள்ளவேண்டும். அதனிடம் அதிக ஆசை வைக்கக்கூடாது. செல்வத் தால் காலனைத் தடுத்து வெல்லமுடியுமா? சுற்றத்தார் அனைவரும் பொருளைத்தான் எதிர்பார்ப்பார்கள்; உத விக்கு வரமாட்டார்கள். உயிர் போகும்போது தாய் தந்தையர்களால் ஒன்றும் செய்யமுடியாது. சிவசிந் தனை உள்ளவர்களை இயமன் ஒன்றும் செய்யமாட் டான். மரண வேதனையிலிருந்தும் தப்பலாம்.

4. இளமை நிலையாமை

(177—186)

சூரியன் காலையில் தோன்றி மாலையில் மறைவதை யும், இளங்கன்று முதிர்ந்து எருதாகி இறப்பதையும் கண்டு இளமையின்தன்மையை மக்கள் உணரவில்லை. விளக்கைத் தூண்டிவிட்டாலும் சிலநேரம் பிரகாச மாக இருந்து பின், சுடர்படிந்து சுருங்குவதுபோல

இளமையும் அழியும். இளமையில் மாதர்கள் விரும்பி முதுமையில் எட்டியைப்போலக் கசப்பர்.

பாலன், இளைஞன், முதியன் என்னும் மூன்று பருவங்கள் கழிவதைக்கண்டு இளமை நிலையாமையை மக்கள் அறியவில்லை. பதிபுண்ணியம்செய்து இறைவன் திருவடியை அடைவதே மக்களாய்ப் பிறந்தவர்களின் குறிக்கோளாகும். இதனைச் செய்யாவிடில் முப்பது ஆண்டு இளமையை வீணே கழித்தவர்கள் ஆவார்கள்.

இளமையிலேயே இந்திரியங்களையடக்கி நல்வழிப் படுத்தி முத்தியடைய முயலவேண்டும். மலமயக்கம் நீங்கப் பெறுதவர்கள் மீண்டும் மீண்டும் கருப்பைக் குழியில் வீழ்வார்கள். இளமை நீங்குமுன் இறைவனைத் துதித்தால் நீண்டகாலம் வாழலாம்.

5. உயிர் நிலையாமை

(187—196)

பூங்கொம்பில் உண்டாகும் கொழுந்து, இலைகள், பூக்கள் முதலிய அனைத்தும் அழிகின்றமையைக்கண்டும் உயிர்நிலையாமையை அறிந்து இறைவனைத் துதிக்காமல் மக்கள் இருக்கின்றனர். உயிர் நீங்கும்போது பஞ்சேந்திரியங்களும் அழிந்துபோகும். உயிர் நிலையாமையை அறிந்து உய்யவேண்டியவழியில் நின்று இறைவனை உணரவேண்டும். காலங்கடந்தவனுன இறைவனது திருவடியைப் பொருந்திநிற்கும் ஞானமாகிய திருவடி ஞானத்தைப் பெறுவதே உயிரின் நோக்கம்.

பட்டாடை கிழிந்து அழிவதையும், கருமயிர் வெண்மயிர் ஆவதையும் யாரும் அறியவில்லை, ஒரு

வருடமென்பது நம் வாழ்நாளை அறுக்கும் வாளாகக் கருதவேண்டும். யோகத்தினுல் அமிர்த உணவை உண்போமானுல் உடல் நீண்டகாலம் அழியாமல் இருக்கும்.

திருவடிஞானம் உடையோருக்கு இறைவன் உள்ளத்தே நிற்பான். திருமூலர் முடிவாகக் கட்டளையிடுவது என்னவென்ருல்? தருமவழியிலே நின்று அறம் செய்யுங்கள்; மோட்சம் அடைய இறைவனைப் பணியுங்கள்; பிறர் பொருளைக் கவராதீர்கள்; பசி என்று வருபவர்களுக்கு ஒரு அகப்பைச் சோறு அளியுங்கள். இவையே உங்களுக்கு நாம் செய்யும் உபதேசமாம் என்கின்ருர்.

6. கொல்லாமை

(197—198)

கொல்லாமை என்னும் மலரே இறைவனுக்கு உகந்த மலராகும். கொல், குத்து என்றவர்களை எமதூதர்கள் வலிமையுள்ள கயிற்ருல் இறுகக் கட்டித் துன்புறுத்தி நரகத்திலே நீண்டகாலம் அழுத்தி வைப்பார்கள்.

7. புலால் மறுத்தல்

(199—200)

மாமிசம் உண்ணும் நீசத்தன்மை உடையவர்களை இயமதூதர்கள், பலபேரும் காணும்படியாகப் பிடித்துத் தீவாய் நரகத்திலே தள்ளுவார்கள். ஐம்பெரும் பாதகங்களை நீக்கிச் சிவனடி சேர்வார்க்கு எந்நாளும் இன்பமேயன்றித் துன்பமே இல்லை.

8. பிறர்மனைநயவாமை

(201—203)

தன் மனையாளைவிட்டுப் பிறர் மனையாளை இச்சிப்பவன் துன்பப்படுவான். நற்குடிப் பிறந்த மனையாளை அறையில்வைத்துப் பூட்டிவிட்டுப் பண்பில்லாத பிறர் மனையாளை அடைவதானது, சிறு கிளையிலேறிக் கால் ஒடிந்ததுபோல ஆகும். பெரும் பணக்காரர்களும் அற்ப அறிவுடையவரும் மாதர்களிடம் கொண்ட மயக்கத்தை மாற்ற சக்தியற்றவர்கள்.

9. மகளிர் இழிவு

(204—208)

எட்டிப்பழத்தை எவரும் உண்ணமாட்டார்கள்; அதுபோல, பொய்ம்மை மகளிரிடத்தில் செல்லும் எண்ணத்தைவிட்டு நன்னெறியில் ஒழுகவேண்டும். பிறர் மனையாளின் இல்லத்தில் நுழைபவர்கள் சுனை நீரின் சுழியில் அகப்பட்டு அழிபவனைப்போலத் துன்புற்று அழிவார்கள். மாதர்கள், தமது வறுமைக் காலத்தில் உதவி செய்தவனுனாலும் புதிய பொருள் உடையவரிடத்தில் அன்புடையவர்களாய் இருப்பார்கள்; முன்பு உதவிசெய்தவன் இன்பந்துய்க்க வந்தாலும் அவனை அவமதித்து வெளியிருக்கச் செய்வார்கள்.

கையில் பொருள்பெறும்போது இனிக்கப் பேசிப் பின் கசப்பர். பெண்களுடன் சேருவதால் யாதொரு பயனும் இல்லையென்பது ஞானிகள்கண்ட முடிபாகும். பரத்தையர் மயக்கத்தில் அதிகமாக மூழ்கினவர்களை நல்லோர்கள் தடைப்படுத்தல்வேண்டும்.

10. நல்குரவு (வறுமை)

(209—213)

வறுமையுற்ற வாழ்வால் பயனில்லை. நண்பர்களும் உறவினர்களும் அதுசமயம் விலகுவார்கள். வறுமைக் காலத்திலும் இறைவனைத் துதித்தல்வேண்டும். அப் போதுதான் உங்களது கன்மமலம் நீங்கப்பெற்று உங்கள் வயிறு நிரம்பும். சுற்றத்தார்கள் அனைவரும் மிகக் கொடியவர்கள். அவர்கள் வழியைப் பின்பற் றுமல் திருவடிஞானம் பெற்றுல் பிறப்பு அறும். வறு மைக்காலத்தில் துன்பப்பட்டவன் வாழ்வை வெறுத் தவனுய் இறைவனைப் பிரார்த்திக்கவேண்டும். அப் போது நல்வாழ்வு கிட்டும்.

11. அக்கினிகாரியம்

(214—223)

அந்தணர்கள் அக்கினிகாரியம் செய்வார்களாறுல் ஆகாயம், பூமி, திசைகள் இவைகளில் உள்ளவர்களும், தேவர்களும், செல்வம், புகழ், வெற்றி ஆகிய இவை களை அடையமுடியும். அக்கினிகாரியம் செய்யும் அந் தணர்கள், அனைவருக்கும் ஐயம் இட்டு உண்ணல் வேண்டும். புறத்தே செய்யும் அக்கினியுடன் உள் ளொளியாய் இருக்கும் சிவனையும் தியானித்து வழிபட் டால் எங்கும் சிவாகாரம் தோன்றும். சிவாக்கினியே நமது ஆணவ இருளை அழிக்கவல்லது. அவ்வாணவ மலம் கழிந்ததும் திருவடிஞானம் உண்டாகும். மேலும், அவ்வக்கினி வினைகளையும் துன்பங்களையும் துடைக்கவல்லது. சிவபெருமானே வேள்வித்தலைவன் ஆவன். அப்பெருமானே உலகங்களின் தோற்றம்

நிலை இறுதிகளுக்குக் காரணமான அக்கினியாவன். வேள்வியின் இறுதிப்பயன் முத்திப்பேருகும்.

12. அந்தணர் ஒழுக்கம்

(224—237)

ஓதல், ஓதுவித்தல், வேட்டடல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுதொழில்களை மேற்கொண்டு தினமும் சந்தியாவந்தனம் முதலான இயம நியமங்களுடன் சிவத்தியானமும் வேதாத்யயனமும் செய்பவர்களே அந்தணர்கள் ஆவார்கள்.

மேலும், வேதாந்த ஞானத்தோடு இறைவனைத் தனக்கு வேருகக்காணுது ஒன்ருகக் காண்பவர்களும், காயத்திரி ஜபத்துடன் தியானப்பொருளே தாமாக நினைத்து மாயையில் அழுந்தாதவர்களும், சிவாநுபவம் பெற்றவர்களும் அந்தணர்கள் ஆவார்கள்.

வேதாந்தபாடம் கேட்டலால் ஆசை அறும்: ஆசையற்ற இடமே வேதாந்தம் ஆகும். வேதாந்தம்: பூணூலும், ஞானமும், சிகையும் ஆம். அந்தணர்கள் இதனை உணரவேண்டும். உண்மைஞானம், பொறியின்பத்தை விட்ட அறிவு, பக்தி இவைகளை உடையவர்களே உண்மையந்தணர்கள் ஆவார்கள்; வயிற்றை நிரப்புவதிலே ஆசைகொண்டவர்கள் அந்தணர்கள் ஆகார். உண்மை அந்தணர்களுக்குப் பிரபஞ்சம் தோன்ருது; எல்லாம் சிவமாகக்காணும் துரிய சமாதியே உண்டாகும்.

வேதாந்தமாகிய உபநிடதமே அந்தணர்களால் ஓதத்தக்கது. ஏனைய உலகியல் நூல்களை ஆராய்தல்

ஆடம்பரமாகும். உண்மை அந்தணர்கள் வசிக்கும் இடம் மிகச் செழிப்பாக இருக்கும்; அந்நிலத்தைக் காக்கும் அரசன் நன்னெறியுடையவனாக இருப்பன். வேதாந்த ஞானத்தினை அநுபவத்திற்கு உள்ளாக்கிக் கொள்ளாதவர் வேதம் ஓதி பதமுத்தியடைவதுடன் அட்டமாசித்திகளையும் பெறுவர்.

இவ்வந்தணர்கள் அவியுணவை உண்பார்களாதலால் அகப்பற்றும் புறப்பற்றும் நீங்கும்; பின் இறைவனைத் தியானிக்க அகங்காரம் நீங்கும். அதன்பின், அவர்களது அறிவு வேறு எதையும் நாடாது.

13. இராசதோடம்

(238—247)

கல்லாத அரசனும் இயமனும் தங்களுக்குள் சமானமானவர்கள் ஆவார்கள். ஆனால், படியாத அரசன் தர்மம்பாராது கொல்வான்; இயமன், நல்லவர்களை அணுகமாட்டான். ஆகையால், கல்லா அரசனை விடக் காலன் மிகவும் நல்லவன். அரசன், நீதியின்படி நடக்காவிடில் நாடும் செல்வமும் அழிவதுடன் தானும் அழிவான்.

ஒழுக்கநெறி தவறாமல் மேற்கொள்ளும் வேடமே உண்மை வேடமாகும். ஒழுக்கநெறியில்லாத போலித் தவவேடர்களை அரசன் உண்மைத் தவக்கோலநெறியில் நிற்பித்தல்வேண்டும். அறிவில்லாதவர்கள் சிகையையும் பூணூலையும்தரித்தால் உலகம்கெடும். அரசன், ஆடம்பரத்திற்காக சிகையையும் பூணூலையும் அணிந்திருப்பவர்களை ஆராய்ந்து அவைகளை அறுக்கும்படிச் செய்வானாயின் அது நாட்டுக்கு நன்மைதரும்.

பசு, பெண், ஞானி இம்மூவர்களையும் பாதுகாக்க வேண்டியவன் அரசன் ஆவான். அவன் காவாமல் இருப்பானேயானால் மறுமையினும் நரகத்தில் அழுந்துவான். அரசன் மறந்தும் அறம் அல்லாதவற்றைச் செய்தல் கூடாது. அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகளும். ஆகையால், அரசன் உலகை நலமுறக் காக்கவேண்டும்; இல்லையேல், அவன் புலியைவிடக் கொடியவன் ஆவான். யோகவழியில் நின்று அமுதம் உண்ணாமல் கள்ளையுண்டு மயக்கம் பிடித்தவர்களைத் தண்டித்து நல்வழிப்படுத்துவது அரசனது கடமையாகும். ஒழுக்கநெறியில் நில்லாதவர்களை இறைவன், மறுபிறப்பில் தண்டனை கொடுத்துத் திருத்துவான்; இம்மையிலே அவர்கட்குத் தண்டனையைக் கொடுத்துத் திருத்தவேண்டியது அரசனது கடமையாகும்.

14. வானச்சிறப்பு

(248—249)

மழைநீரால் இனிப்புடைய பல பழங்களைத்தரும் மரங்கள் பூமியில் தோன்றும்; எட்டிக்காயும்கூட நீர் மிகுதியால் கசப்புமாறி இனிக்கும். ஆகவே, மழையே அமிர்தத்தை உண்டாக்குகின்றது; இறைவனைப் பூசிக்கும்போதும் அபிஷேகத்துக்கு உதவுவதாக இருக்கின்றது. மழையே இருமையின்பத்துக்கும் ஆதரவாகின்றது.

15. தானச்சிறப்பு

(250)

வேற்றுமை பாராது எல்லோருக்கும் கொடுங்கள்; வரும் விருந்தினரை எதிர்பார்த்து உண்ணுங்கள்;

வெகு விரைவில் உண்ணுதிர்கள். காகம் போன்று இனத்தை அழைத்து உண்ணுங்கள்.

16. அறம்செய்வான்திறம்

(251—259)

தனது திருவடியை வணங்குகின்றவர்களுக்கும் அறம் செய்கின்றவர்களுக்கும் பரமனே உறவினன் ஆவன். பரமனுக்கு ஓர் பச்சிலை இட்டு அர்ச்சித்தல்; பசுவிற்குப் புல் கொடுத்தல்; வறியோருக்கு ஓர் கைப் பிடி உணவளித்தல்; எவரிடத்தும் இனிமையாகப் பேசுதல் ஆகிய இவைகள் எவரும் எளிமையாகச் செய்யக்கூடிய அறங்களாகும்.

வறுமையுடையாருக்கும் சிவஞானிகட்கும் உண வளிப்பது சிறப்புடைய தருமமாகும். அறிவற்ற மனம் உடையவர்களே! ஆணவமலத்தைப் போக்கி அறிவை நிறைத்துக்கொள்ளுங்கள். செல்வம் கையிலுள்ள போதே அறம் செய்யவேண்டும். காலமுடிவில் இயமன் வந்தேதீருவான்; அவனுல் கொண்டுபோகப்படுபவர் நல்லவரா கெட்டவரா என்பதையும் அவரது வறுமை யினையும், இளமையினையும் பார்க்கமாட்டான்; ஆகை யால் காலன் வரும் முன்பே நல்ல தவத்தைச் செய்ய வேண்டும்.

இறைவனைநோக்கிச் செய்யும் தவமும் அறமுமே இம்மைக்கும் மறுமைக்கும் துணையாக உள்ளன. ஆகவே, இறைவனது திருவடிகளைப்பற்றி, எவரையும் குற்றம் கூருமல் அறநெறியில் நின்று அனைவருக்கும் அளிப்பதைக் கடைப்பிடியுங்கள்.

17. அறம்செய்யான்திறம்

(260—269)

தர்மங்களைச் செய்யாதவர்களுடைய செல்வம் எட்டிப்பழம்போலப் பயனற்றதாகும். கடும் வட்டி வாங்கிப் பிறர்பொருளைக் கவரும் கொடியர்கள் செல்வத்தின் பயனான அறத்தினை அறியமாட்டார்கள். தம் ஆயுள் முடியும் காலத்தும் அறிவிலிகள் அறத்தைச் செய்யவேமாட்டார்கள்.

அறத்தை அறியாதவர்கள் இறைவனின் திருவடித் தியானத்தையும் அறியமாட்டார்கள்; பாவநெறியில் நின்று பகையையும் அடைவார்கள். அறம் செய்யாதவர்களுக்கு இருமல், சோகை போன்ற பல கொடிய நோய்கள் வந்துசேரும்; இடி, நாகப்பாம்பு, பிளவைக் கட்டி முதலிய துன்பங்கள் நல்லறம் செய்கின்றவர்களிடம் வந்து அடையா.

உயிர்களிடத்தில் இரக்கமுள்ளவர்கள் இறைவனின் திருவடியினைத் தரிசித்தவர்கள் ஆவார்கள்; அடியார்களைச் சிவனெனவே வழிபடுபவர்கள் சிவலோகவாசிகள் ஆவார்கள். பொருளாசை மிகுந்தவர்கள் வழித்துணை எதுவுமில்லாதவர்களாய், சினம் மிகுந்து அழிவார்கள். பிறர்க்குக் கொடுத்துச் சந்தோஷிக்காதவர்கள் அறத்தை மனத்தாலும் நினைக்காதவர்கள் ஆவார்கள்; மேலும் அவர்கள் மிருகங்கட்குச் சமானமானவர்களே.

செல்வம்பெற விரும்பி அற்ப அறிவுடையோர்களைப் பாடிப் பணிந்து போற்றுமல், மோட்சத்தைப்

பெற விரும்பி இறைவனைத் துதிக்கவேண்டும்; அதனால் இருமைப்பயனையும் பெறலாம்.

18. அன்புடைமை

(270—279)

உண்மை ஞானம் இல்லாதவர்கள், அன்பும் சிவமும் வேறு வேறு என்பார்கள். அன்பே சிவமாக இருப்பதை அறிந்த பிறகு எல்லோரும் சிவமாகவே இருப்பார்கள். அன்புடன் மனம் உருகிப் பக்தி செய்வார்களே ஜோதிஸ்வரூபனான இறைவனை அடைய முடியும். அன்பும் இரக்கமும் உள்ளவர்கள், இறைவனையும் அவனது திருவடிகளையும் தரிசிப்பார்கள். நல்வினை தீவினை என்னும் இருவினைச் சுமையுடையவர்கள், பிறப்பு இறப்பாகிய துன்பத்தை அடைவார்கள். சிவன், அன்பிற்கு எளியவன். நம்மைப்படைத்த இறைவனிடம் அன்புவைக்காமல் உலக வாழ்வில் அன்பு வைப்பவர்கள் வீணே அழிகின்றவர்களாவர்.

எவர், இறைவன் அருளைவேண்டி இறைவா! இறைவா!! என்று ஏத்துகின்றார்களோ, அவர்களைச் சிவன் நற்கதி அடையவைப்பன்; மேலும் துணையாகவும் இருப்பன்.

19. அன்புசெய்வாரை அறிவன் சிவன்

(280—289)

மக்கள், தன்னை இகழ்ந்ததையும் அன்பினால் பெற்ற பயனையும் பரமன் நன்றாகத் தானே அறிவன். அன்பு செய்வார்களுக்குத் திருவருளை அளிப்பான்.

பேரின்பமாகிய மோட்ச உலகை அடைவதற்காக மக்களுக்கு இப்பிறவியிலே பல சாதனங்களையும் இறைவன் அமைத்திருக்கின்றான்; அதையறிந்து ஒழுகாமல் பிறவிக்கு ஏதுவான காரியங்களை அறியாமையினால் செய்தாலும், இறைவனிடத்து அன்புவைத்து வாழ்கின்றவர்களுக்குச் சிவபிரான் அருள்புரிவான். அதனால் இப்பிறவி முடியும்; பேரின்பம் அடையலாம். அன்பு உடையாரை இறைவன் ஏற்றருளுவான்.

ஆடவர்கள், மகளிர்மேல்வைத்த அன்புபோல சிவபெருமானிடத்தில் வைப்பார்களானால் இறைவன், அவர்களுக்கு உலகப்பற்றில் உள்ள உணர்ச்சி தோன்றாதபடி அருள்செய்து அணைத்துக்கொள்வான்.

சித்தர்களாலும் ஜோதி வடிவினனான இறைவனை ஆராய்ந்து அறிந்துகொள்ள முடியாது. அன்புடன் கூடிய அடியார்களுக்கு வீட்டுலகை அளித்து அவர்கள் முன்பும் இறைவன் காட்சி அளிப்பான்.

பிறப்பு இறப்புக்களின் உண்மையை அறியாதவர்கள், அன்பினால் யாம் இறைவனை அறிவோம் என்று இறுமாப்புடன் கூறுவார்கள். ஆனால், பிறப்பு இறப்பே இல்லாத கடவுளோ, அன்பில்லாதவர்களை என்றும் காணமாட்டார். தன்னை அன்பினால் பற்றி நிற்பவர்களுடைய உள்ளத்தில் தானேவந்து நெருங்கி எழுந்தருளியிருப்பான்.

ஜோதிஸ்வரூபனை விட்டு விட்டு நினைக்காமல் இடையறாமல் எப்போதும் நினைக்கவேண்டும். அப்படி நினைப்பதே இறைவனுக்குச் செய்யும் அபிடேகமாம்.

20. கல்வி

(290—299)

தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபிரான், தானே வந்து என்னுடைய உள்ளத்துள் இருந்தானாதலால், எவராலும் வெறுக்கத்தகாத உண்மை ஞானக் கல்வியைக் கற்றேன் (என்று திருமூலர் கூறுகின்றார்).

உண்மை ஞானக் கல்வியைக் கற்றறிந்தவர்களுடையகருத்தில் ஓர் அகக்கண் உண்டு; அக்கண்ணே பரம்பொருளை விளக்கிக்காட்டும் ஞானக்கண்ணாம்.

உடலில் உயிர் இருக்கும்போதே, இறைவன் திருவடியுணர்வை அறிவிக்கும் அருள்நூல்களைக் கற்க வேண்டும். அதனால் பாவம் நீங்கும். அத்திருவடியுணர்வோடு இறைவனையும் தொழுதால் இயற்கை ஒளியுடையவனான சிவன் விளங்கித்தோன்றுவான்.

உலகஞானக் கல்வியைக் கற்றவர்கள் திருவருள் துணை பெறமாட்டாமல் ஒதுங்குவார்கள்; தேகப்பற்றுடையவர்கள், யோகமார்க்கத்தில் நின்று உடலை வருத்தி வாழ்வார்கள். இப்படிப்பட்ட துன்பங்களை அடையாமல் அல்லும் பகலும் பரமனைத் தொழுதால் அழியா உடலைப் பெறலாம். சிவஞானக்கல்வியே ஆன்மாக்களுக்கெல்லாம் துணையாக இருக்கும். அறிவு, புலன்களின் வழியே செல்லாமலிருக்க, பஞ்சாட்சர ஜபம் செய்யவேண்டும். சுழுமுனையில் உள்ள சந்திர மண்டலம் வரையில் போய்த் தியானிக்கின்றவர்களுக்கு ஞானக்கல்வி ஓர் நூலேணியாகப் பயன்படும்.

திருவருள் ஞானக்கல்வியுடையவர்களின் முன்பு, அக்கல்வி இல்லாதவர் பெருமை இல்லாதவர்களாய் ஒதுக்கப்படுவார்கள். பற்றுக்கோடாக ஒன்றைப் பற்றவேண்டுமானால் இறைவனையே பற்றவேண்டும். தேவர்களுக்கும் சிவஞானக்கல்வி இல்லாவிட்டால் பேரின்பம் கிட்டாது.

21. கேள்விகேட்டு அமைதல்

(300—309)

நீதிகள், அந்தணர்களது அறிவுரைகள், விதிநூல்கள், மந்திரங்கள், இறைவனது இயல்புகள் ஆகிய இவைகளையெல்லாம் கேட்டும், முடிவில் உண்டாவது சிவகதியே ஆம். சிவஞான நூல்களை உணர்ந்து கொண்டிருப்பவர்களே சிவநிட்டையில் உயர்ந்தோர் ஆவார்கள். சிவஞான நூல்களைக் கேட்பவர்களது ஏவல்கேட்டு அயனும் மாலும் அதன்படி நடப்பார்கள்.

எல்லாவற்றிற்கும் சிவனே தலைவன் என்ற தெளிந்த ஞானத்தையுடைய மனிதர்களே பின்பு தேவராவார்கள். எவரும் செய்தற்கரிய பெருந்தவத்தில் ஈடுபட்டுவரும் தவமுடையவர்களுக்கே சிவன் இரங்கி அருள்செய்வான்.

பிறப்பையும் இறப்பையும் ஈசன் நமக்கு அருள் செய்ததைக் குறித்து அவனைப்பற்றியே நாம் எப்போதும் மகிழ்வோமானால், அவ்வீசன் நம்மிடம் நேசம் கொள்வான். பின், நம்மனதிலே ஜோதியாய் இருந்து ஆன்மாவிலே ஆனந்தமாய் நிலைத்திருப்பான்.

பெருமை, சிவஞானக் கேள்வி, மெய்ஞ்ஞான ஒழுக்கம் ஆகிய இவைகளை எப்போதும் தவருது உணர்வோமாஞல் அளவில்லாத காலம் இன்பத்துடன் இருக்கலாம். ஐம்புலத்தொடர்பிஞல் சிவாநுபவம் கைகூடாது. சிவஞானத்தை உணராதவர்கள் தம்மையும் உணராதவர்கள் ஆவார்கள்.

ஒன்றற்கொன்று உறுதுணையாக உள்ளது, உயிரும் உடம்பும் ஆகும். உயிருக்குத் துணையாக இருப்பது சாத்திரக்கேள்வி ஆகும்; மனத்தினிடமாகச் சென்று துணையாக இருப்பன சிவனது இணையடிகள். அத்திருவடிகளைத் துணையாகப் பெற்ருல் முடிவில் முத்தி சித்திக்கும்; மீண்டும் பிறப்பில்லை.

சிவன், மிகப் பழமையானவன்; தன்னை இகழ்கின்றவர்களின் துன்பத்திற்கு இடமாக உள்ளவன். இறைவனை உணராமல் ஒதுங்கி நிற்கின்றவர்களுக்கு அப்பரம்பொருள் ஓர் கல்லாலாகிய பசுவாம்.

இறைவன் எடுக்கும் திருவுருவங்கள் ஒன்றற்கொன்று பொருந்தாதனவாக இருந்தாலும், எல்லா உருவிலும் இருக்கும் திருவருள் விளக்கம் ஒன்றே என்று உணர்தல்வேண்டும்.

22. கல்லாமை

(310—319)

எப்படிப்பட்ட நூலையும் படிக்காதவரும், தமது கருத்தில் அறிய முயற்சிப்பாராஞல், அவரால் அறியப்படும் அறிவாக இறைவன் இருப்பான். கற்றவர்கள், சிவனது திருவருட்கண்ணுல் மதிக்கப்பட்டவர்கள்.

கல்லாதவருக்கும் திருவருட்பதிவு இருக்குமாஞல் உண்மையினைக் கடைப்பிடிப்பார்கள். கல்லாதவர் காணும் இன்பத்தைக் கற்றவரும் காணமாட்டாதவர் களாய்த் தடுமாற்றம் அடைவார்கள்.

திருவடிஞானக் கல்வியைக் கற்றவர்கள் எப்போதும் ஒருமைப்பட்ட மனத்துடன் வாழ்வார்கள்; கல்லாதவர்கள், பல அறிவுபெற்று மயங்குவார்கள். எறும்பு முதல் யானை ஈருக எல்லா உயிர்களுக்கும் இறைவன் சிவனுக இருப்பினும், சிவஞானம் இல்லாதவரது மனத்தில் அப்பெருமானைக் காணமுடியாது.

திருவடிஞானம் உள்ளவர்கள், உயிர் இவ்வுடலில் நிலையாக இருக்காது எனக் கருதி, சிவதருமத்திலும் சிவயோகத்திலும் நின்று விளங்குவார்கள்; கல்லாதவர்களாகிய கயவர்கள், தீவினைகளைச் செய்து இவ்வுலகில் துன்புறுவார்கள்.

தத்துவங்களினது தொகையையும், அவைகள் தொழிற்படுகின்ற அளவையும் அறிந்தவர்களாலேயே சிவத்தைக் காணமுடியும்; அவர்களுக்கே ஞானமும் கைகூடும். கல்வி அறிவில்லாத மூடர்களைக் காணவும், அவர்கள் பேசும் பேச்சைக் கேட்கவும் கூடாது. சிவஞானக் கல்வியில்லாதவர்கள், கெடுதலைச் செய்யமாட்டார்கள்; ஆதலின், அம்மூடர்களைவிட ஞானக்கல்வியில்லாதவர்கள் மிகவும் நல்லவர்கள்.

சிவஞான்ம் கைகூடாத கீழ்மக்கள், சுற்றத்தையும் விடமாட்டார்கள்; மும்மலக் குற்றத்தினின்றும் நீங்கமாட்டார்கள்; சிவஞானம்பெற்றோர்களது மாண்பினைக் கேட்டும் நல்ல தெளிவடையமாட்டார்கள்;

அறிவில்லாதவர்கள்; இவர்களே மூடர்கள். இறைவனிடம் அன்புடையவர்களே சிவஞானம் கற்றறிந்தவர்கள் ஆவார்கள்.

சிவபெருமானை ஓதி உணர்வோம் யாம் என்று அகங்காரம் கொள்பவர்கள், எனது (திருமூலரது) மனத்தில் பரஞ்சோதி உள்நின்று அருளுவதை அறியார்கள். அறிவார்களானால் அகங்காரம் கொள்ளார்.

23. நடுவுநிலைமை

(320—323)

அடியார்களின் நடுவுள் நின்றவர்களுக்கே சிவஞானம் கைகூடும்; அவர்களுக்கு நரகமும் இல்லை; அவர்களே நல்ல தேவர்களும் ஆவார்கள். மெய்யடியார்கள் சிவனாகவே விளங்குவர். பிறந்தனவற்றை எல்லாம் அழிப்பவன் சங்காரகாரணனான முதல்வனே ஆவான். சிவபெருமானது திருவடிகளைப் பற்றிநின்றவர்களும், அவனது நாமத்தையே ஓதினவர்களும் நடுவுநின்றவர்கள் ஆவார்கள்.

24. கள்ளுண்ணாமை

(324—336)

சிவானந்தத்தேனே உயர்ந்ததாகும்; இதைவிட்டு அறிவை மயக்கும் கள்ளுண்பவர்கள் முறைமையினின்றும் நீங்கினவர்கள் ஆவார்கள். மனதைச் சிவனிடத்திலே வைத்து, சமாதியில் கலந்து, சுத்த மதுவாகிய சிவானந்தத் தேனைப் பருகினால் சிவானந்தம் என்றும் ஆன்மாவை விட்டு நீங்காது. இவ்வாறு அல்லாமல்,

கள்ளுண்பவர்கள் அறிவிழக்கும் கீழ்மக்கள் ஆவார்கள். காமமும் கள்ளும் கீழ்மக்களுக்கே உரியன. சிவானந்தத் தேனுனது, திருவடி ஞானத்தை உண்டாக்குவதோடு பழைய மலத்தையும், பிற சமயங்களில் உண்டாகும் பெருமயக்கத்தையும் போக்கும்.

சத்தியை வழிபடுபவர்களும் கள்ளுண்டு அறிவிழப்பார்கள்; காமுகர்கள், காமமாகிற கள்ளையுண்டு கலக்கம் உறுவார்கள்; வேள்வி செய்பவர்கள், இருதயத்திலே சிவனைக்கண்டு தெளிவார்கள்; சிவநாம ஜபம் செய்பவர்கள், அப்போதே அரனடி அடைவார்கள். நாம் பிறந்துவந்ததின் கருத்தறியாமல் கள்ளுண்டு மயங்கி வருந்தும் மாந்தர்கள், சிவத்தினை அறியமாட்டார்கள்; சிவயோகத்தையும் செய்யமாட்டார்கள்; சிவஞானிகள், சிவானந்தத் தேனையுண்டு எப்போதும் மகிழ்ந்திருப்பார்கள்.

கள்ளுண்டவர்களுக்கு அறிவு மயங்கும்; துன்பம் வந்தடையும்; சிற்றின்பம் நிலைத்து நிற்கும்; ஞானம் வந்தடையாது; சிவானந்தமும் கிட்டாது. சிவம் சத்தி இவ்விரண்டையும் மனத்துள் வைத்துத் தியானித்தால் அட்டமாசித்திகள் பெறலாம்; இது சத்தியம்.

சமாதி இன்பத்தை அடைந்து, ஆறு ஆதாரங்களின் வழியாக மேலே ஆஞ்ஞைவரை சென்று. பிராணன்சென்ற வழியைக்கண்டு, அமுதம் சுரக்கின்ற ஊற்றாகிய சந்திரமண்டலத்தைத் திறந்தால் அமுதம் உண்ணலாம்.

முதல் தந்திரம் முற்றிற்று

இரண்டாம் தந்திரம்

1. அகத்தியம்

(337—338)

தேவர்கள், உலகம் நடுவாக இல்லாமல் ஒருபக்கமாகச் சரிந்திருக்கிறதென்று இறைவனிடம் முறையிட இறைவன், அகத்தியனை அழைத்து நீ போய் உயர்ந்திருக்கும் உலகத்தை அடைவாயாக என்று கட்டளையிட்டான். சூரியன்போன்ற பிரகாசமுடையவனும் விடியற்காலத்தில் அக்கினிகாரியம் செய்பவனுமாகிய அகத்தியன், அவ்வாறே தென்திசை அடைந்து உலகை நடுநிற்கும்படிச் செய்தான்.

2. பதிவலியில் வீரட்டம்

(339—346)

அந்தகாசுரன் என்பவன், இறைவனிடம் பெற்ற வரத்தால் உலகிலுள்ள எல்லா உயிர்களையும் துன்பப் படுத்த, அத்துன்பம் தாங்காமல் தேவர்கள் இறைவனிடம் பிரார்த்திக்க, இறைவன் மூவிலைச்சூலம் ஏந்தி அவ்வந்தகாசுரனைக் கொன்றான். (இந்நிகழ்ச்சி திருக்கோவிலூர் என்னும் தலத்தில் நடந்தது.)

சிவநிந்தனைசெய்த தக்கனுடைய தலையை வெட்டிக் கொளுத்திவிட்டு, அதற்குப் பதிலாக ஆட்டின் தலையை அரிந்து அத்தக்கன் உடலில் பொருந்த வைத்தான் இறைவன். (இந்நிகழ்ச்சி திருப்பறியலூர் என்னும் தலத்தில் நடந்தது.)

இறைவனது திருவடியை உணர்ந்துகொண்ட தேவர்களுள், திருவடியை உணராது இறுமாப்புக் கொண்ட பிரமனது ஐந்துதலைகளுள் ஒருதலையானது இறைவனது கோபத்தால் அழிய, அப்பிரமகபாலத்தை இறைவன் கையில் ஏந்தி, அக்கபாலம் நிரம்பும்படித் திருமாலின் இடது மார்பிலிருந்த உதிரத்தை ஏற்றுக் கொண்டார். (இந்நிகழ்ச்சி திருக்கண்டியூர் என்னும் தலத்தில் நடந்தது.)

இறைவனிடத்தில், செருக்குற்றுப் போர்செய்ய வந்த சலந்தராசுரனை, தன் காற்பெருவிரலால் பூமியில் ஓர் சக்கரத்தைக்கீறி, இதை எடுத்து உன் தலைமீது வைத்துக்கொள் என்று இறைவன் கூற, அசுரன் அதனைப் பெயர்த்து எடுத்துத் தன் தலையின்மீது வைக்க, சக்கரம் அவன் தலையைக் கொய்தது. (இது விற்குடி என்னும் தலத்தில் நடந்தது.)

சிவபிரான் முப்புரங்களை அழித்தார் என்று மூடர்கள் சொல்லுவார்கள். முப்புரமாவது:- ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் காரியமாக அமைந்ததாகும். அம்மூன்று மலங்களையும் அழித்ததை எவரும் அறியவில்லை. மும்மலகாரியங்களின் வடிவு :- கமலன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்களும் ஆவார்கள். (முப்புரங்களை எரித்த இடம் திருவதிகை என்னும் தலமாகும்.)

தாருகவனத்து முனிவர்கள் செய்த யாகத்தினிடமாகத் தோன்றிய யானையின் தோல், சிவபிரானுக்கு உகந்த போர்வை ஆவதை எவரும் அறியவில்லை. யாகத்தில் எழுந்த யானை இறைவனைக் கொல்லவில்லை;

யானை, இறைவனால் கொல்லப்பட்டது. (இந்நிகழ்ச்சி வழுவூர் என்னும் தலத்தில் நிகழ்ந்தது.)

காலனைவென்ற தத்துவமாவது:- மார்க்கண்டேய ராகிய உயிர், சிவத்துடன் கூடி இருந்ததே காலனை வென்றதாகும். (இந்நிகழ்ச்சி திருக்கடவூர் என்னும் தலத்தில் நடந்ததாகும்.)

இறைவனுடைய திருவடியிலே வைத்த மனதை அசைவில்லாமல் எப்போதும் அத்திருவடி நினைவிலே நிறுத்தி, பின் ஆதாரங்களின்வழியே மேலே ஆஞ்ஞை யிலே சென்று, மன்மதனது செயலான இச்சைகள் எல்லாவற்றையும் அழித்தலான - பற்றுவைக்கும் சிந்தையைத் தடுத்தல் என்னும் யோகத்தைச் செய்வ தாகும். (சிவபிரான், தவயோகமாகக் கொறுக்கை என்னும் தலத்திலிருந்து காமதகனம் செய்ததாகும்.)

3. இலிங்கபுராணம்

(347—352)

சத்தியானவள், சிவபிரானின் திருவடியைச் சேரு வேன் என்று மலையரசனின் மகளாகித் தவம்செய்து காஞ்சி க்ஷேத்திரத்தில் பரமனைப் பூஜித்தாள்.

அன்புடையவர்களுக்கு இறைவன் கருணையுடன் வெளிப்பட்டுக் காட்சி தந்தருளுவான். மலைபோலும் தீப்பிழம்பாய் நின்ற இறைவனை அயனும் மாலும் வலம்வர, அதன்பயனாகப் பிரமன் ஞானத்தையும், திருமால் சக்கரத்தையும் இறைவனிடம் பெற்றார்கள். கயிலைமலையைத் தூக்கிய இராவணனை இறைவன், தனது காற்பெருவிரல்நுனியால் அழுத்தினான். துன்பம்

தாங்கமாட்டாத இராவணன் அமரா! என்று ஓலமிட்ட பின் அவனுக்குப் பரமன் அருள்புரிந்தான்.

சண்டேசப்பெருமான், மணல் இலிங்கத்தைப் பஞ்ச கவ்வியத்தால் நீராட்டும்சமயம், தகப்பனுராகிய எச்ச தத்தன் மணல் இலிங்கத்தைக் காலால் அழிக்க, சண் டேசர் சினந்து அவரது காலைத் துண்டித்து இறைவ னது நிர்மாலிய மாலையைப் பெற்ருர்.

தன்முனைப்பு அடங்கிய தேவர்கள் அனைவரும் ஓடிவந்து இறைவனை வணங்க, அவர்களுக்கு, அள வற்ற புகழையுடைய இறைவன் எழுந்திருங்களென்று சொல்லி அருள்வழங்கினுன்.

4. தக்கன்வேள்வி

(353—361)

தக்கன் செய்த வேள்வியினைக் குறித்துச் சிவ பிரான் கோபம் அடைய, அதனுல் அந்த யாகத்தியி லிருந்து வீரபத்திரக்கடவுள் தோன்றியதும், தேவர்கள் தங்கள் பூசையினை முடிக்காதவர்களாய் ஓட்டம் பிடித்தார்கள். சமாதானம் செய்வதற்காக எழுந்த திருமாலானவர், தேவர்களைப்பார்த்து நமக்கெல்லாம் தலைவன் சிவபிரான் அல்ல; யாமே அனைவருக்கும் தலைவன் என்று கூறினுர். இறைவன், அத்திருமாலைப் பல பிறவிக்கேற்ற பாசத்துள் அழுத்தினுன். பின், திரு மாலுக்கு நல்லறிவு தோன்றித் தவம் செய்ய, சிவபிரா னும் அவனுக்கு அருள் வழங்கினுன். தக்கன்செய்த வேள்வியிலும் அக்கினியாய் இருந்து விளங்கினவன் சிவனே ஆவன்.

இறைவன் அக்கினியுள் நிலைத்திருத்தலினுலேயே அயன் மால் முதலிய தேவர்களும் தங்கள் தங்கள் பதவிகளில் இருந்தவண்ணமே இருக்கின்றுர்கள்.

மூலாக்கினியைச் சுழுமுனை வழியாக மேலேற்றி, பிரமரந்திரத்தைச் சென்றுபற்ற, இறைவன் பிரமரந்திரத்தின் வழியாக ஓடிவந்து அருள்செய்வான்.

திருமால், பிரமன், தக்கன், சூரியன், சந்திரன், கன்னிப்பெண்கள், அக்கினி, இந்திரன் இவர்கள் அனைவரும் தக்கனது வேள்வியில் அங்கம் இழந்தவர்களானுர்கள்.

அஜபாமந்திர ஜபத்தினுல் மனம் ஒடுங்கும். பல தேவர்கள் இறைவனிடம் சென்று, நவகுண்டங்களிலும் யாகம்செய்து இன்பம் அடைய இடையூறில்லாமல் எங்களுக்கு அருள் செய்யவேண்டும் என்று வேண்டிக்கொள்ள, இறைவனும் மேருமலையாகிய வில்லினுல் கொடிய அரக்கர்களை அழித்தான்.

இறைவன், தக்கனுக்கும் பின்பு அருள் வழங்கினுன். அன்புமிகுதியால் முடிவில் நாம் அடைவது முழுமுதற்கடவுளாகிய சிவனையே ஆகும்.

5. பிரளயம்

(362—366)

பேரூழிக்கால வெள்ளத்திலே மலைகளெல்லாம் மூழ்கிவிட்டதைக் கண்ட மாலும் அயனும் 'கோ' என்று அலற, சிவபிரான் ஒருவனே மிக உயர்ந்து ஓங்கி ஒளிவடிவாகி நின்று அயன் மாலுக்கு அருள்

வழங்கினான். அக்கினிப்பிழம்பாய் நிற்கின்ற தீயினைக் கண்டு உலகிலுள்ளவர்கள் அதில் வீழ்ந்து மாளாமல் இறைவன், அக்கடலின் நடுவுள் நின்று அனைவருக்கும் அபயம் அளித்தான்.

தேவர்கள், தங்களுக்குத் துன்பம் வருங்காலத்தில் இவனே நமது தலைவன் என்று இறைவனை வணங்கு வார்கள்; துன்பம் தீர்ந்தபின் இறைவனிடம் உண்மை அன்பினைச் செலுத்தும் கருத்தை விட்டுவிடுவார்கள்.

இறைவன், கடலானது எல்லை கடவாதிருக்கும் படிக்கு வடவைத்தீயை அக்கடலுள் வைத்தருளி னான்; பிரமனது கபாலத்தைப் பிட்சாபாத்திரமாகக் கொண்டவன்.

6. சக்கரப்பேறு

(367—370)

திருமால், தானே உபதேசகுரு என்னும் செருக்கை அடைந்தபோது, இறைவன், அம்மாலின் கையிலுள்ள சக்கரத்தை மேலெழுந்து போகும்படிக்கும் உலகம் ஏழிலும் செல்லும்படிக்கும் கட்டளையிட்டான். பின், இறைவனிடம் திருமால் சக்கரத்தைப் பெற்றதும் அச் சக்கரத்தைத் தாங்கும் சக்தியில்லாமையால் இறைவ னைப் பூஜிக்க இறைவன், தனது வல்லமையைப் பிரித்து அம்மாலுக்குக் கொடுத்தான். பின், தமது சக்தியாகிய உமாதேவிக்குத் தனது திருமேனியைப் பங்கிட்டுக் கொடுத்து, அபின்னசக்தியை வேறாகப் பிரித்து அதற்கு வடிவமும் அளித்தான்.

தக்கன்செய்த யாகத்தின்போது தாமோதரனுன வன், தனது சக்கராயுதத்தை விரபத்திரர்மீது விசினுன்; அச்சக்கரம், விரபத்திரருடைய 'உங்'காரத் தொனி யால் தனது வலியிழந்து வீழ்ந்தது.

7. எலும்பும் கபாலமும்

(371)

இறைவன், எலும்பையும் கபாலத்தையும் அணி யாதிருந்தால் அவை கெட்டு மண்ணேடு மண்ணுய்ப் போயிருக்கும்.

8. அடிமுடிதேடல்

(372—380)

அயனும் மாலும் அறியாமையால் முரண்பட இறைவன் திப்பிழம்பு மலையாக இவர்கள்முன் நின் ருன். அதனையும் அறிந்து துதிக்காமல் அவனது திரு வடியைத் தேடிப் புலம்புகிருர்கள். ஆகாயம் அளாவி அண்ணுமலையாய் நின்ற அப்பெருமானே அண்டங் களின் தம்பமாயும், உடலாயும், உடலுள் உயிராயும், உயிருக்குள் உணர்ச்சியாயும், தீயாயும் இருக்கின்ருன். திப்பிழம்பாய் நின்ற இறைவனது அடியையும் முடி யையும் மாலும் அயனும் காணமாட்டாதவர்களாய்த் திரும்பிவிட்டார்கள்.

உண்மைநெறியைக் கடைப்பிடித்தால் இறைவன் திருவருள் கைகூடும். சங்காரகாலத்துக்குப் பின்னர் இறைவன், பிரமனைத் தோற்றுவித்தான். அப்பிரமன், அடியேன் செய்யவேண்டிய பணிகளைக் கட்டளை யிட்டருள்க என இறைவனைவேண்ட, இறைவனும்

அப்பிரமனுக்குப் படைப்புத் தொழிலைச் செய்யுமாறு அருள்புரிந்தான்.

9. சர்வசிருஷ்டி.

(381—410)

பராபர வஸ்துவாகிய சிவத்துடன் ஞானவடிவமான பராசத்தி சேர்வாள். பராபர சிவத்திலிருந்து பரசிவம் தோன்றும். பராசத்தியினிடமாக நாதம் தோன்றும். நாதத்திலிருந்து விந்துதோன்றும். அந்நாத விந்துக்களிலிருந்து சிவனிடமாக நின்ற ஞானமும், சத்தியினிடமாகநின்ற கிரியையும் ஆக இருசத்திகளும் வெளிப்படும். இச்சை என்னும் சத்தி, விந்துவினிடமாகத் தோன்றும். விந்துசத்தியிலிருந்து சுத்தமாயை தோன்றும். அது, மணியுள் ஒளிபோலக்கலந்து எங்கும் வியாபகமாய் இருக்கும். அச்சுத்தமாயையின் மூலமாகச் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்கள் அளவில்லாதனவாகும்.

பராசத்தியின் விருப்பத்தால் நாதமும், அதற்குப் பின் விந்துவும் தோன்றும். சதாசிவன், மகேச்சுரன், உருத்திரன், திருமால், அயன் ஆக ஐவருக்கும் பிருதிவி முதலான ஐந்து பூதங்களுக்கும் சார்பிடமான பொருளாகிய சத்தியே சத்திமானுகவும் விளங்கும்.

சிவமும் சத்தியும் உலகைப் படைப்பார்கள். சதாசிவன் முதலான ஐவரும் அவர்களுக்குப் புதல்வர்கள் ஆவார்கள். சிவமும் சத்தியும், நிலமும் நீரும்போன்று கலந்து உலகமாக விரிந்திருக்கின்றனர்.

நீரினிடத்துச் சுவையின்பமும், நெருப்பினிடமாக ஒளியும், காற்றினிடத்து உயிரும் (பிராணவாயுவும்)

தோன்றும். ஆகாயம் எல்லாப் பூதங்களுக்கும் அடிப் படையாகும். எல்லாவற்றையும் தாங்கி நிலைப்பிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது பிருதிவி.

சிவபிரான், திருமாலுடனும் பிரமனுடனும் காத்தல் படைத்தல் என்னும் தொழில்களை அவர்கள் வாயிலாக இயற்றத் திருவுளம்கொண்டான். இறைவன் சொற்பிரபஞ்சமாயும் பொருட்பிரபஞ்சமாயும் இருப் பவன். அவனே, பிரமனுடைய சிருட்டித் தொழிலுக்கு வேண்டிய ஞானமாக இருந்து, பிரமனைக் கருவியாகக்கொண்டு உலகைப் படைப்பிக்கின்றான்.

சங்காரத்தையும், சிருட்டியையும், திதியையும் இறைவன் தமது திருவுள்ளக்குறிப்பால் நிகழ்த்தும் காலத்தில் ஆகாயம், பூமி, எட்டுத்திசைகள் ஆகிய உலகில் கருணையே வடிவமாய் ஒன்றாயும் உடனாயும் இருப்பான்.

உயிர்கள் முற்பிறவிகளிற்செய்த இன்பத் துன்பங் களுக்கேற்ற உடம்பினை இறைவன் தந்தருளுவான். அத்துடன், தான் நடுவுநிலையாய் இருந்து உடம்பிற்குத் துணையாய்ப் பிராணனாகவும் இயங்குவான்.

படைப்பு முதலானவை, சிவம் - சத்தி இவர்க ளுடைய திருவிளையாடல்களாகும். பலவான மாயா சத்திகளோடு இறைவன் பொருந்தியபொழுது உலக மெல்லாம் செயல்படும்.

ஆணவமலசத்தியுடன் மாத்திரம் உதித்தவர்க ளான அணுசதாசிவர், அஷ்டவித்யேச்வரர், சப்தகோடி

மகாமந்திரர்கள் இருவர், அபக்குவ மலத்தினரான ஆன்மாக்கள் ஆக ஐவகை ஆன்மாக்களுக்கும் சிவ பிரான் உள்நின்று உணர்த்தும் பரிபாகம் பெறும்வரை ஆணவமலம் நீங்கப் பெறுது. சதாசிவர் முதலான ஐவரும் அழிவில்லாத திருவருட்சத்தியுள் தோன்றி வந்தவர்கள்; இவர்களால் ஆகாயம் முதலான பஞ்ச பூதங்களும் தோன்றின.

விந்துசத்தியில் திரிபுரையாகிய மனேன்மணி தோன்றுவாள்; அவளே சதாசிவமாக அமைந்து பஞ்ச கிருத்தியங்களைச் செய்வாள்; அந்த மனேன்மணியே நித்திய சுமங்கிலியாயும், காரணேச்வரியாயும், காரியேச் வரியாயும், கணேசையாயும், பூரணியாயும், பசுஞானங் களாயும், பதி ஞானமாயும் இருப்பாள்.

இறைவன் ஒருவனே ஏழுலகையும் படைத்தவ னும், அளந்தவனும், அழித்தவனும், உடலாயும், உயிராயும் இருப்பவன். இறைவனும், மயக்கத்தைச் செய்யும் திருமாலும் கூடி, மாயாகாரியமாகிய விருப் பத்தால், ஆடவரும் பெண்களும் கூடிய கூட்டத்தால் உலகில் பிறவியை அமைத்தார்கள்.

பிறப்புத்தொழிலை அமைத்த சிவபிரான், ஆடவர் மகளிர் இவர்கள் உள்ளத்தில் போகியாக இருந்து விருப்பம் செய்யும் வழக்கத்தையும் நான் (திருமூலர்) அறிந்தேன்.

எண்பத்துநான்கு நூருயிரம் யோனி பேதங்களைப் பொருந்தி விரிந்து உயிராயும் இறைவன் நிற்பது எப்படி எனக் கேட்கும் நாத்திகர்கள், ஆணவத்துள் அழுந்திக்

கிடந்தவர்கள் - கிடப்பவர்கள் ஆவார்கள். சுத்தமாயை யில் தோன்றியனவே எல்லா உலகமும்.

10. திதி

(411—420)

புத்தியுள்ளே புகுந்து நிற்கின்ற இறைவன் ஒளி, இருள், புகழ்ச்சி, இகழ்ச்சி, உடல், உயிர் இவைக ளாகக் கலந்துநின்ருன். அப்பரமனே உலகிற்குத் தலை வனுமாவன். இறைவன் பெருஞ்சுடராகவும், சண்ட மாருதமாகவும், குளிர்ந்த மழையாயும், திருமாலாயும் ஒவ்வொரு காலத்திலும் இருப்பான். அன்பு, அறிவு, அடக்கம், இன்பம், இன்பம் உண்டாக்கும் கலவி (புணர்ச்சி) ஆகிய எல்லாமாய் இருப்பான். பெரியதும் சிறியதுமான உடற்பேதங்களைச் செய்யவல்லவனும் அவ்விறைவனே. உடலுக்குள் உயிரானது தங்கி நிற் கும்படியாகத் தங்கிநிற்பவன் அப்பரமனே ஆவான்.

ஆணவத்தால் தன்னை அணுகுகின்றவர்களுக்குத் தூரத்தில் உள்ளவன் இறைவன்; திருவடி ஞானத் துடன் அணுகுகின்றவர்களுக்குச் சிவஞானத்தை அளிப்பான். எவ்வுயிர்களாகி வணங்கினுலும் அவை களுக்கு நிலைத்த உடலை அருளுவான் அண்ணல்.

11. சங்காரம்

(421—430)

இறைவன், கடல் நிலம் இவைகளையும் அசுரர் களையும் சுட்டெரித்தான். அப்படிச் சுட்ட அக்கினி, அவ்விறைவற்குக் கையம்பாக விளங்குவதாம்.

தினப்பிரளயம், கற்பாந்தரப்பிரளயம், மகாப்பிர ளயம் என்ற மூன்று பிரளயங்களில் கற்பாந்தரப்பிரள யத்தை யான் உணர்ந்தேன். (என்று திருமூலர் கூறு கின்றார்.) மலைகளோடு கூடிய இவ்வுலகம், உலையில் இட்ட அரிசிபோன்றதாகும். யோகிகளுக்குக் கற்பாந் தரப் பிரளயம் ஓர் வியப்பில்லை.

சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் என்னும் இருவகைப் பிரபஞ்சங்களும் இறைவனால் ஒடுக்கப் படும். பொருட்பிரபஞ்சம் சொற்பிரபஞ்சத்திலும், சொற்பிரபஞ்சம் பிரணவத்திலும், பிரணவம் நாத தத்துவத்திலும், பரநாதம் சிவத்திலும் ஒடுங்கும்; இப்படி எல்லாத் தத்துவங்களும் பிரபஞ்சங்களும் சிவாக்கினியில் ஒடுங்கும்.

தினப்பிரளயமாவது:- உறக்கத்தினால் எதையும் அறியாதிருக்கின்ற நிலையாகும். ஆன்மாக்களுக்கென்று அமைக்கப்பட்ட சங்காரமாவது:- விழிப்புநிலையைக் கடந்துள்ள சொப்பனநிலை ஆகும். சுத்த சங்கார மாவது:- ஆன்மாக்கள், ஆணவமலத்துள் அழுந்திக் கிடக்கும் ஒடுக்க நிலையாகும்; மனம் செயலற்று நிற்ற லாகும்; பரனருள் தோயாமையாகும். உய்த்த சங்கார மாவது:- ஆன்மாக்கள் சிவசத்தியில் ஒடுங்கியிருக்கும் நிலையாகும்,

நித்தியசங்காரமாவது;- தூல சூக்கும உடல்களைக் கடந்து நிற்றலாகும். வைத்த சங்காரமாவது:- மாயை யைக்கடந்து நிற்றலாகும்; பரனருளில் தங்குதலாகும். நித்த ஒடுக்கமாவது:- நீண்ட இளைப்பாற்றுதலாகும்.

பரசிவத்திலிருந்து எல்லாம் தோன்றி, மீண்டும் அச்சிவத்தினிடமே ஒடுங்கும். சிவஞானத்தால் மல வாசனையை நீக்கிச் சிவனடி சேர்தல்வேண்டும்.

12. திரோபவம் (மறைப்பு)

(431—440)

இறைவன், உள்ளமாகிய உயிருடன் கலந்திருந்தாலும் உயிரானது. அப்பெருமானுடைய உருவத்தை அறியாது. இத்தேகம் எலும்புகளைப் பொருத்தி, தசைகளை இசைத்து, நரம்புகளால் பிணித்து, தோலால்மூடி அமைக்கப்பட்டதொன்றாகும். (அவைகளை) மாயா இயந்திர உடலுள் இறைவன் வைத்த இரகசியத்தை உயிர்கள் அறியமாட்டா. அனைவருக்கும் மறைப்பைச் செய்பவன் அரனே ஆவன்.

தத்துவங்கள் முதலானவற்றை இறைவன், தனது திரோபவச் சத்தியால் மறைத்தருளுவான். இறைவன், உயிர்களுக்கு மறைப்பைச் செய்தாலும் அவ்விறைவனைக் காதலால் கசிந்து உருகி வழிபடின், பெருமான் வெளிப்பட்டு அருள்புரிவான்.

பிராரத்தகன்மத்தை அநுபவிப்பதற்காக உதவிய திரோபவத்தைக்கொண்டு அதனைப் போக்கிக் கொள்ளாமல் மேலும் மேலும் ஆகாமிய சஞ்சிதங்களைத் தேடிக்கொள்ளுகின்றன ஆன்மாக்கள். இறைவனே உயிரோடு கலந்து நின்று எல்லாவற்றையும் கண்டும், தன்னைக் காட்டானாயினான்.

13. அநுக்கிரகம்

(441—450)

பஞ்சபூதங்களையும் ஒன்றுசேர்த்து உயிர்நிலையாகிய காயப்பையைச் சுருக்கி விரிக்கின்ற இறைவன், ஆன்மாக்களுக்கு உடலைப் படைத்துக் கொடுக்கின்ற அநுக்கிரகம் செய்வான். குயவன், மண்ணைக்கொண்டு தான் நினைத்த பொருளையெல்லாம் இயற்றுவதைப் போல, இறைவனும் தன் திருவுள்ளத்து எண்ணியபடி உடல் உலகம் மற்றப்பொருள்கள் எல்லாம் தோன்றுவன ஆயின. இறைவன் கொடையாளி; அவனுடைய தன்னலமற்ற தன்மையால் உயிர்கள் நலமுறுகின்றன.

இறைவனே உலகேழினையும் பல ஊழிகளையும் ஐம்பூதங்களையும் உடலையும் படைத்தருளினான். இறைவன், உலகம் ஏழுடனும் ஒன்றாகவும் வேறாகவும் இருப்பான். பலவகையான ஜீவரிடத்து, பரமன் வியாபித்திருந்தாலும் குருவாக வந்து உபதேசிப்பான். அவனே எல்லா உலகங்களுக்கும் தலைவன் ஆவான். இறைவன், பாலில் நீர்போல எங்குமாய்க் கலந்திருக்கும் தன்மையை, எப்போதும் தரிசிக்கும் இன்பத்தை நான் (திருமூலர்) அறிந்தேன்.

14. கர்ப்பக்கிரியை

(451—491)

முற்பிறப்பிலே பிரிந்துபோன பூதம் ஐந்து, புலன் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆக இருபத்தைந்து தத்துவங்களையும் உண்டாக்கி, உயிரையும்

அத்தத்துவங்களின் தொடர்புடையதாக இறைவன் செய்கின்றான். கர்ப்பாசயத்திலிருந்து எந்த எந்தக் காலத்தில் எவை எவை இவ்வுடல் வளர்ச்சிக்குத் தேவையோ அவற்றையும் இறைவன் படைத்தருள் கின்றான்.

கர்ப்பாசயத்துள்ளே சிவந்த தாளைச் சுருட்டிக் கொண்டு இருந்த உயிரானது வெளிவரும் வழியை அடைய, அக்கருவை விட்டு நீங்குகின்ற பத்துமாதங் கள் என்னும் ஓர் எல்லையை அவ்வுயிர்க்குக் கடவுள் அமைத்தான்.

தாயும் தந்தையுமாகிய இருவரது பாசத்துள்ளே (அன்புள்ளே) உயிர்களுக்கு உலக வாழ்வை அளித் தான் இறைவன். புருடனில் இருபத்தைந்து தத்து வங்கள் அமைந்ததை ஞானிகள் அறிவார்கள். உலகத் தவர் அதனை அறியார்கள். மற்றும், கருக்குழியில் புகுந்ததாகிய உருவமானது ஆணும் பெண்ணுமாக ஓடிப்பாய்ந்ததையும் அறியார்கள்.

காதலர் இருவரும் மகப்பெறுதற்பொருட்டுச் சேர்ந்தகாலத்தில் இலிங்கமாகிய வித்தானது புகுகிற போது, அதனை ஏற்கும்பொருட்டு யோனியானது விரிந் தது. அப்போது பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன் என்னும் ஐந்து வாயுக்களும் உள்ளே சென்றன. தனஞ்சயன் என்னும் காற்றா னது ஆண்விந்துவுடன் எழுந்து பெண்கருவில் நுழை கின்றது.

உள்ளே செல்லுகின்ற சூக்குமசரீர தத்துவங்க ளாகிற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், புத்தி,

மான், அகங்காரம் என்னும் புரியட்டக சரீரங்கள்; அவற்றுடன் புகுகின்ற பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் வாயுக்கள் பத்து; அவற்ருேடு கூடிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், துன்பம், அகங்காரம் என்னும் எட்டுக் குணங்கள்; அவற்றுடன் அழுந்தியிருக்கும் ஆன்மா; ஒன்பது துவாரங்கள்; ஞானேந்திரியங்களாகிய மெய் ஒன்று, வாய் ஒன்று, கண் இரண்டு, காது இரண்டு, மூக்கு இரண்டு ஆகிய பாம்புகள் எட்டு; உயிரானது ஏறிச்சென்று பொறிவழியாகப் புலன்களைப் பற்ற உதவுகின்ற மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு குதிரைகள் ஆகிய இவைகளைப் பாகளுகிய இறைவன் உபகரியாவிட்டால் பன்றியைப் போல இழிந்த பிறவியாய்விடும் இப்பிறவி.

விந்துவானது நாதசத்திக்கு மேற்பட்டு எதிர்த்துச் சென்ருல், அதனுல் பிறக்கும் குழந்தை உருத்திரன் ஆவான்; அமைதியாகச் சென்ருல் திருமாலாவான்; விந்துவும் நாதமும் சமமாக இருப்பின் அயனுவான். ஒத்து விளைந்த காமத்தால் தோன்றிய மைந்தனுனுல் அரசனுவான்.

விந்துவும் நாதமும் கழன்று கருவுள் பதிகின்ற காலத்தில் கலவிசெய்யும் ஆண் பெண் இருவருக்கும் சிற்றின்பத்தால் விளைந்த மன ஒருமைப்பாடு உண்டாயிற்று. ஆன்மா, கருவுள் வாக்குகளைச் சொல்லும் சக்தியைப் பெற்ருலும் பேசாது.

நமக்கு உடலை உதவியருளிய இறைவனை நாம் நாடவேண்டும். உயிராயும் உடலாயும் வியாபித்து

நிற்கும் இறைவன், போகம்செய்யும் காலத்து மூலதா ரத்திலிருந்து எழும்பும் வெப்பத்தால் சுக்கிலம் உருகிப் பெருகுகிறது; அவ்வெப்பத்தைத் தணிப்பதற்காகவே புணர்ச்சி ஆற்றலைப் படைத்து உதவினன்.

மரணம் அடைந்த ஆன்மாவை மீண்டும் எடுத்து, இறைவன் பிறவியில் புகுத்துகின்ருன்.

சுக்கிலமும் சுரோணிதமும் எட்டு விரற்கிடை அளவு புறப்பட்டு நான்கு விரற்கிடை அளவு உள்ளே செல்லும். அப்போது, பிருதிவி முதலான பூதங்களின் பீஜங்களாகிய ல, வ, ர, ய, ஹ என்பனவும் அகார உகார மகாரங்களான (எட்டு) அக்ஷரங்களும் சேர்ந்து எண்சாண் உடம்பு ஆகும். உடம்பு என்பது பெற் ருேர்களின் மோகத்தால் ஏற்படும் முட்டை ஆம்.

உலகஞானத்தை உண்டாக்கும் வாயில்கள் ஐம் புலன்களாகும். இவை, உடம்பு உண்டாகும்போது ஏற்படும். உடம்பு அழியும்போது இவ்வைம்புலன் களும் அழிந்துவிடும். உயிர்கள் நாத தத்துவத்தில் ஒடுங்கும்.

இறைவன் பேரறிவுடையவன்; ஆன்மா சிற்றறி வுடையது; சிற்றறிவைப் பேரறிவாக்குவதற்கே அசித் தாகிய தத்துவங்கள் சேர்க்கப்பட்டன.

சிற்றின்பத்தில் ஈடுபட்ட, தாயும் தந்தையுமாகிய இருவரும் மனம் பொருந்தி வைத்த மண்ணுலான துன்பமயமான குடத்துள்ளே சேர்ந்தவன் ஓர் ஆன் மாவே. அத்துடன் ஒன்பது துவாரங்களும். பத்து வாயுக்களும், காமாதி எட்டுக் குணங்களும் ஆகிய

பதினெட்டுக் கலசங்களையும் குயவனுகிய இறைவன் அமைத்தான். சூளை வெந்தது; கலசங்களும் நன்ருக விளைந்தன.

உடம்பினுள் உண்டான பேறு, இழவு, துன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்னும் ஆறு துன்பங்களையும் அறிந்து, அத்துன்பங்களிலிருந்து விலகி மேலான குணங்களை அடையவேண்டும். அம்மேலான குணங்களுக்குள்ளே இருக்கும் அட்டமாசித்திகளையும் அறிந்து கொள்ளல்வேண்டும். பஞ்சபூத விகாரமே உடலாகும். இறைவனே, உருவையும் அளித்து உயிர்க்குயிராயும் உடன் நிற்கின்ருன்.

பூவாகிய கருப்பையினுள்ளே விந்துக்குறியானது பொருந்த அப்பூ விரியும். விரிந்ததும் சுக்கில சுரோணி தங்கள் ஒன்றுசேர்ந்து வெளிப்படும். விந்துவில் உண்டான ஜீவ அணுக்கள் பரவி உடலாகும். இறைவனே மாயாகாரியமாகிய உடற்பையைக் கட்டி அவிழ்ப்பவன்; அவன், தனது நாமமாகிய பஞ்சாட்சரத்தைக் கலந்து நமக்கு உடலாக அமைத்தான்.

சிவமும் சத்தியும் உயிர்களுக்கு உணர்வாயும் உயிராயும் இருந்து உதவுவர். இறைவன், விந்துவை ஆண் பெண் அலி என்பதாக, தாய் தந்தையர்களின் பரம்பரையைப் போலவே அமையும்படிப் படைக்கின்ருன்.

சுக்கிலம் அதிகமானல் ஆணுகும்; சுரோணிதம் மிகுமானல் பெண்ணுகும்; சுக்கிலமும் சுரோணிதமும் சமமானல் அலியாகும்; சுக்கிலம், அளவில் மிகவும் கூடுமானல் அரசன்போல ஆண்மையுடையதாகும்.

சுக்கிலம், அதிகமான சுரோணிதத்தின் வசப்படுமானால் பயனில்லாமல் சிறுநீருடன் வெளிப்பட்டுக்கழியும்.

விந்துவானது கருப்பையுள் பாய்ந்தபின், தாய் தந்தையர்களுக்கு ஐந்து மாத்திரை அளவு பிராணவாயு ஓடினால் பிறக்கின்ற குழந்தைக்கு ஆயுள் நூறாகும்; நான்குமாத்திரை அளவு ஓடினால் குழந்தை எண்பது ஆண்டு வாழும். யோகியால்தான், இப்படி வாயுவைப் பகுத்தறிந்து அதன்படி விந்துவைப் பாய்ச்சமுடியும். பிராணவாயு நான்கு மாத்திரைக்கும் குறையுமானால் குழவி குட்டையாகும். பிராணவாயு இளைக்குமானால் முடமாகும். வாயு ஓடும்போது இடையில் தடைப் படுமானால் கூனாகும்.

தாயின் வயிற்றில் - கருவில் அமைந்த குழந்தை யானது, அம்மாதின் வயிற்றில் மலம் மிகுமானால் மந்த மாகும்; ஜலம் மிகுமானால் ஊமையாகும்; மலஜலம் இரண்டும் சமமானால் குருடாகும்.

புணர்ச்சிக் காலத்து, பிராணன் சூரியகலையில் இயங்குமாயின் ஆண்குழந்தை பிறக்கும்; சந்திரகலை யில் இயங்குமாயின் பெண்குழந்தையாம். பிராணவாயு வுடன் அபானவாயுவும் எதிர்க்குமானால் இரட்டைக் குழந்தைகள் பிறக்கும். சூரியகலையிலும் சந்திரகலை யிலும் பிராணன் சமமாக இயங்குமானால் அலியாகும். கலவியின்போது ஆண் பெண் இருவருக்கும் பிராண வாயு சமமாக இயங்குமானால் கருவிலுள்ள குழந்தை அழகாயிருக்கும். கருவுள் உருவமானது பத்துமாதம் வளர்ந்து, பக்குவம் வந்தபின் பூமியில் பிறந்து வளர்ச்சி அடையும்.

இறைவனுக்கு இன்பமாவது, உயிர்களுக்கு அருள் செய்தலாகும். இறைவன் திருவருளாலேயே உயிரானது மீண்டும் மீண்டும் பிறக்கின்றது.

15. மூவகைச் சிவவர்க்கம்

(492—500)

இறைவன், திருவிளையாட்டாகவே உயிர்களைப் படைத்து அருளல் முதலியவற்றைச் செய்கின்றான்.

விஞ்ஞானகலர் நால்வர்; பிரளயாகலர் மூவர்; சகலர் மூவர் என மூவகை ஆன்மாக்கள் பத்துவகையினர் ஆவர்.

விஞ்ஞானகலர், ஆணவமலமாத்திரம் உடையவர்கள்; இறைவன் நேரே இருந்து அநுக்கிரகம் செய்யும் தகுதிபெற்றவர்கள்; விந்துவிலிருந்து உண்டான தநு கரண புவன போகங்களையுடையவர்கள். இறைவன், இவர்களுக்கு உள்நின்று திருநோக்கத்தால் உபதேசித்து ஆணவமலக்கட்டையும் அறுத்து அருள்புரிவர்.

பிரளயாகலர், ஆணவம் கன்மம் என்னும் இருமலம் உடையவர்கள்; அசுத்த மாயா காரியமான சூக்கும தநு கரண புவன போகங்களை உடையவர்கள்; சிவபெருமான் முன்னின்று நோக்காலும் பரிசத்தாலும் உரையாலும் உபதேசிக்கப்பெறும் தகுதி பெற்றவர்கள்.

சகலர், ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களையும் உடையவர்கள். பிரகிருதி மாயையில் உண்டான தநு கரண புவன போகங்களை உடையவர்கள்.

இவர்கள், இறைவன் ஆசாரியராகத் திருமேனி தாங்கி வந்து அருள்செய்யும் பேறு பெற்றவர்கள்.

விஞ்ஞானகலர், முத்திநிலையில் ஞானமயமான சிவமே ஆவர். பிரளயாகலர் ஞானியாவர். சகலர், மூன்று மலங்களையும் வலியொடுக்கச் சக்தியில்லாதவர்கள் ஆவார்கள்.

சிவமாகி, ஆணவம் கன்மம் மாயை மாயேயம் திரோதாயி என்னும் ஐவகைப்பட்ட மலங்களையும் வென்ற ஞானிகள் சாயுஜ்ஜியம் பெற்று வாழ்பவர்களாவார்கள். பசு ஞானமும் பாச ஞானமும் நீங்கி (சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேச்சுரன், உருத்திரன், திருமால், பிரமன் என்னும்) ஒன்பது வகையான உண்மைவடிவை உணர்ந்தவர்கள் பிறவிகளை ஒழித்தவர்கள் ஆவார்கள்.

அஞ்ஞானம் நீங்கப்பெற்றவர்கள், விந்து நாதம் இவைகளைத் தரிசிப்பார்கள்; சகலரில் ஞானம் பெற்றவர்கள் தத்துவதரிசனம் செய்தவர்கள் ஆவார்கள்.

16. பாத்திரம்

(501—504)

எள்ளளவு பொன்னைச் சிவஞானியருக்குக் கொடுத்தால், அதன் பயன் மறுமைக்கு முத்தியும் இம்மைக்குச் சித்தியும் போகமும் ஆகும். பூமியளவு பொன்னை அஞ்ஞானிகளுக்குக் கொடுத்தால், அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லையாம்.

இறப்பாகிய நோயைப் போக்கவல்ல மருந்தாக இறைவன் நமக்குள்ளே இருந்தும் அதனை அறியாது

பலர் வீணே அழிகின்றார்கள். திருவடியாகிய திரு வருட்பற்று இல்லாதவர் சிவஞானியர் ஆகார். பொய் யான உலகப்பற்றை நீக்கி உண்மையான திருவடிப் பற்று ஒன்றினையே உடையவர் சிவஞானியர் ஆவர். எல்லாம் சிவன் செயலென்று எண்ணி இருப்பவரே சிவஞானியாம்.

17. அபாத்திரம்

(505—508)

தகுதியில்லாதவர்களுக்குக் கொடுப்பது, வறட்டுப் பசுவைப் பேணிப் பால் கறந்து குடிப்பதற்கு ஒப்பா கும். யோகமும் அன்பும் உடையவர்களுக்கு அல்லா மல் ஏனையோருக்குக் கொடுப்பது பெரும் பிழையாகும்.

சிவஞானிகளுக்குக் கொடுப்பவன் நரகம் செல்ல மாட்டான். கொடுப்பாரும் பெற்றுக்கொள்வாரும் ஆகிய இருவரும் கடவுள் உணர்ச்சி இல்லாதவர்க ளானால், இருவரும் நரகங்களில் வீழ்ந்து வருந்துவர்.

18. தீர்த்தம்

(509—514)

(கொல்லாமை முதலிய) பல தீர்த்தங்கள் நம் உள்ளே இருக்கின்றன. அவற்றை அறிந்து அழுக் கினைப் போக்கிக் கொள்ளத் தெரியாதவர்கள் ஊர் சுற்றித் திரிவார்கள். சிவஞானியரின் சிந்தையிலுள்ள திருவருளே தீர்த்தம் ஆகும்.

வஞ்சனையுடன் வழிபடினும், அவ்வஞ்சனை வழி பாட்டிற்கும் இறைவன் இரங்கி அருள்செய்வான்.

இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்கட்குச் சென்று வணங்காத தேவர்கள், கங்கைநீரில் மூழ்குவதில் பயன் ஒன்றுமில்லை; அதனால் புண்ணியராகமாட்டார்.

இறைவன், தம் உடலிடம் கொண்டமையை அறியாதவர்கள், பொன்னைக் கடலில் எறிந்துவிட்டுக் குளத்தில் தேடுகின்ற அறிவிலிகளைப் போன்றவர்கள் ஆவார்கள். முக்குணங்களையும் திருவருள் நீரால் தூய்மைப்படுத்தல் வேண்டும்.

19. திருக்கோயிலிழிவு

(515—519)

தாபிக்கப்பட்டுள்ள சிவலிங்கத்தைப் பெயர்த்து எடுத்து வேறோரிடத்தில் தாபித்தால், தாபிப்பதற்கு முன்பே அரசுநிலை அழியும்; இலிங்கத்தைப் பெயர்த்தெடுத்தவனும் தொழுநோயால் வருந்துவான். திருக்கோயிலின் மதிலிலுள்ள ஒருகல்லைப் பெயர்த்தாலும் அத்தீமையானது மன்னர்களை அழிக்கும்; முனிவர்களைத் துன்பமுறச்செய்யும்; வேதியரானாலும் அவர்களையும் அழிக்கும். இது இறைவனது ஆணையாகும்.

ஆலயங்களில் பூஜை முறைகள் தவறுமானால் நாட்டில் நோய்கள் மிகும்; மழை குறையும்; அரசனும் துன்புறுவான்; நாட்டில் களவுகள் மிகும்.

கடமைகளைச் செய்யாது பெயரளவில் 'பார்ப்பான்' என்ற அந்தணன் சிவபிரானைப் பூஜித்தால் அரசர்களுக்குக் கொடிய வியாதிகள் உண்டாகும். நாட்டிலும் வறுமைவந்து அடையும்.

20. அதோமுகதெரிசனம்

(520—525)

அறுமுகப்பெருமானைத் தோற்றுவித்தற்கு முன்பு பரசிவம், அதோமுகம் (கீழ்நோக்கிய முகம்) கொண்டு அறுமுகமாய் இருந்து தீப்பொறி ஆறினையும் தோற்றுவித்தான். அண்டங்களையும் எட்டுத் திசைகளையும் இடையூறில்லாமல் காத்தருளும் கீழ்நோக்கிய முகமே அதோமுகமாகும். அதோமுகத்தின் கழுத்து கறுத்த காரணத்தை எவரும் அறியவில்லை. நஞ்சை உண்டதால் கண்டம் கறுத்தது என்று அறிவில்லாதவர்கள் சொல்லுவார்கள். யான் என்னும் செருக்குடன் நல்வினை தீவினைகளாகிய தேவர்களும் அசுரர்களும் சிவனை மறந்ததாகிய குற்றமே நஞ்சாகும். அக்குற்றத்தை ஏற்றதாலேயே கண்டம் கருத்ததாகும்.

பொய் சொல்லுபவர்களை இறைவன் நன்கறிவன். உண்மை பேசுபவர்களை, தேவர்களும் வந்து வணங்கும்படி அவ்விறைவன் செய்வான். இறைவன், ஆன்மாக்களை ஈடேற்றவேண்டும் என்னும் பெருங்கருணையால், பராசத்தியை அதிட்டித்து நின்று பஞ்சகிருத்தியம் செய்தலும் செய்வித்தலும் ஆகிய நிலையில் எழுந்தருளுவதே அதோமுகம் ஆகும்.

21. சிவநிந்தை

(526—529)

தமது நிலையைப் பெரிதாக நினைத்துச் சிவநிந்தை செய்பவர்கள், கிளி பூனையால் கிழிக்கப்பட்டுக் கிடத்தலைப்போல அழிவார்கள்.

தேவரும் அசுரரும் ஆகிய அனைவரும் உண்மை ஞானத்தை உணரமாட்டாமையால் இறந்தவர்களே ஆவார்கள். இறைவனைச் சிவஞானத்தால் அல்லாமல் ஏனையவற்றால் அறியமுடியாது. இறைவன், யாவையுமாய் யாவருமாய் இருப்பவன். ஆதலால், இறைவனைப் பகைத்தவர்கள் - நிந்தித்தவர்கள் தம்முள்ளே சண்டை விளைத்து மடிந்தவர்கள் ஆவார்கள். ஆகவே, சிவனை விளையாட்டாகவும் நிந்திக்கலாகாது.

பேரின்பத்தையும் சிற்றின்பத்தையும் பாகுபடுத்தி உணர்த்தும் வேதத்தை உணர்ந்த பிராமணர்கள், கலவியைநினைந்து நாமே கடவுளெனமயங்கி இறைவனை மறந்தார்கள். ஆதலால், அவர்கள் சிவநிந்தகர் ஆயினார்கள்.

22. குருநிந்தை

(530—536)

கீழோர், தம்மைப்பெற்ற தாய் தந்தையர்களையும் காப்பாற்ற மாட்டாதவராய் உறவினர்களையும் வருந்தும்படிப் பேசித் துன்புறுத்துவார்கள். ஞானசாத்திரங்களைக் கற்ற மேலோர், எல்லோருக்கும் நல்லமுறையில் நடந்து, அவரவர்களும் புகழ்ந்துகூறும் பாக்கியத்தைப் பெறுவார்கள்.

தமக்குப் பஞ்சாட்சரம் உபதேசித்த ஆசாரியனை நிந்தித்தவர்கள், நாயாய்ப் பிறந்து ஓர் யுகம் திரிந்து வருந்திப் பின் பூமியில் புழுவாய்ப் பிறந்து அழிவார்கள். கற்புடைப் பெண்டிருக்கும் சிவனடியாருக்கும் தீங்கு செய்தவர்கள் ஓர் ஆண்டிற்குள் அழிவார்கள். இது சத்தியம்.

குருநிந்தை செய்தவர்கள், நூறு பிறவிகளிலும் நாயாகவே தோன்றிப் பின் புலையராகப் பிறந்து மடிவார்கள். சிவனடியார்களுடைய மனம் கலங்கினுல் தேசமும் நாடும் பாழாகும். இந்திரனது ஆட்சிபீடமும் அழியும். மன்னர்களும் அழிவார்கள்.

ஆசாரியனுக்கு முன்பாகப் பொய் சொன்னுல் நல்லொழுக்கம் குறையும். ஆசாரியனிடத்தில் பெற்ற ஞானமும் நில்லாது அகலும். வறுமை வந்து துன்புறுத்தும்.

23. மகேச்சுரநிந்தை

(537—538)

இறைவனது அடியார்கள் எவர்க்கும் விரோதிகள் ஆவார்கள். அவ்வடியார்கள் பிச்சை ஏற்று உண்பவர்கள். அவர்களை நிந்தித்துப் பேசினவர்கள் நரகில் அழுந்துவார்கள்.

சிவஞானியை நிந்திப்பவன் தீவினையால் அழிவான். சிவஞானியை வணங்கித் துதிப்பவன் தீவினையினின்றும் நீங்கப்பெற்று இன்புறுவான். ஒருவன் சிவஞானியின் வசப்பட்டபோதே அவனுக்குச் சிவபோகம் சித்திக்கும்.

24. பொறையுடைமை

(539—542)

நான் என்னும் முனைப்பு வரும்போது பொறுமை எழுமானுல் அம்முனைப்பு அடங்கிவிடும்.

இறைவனைப் பணிந்த தேவர்களே, அப்பரமனுல் மிகப் பாராட்டத்தக்கவர்கள் ஆவார்கள். பொறுமை

உடையவராய் இறைவனைச் சிவஞான முதிர்ச்சியால் தொழுபவர்கள் அவ்விறைவனது அருளைப் பெறுவார்கள். பொறுமையே, இறைவனது திருவடியில் நம்மைச்சேர்ப்பிக்கும்.

25. பெரியாரைத்துணைக்கோடல்

(543—548)

ஓடுகின்றவர்களோடு சேர்ந்து ஓடியும், பாடுகின்றவர்களோடு கூடிப் பாடியும் உலகில் வாழ்கின்றவனாகிய யான், இறைவனையே தேடி அவனைச் சேரநினைக்கும் மெய்யடியாரோடும் கூடுவேன். (இவ்வாறு திருமூலர் தம்மீது வைத்துக் கூறுகின்றார்.)

பெரியோர்கள் பெருந்துன்பத்தால் வாடினாலும், அத்துன்பத்தினிடமாகத் தங்கள் மனதைச் செலுத்தமாட்டார்கள். ஏ நெஞ்சே! வருந்துவதால் பயனில்லை; அப்பெரியோரையே நீ துணையாகக் கொள்வாயாக.

பெரியோர்களுடன் சேர்தலே பேரின்பமாகும். அவர்களையே துணையாகக்கொண்டால் அவர்கள் வாயிலாகத் திருக்கயிலையை அடையலாம்.

சிவஞானியரோடு சேர்ந்தால் கலைஞானமும், மெய்ஞ்ஞானமும், சிவஞானமும் பெற்றுப் பிறவியினின்றும் நீங்கி, பெருவாழ்வடைந்து என்றும் சிவனடிக்கீழ் இருக்கலாம்.

இரண்டாம் தந்திரம் முற்றிற்று

மூன்றும் தந்திரம்

1. அட்டாங்கயோகம்

(549—552)

இறைவன், இயமம் முதலான எண்வகை யோக அங்கங்களையும் அருளிச்செய்தான். இயம நியம சமாதி இவற்றில் பயின்று நன்னெறி அடையவும், முன்னும் பின்னும் திருவருட்சத்தியாகிய 'வ'காரம் (சிவயவசி) துணையாக எய்தவும், கவசம் (பாதுகாப்பான சட்டை) நியாசம் (தன் உடல் உறுப்பு இவைகளைச் சிவனுடைய தாகச் செய்தல்) முத்திரை (அடையாளம்) ஆகிய இவைகளைக் கிரமப்படிச் சொல்லுவேன் என்று திருமூலர் கூறுகின்றார்.

அந்நெறி இந்நெறி என்று தடுமாற்றம் அடையாமல் அட்டாங்கயோக நெறியிலே சென்று சமாதிநிலையிலே நின்றால் சிவஞானம் எய்தலாம். மீண்டும் பிறப்பில்லை.

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய இவைகள் எண்வகை உறுப்புக்களான அட்டாங்கயோகமாகும்.

2. இயமம்

(553—554)

இறைவன், விடாத மழையிலும் இயமங்களைத் தவறாமல் செய்யுங்களென்று சனகாதியர் நால்வருக்குக் கட்டளையிட்டான்.

கொல்லாமை, உண்மை, கள்ளாமை, காமமின்மை, பொறுமை, உறுதியுடைமை, தயை, நேர்மை, அளவறிந்துண்ணல், தூய்மை ஆகிய இவ்விலக்கணம் உடையோனே இயமத்தன் ஆவான்.

3. நியமம்

(555—557)

இறைவனை அறிகின்றவனும் தூய்மை, அருள், மிதவுணவு, பொறை, செம்மையுடைமை, உண்மை, உறுதியுடைமை, காமமின்மை, களவின்மை, கொலையின்மை ஆகிய இவைகளை நியமமாக உடையவனும், தவம், ஜபம், சந்தோஷம், ஆஸ்திகம், தானம், சிவவிரதம், சித்தாந்தக்கேள்வி, வேள்வி, சிவபூஜை, சிவஞானம் ஆகிய பத்துக்கர்மங்களையும் விடாமல் அநுட்டிப்பவனுமே நியமத்தனுவான்.

4. ஆதனம்

(558—563)

பதுமாசனம் முதலாகப் பல ஆசனங்கள் உண்டு. அவற்றுள் ஸ்வஸ்திகாசனம் முதலிய எட்டு ஆசனங்கள் மிக முக்கியமானவை. இவ்வெட்டு ஆசனங்களிலும் பயிற்சி பெற்றவன் சிறந்தவனுவான்.

ஸ்வஸ்திகாசனம்: முழந்தாளுக்கும் தொடைக்கும் நடுவில் இரண்டு பாதங்களையும் வைத்து நிமிர்ந்து உட்கார்ந்திருப்பதாகும்.

பதுமாசனம்: வலது தொடையின்மேல் இடது பாதத்தையும், இடது தொடையின்மேல் வலதுபாதத்தையும் உள்ளங்கால் விரிய நன்ருக இழுத்துவைத்து,

மலர்ந்த கால்களின்மேல் இரு கைகளையும் ஒன்றன் மேல் ஒன்ருக வைப்பது பதுமாசனம் ஆகும்.

பத்ராசனம்: வலக்காலை இடது தொடையின் மேல் வைத்து, இருமுழந்தாளின்மேல் இருகைகளை நீட்டி உடல் தளர்ச்சி இல்லாமல் செவ்வையாக நிமிர்ந்திருப்பது பத்ராசனம் ஆகும்.

குக்குடாசனம்: பாதங்கள் இரண்டையும் இரண்டு தொடைகளின்மேல் (பதுமாசனம் போன்று) ஏற்றி, கணைக்கால்களுக்கும் தொடைகளுக்கும் மத்தியில் இரண்டு கைகளையும் நுழைத்துப் பூமியில் ஊன்றி, உடம்பை முழங்கை வரையிலும் முக்கித்தூக்கி நிறுத்துதல் குக்குடாசனம் ஆகும்.

சிம்மாசனம்: பாதநுனிகளைப் பூமியில் நன்ருக ஊன்றி முழங்கால்களில் இருகைகளை நீட்டி வாயைத் திறந்துகொண்டு கண்களை மூக்குநுனியில் வைத்துப் பார்ப்பது 'சிம்மாசனம்' ஆகும்.

பத்ராசனம், கோமுகாசனம், பங்கயாசனம், கேசரி ஆசனம், சொத்திராசனம், வீராசனம், சுகாசனம், ஸ்வஸ்திகாசனம் என முக்கிய ஆசனங்கள் எட்டாகும். இவையல்லாமல் நூற்றிருபத்தாறுக்கு மேலும் ஆசனங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

5. பிராணுயாமம்

(564—577)

ஐவர்களான ஐம்பொறிகளுக்கும் தலைவன் உயிர்; உடல், அவ்வைவர்கள் வாழும் ஊர்; அவ்வூருக்கு

நாயகன் மனம்; அம்மனம், தலைவனாகிய உயிர் பிழைக்கும் வண்ணம் ஏறிச் செல்லும் பிராணவாயுவாகிய குதிரை ஒன்று உண்டு; அக்குதிரையானது மெய்யடியார்கட்கு வசப்பட்டு அடங்கி நடக்கும்; பொய்யடியார்கட்கு (பயிற்சியில்லார்க்கு) வசப்படாது துள்ளி எழுந்து அவர்களைத் துன்புறுத்திக் கீழே வீழ்த்திவிடும்.

பிராணவாயுவாகிய குதிரையைச் செலுத்தும் மனத்தன் நல்லவன். மேலும், அவனுக்கு இடகலை பிங்கலை என்னும் இருகுதிரைகளும் உள்ளன. அவன் அவற்றை இரேசக பூரக கும்பகம் ஆகிய (பிராணவாயுவை வெளிவிடுத்து மீண்டும் உள்ளிழுத்துப் பிடித்தலாகிய) வீசிப்பிடித்தலின் உபாயத்தை இறைவனாகிய குருவின் அருளால் பெற்றால் அக்குதிரைகளை வசப்படுத்துதல் மிகவும் எளிதாகும்.

பிராணாயாமத்தைச் செவ்வனே செய்வோருக்கு மனமகிழ்வும் சுறுசுறுப்பும் வலிமையும் உண்டாகும். பிராணவாயு, மனத்துடன் அசைவில்லாமல் அடங்கியிருந்தால் பிறப்பு இறப்பு இல்லை. இடகலை பிங்கலை வழியாக மாறிமாறிப் போய்வருமானால் இறப்பும் பிறப்பும் வந்துகொண்டே இருக்கும்.

இடகலையால் மூச்சை மெதுவாகப் பதினாறு மாத்திரை அளவு உள்ளுக்கு இழுத்தல் பூரகமாகும். அறுபத்துநான்கு மாத்திரை அளவு உள்ளே நிறுத்துதல் கும்பகமாகும். முப்பத்திரண்டு மாத்திரை அளவு பிங்கலையால் வெளியேவிடுவது இரேசகமாகும்.

பிராணாயாமத்தினாலே உடலானது பளிங்கினைப் போல நிர்மலமாயும் இளமையுடையதாயும் இருக்கும்.

பிராணுயாமத்தை நன்கு தெரிந்துகொள்ள, குருவின் திருவருளையும் பெற்றுவிட்டால் ஆகாயத்தில் பறந்து செல்லும் தன்மையையும் அடையலாம்.

இடது நாசியாகிய இடகலையாலேயே பூரகம் செய்தால் உடலுக்கு எப்போதும் அழிவில்லை. கும்பகம் இரேசகம் இவ்விரண்டையும் அளவுடன் செய்தால் அழிவில்லாமல் இருக்கலாம்.

கால அளவுப்படி இரேசக பூரக கும்பகங்களைச் செய்பவர்கள், இயமனை உதைக்கும் ஆற்றலையும் சிவ பிரானது திருவருளையும் பெறுவார்கள்.

உடலானது இரேசிக்கும்போது தளர்ச்சியடையும்; அங்ஙனம் தளர்ச்சியடையாதபடி இரேசித்து, பத்து நாடிகளும் புஷ்டியாகும்படி வாயுவைப்பூரித்து, உள்ளே நிரப்பும் பிராணவாயுவானது, அபானவாயுவாகக் கீழ்நோக்கிச் செல்ல முயலும்; அப்படிச் செல்லவொட்டாமல் கும்பித்து நிமிர்ந்திருப்பவர்களுக்கு இறப்பே இல்லை.

முறைப்படி செய்யும் பிராணுயாமத்தால் உடல் பொன்போன்ற நிறமாகும். உரோமம் நரைக்காது. இறைவன், ஆன்மாவுடன் என்றும் விளங்குவான்.

6. பிரத்தியாகாரம்

(578—587)

பொறி உணர்வுகளைப் புலன்வழியே விடாமல் தடுத்து ஒருவழிப்படுத்தி நிறுத்திஞல் இறைவனைத் தரிசித்து அழிவில்லாமல் வாழலாம்.

நாபிக்குப் பன்னிரண்டு விரல் அளவு கீழே உள்ள தான மூலாதாரத்தில் நிலையாக உள்ள வ, ச, ஷ, ஸ (அல்லது ஓம்) என்னும் மந்திரங்களை உலகவர் அறிய வில்லை. அறிவார்களானால் இறைவனே வந்து அவ் விடத்தைக் குடியாகக்கொள்வான்.

'சுவாதிட்டானம்' என்பது மூலாதாரத்துக்கு இரு விரல் அளவு மேலே உள்ளதாகும். அச்சுவாதிட்டா னத்தில் சுருண்டு கிடக்கின்ற குண்டலினி சத்தியுள் நாபிக்கு நான்குவிரல் அளவு கீழே உள்ள இடம் 'மணி பூரக' ஸ்தானம் ஆகும். அங்குதான் உருத்திரன் செஞ் சுடராக விளங்குகின்றார்.

மூக்கின்கீழ் பன்னிரண்டுவிரல் அளவில் இருக்கும் இதயத்தானமாகிய 'அநாகதம்' என்னும் ஸ்தானத்தில் மனதை நிறுத்திப் 'பிரத்தியாகார'த் தியானத்தைச் செய்தால் அட்டமா சித்திகளும் இராஜ யோகமும் கைகூடும்; உடலும் அழியாது.

தியானிக்கும்போது கீற்றுப்போன்ற சந்திரனது பிறை தோன்றினால் அதுவே பேரானந்தமாம். கழுத் தின் கீழதான 'விசுத்தி' ஸ்தானத்தில் நிலாபோன்ற ஒளி தோன்றினால் உடல் பரவசம் அடையும்.

மூலாதாரத்தை அடைந்து, பிரமரந்திரத்தில் மனத் தைப் பதித்துக் கண்களை விழித்தபடியே இருப்பது 'ஆஞ்ஞாசக்கரத்' தியானமாகும். இதுவே காலத்தை வெல்லும் உபாயமும் ஆகும். மூலாதாரத்தில் ஜோதி வடிவினனாகிய இறைவனைத் தியானிக்கின்றவர்களுக் குப் பிறவியை ஒழிக்கும்பிரான், ஒளிவடிவாக உயிருள் கலந்து நின்றான் - நிற்பான்.

பிராணவாயுவை வெளியே செல்லவொட்டாமல் தடுத்துக் கும்பகம் செய்தால் மனம் ஒருமைப்பட்டு இருக்கும். அப்போது இறைவனும் வெளிப்பட்டுப் போகாதவனுய் மனத்துடன் என்றும் விளங்கியிருப் பான். பிரத்தியாகாரத் தியானத்தால் உலகம் முழுவதை யும் இருந்த நிலையிலிருந்தே அறியலாம்; தேவராகவும் ஆகலாம்.

7. தாரணை

(588—597)

மனத்தினைப் புலன்வழியே செல்லவொட்டாமல் பிரமரந்திரத்தில் நிறுத்தி, கீழ்நோக்காதபடித் தடுத்து அடக்கியபின், சுழுமுனைவழியாகப் பரவெளியை நோக் கினல் என்றும் அழிவில்லாமல் இருக்கலாம். தாரணை யால் (மன ஒருவழிப்பாட்டால்) ஜோதி தரிசனம் உண்டாகும்.

மூலாதாரத்திலுள்ள இறைவனை எழுப்பித் துவாத சாந்தத்திலுள்ள ஞானசத்தியுடன் கூடச்செய்பவன், என்றும் இளமையுடன் இருப்பான். (குண்டலினியை எழுப்பித் துவாதசாந்தம் வரை சென்று தியானிக்க வேண்டும் என்பதாம்.

மூலாதாரத்தை அடைத்துப் பிராணவாயுவால் குண்டலினியை எழுப்பி, சுழுமுனையால் தாரணை செய்பவர்கள் பலகோடி ஆண்டுகள் இருப்பர்.

மௌனமாயிருப்பவர்களுடைய மனதில் இறை வன் என்றும் எழுந்தருளியிருப்பான். மௌனமின்றி எப்போதும் பேசிக்கொண்டே இருப்பவர்கள் இறப் பவர்கள் ஆவார்கள்.

தாரணையைச் செய்தால் நீடூழிகாலம் வாழலாம். தேகேந்திரிய கரணங்கள் அழிந்து சிவத்துடன் ஜீவன் ஒன்றியிருப்பதே தாரணையாகும்.

8. தியானம்

(598—617)

தியானமாவது : புத்திதத்துவமானது புலன்கள், அவைகளால் எய்தும் போகங்கள் ஆகிய இவைகளைக் கடந்துநிற்றலாகும். சத்தியைத் தியானிக்கும் பரத்தியானம், ஞானவடிவான குருவைத் தியானிக்கும் சிவத்தியானம் என்னும் இவ்விரண்டும் யோகத்தின் இரு பாகங்களாகும். முதலாவது சகளத்தியானம்; பின்னது நிஷ்களத்தியானம் ஆம்.

தியானத்தால் இறைவன், நம்மைப் பிறப்பு இறப்புக்களினின்றும் உய்வித்து அருளுவன்.

புருவ நடுவினை உற்றுப்பார்த்தலால் தோன்றும் ஒளியினைக் கண்ணால் கண்டு அவ்வொளியுடன் கலந்திருப்பின் பராகாய வெளியிலே சென்று சிவத்தைத் தரிசிக்கலாம். மனத்திலுள்ள விளக்காகிய சிவமே என்றும் அணையாத விளக்காகும். சுழுமுனைநாடியினுள்ளே இறைவனை ஒளிவடிவாகத் தியானித்தால் தியானிப்போனிடம் சிவம் கலந்திருக்கும். அஃதல்லாமல், எண்ணுயிரம் ஆண்டு யோகமிருந்தாலும் சிவபரம் பொருளை ஒருவராலும் அறிய முடியாது. தியானிப்பவர் தியானப்பொருளாகவே ஆவார்.

பார்வையை மூக்குநுனியில் வைத்துப் பிராணனை உள்ளே கும்பித்து அசையாமல் இருந்து தியானிப்பவர்க்கு மரணம் இல்லை.

மணி, கடல், யானை, புல்லாங்குழல், மேகம், வண்டு, தும்பி, சங்கு, பேரிகை, யாழ் என்ற இப் பத்து ஒலிகளும் தியானத்தில் அழுந்தியவர்களுக்கே உண்டாகும். நாதமே எல்லா உலகமும் ஆம். நாத தத்துவத்தின் முடிந்த இடத்திலே சத்தி விளங்குவாள். நாதாந்தமே யோகத்திற்குச் சிறந்த இடமாகும். நாதம் முடியும் இடமாகிய பிரமரந்திரத்திலே அகப்பார்வை யாகிற தியானம் பதியவேண்டும்; அங்குதான் சிவம் விளங்கும். பிரமரந்திரத்தில் எப்போதும் ஒளியேயன்றி இருள் இல்லை. உடலும் மரணத்தால் சுடப்படுவதும் இல்லை.

இயம நியமாதிகளில் சிறிதும் வழுவாமல் வீணா தண்டுடன் சேர்ந்து மேல்நோக்கிச் சென்று பிரமரந் திரத்தில் கூடிய யோகியானவன், சோமசூரியாக்கினி மண்டலங்களிலும் தாரணைசெய்து தியானிப்பானாயின் ஓர் ஊழிக்காலம் அவனது உடல் அழியாமலிருக்கும். இம்மூன்று மண்டலங்களும் முறையே பிரமக்கிரந்தி, விஷ்ணுக்கிரந்தி, ருத்திரக்கிரந்தி என்று கூறப்படும்.

அநாகதத்தானத்தில் அடங்கியிருந்து தியானிக் கின்றவர்கள், உயிரை அறிந்தவர்களும் ஞானிகளும் ஆவார்கள்.

9. சமாதி

(618—631)

சமாதியாவது, இயமம் முதலான எட்டு உறுப்புக் களிலும் சித்தி அடைதலாம். மேலும், அவைகளில் நிலைபெற்றவர்களுக்கே சமாதி கைகூடும்.

உடலில், சுழுமுனைநாடியில் சிவசத்திகள் வெளிப் பட்டுத் தோன்றுமாயின் சமாதி கைகூடும்; அத்துடன் பரம்பொருளாகிய சோதியும் வெளிப்படும். மனத்தி னுள்ளே சமாதி கூடுகின்றவர்களுக்கு மனமும் சதா சிவத்தினிடத்தில் இலயமாகும்.

சமாதி கூடுகின்றவர்கள் மனக்குதிரையில் ஏறி, பிரமரந்திரத்தையும் அதைச் சுற்றியுள்ள உச்சந்தலை யாகிய விந்தியக் காட்டையும் சுற்றிப்பார்த்து, அதற்கு அப்பாலுள்ள துவாதசாந்தப் பெருவெளியில் மனக் குதிரையை ஓடவிட்டு, அங்குள்ள சிவத்தினிடம் கடி வாளமாகிய பிராணனை இழுத்து நிலைபெறுத்துதலாகிய சமாதியைச் செய்வார்கள்.

துவாதசாந்தப் பெருவெளியைக் கண்டவர்கள் மரணம் அடையமாட்டார்கள். சமாதியில் நிற்பார் திருவடிஞானம் சேர்வார். பிராணனை அடக்கினால் சிவத்தைத் தரிசிக்கலாம். சமாதிநிலையில் நிற்பவர்கள் அடையும்பேறு தேவர்களுக்கும் கிட்டாது.

இறைவனிடம் அன்பைச்செலுத்தி, புறப்பொருள் களின்மேலுள்ள ஆசையை ஒடுக்கி, சுழுமுனைவழியே போய்க் கும்பித்து அங்குச் சிவத்துடன் கலத்தலே சமாதியாகும்.

பிராணவாயுவானது குண்டலினியுடன் ஒத்துப் பொருந்தும் பொருத்தத்தால் சந்திரமண்டலத்திலிருந் தும் காணப்படும் அழகிய வடிவங்கள் பல ஆகும். வீண் எண்ணங்களை விட்டு, மூலாக்கினியுடன் மேலே போய், சந்திரமண்டலத்தோடு பொருந்தி, தற்போதம்

இழந்து சிவபோதம் மிகுந்து இறைவனைக் கண்டு வணங்குதலே சமாதியாம்.

சமாதிகூடினால் சிவம் வெளிப்பட்டுத்தோன்றும். இறைவியும் சமாதியிலிருப்பவனை விட்டுப் பிரியமாட்டாள். சிவம், சத்தி, ஆன்மா இம்மூன்றின் கலப்பே சமாதியாம். சமாதியிலிருப்பவனிடம் அயனும் மாலும் என்றும் அன்போடிருப்பர்.

சமாதியில் இருப்பவர்களுக்குப் பல யோகங்கள் கைகூடும்; இறைவனோடு ஒன்றியிருந்தால் சமாதியே தேவையில்லை; ஆன்மா சிவமானால் சமாதியே இல்லை. சமாதியால் அறுபத்துநான்கு கலைகளும் சித்தியாகும்.

10. அட்டாங்கயோகப்பேறு

(632—639)

இயமத்தில் தவறாது நிற்பவனுக்கு இறைவன், வேண்டியவற்றை அருளுவன். இறைவனிடம் அன்பு பூண்டு அவனது புகழையே கூறிச் சிந்தித்திருக்கும் நியமம் தவறாதவர்கள் சிவபதம் அடைவர். ஆசனம் பயின்றவர்கள் அமராபதிக்கு அரசராக விளங்குவர். பிராணாயாமம் பயின்றோர், முடிவில் தேவர்கள் அனைவரும் தம்மை எதிர்கொண்டு அழைக்கக் கயிலையை அடைந்து இன்பத்தில் இருப்பர். பிரத்தியாகாரத்தில் நிற்கின்றவர்கள், சிவலோகம் அடைந்து இறைவனை வணங்குவர். தாரணைவழிச் செல்பவர்கள், நல்வழியை நாடினவர்களாயும், இயமனைத் தடுப்பவர்களாயும், அயன் அரி நிலையினர்களாயும் ஆவார்கள். தியானிப்பவனாகிய தன்னிடமே அயன் அரி அரன் தேவர்கள் ஆகியவர்களுக்கெல்லாம் இடமாகும். பரம்பொருளை அடைதலே சமாதியின் பயனும்.

11. அட்டமாசித்தி

(640—711)

எட்டுத் திக்குகளிலும் போய் அட்டமாசித்தி களில் நிலைபெற்றிருந்து அச்சித்திகளை நிலைநிறுத்திய வர்களே எண்பெரும்பேறு பெற்றவர்களாவார்கள். குருவின் உபதேசப்படி யோகநெறியில் நின்ருல் அட்டமாசித்திகளைப் பெறலாம்.

பிருதிவிமுதல் குடிலையீருன மாயையினின்றும் நீங்கிய ஆன்மாவானது, இறைவனை அடைந்தால் அழியா உடலைப் பெறலாம்.

கர்மயோகம் என்பது இருபதினுயிரத்து எண் ணூறு பேதங்களை உடையது. அவைகள் எல்லாம் உடல் உழைப்பேயாகும். இவைகள் முழுவதும் எண் வகைப் பேறுகளை அளிக்க வல்லனவாகும். பிராணு யாமத்தைப் பன்னிராண்டுகள் செய்தால் எண்வகைச் சித்திகளை அடையலாம்.

பிறவிக்கு வித்தாவது உறவினர்கள் நம்மைச் சூழ்தலாகும். பொறுமை, ஆசாரிய உபதேசம் இவை களால்தான் எண்வகைச் சித்திகளைப் பெறமுடியும். கலையுணர்ச்சி, நுண்ணுணர்வு, பெருமை இவைகளால் அட்டமாசித்திகளை அடையமுடியாது.

யோகத்தினை ஏழாண்டுகள் செய்தால் பெருங்காற் றிலும் விரைவாகச் செல்லும் சக்தியை அடையலாம். எட்டாம் ஆண்டில் நரை திரை இவை உண்டாகா. ஒன்பதாம் ஆண்டில் அழியா உடலைப் பெறலாம். பத்தாம் ஆண்டில் சிவத்தன்மையையும், பதினோராம்

ஆண்டில் அட்டமாசித்திகளையும், பன்னிரண்டாம் ஆண்டில் பதினுன்கு உலகங்களில் வியாபித்திருத்தலையும் பெறலாம்.

அணுவினும் மிக நுண்ணிய வடிவுடன் நிற்றல் 'அணிமா'.

மேருவினும் மிகப் பெரியதான வடிவுடன் நிற்றல் 'மகிமா'.

சேறு முதலியவற்றில் படிந்தும் அதில் அழுந்தாமல் காற்றினும் வேகமாக நடக்கும் மெல்லிய வடிவாய் நிற்றல் 'இலகிமா'.

வேண்டிய எல்லாம் வேண்டியபடியே அடைதல் 'பிராத்தி'.

சங்கற்பத்திஞல் அநேக மகளிரைப் படைத்து அவர்களுடன் பலவடிவங்கள் எடுத்து விளையாடல் 'பிராகாமியம்'.

அயன் அரி முதலியவர்களால் பூஜிக்கப்படுதல் 'ஈசித்துவம்'.

எல்லா உலகங்களையும் தன்வசப்படுத்துதல் 'வசித்துவம்'.

இலேசான பஞ்சையும் கனமுடையதாகச் செய்தல் 'கரிமா'. இவைகளே எண்வகைச் சித்திகளாகும்.

ஆன்மாக்கள் இடைவிடாது 'ஓம்' என்னும் பிரணவத்தியானம் செய்தால் முத்தி கைகூடும்.

ஒருநாழிகைக்கு அறுபது விநாடி. பகலுக்கு முப்பது நாழிகையும் இரவுக்கு முப்பது நாழிகையுமாகக் கொண்ட ஒரு நாளுக்கு அறுபது நாழிகைகளாகும்.

பகல்நாழிகை முப்பதையும் ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் என்னும் பஞ்ச பூதங்களுக்கும் பகுக்க ஒவ்வொன்றுக்கும் ஆறு நாழிகைகளாகும். அந்த ஆறு நாழிகைகளுக்கும் விநாடி முந்நூற்று அறுபது ஆகும். (இது சிருட்டி தோற்றமுறை ஆகும்) இரவுக்கும் ஒடுக்கமுறையாக, சூரிய அஸ்தமனம் தொடங்கிப் பிருதிவிக்காலம் முதலாக அமைத்துக்கொள்ளலாம். இவ்விதம் பஞ்சபூதங்களுக்கும் உரிய காலத்தை அறிகின்றவர்கள் ஜோதிதரிசனம் செய்தவர்களாவார்கள்.

மனத்தை, புலன் பொறி இவைகளில் செல்லவொட்டாமல் சிவமாகி மேலான நிலையினராகிய சிவத்தோடு கூடிய முத்தர்கள், ஆணவம் கன்மம் மாயை மாயேயம் திரோதாயி என்னும் பஞ்சமலங்களுடன் தொடர்பு அற்றவர்களாய்ச் சிதம்பரத்தின்கண் திருநடனம் புரிவோர் ஆவர்.

பத்துவாயுக்களில் தனஞ்ஜயன் என்னும் வாயுவானது மிகச் சிறந்ததாகும். ஏனைய பிராணன், அபானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், உதானன் என்னும் இவ்வொன்பது வாயுக்களும் இடகலை, பிங்கலை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு என்னும் ஒன்பது நாடிகளில் சமமாக இருந்தால் உடலும் உயிரும் ஒத்து நீண்டகாலம் இருக்கும். தனஞ்ஜயன் என்னும் வாயுவானது நடுநாடியாகிய சுழுமுனையில் இருக்கும். உடலில் இக்காற்று இல்லையானால் உடலானது வீக்கமுற்று வெடித்துவிடும். தனஞ்ஜயன் என்னும் வாயுவின் திரிபால் சிரங்கு, குட்டம், சோகை முதலான நோய்களும், கண்ணில் பல நோய்களும் உண்டாகும்.

கூர்மன் என்னும் வாயுவானது சேர்ந்திராவிட்டால் கண்ணொளியும் விளங்காது. ஒன்பது நாடிகளையும் ஒடுக்கவல்ல யோகப்பயிற்சியுடையவர்களது உடல் அழிவுறாது.

குண்டலினியின் கீழே சுழுமுனை நாடியைச் செலுத்தி, சூரியகலையில் இயங்கும் பிராணவாயுவைச் சந்திரகலையில் இயங்கச்செய்தால் ஏழு உலகங்களையும் தாங்கலாம். (இம்மந்திரம், விபரீதகரணியை உணர்த்துகின்றது. அதாவது :- பூமியில் தலையை ஊன்றி இரண்டு கைகளினாலும் இடுப்பைப் பிடித்துக்கொண்டு, பின் கழுத்தும் தோள்களும் பூமியில் பொருந்தும்படி வைத்து, கால்களை உயரத்தூக்கி, முதல்நாள் ஒருகண நேரமும் பின்னாட்களில் ஒவ்வொருகணநேரமுமாகச் சேர்த்து ஒரு யாமம்வரை இருத்தலாகும்.)

சுழுமுனைநாடியைச் சுத்தம் செய்தவர் உலகிற்குப் பயன்பட்டவராவார். பிரமரந்திரம்வரை சென்று இறைவனைக் கண்டவர்கள், நடுநாடியினுள்ளே பரநாதத்தை எழுப்பி அதனைக் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். மேலும், அங்கு ஊறும் அமுதத்தினை உண்பதோடு உட்பகையாகிய காமக்குரோதாதிகளையும் தடைப்படுத்துவார்கள்.

பூரண சத்தியானவள் இருபத்தொரு வகையால் தனித்தனியாக நாரணன் நான்முகன் முதலான பஞ்ச மூர்த்திகளுடன் கலந்து நூற்றைந்து கன்னியர்கள் ஆயினர்.

பிராணவாயுவைத் தன் இயக்கம்போல் விட்டால் காமம் முதலான ஆறு பகைகளும் மேலோங்கி நின்று

வருத்தும். அந்த ஆறு குற்றங்களைக் கட்டுப்படுத்த உபாயமாவது:- பிராணனைச் சுழுமுனைவழியாக ஏற்றிச் சகஸ்ராரத்தில் உள்ள மதிமண்டலத்தில் குண்டலினி சத்தியுடன் கூடச்செய்வதேயாகும்.

பிராணாயாமம் பழகின ஆன்மாவினுள் ஆனந்தக் கூத்தனைக் கண்டு மகிழலாம். குண்டலினி யோகம் சித்திக்குமானால் தூண்டாவிளக்காய் விளங்கலாம். அட்டாங்கயோகப் பயிற்சியால் பிராணனை அடக்கி ஆண்டால் எண்வகைப்பேறுகளை அடையலாம்.

அணிமா: சித்தர்கள் என்பார், அட்டமாசித்திக ளுடன் பரஞானமும் கைவரப்பெற்றவர்கள். அணி மாதி சித்திகளை அடைந்தவர்கள் இன்ப உலகு அடை வார்கள். அமுதமானது சந்திரமண்டலத்திலிருந்து இழிறங்காதபடி பாதுகாத்து ஓர் ஆண்டு யோகம் செய்தால் அணிமா கைகூடும்.

இலகிமா: ஆன்மா, தத்துவங்களில் சிக்குண்டு அலையும்போதும் திருவருட்சத்தியின் துணைகொண்டு சென்றால், அவைகளிற்சிக்காது தத்துவங்களைவென்று ஐந்து ஆண்டிற்குள் மிக்க மென்மையான இலகிமா சித்தியை அடையும்.

மகிமா: உயிர்களுக்கு உண்மை ஞானத்தை உணர்த்தியருளிய திருவருட்சத்தியுடனே சிவம் சேர, மகிமா சித்தியானது கைகூடும். மகிமா சித்தியைப் பெற்றவர்கள் கால தத்துவத்தையும் வென்றவர்கள் ஆவார்கள். மகிமாசித்தியைப் பெற்றவர்களின் வாயி லாகவே எல்லாப் பொருளும் செழிக்கும். அச்சித்தி பெற்றோன் சிவனருள் வடிவாகவே விளங்குவான்.

பிராத்தி: தத்துவங்களெல்லாம் தன்னைத் தாக்காமல் ஓர் ஆண்டுக்காலம் தாரணைப்பயிற்சி செய்தால் தத்துவசுத்தி உண்டாகும். அப்போது அத்தத்துவங்கள் தன்னைவிட்டு நீங்கிப் பிராத்தி சித்திக்கும்.

கரிமா: கரிமாசித்தியால் காலத்தை வெல்லலாம். பரகாயப் பிரவேசமும் செய்தல்கூடும்.

பிராகாமியம்: ஜோதிதரிசனம் செய்பவர்களுக்கு விடுபேறு மிக எளிதாகும்.

ஈசத்துவம்: ஒருயோகி, தனது உடலினிடமாக, பஞ்சபூதங்களையும் அவ்வவற்றிற்கு உரிய தெய்வங்களையும் அவ்வவற்றிற்கு உரிய இடங்களில் அமைத்து ஓராண்டுக்காலம் யோகம் செய்தால் ஈசத்துவம் அடையலாம். ஈசத்துவசித்தி பெற்றவன் முத்தொழிலும் செய்ய வல்லவனுவதோடு சிவமாகவும் விளங்குவான்.

வசித்துவம்: வசித்துவ சித்திபெற்றவன், எல்லா உயிர்களுக்கும் சிவம்போன்ற தன்மையன் ஆவான். சிவசத்தியாகிய பேரொளியைக் கண்ட அவன் வேருென்றையும் காணமாட்டான்.

12. கலைநிலை

(712—723)

இறைவனை அகக்கண்ணுல் நோக்கும் உண்மையடியார்களுக்கு, புருவநடு வழியாக அமிழ்தமாகிய கங்கை பெருகும்; அதனை அன்புடன் காத்தல்வேண்டும். அந்தக்கரணங்கள் நான்கு, அமிழ்தகலை பதினுறு,

குண்டலினியுடன் கலந்த பிராணவாயு ஆகிய இவைகளை அடக்கவல்லவர்களே திருவடி ஞானத்திலே நிலைத்து நிற்பவர்களாவார்கள். நடுநாடி வழியாகச் செல்லும் பிராணவாயு, ஒடுங்கியும் அசையாமலும் விளக்கொளிபோன்றும் நின்றது. உன்மனை முதலான கலைகளின்வழியே சத்தி சிவத்தைக் கலந்துநின்ற கூட்டத்தை அறிந்தால் மயக்கம்நீங்கி ஞானமுண்டாகும். இதுவே நிலைபெறும் உபாயமாகும்.

மதிமண்டலத்திலே வாய்த்த வழியாகிய சுழுமுனையில் விசுத்தி சக்கரத்துச் சங்கரன் இடபாரூடராகக் காட்சி அளித்தான்.

சென்ற நாட்கள்போக தம் வாழ்நாளின் மீதி உள்ள காலத்தை மக்கள் அறியமாட்டார்கள். மீதி நாட்களை யோகப்பயிற்சியால் அதிகப்படுத்த, வெளியில் செல்லும் மூச்சினை அடக்குபவனே நற்றொண்டன் - சாதகன் ஆவான். அங்ஙனம் செய்யும் சாதகன் தமது பிராணனை சகஸ்ராரத்தில் செலுத்துவானானால் குளிகையினால் செம்பு முதலியன பொன்னாவதுபோல, அவனுடைய ஆன்மாவும் சிவமாக விளங்கும்.

பிராணனுடைய ஒடுக்கத்தை அறிந்தால் சிவத்தை அடையலாம். பிராணன் குண்டலினியை விட்டுப் பிரிகின்றகாலத்தில் சிவயோக சமாதி சாதகமாகும்.

நிலத்தினுள்ளும் நீரினுள்ளும் பல்லாயிரம் ஆண்டுகள் ஆழ்ந்திருந்தாலும், இடகலை பிங்கலைகளின் வழியாக மேலோங்கும் பிராணவாயுவைத் தடுத்து நடு நாடியின் உள்ளே அசையாமல் நிறுத்தினால் உடல் அழியாது.

13. சரீரசித்தி உபாயம்

(724—739)

உடம்பு அழியுமானல் உயிரும் நீங்கும். உடலில் வலிமையில்லாதவர்கள் ஞானம் அடையமுடியாது. ஆதலால் உபாயம் அறிந்து உடம்பையும் உயிரையும் வளர்க்கவேண்டும். முதலில் நான் உடம்பைக் குற்றமுடையதாகக்கருதினேன்; பின், உடம்புள் இறைவன் உறைவதைக் கண்டு - அறிந்து இவ்வுடம்பைப் பாதுகாக்கின்றேன் (என்று திருமூலர் கூறுகின்ருர்).

இடகலை பிங்கலைகளின்வழியாக, பிராணவாயுவை மாறிமாறி உள்ளிழுத்து வெளிவிட நாடி சுத்தியாகும். பின், சுத்தமான அப்பிராணவாயுவை உடலிலுள்ள எழுபத்திராயிரம் நாடிகளிலும் பரவச்செய்தால் இருந்த நிலையிலிருந்தே எல்லாவற்றையும் உணரலாம்.

யோகத்தை அந்திக்காலத்தில் செய்தால் கப நோயும், மத்தியானம் செய்தால் வாதநோயும், விடியற்காலம் செய்தால் பித்தநோயும் நீங்கும்; அன்றியும் நரை திரை வாரா.

குண்டலினியைப் பிராணனேடு தொங்கி விழாமற்படிக்கு நட்டமாக இருந்து நடுநாடியில் நிலைத்திருக்கச் செய்தால் மரணமில்லை. நூற்றறுபத்தாறு மாத்திரை இடகலை பிங்கலைகளின் வழியாக இயங்கும் பிராணவாயுவைத் தடுத்து நடுநாடி வழியாக அந்த நூற்றறுபத்தாறு மாத்திரை இயங்கும்படிச் செய்தால் ஆயுள் நீடிக்கும். பிராணுயாமத்தால் நாதம் கேட்கலாம்; திருக்கூத்துத் தரிசனமும் காணலாம்.

யோகிகள், தர்மவழியாக எப்போதும் தியானிக்கும் 'ஸோஹம்' என்பதே 'அசபை' ஆகும். பிராணனையும் அபானனையும் பிரமரந்திரத்தில் எழுப்பும் யோகியே சிவனாக விளங்குவான். எருவாய்க்குமேல் இரண்டு விரல் அளவும், குறிக்கு - இலிங்கத்துக்குக் கீழே நான்குவிரல் அளவும் உள்ள இடத்தில் நிலைத்துத் தியானித்தால் உடம்பினிடமாக இறைவன் எழுந்தருளியிருப்பான். இது உயர்ந்த 'அசபா' உபதேசமாகும்.

பிரமரந்திரமாகிய சந்திரமண்டலத்தில் தியானத்தால் கலந்திருப்பவர்கள் என்றும் இளமையாகவே இருப்பார்கள். புணர்ச்சி குறையுமானால் சரீரத்திற்கு அழிவு இல்லை. உணவு சுருக்கத்தால் உடல் சுருங்குமானால் நீண்டகாலம் வாழ்வதோடு பலவகைப் பயன்களையும் பெறலாம். சிவனுமாக ஆகலாம்.

குண்டலினிசத்தியை எழுப்பிச் சுழுமுனைவழியாக அடிக்கடிச் செலுத்தினால் பெண்களும் பார்த்து விரும்பும்படியான பொன்போன்றதான தேகம் உண்டாகும். ஆஞ்ஞா சக்கரத்தில் இறைவனைத் தரிசிக்கில் அங்குள்ள மண்டபத்தில் என்றும் விளங்கலாம்.

திரோதானசத்தியை அருட்சத்தியாக அன்புடன் கொண்டால் பல்கோடி உடம்புகளாலும் 'அசபா' மந்திரம் ஜபித்து ஒடுங்கலாம்.

14. காலசக்கரம்

(740—769)

துவாதசாந்தப் பெருவெளியே இறைவன் வீற்றிருக்கும் இடமாகும். அங்குசென்றால் இறைவனது அருளைப் பெறலாம்.

மக்களுக்கு இருபத்தெட்டு, முப்பத்துமூன்று, அறுபத்திரண்டு, நூறு ஆக இவ்வயதுகளில் கண்டங்கள் உண்டு. பிறந்தகிழமை, பிறந்தநட்சத்திரம், பிறந்த நட்சத்திரத்திலிருந்து ஒன்று, இரண்டு, மூன்று, எட்டு ஆக இந்த நாட்கள் யோகாப்பியாசத்திற்கு ஆகாத நாட்களாம்.

நீண்டநாட்கள் உடலோடு கூடி இருக்க முயற்சிப்பவர்கள், முறையாக மூச்சு அடக்குதலில் பழக வேண்டும். பழகாவிட்டால் வாழ்நாளின் முடிவில் சிறிதேனும் அதிகமாக இருக்கமுடியாது.

இடகலை பிங்கலை சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளும் சுவாசகோசம் வரையிலும் நீங்காமல் ஒத்திருக்கின்றன. அவைகள் மேலெழும்பி, பிரமரந்திரத்திலுள்ள சூரிய சந்திர அக்கினியாகிய மூன்று மண்டலங்களிலும் ஒத்துநிற்குமானுல் உன்மனுசத்தியாகிய மனேன்மணி யானவள் வெளிப்பட்டு அருளுவாள்.

ஒவியம் போன்றதான தியான உணர்வை - ஞானத்தை அறியுங்கள். சூரிய சந்திர அக்கினியாகிய மூன்று மண்டலங்களையும் தாங்கி நிற்பது நடுநாடியாகிய சுழுமுனையாகும்.

தமது வாழ்நாளை ஒவ்வொருநாளும் அளந்து செல்வதை அறியாதவர்களே மரணகாலத்தில் பெருந்துன்பம் அடைபவர்களாவார்கள். பின்பு, தம் உடலை நாய் உண்பதற்காகச் சுமந்து திரிந்தவரும் ஆவார்கள். ஆதாரங்களைப் பற்றிக்கொண்டு துவாதசாந்தம் வரை சென்ருல் அங்கே கூத்தப்பிரானைத் தரிசிக்கலாம். திருக்கூத்தினைத் தரிசித்தவர்கள் அப்பெருமானது உண்மைத் தன்மைகளை உணர்த்துகின்ற சாத்திரப் பொருளை

அறிந்து அதன்வழி நின்றவராவர். அவரது உயிரும் சிவமாகவே விளங்கும். மேலும், உச்சுவாச நிச்சுவா சங்களால் முப்பதுநாட்கள் ஒருங்கே கும்பகம் செய் தால் சிவனாக விளங்குவர்; அதாவது திருக்கூத்தனும் ஆவர்.

இறைவன், இருதயமாகிய அனாகதத்தினிடத்து எப்போதும் இயற்றும் திருக்கூத்தினைக் கண்டு தொழு கின்றவர்கள் நூறாண்டுகள் உடலோடு கூடி வாழ்வர். நூறு ஆண்டு வாழ்ந்தவர்கள், உடலைப் பாதுகாத்து ஆயிரம் ஆண்டு வாழ்வார்கள். அவ்விதம் ஆயிரம் ஆண்டுவாழ்ந்தவர்கள் முதிர்ந்த அறிவால் பல ஊழியும் காண்பார்கள். பல ஊழிகளைக் கண்டும் தளர்ச்சியில் லாமல் அகத்துள் இருக்கும் இறைவனை, அநந்நியமாக இருக்கும் நிலையினைக் கண்டவர்கள், உயர்நலம் அடை வார்கள். உயர்ந்தோர்கள் சிலர், உலகவர் போலச் செயல்செய்து பயன்பெற்றவர்கள் ஆவார்கள். பலர், இவ்வுண்மையை அறியமாட்டாதவர்களாய்ப் பிறப்பி னையே அடைவர். அநுபவஞானம் இல்லாதவர்கள் அரனைக் காணமாட்டார்கள்.

தத்துவங்களைக் கடந்து சிவதரிசனம் செய்கின்ற வர்களுக்கு, அத்தத்துவங்கள் தம்மைவிட்டுக் கழிதல் நன்றாக விளங்கும். பிறப்பில்லாதவனும், உயிரினுள் கலந்து நிற்பவனும், எல்லாத் திக்குகளிலும் பொருந்தி யிருப்பவனுமாகிய முக்கண்ணனை இறைவனை உறுதி யாகத் தியானித்தால் உயிர் சிவமாகவே விளங்கும். இவ்வுண்மையை அறிபவர் இல்லை. அப்படி அறிபவர் களுக்கு இறப்பும் துன்பமும் இல்லை. அரசராகவும் விளங்குவார்கள்.

அகாரம் சிவம்; உகாரம் சக்தி; மகாரம் மலம். சிவமும் சத்தியும் நெஞ்சத்து இருக்க, மகாரமாகிய நாதம், பிராணனுடன் சுழுமுனை வழியாகப் புருவ மத்தியை அடையின், அங்கு சதாசிவம் வெளிப்படும்.

எவரும் இறைவன் எழுந்தருளியிருக்குமிடத்தை அறியவில்லை. அறிகின்றவர்களுக்கு இறைவன் மறைவின்றி வெளிப்படுவான். அவனை எப்போதும் தரிசித்தால் ஆன்மாவே சிவமாக (அவனே தானாக) விளங்கும். சிவமும் ஆன்மாவும் ஓசையும் ஒளியும் போலக் கலந்துநிற்கும். ஆதாரங்களில் அவ்வவற்றிற்கு உரிய இறைவர்களைக் காணலாம்.

15. ஆயுட்பரீக்ஷை

(770—789)

கையைத் தலையின்மீது வைப்போமானால் அக்கை, சிறிதாகவும் பெரிதாகவும் தோன்றாமல் அளவாகத் தோன்றுமாயின் உத்தமம். பெரிதாகத் தோன்றினால் ஆறு மாதங்களிலும், இருமடங்காகத் தோன்றினால் ஒரு மாதத்திற்குள்ளாகவும் மரணம் நேரிடும்.

தன்னை மறந்து சிவமேயாகின்றவரது நெஞ்சில் இறைவன் ஆன்மாவுடன் இரண்டறக்கலந்து விளங்குவான். வெளியில் கழிகின்ற நான்கு அங்குல வாயுவை உள்ளே நிற்கும் எட்டங்குல வாயுவுடன் சேர்த்துப் பன்னிரண்டு அங்குலமாக அடக்கினால் அநுபவம் சித்திக்கும். ஞானமும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

பிராணவாயுவை இடது வலது நாசிகளின் வழியாகக் கிரமப்படி செலுத்திப் பயிற்சிசெய்தால் நீண்ட

நாள் வாழலாம். பிராணவாயு, ஆறு விரலளவு பூரகமாக இருப்பின் எண்பது ஆண்டும், ஏழு விரலளவு பூரகமாயின் அறுபது ஆண்டும், எட்டு விரலளவு இடகலையின் வழியாக இயங்குமானால் ஐம்பது ஆண்டும், ஒன்பது விரலளவு இயங்குமானால் முப்பத்து மூன்று ஆண்டும், சர ஓட்டம் பத்து விரலளவு நின்று முடிவுபெறில் இருபத்தெட்டு ஆண்டும், பதினைந்து விரலளவு ஓடி அகன்று நின்றால் இருபத்தைந்து ஆண்டும் வாழலாம்.

ஒருநாள் முழுவதும் பன்னிரண்டு மாத்திரை அளவு வாயுவைப் பூரித்து உள்ளே நிறுத்திக்கொண்டு இரண்டு மாத்திரை அளவு ஒருநாடியின் வழியாக இரேசகம் செய்வது பிரத்தியாகாரமாகும்.

பிராணவாயுவானது இரண்டு நாட்களாக ஒரு நாடியின்வாயிலாகவே இயங்கிக்கொண்டிருக்குமானால் அபானவாயுவானது கீழ் நோக்காமல் தடைபடும். பிராணவாயுவும் அபானவாயுவும் சேர்ந்து மூன்று நாட்கள் நிலைபெற்றிருந்தால் ஆயுள்வளர்ச்சியடையும். பத்து மாத்திரை உள்ளே நிறுத்தி இரண்டு மாத்திரை வெளிவரும்படியாக நான்கு நாட்கள் பிராணவாயு இயங்குமானால் சிவம், சத்தி, நாதம், விந்து ஆக இந் நான்கையும் காணலாம். மேற்கூறியபடியே ஐந்து நாட்கள் இயங்குமாயின் புருவநடுவையும் காணலாம். பதினைந்து நாட்கள் சமாதிகூடினால் சிவத்தைத் தரிசிக்கலாம். யாவற்றையும் சிவமாகப் பார்க்கின்ற அநந்நிய ஞானம் பெற்றவர்க்குப் பராசத்தி அமுதமளிப்பாள்.

உயிர்கள் பிறக்கவேண்டும் என்று இறைவன் திருவுள்ளம்பற்றியதால், உயிர்களுக்கு இவ்வுடம்பு

தோன்றியது. உடம்பினிடம் வைத்த பற்றினை நீக்குகின்றவர்களுக்கு ஞானம் மிகும்.

16. வாரசரம்

(790—796)

பிராணவாயுவின் ஓட்டத்தைச் சரம் என்று சொல்வார்கள்.

வெள்ளி, திங்கள், புதன் இக்கிழமைகளில் இடது நாசியின் வழியாகவும், சனி, ஞாயிறு, செவ்வாய் இக்கிழமைகளில் வலது நாசியின் வழியாகவும் பிராணவாயு ஓடுதல் வேண்டும். வளர்பிறை வியாழக்கிழமையானால் இடநாடி வழியாகவும், தேய்பிறை வியாழக்கிழமையானால் பிங்கலைநாடி வழியாகவும் பிராணன் இயங்கவேண்டும். வெள்ளி, திங்கள், புதன் ஆகிய இந்நாட்களில் இடதுநாசியின் வழியாகப் பிராணன் இயங்குமானால் உடலுக்கு அழிவில்லை.

பிராணவாயுவானது வலம் இடம் மாறுதல் அடைகின்றபோது உடலில் நடுக்கமும் அச்சமும் தோன்ற மாறும். பிராணவாயுவை நடுநாடியில் நிறுத்தினால் தீபதரிசனம் காணலாம். ஆயுள், வருஷம், மாதம், நாள், முகூர்த்தம் ஆகிய இவைகளனைத்தும் சரத்தை அடிப்படையாகக் கொண்டே தோன்றுகின்றன.

17. வாரசூலம்

(797—798)

திங்கள், சனி கிழக்கே சூலம். செவ்வாயும் புதனும் வடக்கே சூலம். ஞாயிறும் வெள்ளியும் மேற்கே

சூலம். வியாழன் தெற்கே சூலம். இடப்பக்கமாகவும் பின்பக்கமாகவும் சூலம் இருப்பின் பயணம் செய்வது மிக நலமாம். வலப்பக்கமாகவும் முன்பாகவும் சூலம் நின்றால் துன்பமாம்.

18. கேசரியோகம்

(799—824)

சரீரம் வளையாதபடி அண்ணாக்கை நிமிர்த்தி முக்கோண வடிவமான குதத்தை அணையாகக் கோலிப் பூட்டி, காலைப்பின்னிச் சேர்த்து நேரே நிமிர்ந்திருக்க இறப்பில்லை - அழிவில்லை. கேசரியோகம் செய்கின்றவர்களுக்கு அழிவில்லை என்பதாம். கேசரியோகத்தால் சந்திரமண்டலத்திலிருந்து அமுதமானது அதிகமாகப் பெருகும். அதனைக் காப்பாற்றிக்கொள்வதே இந்த யோகத்தின் பயனும்.

புருவமத்தியிலேதான் சிவனும் சிவனும் வசிக்கும். அரி, அயன், அரன், தேவர்கள் ஆகிய இவர்களும் அவ்விடத்திலேதான் தோன்றுவார்கள். நாக்கின் நுனியைப் புருவமத்தியில் விசினால் நூறுகோடி ஆண்டுகள் அழியாமல் இருக்கலாம். மதியமுதம் உண்பவர்களுக்கு என்றும் அழிவில்லை; நிலைத்த இன்பமும் உண்டாகும்.

மேல் அண்ணாக்கில், இடகலை பிங்கலை ஆகிய இவைகளின் வழியாக இயங்கும் பிராணவாயுவைச் செலுத்துகின்றவர்கள் அழியமாட்டார்கள்; நரை திரை இல்லையாம்; என்றும் இளைஞராகவே இருப்பார்கள். நாவினைப் புருவ மத்தியில் பொருத்தியிருப்பவர்கள் உலகமுழுவதையும் ஆள்வார்கள். தீவினையாளர்கள் இவ்வண்ணம் இல்லாமல், சூரியநாடியின் வழியாகப்

பிராணவாயுவை வெளிவரும்படிச் சிந்திக்கின்றவர்கள் ஆவார்கள். கேசரியோகத்தால் அமுதம் உண்ணலாம்.

கேசரியோகத்தில் பஞ்சாட்சர தாரணை செய்யும் போது பிரமரந்திரத்தில்மாத்திரம் வேர்வையுண்டாகி, கங்கைபோலப் பெருகும். அவ்வநுபவத்தைக் கண்டு அறியவேண்டும்.

புருவநடுவில் இறைவனைப் பூஜித்தவர்களைச் சிவம், அவர்களது மல மாயை கன்மங்களைச் சுட்டு, சிவ ஞானவடிவாக விளங்கும்படிக்குக் கருணைபுரியும்.

இறைவன், எல்லா உயிர்களுக்கும் நல்லவராவர்; சிலருக்கு அப்பெருமான் கோபித்தாலும் நல்லவரே; கோபிக்கப்பட்டவர்களுக்குள்ளே தீவினையே செய்கின்றவர்களுக்கு இறைவன் மிகக் கொடியவராவார்.

இறைவன், குண்டலினித்தியான யோகிகளுக்குச் சிரசிலும், சகஸ்ராரத்திலே தியானிப்பவர்களுக்குத் தலைவனாகவும், சிவயோகம் செய்பவர்களுக்கு மதி மண்டலத்திலும் எழுந்தருளியிருப்பான்.

திருவருட்சத்தியோடு கூடினவர்களுக்குத் தத்துவதரிசனம் முதலியன கைகூடும். பிராணவாயுவை மதிமண்டலம்வரை செலுத்தும் யோகிக்கு அழிவில்லை.

மதிமண்டலத்தினுள்ளே பிராணவாயு பொருந்தியிருக்கும்படி ஒட்டியாண பந்தத்தைச் செய்து, அப்பிராணன் கீழ்நோக்காதபடி கட்டினால் சகஸ்ராரத்தில் கூத்தப்பெருமான் விளங்குவார். (ஒட்டியாண பந்தமாவது :- வயிற்றில் தொப்பூழின் மேல்பாகத்தையும் கீழ்ப்பாகத்தையும் முதுகோடு சேரும்படியாகப் பின்னிழுத்தலாம்.)

மதிமண்டலத்து அமுதம் ஊறுகின்ற காலத்தில் அது வழிதற்கு ஏதுவாகிய குண்டலினியை அடக்கிஞல் பிராணவாயுவின் ஓட்டம் தடைபடும். அதனுல் ஆயுளும் வளரும்.

மூலாதாரக் கதவாகிய குதத்தை அடைத்தால் உடலுள் ஒளி தோன்றும். வசமான அப்பிராணவாயு ஒலியுடன் மேலெழும். பின் கோயிலாகிய உடம்பில் இறைவன் காணப்படுவான்.

ஐம்பூதங்களும் உடலுள் கூடிஞல் தூரதிருஷ்டி உண்டாகும். திருவருட்சத்தியின் திருவருளால் ஞானத்தின் ஞானமாகிய திருவடிஞானத்தை மனத்துள் நிறுத்தி, சிவனிடத்தில் சிந்தையைப் பதியவைத்தால் எல்லா உலகங்களும் நன்கு விளங்கும்.

சிவயோகத்தைச் செய்தால் ஆன்மாவினிடமாகச் சிவம் பிரகாசிக்கும்.

19. பரியங்கியோகம்

(825—844)

(பரியங்கம் - கட்டில்) கட்டிலின்மீது முழந்தாள்கள் இரண்டின் மேலும் கைகளை நீட்டிப் படுத்து யோகம் செய்தலாகும்.

மயிர்ச்சாந்து முதலியவற்றைப் பூசும் பெண்கள், தம்மை விரும்புகின்றவர்களது உள்ளத்தை மயக்குவார்கள். அம்மயக்கத்தில் உண்டாகும் இன்பம், ஊசியின் தொளைபோன்று சிறியதாகும். ஆயினும் தளர்வு ஏற்படாமல் மயக்கும்.

போகத்தை நினைத்தால் பிராணவாயுவானது நடு நாடிவழியாக இயங்காது. நாதமாகிய சிவமும் விந்துவாகிய சத்தியும் கூடிய நிலையினை யோகக்காட்சியில் காண்டலே பரியங்கியோகத்தின் பயனும். பரியங்கி யோகத்தில் சூரிய சந்திர மண்டலங்களாகிய கழுத்தினிடத்தும் உச்சியினிடத்தும் (பிராணனைச் செலுத்தி உரித்தாக்கிக்கொண்டால்) கடந்து, இரண்டு பக்கமும் வெளித்தோன்றும் வண்டிகளாகிய இடகலை பிங்கலை இவைகளைக் கட்டி, நாத விந்துக்கள் திரண்டு உருண்டு கைவருமாறு செய்தால் முதுகந்தண்டு எப்போதும் தளராது; உடலுக்கும் அழிவில்லை.

பரியங்கி யோகத்தால் நாத விந்துக்கள் அழியாது உடலினிடத்தே தங்கும். போகத்திலே விந்துவானது கீழ்நோக்கி வீழுகாமல் தம்மிடத்திலே தங்கும்படிச் செய்யும் யோகியானவன் ஞானியாகவும் சிவனுகவும் விளங்குவான்.

ஐந்து நாழிகை அளவே பரியங்கியோகம் பயில வேண்டும். பரியங்கியோகம் செய்பவர்களே திருவருட் பேற்றை அடைவர். எவரும் எளிதில் அடையமுடியாத இப்பரியங்கி யோகத்தை ஸ்ரீகண்ட பரமேசுரன் அடைந்து அறிவித்தார்.

இருபது ஆண்டுகள் நிரம்பப்பெற்ற மகளிரும் முப்பது ஆண்டுகள் நிரம்பப்பெற்ற ஆண்களும் கூடிச் செய்யும் பரியங்கியோகத்தில் ஐம்புலன்களும் மலர, மனம் அடங்க, விந்துவுக்கு அழிவில்லாமல் ஆனந்தம் விளையும்.

பரியங்கியோகிகள், சுக்கிலமானது சோணிதத்தில் கலக்காதவாறு மனத்தை அடக்கிப் பிராணுயாமம்

செய்து, நாசித்துவாரத்துக்கு மேலுள்ள வழியை நாக்கின் நுனியால் அடைத்து அடக்குவார். மேலும், அவர் எவ்வளவுகாலம்போகித்தாலும் விந்து நழுவாது. அவ் யோகி சிவசூரியனுகவும் விளங்குவார். பரியங்கி யோகிகள், பெண்களோடு வாழ்வார்களானுலும் விந்து நழுவாது மேல் நோக்கியிருப்பதால் அவர்களுக்கு எஞ் ஞான்றும் துன்பம் இல்லையாம்.

பராகாய தரிசனத்துக்குமேல் சிறந்த அனுபவம் வேறெதுவும் இல்லை. பரசிவமே பராகாயத்து விளங்கு பவர் ஆவர்.

மதிமண்டலத்திலே விளங்குகின்ற சிவ சத்திக ளுடன் ஆன்மாவாகிய தன்னையும் ஒன்றுசேர்க்கப் பயில்பவர் நீண்டகாலம் வாழ்வர்.

பூரக ரேசக கும்பகங்களை முறையாகச் செய்யும் வழிவகைகளை அறிந்தவர்கள், ஆத்ம ஆகுதி பண்ணின வர்களாவார்கள். ஆத்ம ஆகுதிசெய்து ஆஞ்ஞாசக்க ரத்துள் பொருந்தினுல் அங்கே கபாலம் கறுக்கும். இப் பரியங்கி யோகிகளுக்கு, பராசத்தியானவள் அங்கே இருந்து அருள்புரிவாள்.

சிவஞானமாகிய செந்தாமரைக்குப் பூமி, நீர், அரும்பு முதலிய எவையும் இல்லை. ஆனுலும், அது பூத்துச் சிவமணம் கமழும்.

20. அமுரிதாரணை

(845—850)

உடலின்கண் ஊறுகின்ற சிறுநீரை, ஒரு கை அளவு பிடித்து வாயின் வழியாக வயிற்றிற்கு இறைக் கும் பயிற்சியை இடைவிடாது செய்தால் துன்பம்

இல்லை. தெளிந்த இச்சிவநீரைப் பருகினால் ஓர் ஆண்டிற்குள் சிவ ஒளி வீசும். பிராணனாகிய அகாரமும் மனமும் ஒடுங்கும்; மகிழ்ச்சியை உண்டாக்குவதோடு உடலும் பொன்னிறமாகும்.

நூறு மிளகு அளவு சிவநீரை அருந்துவதற்குச் சமமான வேறு மருந்து இல்லை. இச்சிவநீரை உச்சியில் அப்பினால் நரை மாறும். பயிற்சியில்லாதவர்கள், உப்பு நீராகிய சிறுநீரை வெளியில் கழிக்கும்படிச் சொல்லுவார்கள். அச்சிவநீரின் நுரையையும் திரையையும் நீக்கித் தெளிவாக அருந்தினால் நரைதிரை நீங்குவதோடு இறப்பும் இல்லை.

சிவநீருடன் மிளகு, நெல்லி, மஞ்சள், வேம்பு இந்நான்கையும் கலந்து உண்டால் மேனி மென்மையாகும்; தலை கறுக்கும். இவ்வமுரியை வீரமருந்து என்றும், தெய்வமருந்து என்றும், சக்தி அமுதம் என்றும் சொல்லப்படும். இம்மருந்தின் பெருமை இயம்புதற்கரிது.

21. சந்திரயோகம்

(851—883)

தூலத்துள்ளே இடை பிங்கலை என்னும் இருநாடி வழியாகப் பிராணன் இயங்குவதுபோல, சூட்சுமத்துள்ளே இடநாடி வழியாகவே பிராணன் இயங்கிக் கொண்டிருக்கும்; அதுவே சந்திரயோகமாம். அதனால் சரீரசுத்தம் உண்டாகும்.

எல்லாக்கலைகளையும் இடைகலை வழியாக இயங்க அறிபவனே சந்திரயோகியாவான். சந்திரயோகப்பயிற்சியாளருக்கு எல்லாக்கலைகளும் சந்திரநாடிவழியதாகும்.

சூரியகலை பன்னிரண்டாகும். சந்திரகலை பதினாறாகும். அக்கினிகலை அறுபத்துநான்காகும். இம்மூவகைக் கலைகளும் மூவகைத் தானத்தில் தனித்தனியாக இயங்குவன; இவைகளை ஒன்றோடொன்று கலக்கும்படிச் செய்தல்கூடாது.

தொண்ணூற்றாறு தத்துவங்களும் சூரிய சந்திர அக்கினி ஆகிய இம்மூன்று கலைகளிலிருந்து உண்டாவன. எல்லாக்கலைகளையும் தூலநாடிகளின் வழியாகக் கீழ்ப்போகாதபடி தடுத்து, சூட்சும சந்திரகலையின் வழியாக மேலே எழுப்பும் சந்திரயோகியர் சிவனடி அடைவர்.

அக்கினிகலையானது பிளவுபட்டு இருதாரகைகள் போன்று நீளமானதான ஒளியுடையதாம். அவையே சூரியமண்டலம் என்றும் சந்திரமண்டலம் என்றும் சொல்லப்படும். மேலே விளங்கும் தாரகைக் கூட்டங்களே பராசத்தியின் ஒளியாகும்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், அக்கினி, நட்சத்திரங்கள் ஆகிய இவை ஒன்பதும் பிரணவத்திலிருந்து உண்டாகும் பெருநெறிகளாம்.

தேய்பிறையிலே நட்சத்திரங்கள் பிரகாசிக்கும்; வளர்பிறையிலே அந்நட்சத்திரங்கள் பிரகாசிக்காது. நட்சத்திரமாவது, உலகில் எல்லா ஆன்மாக்களாகத் தோன்றுதலாம். ஆன்மா, சிவமாக விளங்கும் சொரூபமே தாரகையுள் தாரகையாதலாம்.

சந்திரயோகம், வளர்பிறையில் தோன்றி வளரும்; தேய்பிறையில் வளர்ந்து தேயும். இதனை அறிபவர்கள்

இறைவன் திருவடி சேர்வர். பதினாறு கலைகளும் உடலிலேயே பொருந்தியுள்ளன. இவைகளை மூடர்கள் அறியமாட்டார்கள்.

மூலத்தியானது இடை பிங்கலை வழியாக இயங்கும்போது சூரியசோதியும் சந்திரசோதியும், சுழுமுனையின் உச்சியில் இருக்கும்போது நட்சத்திரசோதியும் தரிசனம் தரும். அத்தரிசனம் நிலைக்கப்பெறில் எல்லாக் காரியமும் இனிது முடியும்.

சூரியகலை சந்திரகலை ஆகிய இவ்விரண்டையும் மாறிப் போகாதபடி நிறுத்தி, சுழுமுனை வழியாக மேலே ஏறிச்செல்லும் குண்டலினியோடு சேர்ப்பதே பேரானந்தமாம்.

இடகலை பிங்கலைகளைத் தவறு ஏற்படாதபடி மாறிப் பயின்றால் இவ்வுடலானது ஆயிரம் ஆண்டு நிலைத்துநிற்கும். சந்திரயோகத்தில் இருக்கின்றவர்களுக்கு முதல் அனுபவம், நவத்துவாரங்களிலும் பறையோசை கேட்பதாம். பின், தீப ஒளிபோன்ற சிவதரிசனம் செய்தலாம். அதனால் உண்டாகும் அனுபவம், சூரியனும் சந்திரனைப் போன்று குளிர்ந்து இன்பம் அளிக்கும்.

உந்திக்கமலத்தில் தோன்றி மேல்நோக்கி எழும் மூலக்கனலை அடக்கும் மந்திரத்தை யாரும் அறியமாட்டார்கள். அதனை உணர்ந்தவர்கள், தகப்பனுக்கு முன்பு மகன் பிறந்த அதிசயத்தை அறிந்தவர்களாவார்கள்.

சந்திரயோகியர்கள், நாழிகைகளைக் கருவியாகக் கொண்டு இயமனையும் அளந்துவிடுவார்கள். இறைவனடியில் தாழ்கின்றவர்கள் அமுதமயமாவர்.

உயிர்கட்கு அபரபக்கம் - தேய்வுபக்கம் என்று சொல்லப்படுவது, விந்துவானது வெளிப்படும் வழிகளால் வெளிப்படாமலும், காம இச்சை இல்லாமலும் மூலாதாரத்திலே கட்டுண்டுகிடக்கும் காலமாம். அப்போது யோகியானவன், பிரணவத்தைச் சந்திரமண்டலத்து வைத்துத் தியானிப்பான். சூரியகலையுடன் சந்திரகலை அடங்கிநிற்கும் நாளே உவா நாளாகும்.

புணர்ச்சிக்காலத்தில் சூரியகலை வன்மை குறையுமானால் விந்து மிகுதியாக வெளிப்படும். ஆதலால், மனத்தைக்காத்து உடலை அதிகமாக அலட்டிக்கொள்ளாமல் காப்பாற்றினால் விந்து நழுவாது.

மனமும் பிராணனும் அடங்கினால் இன்பம் என்றும் நீங்காது. சந்திர யோகியர்களுக்கு மரணமே இல்லை. இடகலை பிங்கலை வழியாக அல்லாமல் நடுநாடி வழியாகப் பிரமரந்திரத்தில் சென்று நிலைத்திருந்தால் உடலுக்கு அழிவில்லை; யோக உபாயங்கள் சித்தியாகும்; என்றும் இன்பம் பெருகும்.

மூன்றாம் தந்திரம் முற்றிற்று

நான்காம் தந்திரம்

1. அசபை

(884—913)

ஜபிக்காமலேயே பிராணனுடன் சேர்ந்து இயங்கும் மந்திரம் ‘அசபை’ யாகும்; அது ‘ஹம்ஸ’ என்பதாகும். அசபைக்கு ஓரெழுத்து மந்திரம் என்றும் பெயர். பேசா எழுத்து ‘சி’ என்பதாகும். பிரணவமும் அசபா மந்திரமே.

சிற்றம்பலம், சிதம்பரம், திருவம்பலம் ஆகிய இவைகளெல்லாம் சிற்றம்பலத்தின் பரியாயப் பெயர்களாம்.

அம்பலத்தில் இறைவன் நடிக்கும் தாண்டவம் அற்புதத்தாண்டவம், ஆனந்தத்தாண்டவம், அனவரத தாண்டவம், பிரளயத்தாண்டவம், சங்காரத்தாண்டவம் என்னும் ஐவகை ஆகும். இத்தாண்டவங்கள் ஐந்தெழுத்தின் திருக்கூத்தேயாகும். அவையெல்லாம் அநுக்கிரகத்தையே தொழிலாகக்கொண்டு இயங்குவனவாம். சிவபிரானே, கூத்திற்கு ஆதாரமாயும் ஆதேயமாகிய தத்துவப்பொருளாயும் இருப்பன்.

தற்பரமான சிவம், மூலாதாரத்திலே ‘நமசிவாய’ எனவும், அக்கினிமண்டலத்தில் ‘நமவசிய’ எனவும், சூரியமண்டலத்தில் ‘நவாசிய’ எனவும், சந்திரமண்டலத்தில் ‘யவாசி’ எனவும் நிற்கும்.

அகார உகாரங்களே பஞ்சாக்கரத்துள்ள சிகார வகாரங்களாம். அவையே சிவமும் சத்தியும் ஆம்.

அவையிருக்குமிடம், அறியப்படாத இடமாகிய சூனிய ஆகாயம் (ஞானவெளி) ஆம். அவ்விடமே சூட்சும நடம் புரிகின்ற பரஞானத்தலமும் ஆகும். அதுவே, அழியா ஆனந்தத்தை அளிக்கவல்ல சிவகதியாம்.

ஆனந்தம் மூன்று எவையென்ருல் சி, வ, ய என்பனவாம். இதனை அறிபவர் சிலரே. இதனை அசபாத்தியானத்தால் ஆனந்தத்துடன் அறிகின்றவர்களுக்கு, ஆனந்தம் திருக்கூத்தாகத் தரிசிக்கப்படும்.

'ஹம், ஸம்' என்னும் இரண்டு மந்திரங்களும் அசபாமந்திரமாகும். அசபாத்தியானத்தால் விளைவன பிரணவமும் பஞ்சாக்கரங்களும் ஆம். இம்முறை குறிப்பதே சங்காரத்தாண்டவம்.

சதாசிவ மூர்த்தியால் அருளிச்செய்யப்பட்டதே எல்லா ஆகமங்களும். அவ்வாகமங்களில் கூறப்பட்ட வழியே சிவகதியாக்கும். அம்பலத்திலே நடிக்கும் திருக்கூத்தும் திருவைந்தெழுத்தாகும்.

பதி, பசு, பாசங்கள்; திரோதாயி சத்தி; ஆணவம், மாயை, கன்மம் ஆகிய இவைகளெல்லாம் திருக்கூத்துத் தரிசிக்கின் சுத்தமாம். திருக்கூத்து ஆடுகின்ற இடமும் சுத்தமே. இத்திருக்கூத்தே சிவமாயும் சத்தியாயும் எல்லாமாய் நிற்கும்.

இறைவன் திருவடியே எல்லாமந்திரங்களும் ஆம். விரிந்து கிடக்கும் அவ்வளவு மந்திரங்களும் சப்தகோடி மகாமந்திரங்களுள்ளும் ஹம்ஸ மந்திரத்திலும் அடங்குவனவாம். சப்தகோடி மகாமந்திரங்களாவன: நம:, ஸ்வதா, ஸ்வாஹா, வஷட், வௌஷட், ஹூம்,

ஹூம்பட் என்பனவாம். ஏழுகோடிப் பெருமந்திரங்களுள்ளும் அசபா மந்திரத்துக்குச் சமமானது யாதும் இல்லை. மந்திரங்கள் அனைத்தும் இறைவனது திருமேனியாகும். பரசிவமே, மந்திரஸ்வரூபமாக நின்று பஞ்சகிருத்திய நடனத்தைச் செய்யும்.

இறைவன் புரியும் நடனவகைகளுள் அற்புதம், ஆனந்தம் என்னும் இரு நடனங்களும் இன்பத்தை அளிப்பன. அவைகளுள், ஆனந்தநடனம் பேரின்பம் தருவதாகும். பிரளயம், சங்காரம் என்னும் இரண்டு நடனங்களும் ஊழிமுடிவும் உலகமுடிவும் ஆகும்; இதனை நமன்கூத்து என்றும் சொல்லுவர். பொது, அனவரதம் என்னும் இருவகை நடனங்களுள், அனவரத தாண்டவம் ஆன்மாக்களுக்கு விளக்கத்தைச் செய்யும் மந்திரமாகும். நடனம் சிவலிங்கமாகும். அதனால் உண்டாகும் பயன், செம்பு பொன்னாவது போல, மலம் நீங்கப்பெற்றுத் திருவருளில் தோய்ந்து சிவனடி அடைதலேயாம்.

ஆணவமலம் நீங்கிச் சிவஞானம் அடைந்து, அதிலே திளைத்து முற்றியநிலையே சிற்பரம் என்பதாம். ஸ்ரீம் ஹ்ரீம் என்ற சத்திபேதங்களை ஜபித்தாலும் ஆணவம் ஒடுங்கி ஆன்மா அறிவொளி பெறும்.

திருவம்பலச்சக்கரம் அமைப்பதாவது:- நெடுக்கும் குறுக்குமாக ஆறுகோடுகளைக் கீறினால் இருபத்தைந்து அறைகள் அமையும். அந்த இருபத்தைந்து அறைகளிலும் திருவைந்தெழுத்தை முறையாக அமைத்து ஜபித்தலாம். (சிவயநம, வசியநம, யவசிநம, நயவசிம, மநயவசி என்று அமைத்தல் வேண்டும்.)

சிவாயநம, சிவாயநம என்று இடையறுது ஜபித்துக் கொண்டிருப்பவர்களுக்குப் பிறப்பே இல்லே; அங்ஙனம் ஜபித்தால் திருக்கூத்தைத் தரிசிக்கலாம்.

பொன்னேப்போல நாம் பாதுகாத்து வைத்துக் கொள்ளவேண்டிய திருவைந்தெழுத்தினே வாயால் சொல்லக்கூடாது; உதட்டளவில் ஜபித்தல்வேண்டும். அம்மந்திரத்தைப் பிராணனேடு பூரகம் செய்தால் உடம்பு பொன்னுகும். கும்பகம் செய்தால் திருவடிப் பேறு கைகூடும். திருவைந்தெழுத்தை ஜபித்தால் இருமைப்பயனேயும் அடையலாம்.

அசபாமந்திரத்தின் பயனுவது:- மற்ருேர் உடலிலே புகுந்து இன்பம் அடையலாம்; பெண்களும் விரும்பி உடன் வருவார்கள். ஆசாபாசங்களும் விலகி நிற்கும். அசபாமந்திரத்தை மானசிகமாக எண்ணுயிரம் உரு ஜபித்தால் சூக்குமமான பிரமரந்திரத்தைத் தரிசிக்கலாம்; அதோடு சூக்கும கன்மங்களேயும் கெடுக்கலாம்; அதனுல் சிவானந்தம் விளேயும்.

ஆனந்தம் பிறக்கும் இடங்களாவன:- ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் ஐந்தும் ஆகும். அம், ஹ்ரீம், ஹம், க்ஷம், ஹாம் என்னும் இவ்வைந்தும் ஆனந்தத்துள் சிறந்த பேரானந்தமாகும்.

உயிர்மேனி 'ஹம்'; இறைமேனி 'ஸ:'. இம்மந்திரங்களே 'ஸோஹம் ஸோஹம்' என்று ஜபிக்க, பசுபோதம் கெட்டுப் பதிபோதம் மிகுந்து பொருந்துவதால், சீவத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெறுதலாகிய விகாரம் பெறும். அம்மேனி இரண்டும் ஊ, ஆ, ஈ, ஏ, ஓ என்னும் திருவைந்தெழுத்தின் பீஜங்களாம்.

அவையே ஈ, ஒ, ஊ, ஆ, ஏ என மேனியாகித் திருக்கூத்தாம்.

இறைவனே யாவும் யாவருமாக இருப்பதால், அவன் மாணிக்கக்கூத்தாட அனைத்தும் ஆடுவனவாம்.

2. திருவம்பலச்சக்கரம்

(914—1002)

பன்னிரண்டு கோடுகளைக் குறுக்கும் நெடுக்குமாகக் கீறினால் நூற்றிருபத்தொரு அறைகள் அமையும். இதுவே திருவம்பலச்சக்கரமாம். இச்சக்கரத்தின் நடுமனையில் சிவன் எழுந்தருளி இருப்பான். சிவம் பொருந்திவாழும் இடமாவது, தனக்குரிய எழுத்தாகிய 'சி' காரமாகும். ஏனைய வ-ய-ந-ம என்னும் நான்கு எழுத்துக்களும்சேர்ந்து 'சிவயநம' என்றாகும். அதுவே இறைவன் திருநாமமாகிய பஞ்சாட்சரமாம். 'அரகர' என்று கூறினால் அமரராவதுடன் முத்திப்பேறும் அடையலாம்.

அன்பு தங்கிய இதயத்தாமரையில் உமையுடன் சிவபிரான் எழுந்தருளி இருப்பதன் காரணத்தை எவரும் அறியவில்லை. ரேசக எழுத்து 'ஹம்', பூரக எழுத்து 'ஸ:' ஆக இவ்விரண்டெழுத்துக்களையும் பூரகத்தில் வைப்பவர்கள் உயிரைக் காக்கவல்லவர்கள் ஆவார்கள்.

தூல சூக்கும பஞ்சாக்கரங்களையே இறைவன் ஆலயமாகக்கொண்டு எழுந்தருளியிருப்பவன். திருவம்பலச்சக்கரத்துள் மந்திரபுருஷ வடிவில் கூத்தனையும், தாரக பஞ்சாக்கரமான 'ஓம் நமசிவய' என்பதையும் காணலாம்.

'சி' காரம் முதலாக 'சி' காரம் ஈருக மாறும்முறை யாவது:- 'சிவாயநம, மசிவாயந, நமசிவாய, யநமசிவா, வாயநமசி'. இப்படி இருபத்தைந்து அறைகளுள் அட்சரங்களை மாறி அமைக்கலாம்.

அறைக்கு இரண்டெழுத்துக்களாக அகாரம்முதல் ளகாரம் வரையிலும் உள்ள ஐம்பது எழுத்துக்களையும் அடைத்து, க்ஷகாரத்தைப் பிரணவவட்டத்திலமைந்த மகாரத்தோடும் சேர்க்கவேண்டும். பிரணவத்துக்கு மேல் கீறப்படும் மூன்று வட்டங்களுள், வெளிவட்டத்தில் 'ஹர ஹர' என்றும், அதற்கு அடுத்துள்ள உள் வட்டத்தில் 'ஹரி ஹ்ரி' என்றும், அவ்வட்டத்திற்கு அடுத்துள்ள வட்டத்தில் 'ஸோஹம்' என்றும் எழுத வேண்டும்.

இருபத்தைந்து அறைகளாகக் கீறப்பட்ட ரேகைகளில் சூலங்களை அமைத்து, சூலங்களின் நுனியில் சத்தி எழுத்தாகிய 'ஹ்ரீம்' என்ற எழுத்தையும் எழுத வேண்டும். பின், அச்சூலங்களைச்சுற்றி 'ஓ' என்ற எழுத்தை வளைத்து, அந்தச் சூலங்களுக்கு மத்தியில் பஞ்சாட்சரத்தையும் எழுதவேண்டும். இதுவே, பரசிவத்தின் நிலைக்களமாகும். அப்பஞ்சாட்சரமே அகார, இகார, உகார, எகார, ஒகாரமாகிய எழுத்துக்களாம். இதுவே இறைவன் திருநாமம் ஆகும்.

காற்று, நீர், தீ, மண், விண் ஆகிய ஐம்பூதங்களுக்கும் உரியனவாக 'யம், வம், ரம், லம், ஹம்' என்னும் பீஜங்களும், முயலும் எழுத்துக்கு முன்னுக இருந்தன. அதாவது:- 'சிவயநம' என்பதற்கு முன் 'ஹம்' என்னும் ஆகாயபீஜமும், 'மசிவாயந' என்பதற்குமுன் வாயு

பீஜமாகிய 'யம்' என்பதும், 'நமசிவய' என்பதன்முன் அக்கினி பீஜமாகிய 'ரம்' என்பதும், 'யநமவசி' என்ப தன்முன் பிருதிவி பீஜமாகிய 'லம்' என்பதும், 'வய நமசி' என்பதன்முன் அப்புபீஜமாகிய 'வம்' என்பதும் சேர்க்கவேண்டும் என்பதாம்.

'ஓம் ஸௌம் ஸௌ: சிவாயநம' என்று ஜபித்தால் மலங்கள் அகலும். சக்தி பீஜமாகிய 'ஹ்ரீம்' என்பத னுள் இறைவன் எழுந்தருளியிருக்கின்றான்; சிவபீஜ மாகிய 'ஸௌ:' என்பதனுள் இறைவி எழுந்தருளி யிருக்கிறாள். அப்படி ஒருவருள் ஒருவராகப் பொருந்தி யிருப்பதைப் புண்ணியசீலர்கள், அப்பரம்பொருளை அறிந்தால் கடைத்தேறுவார்கள்.

'அ'கார எழுத்தைப் பீடமாக அமைத்து, அதன் மேல் 'ஹர' என்பதை வைத்து, அதற்குமேல் 'இ'காரம் இட்டால் அது இலிங்கமாக அமையும், அகாரத்தினைக் கபாலத்தில் பிராணவாயுவுடன் பொருந்தும்படிச் செய் தால், தகராகாயத்தில் பிரணவ வடிவமாகச் சுடர்க் கொழுந்தாய் விளங்கும் சிவம் வெளிப்படும்.

அகரத்துள்ளும் சகரத்துள்ளும் எல்லாம் அடங்கி யுள்ளது. இவ்விரண்டினுள் எல்லாம் கலந்திருப்பதை அறியும் ஞானிகளில்லை; அதனை அறியக்கூடிய பக்கு வர்களுக்கு, சவ்வும் (சௌம் என்பதில் சத்தியும்) சதா சிவமும் இருப்பது வெளிப்படும்.

இறைவன், பஞ்சாட்சர வடிவமாக அமர்ந்திருந்த னன். பஞ்சாக்கரமும் ஐந்தெழுத்தாலேயே அமைந்துள் ளது. ஸ்ரீ பஞ்சாட்சரமே சிவனது திருமேனியாகும்; கூத்தப்பிரானின் பஞ்சாட்சரத்தால் அடைக்கப்பட்ட

யந்திரமும் அவனது சொரூபமாகும். ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் முதலெழுத்தாகிய 'சி' என்பதை ஓதியவர்கள், அப்பிரானோடு பிரிவில்லாமல் ஒன்றியிருப்பார்கள்.

பிரணவத்தியானத்தால் சிவபிரானை அறிந்து உய்யலாம். குண்டலினி தரிசனமே சகஸ்ரார தரிசனமாக வளரும். சிவபிரான் ஒளிவடிவாயும், வேதமாயும், மறையவனாயும் நிற்பன். இறைவனால் கொடுக்கப்பட்ட இப்பிறவியிலேயே சிவமாந்தன்மையை அடைய வேண்டும்.

இறைவனது இரண்டு திருவடிகளும் 'ந'காரமாகும்; 'ம'காரம் நாபிச்சுழியாகும்; 'சி'காரம் இரண்டு தோள்களாகும்; 'வ'காரம் வாயாகும்; 'ய'காரம் திருமுடியாகும். இதுவே, இறைவனது மந்திரத் திருமேனியாம்.

விரிவான இம்மந்திரங்கள், எல்லா உயிர்களுக்கும் வரந்தருவனவாகும்; பிறவியைப் போக்கும். 'ஓம்' என்பதை அன்புடன் ஜபித்தால் திருவருட் சத்தி கைகூடும். 'ஓம், நம், அம்' என்று உச்சரித்து அநாகத சிவத்தைத் தரிசித்தவர்கள், தில்லை நடனசபையைக் கண்டவர்கள் ஆவார்கள்.

பஞ்சாக்கரத்துள் நடுவாக விளங்குவது 'ய'காரமாகும். இதனை 'யநவசிம' என்றுபார்க்கில், 'மயவநசி, சியநமவ, வசிமயந' என்று நின்று, மேலாம் நிலையை எய்துவிக்கும். பஞ்சாக்கரமே பூதங்களும் வண்ணங்களுமாகப் பொருந்தி நின்றன. அவ்வண்ணங்களுக்குள்ளே இறைவன் தோன்றுவான். ஐந்தெழுத்தை

ஓதியே, நந்தியெம்பெருமான் திருக்கயிலையில் காவல் தலைமை பூணும் அகம்படித் தொழில்பெற்ருர்.

இருபத்தைந்து அறைகள்கொண்ட இச்சக்கரத் துள்ளே, பல நன்மைகள் விளையும்; ஐவகைத்திரு மேனிகளும் பஞ்சாட்சரங்களும் திருநடனங்களும் அடங்கியுள்ளன.

'ஓம் நமசிவாய' என்று இடகலை] பிங்கலைகளோடு கூடி ஜபித்தும், 'ஓம் சிவாயநம' என்று தியானித்தும் இருந்தால் பிரணவநாதனுகிய இறைவன் மகிழ்ச்சி யுடன் நம்முள்ளே நிற்பன். ஆறு ஆதாரங்களுக்கும் அப்பால் உள்ள இடத்தே விளங்கும் அகாரப்பொரு ளாகிய சிவமே ஆன்மாவினது ஆணவமலக்களிம்பைப் போக்கி, பொன்போலச்செய்யும் குளிகையாகும்.

அகார உகார மகர்ரங்களோடு கூடின பிரணவத் தியானமானது சொல்லொணுப் பெரும் பயன்களை அளிக்கும். பிரணவத்தியானம் உடையவர்களுக்குப் பிறப்பே கிடையாது. ஓங்காரமாகிய பிரணவமே ஐம் பத்தொரு அட்சரங்களாகும். பஞ்சாட்சரமே சிவமூல மந்திரமாகும். அதனை ஜபித்தால் வீடுபேறடையலாம். மூலாதாரத்தில் உள்ள பிரணவத்தினிடமாக இறை வனும் இறைவியும் விளங்குவார்கள். அநாதியான 'ஔ, ஸௌ' என்னும் இவ்விரண்டும் சிவமந்திரங்களா கும். பிரணவத்தை அந்தணர்களும் அறியமாட்டார் கள். பிரணவத்தியானத்தால் கபாலமாகிய ஆகாயத் திலிருந்து அமுதம் சுரக்கும்.

'அ'முதல் 'அः'வரை உயிரெழுத்துக்கள் பதினுறு; 'க' முதல் 'க்ஷ' வரை உள்ள மெய்யெழுத்துக்கள்

முப்பத்துநான்கு; ஆக ஐம்பது; இத்துடன் பிரணவம் ஒன்று; ஆக ஐம்பத்தொரு அட்சரங்களும் ஆறு ஆதாரங்களில் நிற்பனவாம். ஐம்பத்தொரு அட்சரங்களுக்கும் திருவருட்சத்தியே தலைவியாவாள். அவள் பதினாறு கலைகளாக விளங்குபவள். ஐம்பத்தோரட்சரங்களும் அம்மையின் வடிவமாக அமைக்கப்படும்.

இறைவன் ஐந்தெழுத்துக்களால் பஞ்சபூதங்களையும் பல யோனிகளையும் படைத்தனன்; அவ்வைந்து எழுத்துக்களாலேயே உலகத்தையும் காத்தான். அவ்வெழுத்துக்களுள்ளே ஒன்றாயும் அமர்ந்தான். பஞ்சாட்சரத்தை இடைவிடாது ஜபிப்பவர்கள், போகமோட்சங்களைப் பெறுவார்கள். பஞ்சாட்சரத் திருமேனி கொண்ட சிவன், மருந்து முதலிய எல்லாமாகவும், வேதமாகவும், பண்ணுடன்கூடிய பாடலாகவும் இருப்பான். பஞ்சாக்கரப் பெருமையினாலேதான், இறைவன் கருணை வழங்குவதும், உலகம் மாற்றமும் அழிவும் இல்லாமலிருப்பதும், ஆலயங்கள் அமைவதுமாகும்.

'ந'ம்முதலாக ஓதும் பஞ்சாட்சரத்துள் நான்காவது எழுத்தாகிய 'வ்'காரத்தை ஜபிக்கின்றவர்களுக்கு, அவ் 'வ'காரமே தாரகமாய் இருந்து நன்மார்க்கத்தைக் காட்டுவதாகும். பஞ்சாட்சரத்தை ஜபிக்கில் பராசத்தியின் அருள்பெறலாம்.

அகாரமாகிய ஆன்மாவும், (ஆன்மதத்துவம் 24) உகாரமாகிய பதியும் (சிவதத்துவம் 5) மகாரமாகிய பாசமும் (வித்தியாதத்துவம் 7) ஆக வருகின்ற தத்துவங்கள் முப்பத்தாறைப்போல, பஞ்சாட்சரத்துள் 'சி' காரம் சிவமாகவும், 'வ'காரம் அவனுடைய திருமேனி

யாகவும், 'ய' காரம் ஆன்மாவாகவும் விளங்கும். 'ஓம் நமசிவாய' என்று ஜபித்தால் இறைவன், இதயத்தில் நிலையாக வீற்றிருப்பான்.

சிவசத்திகள் இருப்பிடத்தை அறியவேண்டுமானால், பஞ்சாக்கரத்தைத் துணையாகக்கொண்டு பஞ்சேந்திரியங்களையும் அடக்கல்வேண்டும்.

ஐந்து கலைகளிலிருந்தும் தோன்றிய அகாரம் முதலிய அட்சரங்களில் நகாரம் முதலாக மாற்றி, சிவத்தை மூலாதாரத்தில் தியானித்துப் பரையோடு கூடுகின்றவர்களுக்கு, கர்மங்கள் - கிரியைகள் வேண்டியதில்லை. அதாவது, ஞானம் பெற்ற பின்பு அதற்கு வாயிலான கிரியைகள் தேவையில்லை என்பதாம்.

எப்போதும் பற்றுக்கோடாவது பஞ்சாக்கரமே ஆகும். 'சிவாய' என்னும் மந்திரத்துடன், அவற்றையே திரும்பச் சேர்த்து 'சிவாயசிவ' என்று ஓத, சிவசத்திகளோடு 'ய'காரமாகிய ஆன்மாவும் சிவனுருவம்பெறும். ஆதலால், 'சிவாயசிவ' என்பதே மேலானமந்திரமாகும்.

நகாரம் முதலாகப் பஞ்சாட்சரத்தினை ஓதினால் நல்வினைப் போகங்கள் விளையும்; சிகாரம் முதலாகப் பஞ்சாட்சரத்தினை ஓதினால் போகசிவமாகிய சதாசிவம் கருணைபுரியும். நகாரம் முதலாய 'நமய' என்பது உயிராகும்; சிகாரம் முதலாய 'சிவ' என்பது பரம் ஆகும். இவை வீடுபேற்றை அளிப்பனவாம்.

திருவடி ஞானத்தில் ஈடுபட்டால், விஷயசுகத்தில் இழுத்துச் செல்லும் பொறிகளும் செம்மையாகத் திருந்தும். (விஷயசுகத்தில் செல்லாது என்பதாம்) சிவம், சத்தி, உயிர் இவற்றை அறிதலே நல்வழியாகும்.

குறுக்கும் நெடுக்குமாக எட்டுக்கோடுகள் வரைந்தால் நாற்பத்தொன்பது அறைகள் அமையும். அவற்றுள் நடு அறையில் சிவ எழுத்தாகிய 'சி'காரத்தை அமைத்து, சுற்றிலும் உள்ள நாற்பத்தெட்டு அறைகளிலும் மீதியுள்ள அஞ்செழுத்துக்களையும் அடைத்து ஜபித்தல்வேண்டும். அந்தச் சக்கரத்தைச் சுற்றிலும் ஐயனார், சட்டநாதர், பிள்ளையார், முருகன், துவாரபாலகர்கள், விந்து, நாதம், சிவகணநாதர்கள் ஆகிய இவர்களைப் பொருந்தவைப்பது சிவசக்கரமாகும். இச் சிவசக்கரம், பெரிய தவத்தைச் செய்து அடையும் பலனை அளிக்கும். 'ஓம் ஸௌம், ஸௌ: சிவயநம' என்று ஜபித்தல்வேண்டும். இச்சக்கரத்தை வெளியில் பூஜிப்பதால் பயனில்லை; தியானத்தாலேயே இச்சக்கரம் பயனளிப்பதாகும்.

தேவர்களும் சிவமந்திரத்தை ஜபித்து சிவத்துடன் கலந்து நின்றார்கள். பிரணவத்துடன் கூடின பஞ்சாட்சரத்தாலே சமயபேதங்கள் உண்டாயின. ஆதலால், அப்பிரணவத்தைப் பிரித்துணர வல்லவர்கள் பிறவியை அறுப்பார்கள்.

(குறுக்கும் நெடுக்குமாக (987-வது மந்திரத்தில் கூறியபடி) எட்டுக்கோடுகள் வரைய நாற்பத்தொன்பது அறைகள் அமையும். அதன் நடுவிலிட்ட எழுத்தையே முதலாகக்கொண்டு எட்டுத் திக்கிலும் பஞ்சாட்சரம் தோன்ற அடைத்து ஜபிக்கில் உமாபதி அருள்புரிவர். இது, உமாபதிச் சக்கரமாகும்.

'சிவய' என உணர்கின்றவரது உச்சியில் சிவம் பிரகாசிக்கும். அரசம்பலகைமீது, 'ம' காரம் முதலாக மாறியிட்டு, பனையோலையிலும் அவ்விதமே அடைத்து,

தேன்மெழுகை அவ்வோலையுள்பூசி, தீபச்சுடரில் காய்ச்சினுல் தம்பனமாகும், ('ம' காரம் முதல் மாறியிடுதலாவது :- 'மசிவயந, நமசிவய, யநமசிவ, வயநமசி, சிவயநம' என்பதாம்.)

கொன்றைப்பலகையின்மீது, தெற்குத்திசையில் மாரணபஞ்சாக்கரமான 'நசிவயம' என்பதை எழுதி, ஏட்டில் 'ம' காரத்தைமாத்திரம் எழுதி சுக்கு, மிளகு, கடுகு, உள்ளி, வெள்ளுள்ளி என்னும் ஐங்காயத்தைப் பூசி அடுப்பில் தலைகீழாகப் புதைத்தால், மயங்க வைத்தலான மோகனசக்தி உண்டாம்.

வடமேற்கு மூலையில் ஐயனுரது கோயிலில், புரசம் பலகையில் வெப்பமுள்ள கரியதகட்டில் விஷத்தைப் பூசி, ஓம் என்பதிலுள்ள 'ம்' என்பதை விட்டு 'ஓ' என்பதைமட்டும் எழுதிப்பூசிப்பது உச்சாடன முறையாகும். அவ்விதம் வைத்தபிறகு, மேற்கொண்டு மாரணம் செய்யவிரும்பினுல், பச்சை ஓலையில் பஞ்சகாயத்தைப்பூசி, அக்கினி மூலையிலே நடுப்பகலில் சுடுகாட்டிலே முக்கோணச் சக்கரம் அமைத்து அந்தச் சக்கரத்தின்மேல் அவ்வோலையை வைத்து ஜபித்தல் வேண்டும்.

அரிதாரம் பூசிய ஏட்டின்மேலே, அகார உகாரங்களை எழுதி, வசியத்திற்குரியதான வில்வப்பலகையின் மீது அவ்வோலையை வைத்து, எண்பதினுயிரம் உரு ஜபம் செய்யவேண்டும். இது வசிய முறையாகும்.

ஏட்டில் 'ய'காரத்தை மாறி எழுதி, வியாழக்கிழமையில் வெண்பொடியை அவ்வேட்டில் பூசி, வெண்ணுவல் பலகையின்மீது வைத்து, மேற்குத்திசையில்

இருந்துகொண்டு 'யம்' என்று எண்ணுயிரம் உரு ஜபிப்பது ஆகர்ஷண முறையாகும்.

3. அருச்சனை

(1003—1014)

தாமரை, நீலோத்பலம், செங்கழுநீர், நெய்தல்பூ, கமுகம்பூ, குருக்கத்தி, மந்தாரம், தும்பை, மகிழம்பூ, சுரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி, ஆகிய இம்மலர்கள் இறைவனை - யந்திரத்தை அருச்சித் தற்குரியனவாம்.

புனுகு, கஸ்தூரி முதலிய கலவைச்சாந்துடன் கூடிய சந்தனம், குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கார கிற்குழம்பு இவற்றைப் பன்னீர்விட்டுக் குழைத்துச் சக்கரத்திற்குச் சாத்தி அன்புடன் அருச்சிக்கவேண்டும். பின், அமுதத்தை நிவேதித்துப் பொன்விளக்கேற்றி வைத்து, திசைதோறும் தூபதீபம் கொடுத்து வழிபடு கின்றவர்கள், இம்மை இன்பங்களுடன் முத்தியும் பெறுவார்கள். மற்றும், எல்லாப்பேறுகளும் தாமே வந்தடையும். இந்திரன் செல்வமும் அட்டமாசித்தி களும் உண்டாம்.

சிவபிரானுக்கு அடிமைப்பட்டவர்கள் கிரியை களை விரும்பமாட்டார்கள். சிவயோகியரும் அன்பில் ஈடுபட்டவர்களும் அக்கர்மத்தை விரும்பார்கள். அக முக நோக்காலே ஞானவாயிலாகச் சிவனையறியலாம்.

ஆன்மா, இருளைச்சார்ந்து இருளாயும், ஒளியைச் சார்ந்து ஒளியாயும் இருக்கும் இருதன்மையுடைய தாகும். இதனுல், சிதசத்தாகிய ஆன்மா, இருளால்

அறியாமையையும், வெளியால் - ஒளியால் அருளையும் பொருந்துவதாம். மேலும், மருளிலிருந்து நீங்காமையினால் அதனுள் அழுந்தி மயங்கி நிற்கும். ஆதலால், மருளைச் சிதைத்தோரே அடியார் ஆவார்.

ஓங்காரம் மூலாதாரத்தும், வகாரம் கழுத்தினிடமாகவும், நகாரம் நெற்றியினிடமாகவும் பொருந்திநிற்கும். விந்துவும் நாதமும் நெற்றிக்குமேல் ஆஞ்ஞையிலும் அதற்குமேலும் விளங்குவனவாம்.

நகாரம் திரோதானமாயை: மகாரம் மலமாகும். இவ்விரண்டையுமே விடாதுபற்றி உயிர்கள் வாழ்வனவாம். அப்பற்றை விட்டு, யகாரமாகிய உயிர், 'சிவ' என்பதைச் சார்ந்து தியானித்தால் சித்தியாம்; சிவமான பதித்தன்மையும் விளையும்.

திருவடியுணர்வாகிய தெளிவு வந்தபோது சிவ அமுதம் சுரக்கும்; ஞானேயமும் உண்டாகும். அந்த ஞானம், அகாரமாகிய சிவத்தினிடமிருந்து பெறுவதாகும். தானும் சிவமும் இரண்டான நிலையை எய்தினல் சிதம்பரநாதன் காட்சியருளுவான். ஒன்றான நிலையில் காண்பான் இல்லையாதலால் அனுபவம் சித்தியாது. அதாவது :- இறைவனது வியாபகத்துள் அடங்கி, ஆன்மா சிவமாக இருத்தலால் அனுபவம் சித்திக்காது என்பதாம்.

4. நவகுண்டம்

(1015—1044)

நவகுண்டத்தினிடத்து, சிவமாகிய பேரொளிப் பிழம்பு தோன்றும். அவ்வனல் ஓம்புதலால் எல்லா

நன்மைகளும் உண்டாகும். முக்கோணமும் நாற் கோணமும் ஐங்கோணமும் அறுகோணமும் குண்ட வகைகளாம்.

உயிர்க்குள்ளே ஆறு ஆதாரங்களிலும் ஆங்காங் குள்ள மூர்த்திகளாகத் தோன்றும் சிவனைத் தியானித் தால், அச்சிவம் ஜோதியாய்த்தோன்றும். அவ்வண்ணம் ஜோதியாக விளங்குவதை அறிகின்றவர்களுக்கு வினை கள் இல்லையாம்.

நவகுண்டத்தை யோகமார்க்கத்தில் வைத்து உணரும்போது, மூலாதாரத்தில் மூன்று கோணங்களில் உள்ள குண்டத்தில் விளங்கும் அகார, உகார, மகார, பிந்து, நாதம் ஆகிய ஐந்தும் அகமாயும் புறமாயும் நிற்கும்; பன்னிரண்டு கலைகளும் அங்கு எழும். அதனைக் காண்பவர்களுக்குச் சிவஜோதி தோன்றும். குண்டத்தி லிருக்கும் அக்கினியே சிவலிங்கமாம். பிறைமதிக் குண்டத்தில் இறைவனும் இறைவியும் சுடர்விட்டு விளங்குவர். அச்சுடரே ஆனந்தக்கூத்தனின் திருவுரு வம் ஆகும். சிவபிரானே ஐந்தொழிலைச் செய்து அனைவரையும் அவ்வத்தொழிலில் அமர்த்துபவன் ஆவன்.

ஜோதிவடிவினனான சிவனிடத்து ஆறு பொறிக ளாக ஷண்முகம் தோன்றியதால், கந்தனாக இறைவன் கலந்து எழுந்தருளினான். அதனால், கந்தன் சிவபிரா னுக்கு மைந்தன்முறை ஆவான்.

பிராணவாயுவை அடக்கினால் தேவராக விளங்க லாம். உடலொளியாக உண்டானசுடரே உயிரொளி யாகவும் உபதேச ஒளியாகவும் மெய்யொளியாகவும்

நிற்கும். நவகுண்டத்தினிடத்தே ஆறு ஆதாரங்களும் பிரணவமும் முப்பத்தாறு தத்துவங்களும் கலந்து தோன்றும்.

சிவாக்கினியானது மூன்று பாதங்கள், ஏழு கைகள் கடுத்த முகம் இரண்டு, ஆறு கண்கள், ஏழு நாக்குகள், கொம்புகள் ஏழு ஆகிய இந்த உருவத்துடன் குண்டத்தை இடமாகக்கொண்டு எழுவதாகும். அழிவற்றதாகிய அக்கினிக்கு இருப்பிடமும், அதனையளந்து வரையறை செய்வாரும் இல்லை. அவ்வக்கினியைப் பத்தின்(ய)வடிவாகிய 'ய'காரமாக அறிதல்வேண்டும்.

சதாசிவமூர்த்தியானவர், அம்மையப்பராக விளங்கும்போது, அவரைவிட்டு அகலாத அம்மையும் உடனிருப்பவள் ஆதலால் கைகள் இருபதும், முகம் பத்தும், கண் முப்பதும், செவி இருபதும், திருமுடி இருபதும், திருவடி இரண்டும் ஆக விளங்குவார்.

சிவபேதங்கள் அனைத்தும் குண்டத்தே இருத்தலால், குண்டத்து அக்கினியைக் கூடுதலே முத்தியாம்.

இறைவன், கலைஞானங்கள் முழுவதையும் ஓதி, அதில் மயங்காமல் அவற்றைக்கடந்து நிற்பாரது கருத்துள்ளே விளங்குவான்.

நிவிருத்தி, பிரதிட்டை, வித்யை, சாந்தி, சாந்தியாதீதை என்னும் ஐந்துகலைகளும் சேர்ந்துள்ளனவே ஓமகுண்டமாகும். அங்கே திசை விளக்கமும் பஞ்சபூதங்களின் உண்மையும் புலனுகும்.

உலகேழையும் உய்வித்த ஒப்பற்ற முதல்வனைத் தியானித்தால் அம்முதல்வனுடன் இரண்டறக் கலந்திருக்கலாம். ஓமகுண்டத்தில் தியானிக்கப்படுகின்ற

இறைவனது திருவுருவமாவது:- சிவந்த முகம், மூன்று கண்கள், மகாரம்போன்ற மூக்கு, மயிர்முடி, இரு பாதங்கள், இருகரங்கள் ஆகும். உத்தமனாகிய சிவன் பேரொளியாயும் இளைஞனாயும் விளங்குவான். அவன் சத்திமானாக அங்கே விளங்க அவனுடன் பராசத்தியும் தழைத்தாள்.

அறுகோணத்தில் அக்கினிகாரியம் செய்தவர்கள் பெருஞ்செல்வம் பெறுவர். அக்கினியை வழிபட்டவர்கள் உலகை ஆளுவார்கள். எங்கும் நிறைந்த அக்கினியை உடலுக்குள்ளே கண்டறிந்தவர்கள் காய கற்பம் பெறுவர். நவகுண்டத்தைத் தமக்குள்ளே கண்டயோகி, உலகம் முழுவதையும் அறிவான்.

நாற்கோணம், முக்கோணம், வில்நுனி, வட்டம், அறுகோணம், அட்டகோணம், பத்மம், யோனி, வட்டம் ஆகிய ஒன்பதும் இறைவனோடும் ஒன்பது கோணங்களில் அமைந்த குண்டங்களாகும்.

5. சத்திபேதம் – திரிபுரைச்சக்கரம்

(1045—1074)

திரிபுரையானவள் சுத்த மாயையாயும் அசுத்த மாயையாயும், விந்துவாயும், வைகரி வாக்காயும், ஓம் என்னும் பிரணவமாயும், உள்ளொளியாயும், நம; ஸ்வதா முதலான ஏழுகோடி மந்திரங்களாயும், அவற்றையெல்லாம் கடந்து அல்லவாயும் விளங்குபவள் ஆவாள்.

பராசத்தியானவள் திரிபுரை முதலாக மனோன்மணி யீறான பலவடிவாக நின்று அருள்வழங்குவாள்;

நாதநாதாந்தங்களை அருளுவாள்; பரவிந்தாக இருந்து பார்முதலான அண்டங்களைக் கொடுப்பாள். அறிவையும்தந்து ஆட்கொள்ளுவாள். மேலும், மூவுருவாயும், மூவுருவும் ஒருருவாயும், பொன் செம்மை வெண்மை என்னும் மூந்நிறமாயும் இருப்பவள்; கல்வி, போகம், மோட்சம் என்னும் முப்பயன்களையும் அளிப்பவள் ஆவாள்.

தியானத்திற்குரியவளான இராஜராஜேஸ்வரியானவள் காதில் குண்டலம், திருவடியில் சிலம்பு, செம் பட்டுடை, கொங்கையில் கச்சு, கைகளில் மலரம்பு, கரும்புவில், அங்குசம், பாசம், திருமுடியில் கிரீடம் ஆகிய இவைகளுடன் விளங்குவாள்.

சண்டிகாதேவியானவள் குண்டலங்களை இரண்டு காதிலும் அணிந்தவளாயும், வில்லையொத்த புருவத் தவளாயும், வரதஹஸ்தத்துடன் கருணைசெய்யும் சாந்த ஸ்வரூபியாயும், சந்திரனைச்சூடியவளாயுமாய் உலகங்களைக் காத்துநின்றாள்.

திரிபுரை புராதனி ஆகிய இவர்களும், எல்லா உயிர்களையும் மயக்குகின்றவளும், தாயாக இருப்பவளும், மயிர் முடியினையுடையவளும், கண்களால் அனைவரையும் ஆகர்ஷிப்பவளும் ஆகிய கஜலட்சுமியும் சுத்தமான இருதயதாமரையில் வீற்றிருப்பவர்கள் ஆவர்.

சுகத்தின் உற்பத்திக்குக் காரணமாயுள்ளவளும், அனைவரையும் ஆட்கொள்பவளும், பராசக்தியாயும் ஆக உள்ளவள் ஞானஸ்வரூபிணியாவாள். சத்தியே எல்லாமாய் இருப்பவள்.

பராசத்தியே ஆனந்த வடிவினள்; ஞானஸ்வரூபிணி; நாம் செய்யும் எல்லாக்கர்மங்களும் அவளது இச்சையின்வழியே நடப்பன; சிவனும் அவளிடம் எழுந்தருளியிருப்பவரே என்று ஞானிகள் கூறுவார்கள். சிவம் எங்குளதோ அங்கு சத்தியும் இருப்பாள்; உயிர்க்கு உயிராய் இருந்து காப்பவள்; ஞானுகாயத்தின் உள்ளாக நின்றும், அப்பாலுமாகவும் இருப்பவள் ஆவாள்.

பராசத்தியானவள் ஆன்மாக்கட்குப் போகத்தையூட்டிப் பரிபாகத்தையும் விளைவித்துநிற்பாள். ஞானமென்னும் கொடிக்குக் கொழுகொம்பாய் நிற்பாள். ஸ்ரீவித்யையே எல்லாவற்றிற்கும் தலைவியாவாள். சத்தியானவள், சிவத்துடன் ஒன்றி ஒன்ருகவே நிற்பாள். சத்தியின் வாயிலாகவே அட்டமாசித்திகள் பெறலாம்.

சத்தியானவள், சிவத்துடன் மூன்று மண்டலங்களிலும் நிலையாக நிற்பவள்; அவள், உண்டு இல்லை என நின்றதையும், உருவங்கொள்ள நின்றதையும், தில்லைமன்றுள் நின்றதையும் யாரும் காணவில்லை.

எட்டினைக் கையில் ஏந்தியவளும், முக்கண்ணியும், பளிங்கு போன்றதான திருமேனியளும், வெண்தாமரையை இடமாகக் கொண்டவளும், வேதம் ஓதுபவளுமாகிய கலைமகளைத் தியானிக்கவேண்டும்.

தேவியை இருதயத்தில்வைத்துப் பலகாலும் தியானித்தால் ஞானவொளி மிகும்; முக்காலமும் விளங்கும். அம்மையின் அருள்பெற்ற அனுபவஞானிகள் சொல்வதைக் கேட்டு அதன்வழியே நின்ருல் பேரின்பப் பொருளைப் பெறலாம். அம்மையானவள் அன்பரது உள்ளத்திலே சிறந்து விளங்குவாள்.

சத்தியே அயன் முதலான ஐவரையும் படைத்து, தனது எழுத்தாகிய 'ஹ்ரீம்' என்ற பீஜத்தில் எழுந் தருளியிருப்பாள். சத்தியே முழுமுதல் தலைவியுமாவள். அவளது பீஜங்கள் (ஷோடதசாட்சரங்கள்) இருமை இன்பங்களைத்தரும்.

6. வயிரவி மந்திரம்

(1075—1124)

'ஓம், ஐம், ஔ: ஆதிபைரவிணே நம:' என்பதே வயிரவி மந்திரமாகும். அதனுள், 'ஐம்' என்பது வயிரவி பீஜமாகும்.

பிரமன் முதலிய மூவரும் அருளன்னையினிடத்தே அடங்குவர். வயிரவியைத் தியானிக்கின்றவர்கள் சிவ மேயாவர். வயிரவியானவள், ஞானத்தை அளித்துக் காத்தருளுவாள்; அவள், சிவத்திற்கு அங்கமாகவும் இருப்பவள்.

தேவியின் திருமேனிச் சிறப்பாவது:- மெல்லியள்; கொடிபோன்றவள்; கலைஞான வடிவினள்; முருக்கம் பூப்போன்றசிவந்தமேனியள்; நீலக்கல்போன்ற பிரகாச முடையவள்; பன்னிறமணிகள் போன்ற ஆடை யுடையவள்; சந்திர ஒளியையொத்த திருமுடியினை யுடையவள்; காதில் இரத்தின குண்டலங்களையுடைய வள்; மான்கண்போன்ற கண்களையுடையவள்; சூரிய சந்திரர்களைத் தமது இருகண்களாக உடையவள்; பொன்னையும் இரத்தினத்தையும் ஒத்த நிறமுடைய வள். அப்படிப்பட்ட தேவியானவள் எங்கும் நிறைந் துள்ளாள்.

எட்டிதழ்த் தாமரைக்குள்ளே சத்தியானவள் எழுந்தருளியுள்ளாள். அஷ்ட கன்னிகையர்களும், கலை முதலான அறுபத்துநான்கு பெண்களும் அந்தச் சத்தியைச் சுற்றிநின்று தரிசிக்கின்றனர்.

சத்தியானவள் சிலம்பு, வளையல், சங்கு, சக்கரம் இவற்றைத் தரித்தவள்; மேலும், எல்லா அண்டங்களையும் துன்பம் வராமல் காக்கும் திருவருளுடையாள்; மனத்தாமரையில் வைத்துப் பூசிக்கத்தக்கவளும் ஆவாள்.

பலதெய்வங்களும் புடைசூழ, பல ஆபரணங்களை அணிந்து, பிரமன் மால் சிவனுகிய இவர்கள் போற்றத் தோன்றுபவளே உலக காரணியாம். குண்டலினி வடிவாகிய பராசத்தி, மூலத்தினின்று பிராணனோடு பிரமரந்திரம் சென்று அமுததாரையுடன் மீண்டதை அனுபவத்தால் காணவேண்டும்.

இரு சிறுவிரல்களையும் மாறிப்பொருந்தும்படிச் செய்து, மோதிரவிரலை நீட்டி, அதனைச் சிறுவிரலானது பிடிக்கும்படிச்செய்து, நெறித்துப் பொருந்தவைத்துப் பெருவிரல் இரண்டையும் நடுவே செலுத்துதல் யோனி முத்திரையாகும்.

'சிம்' என்று கூறினுல் பிராணவாயுவானது வசப்படும்.

நீலநிறமுடையவளும், இரவில் இயங்குபவளும், தாமே வலியச்சென்று அருள்வழங்குபவளும் ஆகிய வயிரவியானவள், சிவபெருமானின் திருவருட்சத்தி ஆதலால், அவளைப் புகழ்ந்து அன்புசெய்தல்வேண்டும்.

சத்தியே எங்கும் எல்லாமுமாய் நிற்பவள்; அந்தச் சத்தியே ஜக ஜீவ பரமும் ஆவாள். வயிரவியானவள், பலகோடி வடிவங்களைத் தாங்கிநின்றாள்; அறுபத்து நான்குகலைகளையும் சோமசூரியாக்கினிகளையும் படைத்தாள். அம்மையின் அடிபணிந்தால் பிறவியில்லை; பர நாதத்தியானம் செய்பவர்கள்மனத்தில் சத்தியானவள் உறங்குவாள். தமது திருவடியை அடைக்கலம் என்று வணங்குவார்க்கு இன்சொல் அளித்துக் காப்பாள். இறைவி, இறைவனுடன் கலந்தும் நடுநாடியில் விளங்குபவள் ஆவாள்.

அம்மையானவள் பிறவியை அறுத்து ஆட்கொண்டு அருள்செய்வாள். சத்தியும் சிவமும் இருளும் ஒளியும் போல்வர். சத்தியானவள் சிவத்துடன் அபின்னமாய் இருப்பவள்.

வேதமே கலைகட்கெல்லாம் முதன்மையான கலையாகும். தேவியானவள், வேதத்தில் சொல்லப்படும் சாதிபேதங்களும் தத்துவங்களுமாக ஆகியே நிற்பாள்; ஆதலால், அத்தேவியே முதல்வியாவாள்.

திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள அம்மை - பராசத்தியானவள், வினை களைந்து அருள்செய்பவள் ஆவாள். சிவசத்தியானவள், சிவத்திற்கு உருவமாய் நிற்பள்; பாதிமேனியாவள்; பராபரையும் ஆவாள்.

7. பூரணசத்தி

(1125—1154)

உலகத்தோற்ற ஒடுக்கங்கள், சிவபரம்பொருள், ஆண் பெண் வடிவாகிய உயிர்ப்பொருள்கள் ஆகிய

இவைகள் அனைத்தும் சிவசத்தியின் அருளேயாகும். ஆன்மா, சிவம், சத்தி ஆக இம்மூன்றும் கலந்து வேறுபாடற்று எல்லாம் ஒன்றாகப் பரிபூரணம் எய்தினர்.

அம்மையானவள், துன்பக்காலத்தில் காப்பாள்; அப்பன், இன்பக்காலத்து எழுகின்ற அன்பின் வாயிலாகக் காப்பான். சிவ சத்திகளே உண்மைத் தாய் தந்தையர்கள் ஆவார்கள். மன ஒருமைப்பாட்டுடன் அம்மையைத் தியானித்தால் அவளது திருவருளைப் பெறலாம். புருவநடுவே சத்தியானவள் தாண்டவம் செய்யும் இடமாகும். பொறி புலன்களின் வழியைப் பொருந்தாமல் சத்தியின் திருவருளைச் சார்ந்திருந்தால் நிலைத்திருக்கலாம்.

குழந்தையாகிய பாலையைத் தியானித்தால் என்றும் பாலனாகலாம். மாயையாகிற விந்து நாதங்களைக் கடக்க, சதாசிவமாம் பேற்றையும் அப்பாலையானவள் அளிப்பாள்.

பரசிவம், ஞானம் இச்சை கிரியை ஆகிய சத்திகளுடன் மருவிநின்று பஞ்சகிருத்தியங்களைச் செய்வான். பூவும் மணமும் போலச் சிவமும் சத்தியும் பொருந்தி விளங்குவர்.

சிவசத்தியானவள் விந்துநாதங்களாக விரிந்தனள். அச்சத்தி, அகாராதி க்ஷகாராந்தமான எழுத்துவடிவினளாவள். பராசத்தியானவள், புருவநடுவில் தெரியும் தீபத்தொளியுடன் அக்கினியிற் சூடுபோலக் கலந்து விளங்குவள்.

இறைவன் மதிமண்டலத்தே விளங்குவான். இதனை மனத்துள் காண்பவர்கள் ஹடயோக சாதகராவர். பூரணசத்தியானவள், இருநூற்று இருபத்து நான்கு புவனங்களிலும் வசிப்பவள். உலகம், நவ சத்திகளால் காக்கப்படுவதாகும். மூலாதாரத்தினின்று எழுகின்ற சத்தியானவள் எல்லா ஆதாரங்களிலும் பொருந்தியிருப்பாள்.

பார் முதலாக அனைத்தும் சத்தியின் திருவருட் பொலிவேயாகும். அம்மையானவள், சிவத்தோடு இருந்து உயிர்கட்கெல்லாம் உபதேசம் செய்பவள். பராசத்தியானவள், பட்டையும் தோலையும் உடுத்து நிலத்தைக் கடந்துநின்ற பாதங்களை உடையவளாய், எல்லா அண்டங்களையும் கடந்து இறுமாந்துநின்று, முச்சுடர்களையும் ஆபரணங்களாக அணிந்து விராட் சொரூபமாக நிற்பாள்.

சத்தியானவள், கையால் படைத்து விகாரியாகாமல் சங்கற்பமாத்திரையாய்ப் படைத்து நிர்விகாரியாய் நிற்பாள். ஞானம்பெற்றுத் தெளிந்தவர்கள், திருவடிப் பேறு அடைதற்குக் காரணம் சத்திநிபாதமே ஆம் என்பதை உணர்வார்கள்; அவர்களே ஞானிகளும் ஆவார்கள்.

8. ஆதார ஆதேயம்

(1155—1254)

அம்மையப்பரான திருமேனியில் அம்மையைத் தியானித்தால் பிறவி அறும். சிவத்திற்கும் ஆதாரம் சத்தியேயாம். சிவம் சத்தியுள்ளும், சத்தி சிவத்துள்ளும் ஒருபாதியும் விளங்குவதாம். எல்லாவற்றிற்கும்

ஆதாரமாய் நின்ற அம்மையைப் போற்றி நின்றது ஒப்பற்ற சிவம்.

ஆன்மாக்களாகிய நம்மிடம் எழுந்தருளத் திருவுளங்கொண்டும், எல்லா உலகங்களையும் காக்கும் பொருட்டும் இறைவன், இறைவியோடு கலந்து போகியாய் இருந்தான்.

பராசத்தியே நிலம் முதலான பஞ்சபூதங்களைத் தாங்கி ஆகாயமாய் நிற்பவள்; சோமசூரியாக்கினியாகவும், மழையைப் பெய்விக்கும் பெண்ணாகவும் இமயமாகவும் விளங்குபவள். பராசத்தியை உணர்ந்தவர்கள், தேவர்களிலும் மிக மேம்பட்டவர்கள் ஆவார்கள். பராசத்தியானவள் சர்வவியாபியாவாள்.

கன்னியாகிய சத்தியானவள் எழுந்தருளியிருக்கும் மாளிகையானது செந்நிறம் உடையதாகும். அவள் இருப்பிடம் சிரசாகும். அங்கே பதினாறு கலைகளுடன் இருப்பாள். சத்தியானவள், 'யாமள' ஆகமத்தில் விளங்குபவள்.

சத்தி, உலகங்களைத் தோற்றுவிப்பதற்கு முன்பு, பரத்தோடு இணைந்து பராசத்தியாக இருந்தாள். சத்தியும் சிவமும், கலவியும் அதன் பயனும் போன்று விளங்குவர்.

யோகசத்தியின் காற்பக்கம் வடக்கு; தலைப்பக்கம் தெற்கு; நடு வயிறு ஒளி பீடமாகும். சத்தி முனைத்தெழ நாத விந்துக்கள் தோன்றும்.

ஸ்ரீ வித்யாசக்கரமாகிய ஸ்ரீ சக்கரமே பரதேவதையாகும். ஸ்ரீவித்யாமந்திரத்தைஜபிக்க எண்சத்திகளான

வசினி காமேச்வரி முதலானவர்கள் வெளிப்படுவர். அம்மையானவள் அருட்டிருமேனி கொண்டவள். அவளது இருப்பிடமாவது, ஸ்ரீ சக்கரத்தில் விளங்கும் பூமியாகிய 'பூபுரம்' ஆகும்.

பராசத்தி, சிவத்தின் மனைவியாவள்; நாத விந்துக் களைத் தோற்றுவிப்பவள்; சிவத்துடன் ஒன்றிய நிலை யில் எல்லாவற்றிற்கும் பரமகாரிணியானவள்; பழை மைக்கும் பழைமையானவள்; பத்துத் திசைகளையும் உடைமையாகக் கொண்டவள். கூர்மையான கண் களை உடையவளும், விளங்கும் புருவத்தளும், ஏழுல கும் விளங்குபவளும், ஆரியதேவியும், அநங்கியமாக விளங்குபவளும் ஆவள். அப்படிப்பட்ட தேவியைச் சுழுமுனையாகிற புருவமத்தியில் வைத்துத் தியானித் தால் பிராரத்தவினைகளை வெல்லலாம்.

வைகரி முதலான வாக்குகளின் தோற்றமாவது:- இந்துவினின்று உண்டாகும் நாதமானது சூரிய ஒளி போல வந்து, நாக்கினுல் கடையப்பெற்று வெளிப் படும். இதயத்தினின்று எழும் ஒலியானது, கழுத் தினிடமாக உந்தப்படுவதாய், சுத்தமாயையை யீருக வுற்ற சிறப்பினை உடையதாகும். ஒலி உலகு அனைத் திற்கும் விந்துசத்தியே காரணமாகும்.

இறைவியானவள், மதிமண்டலத்து ஆனந்தவடி வினளாக இருந்தாள். சதாசிவர் முதலான ஐவரும் மனோன்மணி முதலான ஐவகைச் சத்திகளும் தம்முட் கலந்து உலகம் விரிந்ததாகும்.

தவத்தைச் செய்கின்றவர்கள், கும்பகஞ்செய்து தியானிப்பார்களானுல் மூலத்தினின்று எழுகின்ற

மூலாக்கினியானது ஆறு ஆதாரங்களாகிய துணைவழியில் உயர்ந்து அன்பு வடிவான சத்தியினிடத்திலே அடங்கும். பராசத்தியானவள், மூன்று மண்டலங்களிலும் பரந்துநிற்பவள் ஆவாள்.

சத்தியானவள் மூலாதாரம் முதல் விசுத்தித்தானம் வரையில் அறிவுக்காட்சியாகவும், அதற்குமேல் அனுபவக்காட்சியாகவும் விளங்குவாள். பராசத்தியானவள் சாதகர்களுக்குப் பாலையாவள்; அவளே, முத்திக்கும் தலைவியாவாள். ஞான வடிவினளான அம்மையைத் தியானிக்கின்றவர்களுக்குத் தம் திருவடியைச் சிந்தையுள் பதியவைத்து அருள்புரிவாள்.

நவந்தரு பேதங்களுள்ளே எதனை வழிபடினும் அம்மை அருள்புரிவாள். அம்மையைத் தியானித்தால் எல்லாக் கலைகளையும் தினைப்பொழுதில் அடையலாம்; அவளது திருவருளால் நல்வினைப்பயனையும் எண்குணங்களையும் பெறுவதுடன் நீடூழியும் வாழலாம்.

பொறி புலன்களை அடக்கிப் பிரணவத்தைத் தியானித்தால் சத்தியானவள் சந்திரமண்டலம் வரை வியாபித்துக் காட்சி அளிப்பாள். அம்மையானவள், அயன் முதலானவர்களும் காமனும் அவன் தம்பியாகிய சாமனும் சூரியன் அங்கி இவர்களும் வணங்க, அவர்களனைவரும் உய்யும்படி அருள்செய்து விளங்கினள். அம்மையானவள், நடுநாடியின்வழியாக ஞானம் விளங்க நின்று திருநடம் புரிபவள். எல்லாம் சத்திமயமேயாகும்.

அம்மையானவள், ஆலகாலத்தை உண்ட பிரானுக்கு அமுது ஆவாள்; அப்பெருமான் அடையும்

பதவியும் ஆவாள். தவத்தினருக்கு அவர்கள் அடையும் இன்பமாகத் தானே வருவாள். அப்படிப்பட்ட சத்தியானவள் மூலாதாரத்தினின்று பிரமரந்திரம்வரை நடுநாடியின் வழியாக வியாபித்திருக்கின்றாள். சத்தியானவள் அன்னமயகோசத்தில் விளங்குபவள்; ஓம குண்டமாகிய சுவாதிட்டானத்தில் ஒளி வடிவமாக விளங்குபவள்; 'நமசிவ' என்று தியானிப்பவர்களுக்கு விளங்குபவள். தேவியானவள், கலைகளின் வடிவமாக உயிர்களோடு ஒன்றியிருப்பவள்.

பராசத்தியானவள், தன் காதலனாகிய சிவத்துடனும், உயிர்களுடனும், கலைஞானங்கள் காலங்கள் ஆகிய இவைகளுடனும் கலந்து விளங்குபவள். தத்துவங்கள் பிரமமந்திரங்கள் ஆகிய அனைத்தும் அன்னையேயாவள். காலதத்துவத்தின் காரியமான அட்சரவடிவமாக அன்னையிருந்தாள்; சிவம், அன்னையின் பக்கத்தில் அவளுடன் ஆவதற்காகச் சக்கரத்துள் நின்றான். பிரணவ ஜபத்தால் அன்னை காட்சியருளுவாள்.

சத்தியானவள் ஜீவனைப் பாதுகாப்பவள் ஆவள். சத்தியே பஞ்சகிருத்தியம் செய்பவள். அவளே சிவம் பரசிவம் என்னும் இரண்டாக நிற்பாள். பராசத்தியானவள், அருமையாயும் எளிமையாயும் விளங்குபவள். பசுபோதமும் பதிபோதமுமே உயிர்கள் செல்லுகின்ற நெறியாகும். சிவகதி சேர்கின்றவர்களுக்கு உரியநெறி சன்மார்க்கமேயாம். அந்தச் சன்மார்க்கத்தைக் காட்டியவள் தேவியே ஆவாள். 'ஓம்' என்ற பிரணவத் தியானம் சித்தியாகும்போது, ஆஞ்ஞா சக்கரத்தை அடைய வழிதிறக்கும். பராசத்தியை மதிமண்டலத்திலே வைத்து வணங்குகின்றவர்களுக்கு விதியையும் வெல்லும் ஆற்றல் உண்டு.

சிவமும் சத்தியும் மாலாமந்திர ஸ்வரூபமாவர். மதிமண்டலத்தில் இளம்பிறையின் வடிவமாகச் சத்தி எழுந்தருளியிருப்பாள். அம்மையைத் தியானிக்கின்றவர்கள் அம்மையே ஆவர். பராசத்தியை ஞானத்தால் உணர்கின்றவர்களுக்கு, அவர்கள் நினைத்த எல்லாம் கைகூடும். சிவசத்திகளை அபேதமாகத் தியானித்தால் சமாதிகூடலாம். பராசத்தியினிடத்தில் அன்புபூண்டவர்கள் இன்பமே வடிவாக விளங்குவார்கள்.

சத்தியையும் சிவத்தையும் வழிபடுகின்றவர்களை எண்திசைக் காவலர்களும் ஏனைய தேவர்களும் வந்து வணங்குவார்கள். 'சிவயநம' என்னும் மந்திரமும், மலர்களும், தூபம், தீபம், சந்தனம், ஹவிசு (வேள்வியில் கொடுக்கப்படும் உணவு) ஆகிய இவைகளும் பார்வதிபூஜைக்குரிய அருச்சனையாகும். உமாதேவியை வணங்குகின்றவர்களைப் பெண்களும் வந்து வணங்குவார்கள். இறைவன் உமையைக் கலந்து களிப்பன யாவும் மாயையேயாகும்.

சத்தியும் சிவமும் ஒருவரையொருவர் அன்புசெய்யவே எல்லாவுயிர்களும் அவ்வன்பினுள் அடங்கின. ஆகவே, உயிர்களுக்கெல்லாம் சிவம் ஆதாரம்; சிவத்திற்குச் சத்தி ஆதாரம்; சத்திக்குச் சிவம் ஆதாரம். இப்படியாக, சத்தியும் சிவமும் ஆதார ஆதேயம் ஆவர்.

9. ஏரொளிச்சக்கரம்

(1255—1290)

ஏரொளிச்சக்கரம் என்பது, மேல்நோக்கிய ஒளி வடிவினதான சக்கரம் ஆகும். மூலக்கனல் எங்கும் பரந்து எல்லாவற்றையும் தம்முள்ளே அடக்கி வேறு

ஒன்றுந்தோன்ருதபடி, தான் ஒன்றேயாகித் தோன்ற நிற்கும் அனுபவத்தைத் தெரிவிப்பதாகும்.

'ரம்' என்பது வன்னிபீஜமாகும். இந்த ஏரொளிச் சக்கரமும் அதனுள் விளங்கும் விந்துவும் நாதமும் உலகமாக விரிந்தது. அகார, உகார, மகார, நாதம், பிந்து ஆகிய ஐந்தும், சிகாரம் ஒன்றும் ஆக ஆறு எழுத்துக்களும் சிவாட்சரங்களாம்; வகாரம் சத்தி எழுத்தாகும்.

விசுத்தி, ஆஞ்ஞை சக்கரங்கள், 'அ' முதல் 'அ:' முடிய பதினாறு எழுத்துக்களும், 'ஹ' 'க்ஷ' என்னும் இரண்டெழுத்துக்களும் ஆகப் பதினெட்டு எழுத்துக் களுடன் விளங்குவதால், இச்சக்கரங்களைக் கடந்து மேலும் துவாதசாந்தத்தை அடைந்தபின் சந்திரமண் டலத்தைக் கடந்தநிலை சித்திக்கும். இப்படிக் கடந்து நின்றசிவமே காலதேவதையாகி முந்நூற்றறுபது நாட் களும், பட்சங்களும், இருதுக்களும், மாதங்களும், ஆயுளும், நாட்களும் ஆகிய காலமாயிற்று.

இடபம், சிம்மம், மிதுனம், கடகம் இந்நான்கும் மேடவீதியைச் சேர்ந்த இனமாகும். மீனம், மேடம், கன்னி, துலாம் இந்நான்கும் இடபவீதியைச் சேர்ந்த இனமாகும். தநுசு, மகரம், கும்பம், விருச்சிகம் இந் நான்கும் மிதுனவீதியைச்சேர்ந்த இனமாகும். இப்படி இராசிகள் பன்னிரண்டும் மூன்றினமாம்.

ஆறு ஆதாரங்களிலும் பன்னிரண்டு ராசிகளும் பொருந்தத் தியானிக்கவேண்டும். அப்போது, ஒளியும் ஒலியும் நிறைந்து தோன்றும். இதுவே அகமுகத் தியானத்தில் இராசிச் சக்கரம் நிலைபெறும் வழியாம்.

சிவவொளி பரவிய தாரகை, வெறும் ஒளியாயிராமல் ஒலியோடும் கூடிய எழுத்துருவாம்.

சத்தியின் ஆற்றலாலே பஞ்சபூதங்களும் ஒளிவடிவாகத் தோன்றின. அவையெல்லாம் ஒரேவடிவாகப் பேரொளியாய் விளங்கிற்று. இவ்விதம் பௌதிகமாக நின்ற அண்டமானது, உலகங்கள் எல்லாவற்றையும் தன்னிடத்தே அடக்கிநின்றது. இவ்வண்டமே, ஆன்மாக்கள் நிலைபெறச்செய்யும் இடமாகும். விந்துவின் காரியமே அண்டமாம்.

விந்துவும் நாதமும் சமமாகக் கலக்குமானால், அவை அண்டமாகிய பொருட்பிரபஞ்சத்துக்கு வித்தாகும்; விந்து குறைந்து நாதமானது எண்மடங்கு அதிகமானால் அது மந்திரபீஜமாகும். நாதத்திலிருந்து தோன்றும் மந்திரவித்துக்கள் இரண்டாகும். ஒன்று, மேலோங்கி விரைந்து செல்லும். பீஜமும் நாதமும் தம்முள் ஒத்தபின், பீஜமும் விந்துவாக விரியும். விந்துவே எல்லாவற்றிற்கும் வித்தாகும். எல்லாவற்றையும் தோன்றச்செய்தது விந்து; அதனுடைய வித்து, இறைவனது திருவடியாகிய திருவருட்சத்தியாம்.

விந்துவும் நாதமுமாகிய எழுத்துக்களே சக்கரமாகும். அவ்வெழுத்துக்கள் உடம்பினுள்ளே நிலைபெறுவன; அவ்வெழுத்துக்களே மந்திரமும் ஆகும். மந்திரத்தை உச்சரிப்பதாலும், சக்கரங்களைக் கீறுவதாலும் பயன் ஒன்றுமில்லை. பிரணவத்தை முதன்மையாகக் கொண்டு அகவழிபாட்டுடன் தியானித்தால் பயன்பெறலாம். சக்கரத்தை உள்ளவாறு உணர்ந்தால் நுண்ணியவற்றிற்கெல்லாம் நுண்பொருளாகிய சிவத்தைத் தரிசிக்கலாம்.

சக்கரத்துள் எழுகின்ற மந்திரமானது தம்பனம், மோகனம், உச்சாடனம், வித்வேஷணம், மாரணம், வசியம் என ஆறியல்பாக அமைந்துவிரியும். ஏரொளிச் சக்கரத்தையும் அதன் மந்திரங்களையும் ஷட்கன்ம வித்தையாகிய காமியங்களுக்குப் பயன்படுத்தினுல் அது ஏரொளியாகாது.

10. வயிரவிச்சக்கரம்

(1291—1296)

வயிரவர், பகைவனை அழிப்பார். வயிரவ உபாசகர்களுக்கு, பகைவனது உடலைப் பந்துபோல் விளையாடும் சக்தி உண்டாம். ஆதிவயிரவரை உண்மையன்புடன் தியானித்து வழிபடல் வேண்டும். அவ்வயிரவர் பரிசுத்தமான உள்ளத்தில் வீற்றிருப்பவர் ஆவார்.

வயிரவருக்குச் சாந்து, ஜவ்வாது, புனுகுச்சட்டம் இவைகளைச் சாத்திப் பூஜித்து, ஓர் ஆயிரம் உரு ஜபித்தால் வயிரவக்கடவுள் வெளிப்பட்டுக் காட்சி தந்தருளுவர். வயிரவரை வழிபட்டால் வேண்டியனவெல்லாம் எளிதில் கைகூடும்.

11. சாம்பவிமண்டலச்சக்கரம்

(1297—1306)

சாம்பவி மண்டலமாவது, எட்டுக்கோடுகள் கீறிக் காணப்படுகின்ற பதங்களில் சிவம், சத்தி, நாதம், பிந்துவாகிய நான்கனுள் பிந்துவைக் கண்ணுக அறிவதாம். அப்படி அறிந்தோமானுல், நாட்டவர்களால் நாம் நன்கறியப்படுவோம் ஆவோம்.

'சிவாயநம' என்ற மந்திரத்தை உணரவல்லார்களுக்கு இறப்பில்லை. சாம்பவியந்திரத் தெய்வமாகிய பராசத்தியின் திருவருளால் எல்லா நன்மைகளும் தாருகவே வந்தடையும். திருவைந்தெழுத்தை ஆறு ஆதாரங்களில் நிலைநிறுத்தி, ஒவ்வோர் ஆதாரமாகக் கடந்து, துவாதசாந்தத்தை அடையும் வகையில் தியானித்தால் நினைத்தவெல்லாம் இனிது முடியும்; பகையும் இல்லையாம். சாம்பவிமந்திரத்தை ஜபிக்கத் தக்கவர் தகாதவர் என வேறுபாடு கிடையாது. யாரும் ஜபிக்கலாம். அப்படி ஜபித்தால் அடைவது ஆனந்த வடிவாம்; உயிரும் உடலும் ஞானம் ஆம்.

'ஓம் சிவாயநம' என்னும் சாம்பவி மந்திரத்தை ஜபித்தால் சிவமும் சத்தியும் கூடிக் கலந்து வெளிப்படும்.

12. புவனுபதிச்சக்கரம்

(1307—1318)

'க, ஏ, ஈ, ல, ஹ்ரீம்' என்னும் ஐந்தெழுத்துக்களும் பொன்னிறம். 'ஹ, ஸ, க, ஹ, ல, ஹ்ரீம்' என்னும் ஆறு எழுத்துக்களும் செந்நிறம். 'ஸ, க, ல, ஹ்ரீம்' என்னும் நான்கெழுத்துக்களும் வெண்ணிறம் ஆகும். இம்மூன்றும் முறையே வாக்பவகூடம், மத்தியகூடம், சக்திகூடம் என்று சொல்லப்படும். ஸ்ரீ பஞ்சதசாக்ஷரி வித்தையை அறிந்தவனுக்கு இம்மையிலேயே காமியப் பயன்களும் மறுமையில் மோட்சமும் கைகூடும்.

புவனையைத்தவிர பிறிதொரு தெய்வம் இல்லை; திரிகோணமே சிவன்மேனியாம். சத்திக்கும் சிவத்துக்கும் உள்ள சம்பந்தமாவது, அங்காங்கிபாவம் ஆகும்.

புவனுபதிச் சக்கரம் அமைக்கும் விதமாவது;- செப்புத்தகட்டில் அறுகோணம் இட்டு, அவ்வறு கோணத்திலும் மத்தியிலும் 'ஸ்ரீம், ஹ்ரீம்' என்ற பீஜங்களை எழுதி, அக்கோணம் ஆறின் உச்சியிலும் 'ஹ்ரீம்' என்பதனை எழுதி, எல்லாக் கோணங்களையும் சூழ வட்டமிட்டு, அதன்மேல் அகாரம் முதலான பதினாறு உயிர்களையும் எழுதவேண்டும். அப்படி எழுதிய தாமரையிதழ்களின் நடுவிலுள்ள வெளியில் செய்யப்பட்ட 'ஹ' என்னும் எழுத்தையும் 'உ' என்னும் எழுத்தையும் சேர்த்து எழுதவேண்டும். இதழ்களுக்கு மேலே 'க்ரோம்' 'ச்ரோம்' என்பவற்றையும் எழுதி, அதன் இடப்பக்கத்தில் 'ஆம்' 'க்ரோம்' என்றும் எழுதவேண்டும். இவ்விதம் எழுதப்பட்ட சக்கரத்தின்மீது வலப்பக்கத்திலே 'க்ரோம்' 'ச்ரோம்' என்று எழுதி, 'ஹ்ரீம்' என்ற பீஜத்தால் சக்கரத்தைச் சுற்றிலும் எழுதப்படவேண்டும். இவ்வண்ணம் அமைப்பதே புவனுபதிச் சக்கரமாகும். இதனைப் பூஜிக்கவும்வேண்டும்.

பூஜிப்பதற்குமுன் கரநியாசம் அங்கநியாசங்களையும் செய்தல்வேண்டும். பூஜிக்கும் சமயத்தில் புவனுபதியை மனத்தில் ஆவாகித்துப் பிராணப் பிரதிட்டை செய்து தியானித்தல்வேண்டும். புவனுபதியானவள் சிவந்தமேனியும், செம்பட்டுடையும், கையில் அங்குசம் பாசம் ஆகிய ஆயுதங்களையும், அபய வரதத்தையும், பல ஆபரணங்களையும், தூயதான கிரீடத்தையும் உடையவளாகத் தோன்றுவாள்.

(பூஜிப்பவர்) மேலாடையில்லாமல் துதி செய்து ஆகம விதிப்படி பூஜித்து, பாலன்னத்தை மந்திர ஜபத்துடன் நிவேதித்து, நான்கு திக்குகளிலும் 'நாரதாய

சுவாஹா' என்று நிவேதித்து, பின், அதனை உண்ணல் வேண்டும். சேஷ நைவேத்தியத்தை உண்பதற்கு முன்னாக, புவனாபதியை இருதயத்து ஒடுக்கிக்கொண்டு யந்திரராஜனை மனத்துள்வைத்து வழிபடல்வேண்டும். அந்த யந்திரமானது நினைத்த அனைத்தையும் அளிக்க வல்லதாம்.

13. நவாக்கரி சக்கரம்

(1319—1418)

'ஹ்ரீம்' என்ற ஒரு அட்சரமே ஒன்பது எழுத்துக்கள்கொண்ட தேவி மந்திரமாய், அதுவே எண்பத்தொருவகையாக 'க்லீம்' முதலும் 'ஸௌம்' இறுதியுமாகக்கொண்டு விளங்குவதாகும். 'ஹ்ரீம்' என்ற அட்சரமே புவனையின் பீஜமுமாகும். 'ஹ்ரீம்' என்பதில் 'ஹ், ர, ஈ, ம்' ஆகிய நான்கெழுத்துக்கள் சேர்ந்துள்ளன. இம்மந்திரமானது பதினாறு கலை வடிவமானது. இந்நான்கெழுத்துக்களும் வியஷ்டிநிலையில் 'ஹ' - 8, 'ர' - 2, 'ஈ' - 4, விந்துவாகிய 'ம்' - 1, ஆக, பதினைந்து கலைகளும், சமஷ்டி நிலையில் பதினாறு கலைகளும் உடையன. இந்த ஏகாட்சரியே ஸ்ரீவித்தையாகும். நவாக்கரியில் ஒவ்வொன்றையும் முதலாக வைத்து மாறிவர எண்பத்தொருவகையாம்.

'ஸௌம், ஔம், ஹௌம், ஆம், க்ரீம், கௌம், ஐம், ஹ்ரீம், ஸ்ரீம்' என்ற இவ்வொன்பதும் ஒத்துவருதலால் விளையும் 'க்லீம்' என்பதை மந்திரமுதலாகக் கொண்டு 'சிவாயநம' என ஓதுதல் வேண்டும்.

நவாக்கரியைப் பிறர் செவிக்கும் தன் செவிக்கும் கேட்காமல் ஓதினால் நவாக்கரி சத்தியானவள் எல்லா

நன்மைகளையும் அருளுவாள். இந்தச் சக்கரத்தை வெள்ளி, பொன், செம்பு ஆகிய தகடுகளில் அமைத்தல்வேண்டும். சக்கரத்தை நினைத்த மாத்திரத்தில், மனத்தில் நிலைபெறும்.

'ஸ்ரீம்,க்லீம்' என்னும் முடிவும் முதலுமாகவுள்ள பீஜங்களைக்கொண்டு தியானித்து, செங்நெல்லும் அறுகம்புல்லும் கொண்டு அர்ச்சித்தால் பராசத்தியானவள் வெளிப்பட்டு அருள்புரிவாள்.

செல்வங்கள் அனைத்திற்கும் பரமகாரணியான தேவியானவள், காயாம்பூவைப் போன்ற கருமை நிறமுடையவள். அவளை, அன்புடன் பூஜித்தால் நினைத்தன அனைத்தும் கைகூடும்; எல்லா நன்மைகளும் பெருகும்; ஆயுளும் நீடிக்கும்; புகழ் பரவும்; பொன், வெள்ளி, நவரத்தினங்கள் ஆகிய எல்லாம் தாமே வந்தடையும்; பராசத்தியின் அருளும் ஞானமும் பெறலாம்.

நவாக்கரி மாறுதலில் மற்றொரு வகையாவது:- 'ஹ்ரீம்' முதலாக 'ஸ்ரீம்' ஈறாக உள்ளதாகும். அதனை உபாசிக்கின் பராசத்தியைத் தரிசிக்கலாம். அப்படித் தரிசித்தமாத்திரத்தில் முகவசியமுண்டாகும். அம்மையின் திருவடியை இடைவிடாது தியானிப்பவர்கள் அவளது திருவடியின்கீழ் இருப்பார்கள்.

'ஐம்' முதல் 'ஹ்ரீம்' ஈறாக உள்ள மந்திரத்தை உச்சரித்தால், வாகீச்வரியானவள் வெளிப்பட்டு அருளுவாள். இம்மந்திரம் கூத்தப்பிரானின் வடிவமாகும். இச்சக்கரத்தை மௌனமாக ஜபித்தால் உலகை வெல்லலாம்.

'கௌ' முதல் 'ஐம்' ஈருகிய சக்கரத்தை உபாசிக்கின்றவர்களுக்குப் பகையில்லை; எல்லாவுயிர்களுமாகியவள் பராசத்தியேயாம். அவளைத்துதித்து வணங்கிறல் வினைகள் நீங்கும்.

'க்ரீம்' முதல் 'கௌம்' ஈருக உள்ள நவாக்கரி சக்கரத்தை உபாசிக்கின்றவர்களுக்கு, கன்னியாகிய கதம்பவனவாசினியானவள் உறவு ஆவாள்: இவள், மழையுடன் செல்வத்தையும் அளிப்பாள். இச்சக்கரத்தை அருச்சித்தால் துன்பமே இல்லை; மன்னனும் வணங்குவான்.

'ஹௌம்' முதல் 'க்ரீம்' இறுதியான பீஜங்களையுடைய நவாக்கரி சக்கரத்தை உபாசிக்கிறவர்களுக்கு மனத்தெளிவும் ஞானமும் உண்டாகும். இச்சத்தியே சதாசிவமூர்த்திக்குச் சத்தியான மனோன்மணியாவாள். உயிர்கட்கெல்லாம் உயிராக இருந்து அருள்செய்பவள் இவளேயாம்.

'ஔ' முதல் 'ஹௌ' ஈருன எழுத்துக்கள் அமைந்த சக்கரத்தின் நடுவில் இருந்தவள் அமுதேச்வரி ஆவாள். இவ்வமுதேச்வரியை மதிமண்டலத்துப் பொருந்தச் செய்யின் ஒவ்வொருநாளும் பல புதுமைகளைக் காணலாம்; உடலும் அழியாது. அமுதேச்வரியின் அருள் பெற்றபின் கால தேச வேறுபாடுகளும் கீழ்மேல் வேறுபாடுகளும், உலகத் துன்பங்களும் இல்லையாம். சத்தியின் அருளனுபவமே அனைத்திற்கும் ஆதாரமாகும்.

'ஸௌ' முதல் 'ஔ' ஈருன பீஜங்களையுடைய விளக்கொளிச் சக்கரத்தில் பராசத்தி, விளக்கொளி

போல விளங்குவாள். இத்தேவியை உபாசித்தால் தேவி யாகவே விளங்கலாம். இவ்வுண்மையை உணர்ந்தவர் கள் விளக்கம்பெற்றவர்கள் ஆவார்கள்.

பராசத்தியே ஐந்தொழிலைச்செய்து, எல்லா அண்ட மாயும் அவற்றுள் உயிராயும் நிற்பவள். அண்ட பிண் டங்களுள் வியாபித்துள்ள அம்மையானவள், மூலா தாரத்தினின்றும் கண்டத்தானத்தில் பொருந்தி வைகரி வாக்காக விளங்குபவள் ஆவாள்.

சந்தனம், குங்குமப்பூ, கஸ்தூரி, செஞ்சந்தனம், ஜவ்வாது, புனுகுநெய், பச்சைக்கர்ப்பூரம், கோரோ சனை, பன்னீர் ஆகிய ஒன்பதையும் ஒன்றுசேர்த்துக் குழைத்துச் சக்கரத்திற்குச் சாத்தல்வேண்டும்.

தாயும் தந்தையுமாகிய நவாக்கரி தேவிக்குக் கரங் கள் ஆறு உள்ளன. அந்த ஆறு கரங்களிலும் மழு, சூலம், தோட்டி, பாசம், வில், அம்பு ஆகிய ஆறு ஆயுதங்களுடன் விளங்குவாள். முதலில், 'க்லீம்' என்ற பீஜாட்சரத்தோடு நவாக்கரியை ஜபிக்கத் தேவி யானவள், உபாசகன் முன்பு தோன்றுவாள். நவாக்கரி சக்கரத்தைச் சூழ்ந்து யோகினி சத்திகள் அறுபத்து நால்வரும், அஷ்டகன்னியர்களும் இருப்பார்கள்.

லட்சுமி பீஜம் 'ஶ்ரீம்' ஆகும். இதனை ஜபித்தால் அளவற்ற செல்வம் உண்டாகும். யோகினிகளும் வசின்யாதிகளும் புடைசூழ 'ஶ்ரீம்' பீஜ தெய்வமாகத் தனத்தை அம்மையானவள் அளிப்பாள். 'ஶ்ரீம்' பீஜ வடிவமாகிய அம்மையைத் தியானிக்கில், ஒருவருடத் தில் ஆசையடங்கி, மனம் ஒடுங்கிச் சிவசூரியன் திரு வடியை அடைதலாகிய சிவப்பேறு சித்திக்கும்.

'ஹ்ரீம்'கார பீஜமே, உலகத்தையாளும் ஆதிசத்திக்கு மண்டலமாகும். காரணியாகிய சத்திகள் ஐம்பத்திருவரும் கன்னியராக நவாக்கரி சக்கரத்தினுள்ளே மறைந்து, எங்கும் தன்னருளாகவே வியாபித்து நின்றூர்கள். நவாக்கரி சக்கரத்தில் சத்தியை நிலையாகத் தியானித்தால் ஒளி தரிசனம் உண்டாகும்; பின், மணி நாதம் கேட்கலாம்.

விசுத்தி சக்கரத்துப் பதினறிதழ்த் தாமரையில் விற்றிருக்கின்ற சத்தி, எண்ணுதற்கு அப்பாற்பட்டவள் ஆவாள். சத்தியானவள், ஆஞ்ஞையில் தீப ஒளி போல விளங்குவாள். சந்திரமண்டலத்துச் சதாசிவ நாயகியானவள், ஐந்து முகங்கள், பத்துக் கரங்கள் இவைகளைப்பெற்று விளங்குவாள்.

நாற்சதுரமாகிய பூபுரச்சக்கரத்துள், நாற்பது கன்னியர்கள் சூழ அம்மையானவள் எழுந்தருளியிருப்பாள். தேவியைத் தியானிப்பவர்க்கு எல்லா நன்மைகளும் விளையும்.

'ஔ'காரம் முதலான ஒன்பது பீஜங்களையும் ஓராண்டு ஜபித்தால் வன்னிவடிவான சிவமும் ஜோதி வடிவான சிவையும் வெளிப்பட்டு சித்திதருவார்கள். அம்மையை வழிபட்டால், ஆணவம் அகலுவதுடன், பராகாயத்தில் பராசத்தியையும் காணலாம். சிவத்தையும் சத்தியையும், மனத்துள் பெற்ற யோகிக்கு இல்லாதது ஒன்றில்லையாம். உச்சிக்குமேல் அறுபத்துநான்கு கிரணங்களும், அவற்றில் சிவமும் சத்தியும் விளங்கும்.

நான்காம் தந்திரம் முற்றிற்று

ஐந்தாம் தந்திரம்

1. சுத்த சைவம்

(1419—1422)

எல்லாவற்றையும் படைத்தருளுகின்ற இறைவனது பெருமையானது மேருமலைக்கும், உலகத்துக்கும், சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்கசைவம், கடுஞ் சுத்தசைவம் என்னும் நான்கு சைவத்துக்கும் ஒப்பாகும். சுத்தசைவர்க்கு, சிவபிரான் அழியாத இன்ப வடிவாய் அன்புசெய்யப்படும் பொருளாவன்.

ஞானநூல்களை ஆசிரியனிடத்தில் கற்ற கல்விப் பேற்றினுல் யோகம் சித்திக்கும். அதனுல், மலமாயா கன்மங்களாகிய குற்றம் நீங்கும். நீங்கியபின், இறைவனைக் கண்டவர்களே சைவசித்தாந்தர் என்று சொல்லப்படுவர். சைவசித்தாந்தமே உண்மை வேதாந்தமாகும். சித்தாந்த நெறியில் நிற்பவர்களே இறைவனைக் கண்டு இன்புறுவோராவர்; பிறப்பு இறப்பும் அற்றவர்களாவர்.

2. அசுத்த சைவம்

(1423—1426)

சிவவேடம் தரித்தவர்களே சிறப்புடம்பினைப் பெற்றவராவர். அச்சிவவேடத்துடன் ஆசானிடத்தில் பஞ்சாட்சர உபதேசம் பெற்று இடைவிடாமல் ஓதிக் கொண்டிருப்பவர்கள் சிறந்த சைவராவர்.

நாவலந்தீவு முதலான ஒன்பது கண்டங்களையும் சிவபிரான் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளாக வலம்

வந்தவர்கள், சிவபிரானின் அருவம் நான்கு, உருவம் நான்கு, அருவுருவம் ஒன்று ஆக ஒன்பது திருமேனிகளையும் தரிசித்தவர்களாவார்கள்; இவர்களே அசுத்த சைவராவார்கள். அதாவது, உண்மைச் சித்தாந்த சைவராவர். ('அ' என்பது, இங்கு தலைமைப் பொருளில் வந்ததாகும்.) ஞானியர்கள், இறைவனையும் தன்னையும் காணும் உண்மைஞானம் பெற்றவராவர்.

3. மார்க்க சைவம்

(1427—1437)

பொன்கட்டிய உருத்திராக்கம், விபூதி இவைகளை அணிந்தவர்களும், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நன்மார்க்கம் என்னும் செந்நெறியுடையவர்களுமே உண்மைச் சைவர் ஆவர். திருவடிஞானம் கைவரப்பெற்ற ஞானியே உண்மைஞானத் தவத்தோருவன்; அவனே, வீடுபேறடைபவன்; சைவக்கோட்பாட்டினன்; என்றும் நிலைபெற்றவனும் ஆவன்.

சிவாகமம் இருபத்தெட்டும் கருமகாண்டம், ஞானகாண்டம், உபாசனகாண்டம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதனை மேற்கொண்டு ஒழுகுபவரே சுத்தசைவர் எனப்படுவர். பராபரையானவள், உயிருடன் பொருந்தியும் உயிர்க்குயிராயும் நிற்பவள் ஆவள்; அவளே, இறைவனின் அருட்சத்தியாவள்; எங்கும் நிறைந்து எவற்றையும் இயக்குபவளும் ஆவள்.

ஆன்மா, பரன், சதாசிவன், இறை, உயிர், பாசம், ஆணவம், வீடுபேறு ஆகிய இவ்வெட்டும் உண்மைச் சைவர்களாவார் உள்ளூற நினைத்து ஒழுகவேண்டிய

வழிவகையான பொருள்களாம். ஆன்மா, சிவத்துள் அடங்குதலாகிய முற்றுணர்வு அடைந்தமாத்திரத்தில் தன் முனைப்பாகிய சிற்றுணர்வு நீங்கும்; பேரின்பத்தில் கலந்து சிவானுபவமும் பெறும். இவையே சுத்த சைவர்கட்குக் காட்சியாம்.

மெய்ஞ்ஞானம் உணர்ந்தோர் தமது சித்தத்தைச் சிவன் எழுந்தருளியிருக்கும் இடமாகச் செய்வார்கள். சிவோகம்பாவனை செய்து அறநெறியிலே நிலைத்து நிற்றல் ஞானத்தில் சரியையாகும். மறைமுடிவை - வேதாந்தத்தைக் கண்டவர்கள் பிரமத்தை அறிந்தவர்களாவார்கள்; தத்துவமுடிவைக்கண்டவர்கள் யோகியராவர்; சித்தாந்தத்தைக் கண்டவர்கள் சைவர்களது வழி வகைகளை அறிந்தவர்களாவர்.

ஆகாயத்தை இடமாகக்கொண்டு பெய்கின்ற மேகங்களும் அவ்வாகாயத்தைப்போய்ப் பொருந்தாது; கண்ணினால் காணும் காட்சிப்பொருள்களும் கண்ணினைச் சென்று ஒட்டாது. அவைபோல, இறைவனை யான் என்னும் சிற்றறிவும், எனது என்னும் சுட்டறிவும் ஆகிய பசு பாசங்கள் அணுகாவாம்.

திருவருளால் அன்பு செய்யப்படும் இறைவனை, சத்திநிபாதமாகிய திருவருள் வீழ்ச்சியால் சென்று, சிவமாம் பெருவாழ்வைப்பெற்றுப் பேரின்பம்பெறுதல் சித்தாந்தப்பேருகும்.

4. கடுஞ்சுத்த சைவம்

(1438—1442)

சிவனைக் கருத்தில் வைத்து, ஆசாபாசங்களைக் கெடுத்து, தன்முனைப்பானது நீங்க, உண்மைஞானம்

உடையவரே உண்மைச் சைவர் ஆவர். உடலின்கண் ஏற்படும் ஐந்து அவத்தைகளும், காமம் முதலான ஐவகைக் குற்றங்களும், ஐம்புலன்களும், இவற்றிற்கு நிலைக்களமான காரணமாயையும், ஆணவமலமுமாகிய இவைகளை அழித்து, தன்னை உணர்ந்து தலைவனை அடைதலே சித்தாந்தமார்க்கமாகும்.

ஐந்தெழுத்தை உபதேசமாகப்பெற்ற ஆன்மாக்கள் இறைவனின் திருவடிப்பேற்றை அடைதல்கூடும். அப்படிப்பெற்றவர்கள் சிவனாகவே விளங்குவர்; அவர்களே சுத்தசைவர் என்று அழைக்கப்படுவர்.

தத்துவங்கள் சித்தித்தால் ஐம்புலன்களும் உயிரின் வழிச்சென்று அடங்கும். பின், திருவடிஞானப்பிரகாசத்துடன் விளங்கி நிற்கும்.

5. சரியை

(1443—1450)

இறைவன் திருவடியடைய நான்கு வழிகளினுள் சரியையே அடிப்படையாகும் என்பதனை ஆராய்ந்து தெளிந்தவர்கள் 'கந்துரு காலாங்கி' முனிவரும், 'கஞ்சமலையமானும்' ஆவர். அச்சரியை நெறியே சுத்த சைவத்துக்குக் கடைப்பிடிக்கும் தொண்டாகும்.

எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் கருதுவது ஞானபூஜையாகும்; உயிரினிடத்தில் ஒளியைக் காண்பது யோகபூஜையாகும்; தன் உள்ளத்தில் உள்ள சிவத்தை வெளிப்பொருள்களில் ஆவாகித்துத் தாபித்துப் பூஜித்தல் கிரியாபூஜையாகும். நாடு நகரங்களில் உள்ள ஆலயங்களைத் தேடித் தொழல்வேண்டும்; தொழுது இறைவனது புகழைப் பாடல்வேண்டும்.

அவ்வண்ணம் செய்கின்றவர்களது திருவுள்ளங்களில் இறைவன் கோயில்கொண்டு எழுந்தருளியிருப்பான். (இது சரியாபூஜையைப்பற்றிக் கூறுவதாகும்).

சரியையாளர், கிரியையாளர், சிவயோகியர், சித்தர் ஆகிய இவர்களனைவரும் சிவஞானம் அடைபவர்களாவார்கள். சிவஞானியர்கள் சிவசாயுஜ்ஜியம் பெறுவர்; சிவயோகியர்கள் சிவன் திருவுருவைப் பெறுவர்; கிரியையாளர்கள் அணுக்கராயிருப்பர்; சரியையாளர்கள் சிவவுலகத்தில் இருப்பர். கிரியையாளரும் யோகியர்களும் செய்வது உருவப்பூஜையாகும்; ஞானபூஜை என்பது அருவப்பூஜையாகும்.

அறியாமைவயப்பட்டு உழலும் மாந்தர்களுக்கு இறைவன், உண்மை ஞானம் தோன்றும்படிக்கு, சரியை முதலான நான்கினையும் அருள்புரிந்து அமைத்தனன். தீமையினின்றும் நீக்கித் தூய்மைப்படுத்தலோடு தன்செயல் யாதொன்றும் இல்லை, எல்லாம் சிவன் செயலென்று உணர்த்துவது சமயதீக்கை; பஞ்சாட்சரத்தை இடையறாது ஜபிப்பதால் அகம் புறம் என்ற இரண்டையும் தூய்மையாக்குவது விசேடதீக்கை; அத்துவாக்கள் ஆறினையும் தூய்மைப்படுத்துவது நிருவாணதீக்கை. இம்மூன்று தீக்கையினையும் செய்விக்கும் ஆசாரியத்தன்மையை அளிப்பது ஆசாரியாபிடேகம் ஆகும்.

6. கிரியை

(1451—1456)

இறைவனை நறுமலர்கொண்டு அருச்சிப்பவர்களை ஆகாமியவினை வந்தடையாது. அவர்களுக்கு, திருவருள் வீழ்ச்சியாகிய சத்திநிபாதமும் கிட்டும்.

சத்தியானவள், தமது திருவடிகளை வணங்குபவர்களுடைய மனதிலே எழுந்தருளுவாள்: அதனால் சிவபெருமானது அருளும் கிட்டும். இறைபணியே சிவப்பணியாம்; ஆதலால் அதுவே கிரியையாளர்கள் செய்யும் திருப்பணியாகும்.

சரியை கிரியை இவ்விரண்டிலும் முதிர்ச்சியுற்ற சிவபக்தனுக்குத் திருவருள் துணையாய் நிற்கும். அதனால் யோகம் ஞானம் இவ்விரண்டினையும் பெற்று, சிவமாகவே விளங்குவான். இறைவனுக்குப் பணிசெய்யும் அன்பனுக்கு அவ்விறைவன் காட்சி தந்தருளுவான்.

7. யோகம்

(1457—1466)

ஆசான் அருளிய வழியிலே ஒழுகி அகத்தவ யோகத்தில் பொருந்திச் சிவத்தினை அறிகின்றவர்கள், அச்சிவத்தின் திருவருளால் சிவத்துடன் கூடலாம். இறைவனை, அவனது அருட்கண்ணால் உணர்ந்தவர்களன்றி வேறு எவராலும் காணமுடியாது. அரியும் அயனும் பலவூழிக்காலம் முயன்றும் அவ்விறைவனைக் காண முடியவில்லை.

மலரினிடத்து வாசனை பொருந்தியது போன்று, உயிரினிடத்துச் சிவமணம் பூத்தது. சிவனை, சித்திரம் போன்று அமைந்து உணர்ந்தறிகின்றவர்கள் சிவமணம் பூத்தமைந்தவர்கள் ஆவர். இறைவனை உள்ளத்தே வைத்து, சிந்தை தெளிந்தால் இருள்நீங்கும்; பிறவியையும் ஒழிக்கலாம். எந்தச் செயலையும் இறைவனையே விரும்பிச் செய்கின்றவர்கள் உண்மைத்தவத்தராவர்.

அகத்தவயோகத்தினைச் செய்பவர்கள் வீடுபேறு அடைவர்; இறைவனது அருட்கண்ணால் காண்பவர்கள், அவ்விறைவனுடன் வேறறக் கலந்துநிற்பர். இவ்விதம் அடையப்பெறாதவர்கள் நரகம் அடைந்து துன்புறுவர். அரசர்கள், மாதவர்கள், சித்தர்கள், தேவர்கள், மூவர்கள் ஆகிய அனைவரும் சிவபிரானையே வழிபட்டு உய்ந்தனர்.

8. ஞானம்

(1467—1476)

ஞானத்தின் மேம்பட்டதான அறநெறி எந்நாட்டிலும் இல்லை; ஞானத்தின் மேம்பட்டதான வேறொரு சமயமும் இல்லை; ஞானமே முத்தி அளிக்கவல்லது. மாந்தரில் சிறந்தவர் ஞானமுடையோரே. அந்தக்கரணங்கள் சுத்தமாக இருப்பதே சன்மார்க்கமாகும்.

இறைவனிடத்துக் காதல்கொண்டு ஒழுகினால், சிவத்துள் ஒடுங்கி, தானே சிவமாக விளங்கலாம். இதுவே சிவயோகமாம். சிவஞானம் உணர்ந்தோர் சிவஞானியர்; அவர்கள் நிட்டைகூடியிருக்கும் இடம், சிவன் எழுந்தருளியிருக்கும் இடமாகும். ஆன்மாவினிடத்து அடங்கியுள்ள ஞானம், அறிவினால் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும். சிவஞானியர்களுக்கு யோகம் கைகூடுவதோடு, சந்திரமண்டலத்து அமுதமும் பெருகும்; சிவமும் தோன்றும்.

ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் நான்கும் ஞானிக்கு உரிய பண்பாகும். ஞானத்தின் மேலான மோனநிலை அடைந்தவர்களுக்கு இவைபொருந்தா.

ஞானத்தில் ஞானமாவது, யான் என்னும் செருக்கு நீங்கலாகும். ஞானத்தில் யோகமாவது, முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த அருள்வெளியில் காணும் சிவப்பிரகாசமாகும். ஞானத்தில் கிரியை, திருவடிப் பேற்றினை நாடுவதாகும். ஞானத்தில் சரியை, அனுபவிகள் சொல்வதைக்கேட்டு ஒழுகுதலாகும்.

ஞானத்தின் நான்கு படிகளையும் மேற்கொண்டவனே புண்ணிய பாவங்களை - நல்வினை தீவினைகளைக் கடந்தவனவன்; அவனே சிவப்பேற்றினனும் ஆவன். தன்னைக் காண்பது, சிவத்தோற்றம் காண்பது, சத்திநிபாதம், ஞானாசாரியனது திருவடி மறவாமை இந் நான்கும் சிவஞானத்தில் நிகழும் சமய விசேட நிருவாண அபிடேகங்களாம்.

9. சன்மார்க்கம்

(1477—1487)

கோபம் முதலிய ஆறு பகைகளையும் ஒழித்த சிவயோக சித்தர்களே, கூத்தப்பிரானின் திருவடியடையும் சன்மார்க்கம் உணர்ந்தோராவர். நந்தியெம் பெருமான் வகுத்தருளிய குருநெறியே சிவநெறியாகிய சன்மார்க்க நெறியாகும். சிவகுருவின் பக்தியினாலே சிவனது திருவடிப்பேறு கிட்டும். குருபக்தியானது குருவினைக் காண, வழிபட, நினைக்க, திருவடியினைத் தொட, புகழினைக் கூற ஆகியவைகளால் உண்டாவதாகும்.

சன்மார்க்கவழியாக முப்பொருள்களின் உண்மை தெளியாதவர்கள் சிவனை அறியமாட்டார்கள்; உயிர்களும் சிவமாக ஆகமாட்டா. மேலும், அவர்கள் பிறப்பையும் அறுக்கமாட்டாதவர்களாவார்கள்.

எப்படிப்பட்ட மார்க்கத்தினருக்கும் இயல்பான சிறந்த உண்மைகளாவன :- சன்மார்க்கநெறியினருக்கு நல்லாரிணக்கமும், அவர்கள் சேர்ந்துவாழும் இடமுமே சிறந்தனவாம். அவர்கள் வாழும் இடமே இறைவனை வழிபடும் திசையாகும். அவர்கள் இருப்பே இறைவன் திருவுருவ இருப்பாகும். அவர்களே தெய்வமாகும். அவர்களைக் காண்டலே தரிசனக்காட்சியாகும்.

ஆணவப் பழமலப்பாசமும், வினையும், பிறப்பும் இறப்பும், மூலப்பகுதியும், பதி பசு பாசங்களின் உண் மையை உணரும் ஞானமுமாகிய இவைகளின் பேதங் களையும், ஆன்மாவையும் ஆராய்பவரே சன்மார்க்கத் தோராவர். பதியுடன் கூட்டிவைப்பதும், ஆன்மாவி னது இயற்கை உருவத்தைத் தோன்ற வைப்பதும், இறைவனது திருவடியின் கீழ் இருக்கச்செய்வதும் சன்மார்க்கமேயாம். மேலும், அந்தச் சன்மார்க்கமே நல்வழியையும் அடையச் செய்யும். அந்நன்னெறியே சித்தயோகமும் ஆகும்.

10. சகமார்க்கம் (தோழமைநெறி)

(1488—1494)

தோழனைப்போன்று பக்திசெய்யும் நெறியே சக மார்க்கமாகும். நன்னெறியன்றி ஏனைய நெறிகளில் உழல்பவர்கள் பிறப்பு இறப்புக்களுக்கு ஆளாவர்.

ஆதாரங்கள் ஆறு ; சூரியமண்டலம், சந்திரமண் டலம், அக்கினிமண்டலம், சமனை, உன்மனை, அதீதம் என்னும் நிராதாரங்கள் ஆறு : ஆகிய இப்பன்னிரண்டு நிலைகளையும் மேற்கொள்ளாதவர்கள் குருவருளையும் இறையருளையும் அடையமாட்டார்கள். இவர்களைத்

திருமகள் காணவும் அஞ்சுவாள்; இவர்களுக்குக் குடும்பம், மோட்சம் ஆகிய இரண்டும் இல்லை ; அழகையும் உறவையும் இழப்பவராவார்கள்.

சகமார்க்கத்தில் மேம்பட்டவர்கள் எல்லாச் சித்திகளையும் பெறுவார்கள். அவர்களே சித்தரெனப்படுவர். யோகமும் போகமும் யோகியருக்கு அடைவனவாகும். யோகத்தால் சிவ வடிவமும், போகத்தால் புருஷார்த்தங்களையும் பெறலாம்.

11. சற்புத்திரமார்க்கம்

(1495—1501)

சற்புத்திரமார்க்கம், சசமார்க்கத்தை நிலைநாட்டுவதாகும். யோகம் புரிவதும், மனையிலிருந்து இல்லறத் தவம் செய்வதும் சன்மார்க்கத்தின் அடிப்படையாகும். பூசனைசெய்தல், சாத்திரங்களோதுதல், துதித்தல், ஜபம்செய்தல் ஆகிய இவைகளைச்செய்தலே நல்ல தவமாகும். உண்மை பேசுதல், பொறுமையின்மை இவையிரண்டும் மேற்கொள்ளவேண்டிய தூய்மைகளாகும். இறைவன் திருவுருவினுக்கு அன்புடன்செய்த அன்னத்தை நிவேதித்தல், அபிடேகித்தல், மற்றும் இவை போன்றவைகளைச் செய்தல் சற்புத்திரமார்க்கமாகும்.

வண்டுகளும் அன்னங்களும் முறையே புட்பங்களையும் தாமரைகளையும் தேடி அலைவதுபோல, மெய்யடியார்கள், பஞ்சாட்சரத்துடன் அருச்சனைக்காக புட்பங்களைக் கொய்வது கண்டும் சிலர் செந்நெறியில் சேராமல் பின்தங்குகின்றார்கள். 'சிவபிரானது திருவடி நிழலே, பிறவிக்கடலை நீந்திக் கரையேறும் அரிய கரை

ஆகும். அவனது ஆணையே எல்லையாகும். ஆதலால் சிவனே உயிர்களுக்கெல்லாம் வேந்தனுவன்.

வேடத்தால் சிறந்து விளங்குதல், இறையடிபணிதல், உள்ளம் உவத்தல், பஞ்சாட்சரத்தை ஸ்மரித்தல், அரனடிக்கு அன்புசெய்தல் ஆகிய இவைகளையுடையோரே சற்புத்திரமார்க்கராவர். அவர்களே பிறவியையும் வென்றவராவர். இறைவனும் அவர்களுக்கு முன்னின்று அருள்வழங்குவான். ஆணவமலப்பாசம் இவர்களைவிட்டு அகலும். மோட்சமும் கைகூடும்.

12. தாசமார்க்கம் (அடிமைநெறி)

(1502—1506)

அடியார்களிடத்தில் பணிவு, ஆலயங்களில் விளக்கெரித்தல், பூக்கொய்தல், மெழுகல், திருவலகிடுதல், துதித்தல், ஆலயத்துள்ள மணியடித்தல், திருமஞ்சனங் கொணர்தல் முதலிய தொண்டுசெய்தல் தாசமார்க்கம் - அடிமைநெறியாகும். அடிமைநெறியில் உள்ளவர்கள், எப்போதும் இறைவனையே வணங்கவேண்டும்.

இறைவனது ஆயிரம் நாமங்கள் சொல்லி, வழிபடுகின்றவர்களுடைய உள்ளத்துள்ளே இறைவன் எழுந்தருளி அறிவிக்கின்றவனுவன். இறைவனுக்குத் திருத்தொண்டு செய்யாதவர்களே பிறவித் துன்பத்தில் அழுந்துபவர்களாவார்கள்.

13. சாலோகம்

(1507—1508)

சரியையினுல் சாலோகம் - சிவ உலகம் பெறலாம். நான்குதீட்சைகளும் பெற்றவர்கள் (சமயம், விசேடம்,

நிருவாணம், அபிடேகம்)முறையே நமசிவய, சிவயநம, சிவயசிவ, சிவசிவ என்னும் பஞ்சாட்சரத்தால் தங்கள் உள்ளத்தைக் கோயிலாகக் கொள்ளல் வேண்டும்.

14. சாமீபம்

(1509)

செயலற்றபாசம், பசுப்போல நெகிழ்ச்சியுறும்நிலை சாலோகமாகும். பாசம் வருத்தும் தன்மையற்றநிலை சாமீபம் ஆகும். பாசம் தோற்றத்தளவில் மாத்திரம் நிற்பது சாருபம் ஆகும். பாசம் அற்று ஒழிதல் சாயுஜ்ஜியமாகும்.

15. சாருபம்

(1510—1511)

சாருபமானது அட்டாங்கயோகங்களாலமைந்த யோகநெறியால் அடைவதாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சன்மார்க்கத்தாலன்றிச் சாருபம் கைகூடாது. சிவயோகியர்கள் சித்திப் பயிற்சி பெற்றவர்களாவார்கள்.

பொன்மலையைச் சேர்ந்த எவையும் பொன்னுரு மாறுபோல இறைவன் எழுந்தருளியிருக்கும் கயிலையை அடைந்தவனும் (ஞானியும்) அந்தப் பொன்நிறத்தை அடைவன்.

16. சாயுஜ்ஜியம்

(1512—1513)

சைவம், சிவனுடன் தொடர்புற்று நிற்றல்; சிவ நெறியின் உண்மை தெரிந்து சிவனது சமீபத்தில்

சார்ந்துநிற்றல்; இரண்டறக்கலந்து நிற்றல் ஆகிய இந்நிலைகளே திருவடிப்பேறு என்கின்ற சாயுஜ்ஜிய மாகும்.

17. சத்திநிபாதம்

(1514—1529)

மந்ததரம் :- அஞ்ஞான இருள் படர்ந்த சரீரத் துள்ளே அறிவை விளக்கும் திருவருட்சத்தியானவள் ஓர்மூலையில் மறைந்திருந்தாள். அஞ்ஞானமுள்ள ஜீவ னைக் கூடுதல்வேண்டி அவனுக்கிருந்த அறியாமையை நீக்கித் தெளிவுண்டாக்கித் தன்னிடத்துப் பேரன்பு கொள்ளும்படிச் செய்து, அவனிடத்தில் சிவமணம் கமழும்படி அத்திருவருட்சத்தியானவள் பொருந்தி யிருந்தாள்.

சிவனடியின்பமாவது, திருவடிஞானத்தை உணர் கின்றவர்களுக்குச் சிவ அமுதமாக இருக்கும். இத் தெளிவுடையாருக்கே சிவஞானமானது அகத்தே விளங்கும். உயிரின் மல இருளைப் போக்கி, அவ்வுயிரி னுக்குப் பல பிறவிகளையும் கொடுத்துச் செலுத்தி, கிரியாசத்தியானவள், திருவருள் நீங்காதபடி உடன் இருந்து அருள்புரிவாள். அஞ்ஞான இருள் படர்ந்த சரீரத்தினிடத்துத் திருவருட்சத்தியின் பிரகாசத்தால் சிவப்பொருளைக் காணலாம்.

மந்தம் :- உயிர்கள், தன்னிடத்து விருப்பம்கொள் ளும்படிச் செய்தவளும், மலப்பிணிப்பால் மயங்கிக் கிடந்த மயக்கத்தை நீக்கியருளினவளும், திருவடி யின்பத்தை அருளினவளும், ஞானக்கண்ணை அளித் தருளியவளும், சிவஞானத்தைப் பதித்தருளினவளும்

அத்திருவருட்சத்தியேயாவள். திருவருள்நெறிச் செல்லும் கருத்துள்ளவர்கள், பிறப்பு இன்றிச் சிறப்புடன் வாழ்வார்கள்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தலாகிய நான்குதொழில்கட்கும் இறைவன் முறையே செம்மை, கருமை, வெண்மை, பசுமையாகிய இந்நிறங்களை மேற்கொண்டு அவ்வத்தொழிலில் வேறுவேறு பெயருடையவனாக உள்ளான். இதனை அறிந்தவர்கள் அவனது திருவடியினை அடைவார்கள். பலவூழிகள் கழிந்தாலும் உலகினுக்கு அம்மையும் அப்பனுமே முதல்வராவர். இறைவன், தன்னை வணங்குகின்றவர்களுக்கு, தான் சின்முத்திரையுடன் இருப்பது, அவர்களை யோகம் செய் என்று கூறுவதுபோல உள்ளதாகும்.

இறைவனது திருவடியிணையை, சரியையாதி நான்கினுள் ஞானவகையில் நின்று கண்டவர்களுக்கு அவன், முன்னின்று இருள்நீக்கி ஆண்டருளுவான்.

தீவிரம் :- நெஞ்சகத்துள்ளே இருக்கும் எல்லா வினைப்பயன்களையும் திருவருட் சத்தியானவள் நீக்குவாள். நீக்கம் பெற்றதும் சிவம் கண்முன்னே தோன்றும். சத்தியே, தம்மைப் பூஜிக்கும் அடியார்களுடைய பிறப்பை அறுத்து, சரியை முதலான பெருந்தவத்தை அளிப்பாள்; இடையறாத சிவசிந்தனையையும் அளிப்பாள். திருவருட்சத்தியே தியானிக்கின்றவர்களுக்கு அருள்புரிவாள்.

தீவிரதரம் :- புண்ணிய பாவங்களில் சம உணர்வு உண்டாகும் காலத்தில் திருவருட்சத்தியானவள் குருவடிவாக வந்து, மயக்கக் குணங்களை நீக்கித் திருவடி

ஞானத்தை அளிப்பாள். அந்த ஞானத்தால் தன்செயலறும்; ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமும் அழியும்; அப்போது அவ்வுயிர், 'சிவன் அவன்' என ஆகும். இறைவன், ஆன்மாக்களுக்கு உயிர்க்கு உயிராய் நின்று திருவடி ஞானத்தை விளக்கும் பொருட்டு, தானே முதல்வன் என நெஞ்சுள் நிற்பவன் ஆவன்.

18. புறச்சமயதூடணம்

(1530 — 1549)

அறுசமயத்தவர்களும், உள்ளத்துள் எழுந்தருளியிருக்கும் இறைவனைக் காணமாட்டார்கள். ஆதலால், அவர்கள் மீண்டும் பிறவியில் அழுந்துவர் ; பிறப்பால் மனைவி மக்கள் என்னும் பாசத்தில் தடுமாறி உழல்வர். இறைவன் ஒன்பது ஓட்டைகளையுடைய நிலையில்லாத சரீரத்துள்ளே புகுந்து நிற்கின்றான். உயிர்களின் பக்குவம் கண்டு வெளிப்படுவோனாகிய அவனது உண்மைக் கருத்தினை எவரும் எளிதில் அறிந்துகொள்ளமாட்டார்கள். அவ்விறைவன் உள்ளத்தும் புறத்தும் உள்ளான் என்று வழிபடுவாருக்கு வெளிப்பட்டு அருள்புரிவான். இரு இடத்தும் இல்லை என்பாருக்கு அப்பெருமானால் நன்மைகள் ஏதும் இல்லையாம்.

புறச்சமயத்தவர்களும் சமயங்கடந்தவனான இறைவனைக் காணவில்லை ; அப்புறச்சமயத்தவர்களால் கூறப்படும் பொருளும் அப்பெருமான் அல்லன். இதனை ஆராய்ந்து தெளிந்தால் மோட்சமாகிய பேரின்பவீடு அடையலாம். சிவபெருமானையன்றி வேறு ஒரு முழுமுதற்கடவுள் எங்குமில்லை. சரியை கிரியை யோகம் ஞானம் அல்லாமல் வேறு சிறந்த தவமுமில்லை.

அகச்சமயத்தார்களும் தாங்களே தேவராக விரும்பியதால், ஆசையினின்றும் விடுபடாதவர்களாய் மீண்டும் பிறப்பையே அடைகின்றனர். சரியை முதலான நான்கு நெறிகளே சிவகதியாகும்; ஏனைய நெறிகளெல்லாம் பிறவிக்குள் அழுத்துவனவாகும். எல்லாச் சமயங்களும் கூறும் பொருள்களையெல்லாம் கடந்து மேலாக உள்ளது சிவநெறி ஒன்றேயாகும்.

இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான். மக்கள் மலத்தில் கட்டுண்டதால் அவனை நினைக்கவில்லை; தொழவும் இல்லை. அதனால் எக்காலத்தும் பிறந்து இறந்தே உழல்வார்கள்; இவ்வீணர்கள், கத்துகின்ற கழுதைக்கு ஒப்பாவார்கள். இறைவனை ஒருமைப் பாட்டுடன் தியானிக்கின்றவர்களுக்குப் பிறப்பு அறும்; திருவடிப் பேரின்பமும் கிட்டும்.

இறைவன், பிரணவத்தினிடமாக இருந்து வெளிப் பட்டு அருள்பவன். அவனது ஆணைப்படியே எவையும் அழிவுறும் என்பதனை அறிபவர்களே நன்னெறியினை உணர்ந்தவராவர். அவர்கள் தீநெறியின் வழிச் செல்லமாட்டார்கள். தவத்தினர்கள், சிவபிரானே முதல்வன் என்று கூறுவார்கள். அவனைக் கைகூப்பித் தொழுதால் உடனுய்நின்று அருள்புரிவான். ஆருயிரின் உள்ளம் புகுந்த சிவபிரானை உணராதொழிந்தால் வீடு பேறு கைகூடாது. இறைவனாலருளிச்செய்யப்பட்ட அறநெறியே சன்மார்க்கமாகும். இறைவன் திருவருளை நாடினால், மலமாயை குற்றங்கள் நீங்கப்பெற்று, அவனது மெய்ஞ்ஞான இன்பவடிவைப் பெறலாம்.

தேவர்களும் முனிவர்களும் நன்னெறியாகிய சிவ நெறியை மேற்கொண்டே இறைவனுடைய திருவடி

அடைந்தனர். மாறுபட்ட நெறிகளை மேற்கொண்டால் இறைவன் திருவருளைப் பெறமுடியாது. இறைவன் திருவடியை அடையத்தகுந்த மார்க்கத்தினை அறிவதும், பிரானை அறிவதுமாகிய ஞானம் ஏற்பட்டால் எந்நெறியினரிடத்தும் விரோதம் இல்லை. இறைவனது திருவடிக்கு அடிமையாய் உறைபவர்கள் பிறப்பறுப்பார்கள். நன்னெறியில் சென்றவர்களுக்கு இறைவன், அப்பொழுதே முன்னின்று அருளுவன்.

19. நிராசாரம்

(1550—1556)

தேவர்கள், அவரவர்கள் நிலைமைக்குத்தக்கபடி ஆறு சமயங்கள் பெற்றனர்; அவ்வவற்றிற்குரிய நூல்களையும் ஓதினர். இறைவனும் அவர்களுடன் கலந்து நின்றருளினான். இறைவன் திருவடிகளை மனத்திற் கொண்டு தியானிப்பவர்கள், இவ்வுலகிலுள்ள சிறந்த மனிதராவர். அல்லாதவர்கள் உலகில் துன்புறுவர். நன்னெறியல்லாத வழியில்சென்று துன்புறுபவர்களும் மனித இயல்பினின்று நழுவினவர்களும் இறைவனுக்குத் தொண்டுசெய்து அவனைத் தியானிப்பார்களானால், இறைவன், அவர்களுக்குத் துன்பம் நீங்கும்படி அருள் செய்வன்; பிறப்பையும் அறுப்பான்.

இறைவனைத் தமக்குப் புறம்பாக நினைப்பவர்கள், துணையாகவுள்ள அவ்விறைவனது நினைப்பில்லாதவர்கள் ஆவார்கள். உலகஞானம் உடையவர்கள் உலகப் பயன்களை அனுபவிப்பர். அஞ்ஞானிகள் அடிக்கடி செத்துப் பிறப்பர். சிவத்தை உணர்ந்தவர்கள் இறைவனடி சேர்வர். தோணியாகிய சிவபிரான்திருவடியைத்

தியானிக்கின்றவர்களுடைய சரீரமானது பொன்மய மாகும். தத்துவக் கூட்டங்களும் நீங்கும். இந்தக் கருத்தினை அறிந்திருந்தும் தீவினையாளர்கள், சிவபிரான் திருவடியைச் சேருமாறு நினைக்காதவர்களாய் இருக் கின்றூர்கள்.

இறைவன், தன்னை அன்புடன் நினைக்கின்றவரது உள்ளத்தில் பொருந்தி மனேமையனுக விளங்குவான். அறிவிலிகள் இதனையறியார். இறைவனைத் தொழுதால் அவனடி சேர்ந்து இன்புறலாம். ஓங்காரத்தினுள்ளே ஜோதிவடிவமாக இருக்கும் சிவபிரானது திருவருளி ஞல் ஆங்காரம் நீங்கி, சிவனடி இன்பம் துய்க்கலாம். புறச்சமயங்களில் உழல்பவர்களுக்குப் பிறப்பும் இறப் பும் மாறிமாறி வரும்.

20. உட்சமயம்

(1557—1572)

தேவர்களையும், மக்களையும், அறுவகைச் சமயங் களையும் தோற்றுவித்தவன் சிவபிரானே ஆவன். ஆறு சமயங்களும் இறைவனையடைய ஆறு வழிகளாகும். இதனை அறியாமல், நன்றிது தீதிது என்று வாதுசெய் பவர்கள், மலையைப்பார்த்துக் குரைக்கும் நாய்க்கு ஒப்பாவார்கள். இறைவனைக் காதலால் வந்து கழல் பணிந்தால் உய்யலாம். உயிர்களுக்கு அருள்செய்ய வல்லவன் சிவபிரானே என்று உணர்பவர்களுக்கு, சமயங்கள்தோறும் அவ்விறைவனே நின்று பயனளிப் பவன் ஆவன்.

புண்ணியம் ஒன்றே ஆறு சமயங்களுக்கும் பயனு கும். சன்மார்க்கத்துக்குப் பயனுவது, அவரவர்களின் ஞானத்திற்கு ஏற்பச் சிவப்பேற்றினை அளிப்பதாகும்.

உயிர்களின் ஞானத்திற்கேற்றபடி பயனளித்து ஆட்கொள்பவள் திருவருட்சத்தியே ஆவள். சலிக்கின்ற மனத்தை அடக்கி ஒருநிலையில் நிறுத்தி 'சிவய சிவ' என்று ஓதினால், சிவ ஒளியானது உள்ளொளியாகத் தோன்றும்.

மின்னல் போன்ற ஒளியுடையவனும், சிவாக்கினி உருவமானவனும், சகுணத்திருமேனி உடையவனும், ஆகிய ஞானக்கொழுந்தாகிய சிவபிரானை, அருட்கண்ணால் காண்பதே அரன்நெறி - சிவநெறியாகும். இத்தவம் அத்தவம் என்று பிரித்துப் பேசும் பித்தர்களைக் கண்டு சிவபிரான் சிரித்தருளுவார்.

ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து முகங்கள் சிவபிரானுக்கு உண்டு. அவ்வைந்து முகங்களுடன் அதோமுகத்தையும் சேர்க்க முகங்கள் ஆறாகும். அப்பிரான், அயன் அரி முதலியவர்களின் சிரமாலைகளையும் பூண்டுள்ளார். நாம், சிவபிரானுக்கு அன்புடையோராவோம். சிவபிரானே உலகளந்த திருமாலாகவும், கடலாகவும், உயிர்களாகவும் நிற்பன்; திருவருட்சத்தியுடனும் நிற்பன். அத்திருவருட்சத்தியே ஒடுக்கத்தைச் செய்யும் இறைவனாகவும் ஆவள்.

தேவர்களும் வித்தியாதரர்களும் ஆய்ந்து அறிய முடியாதவண்ணம் கடந்துநின்றது சிவநெறியாகும். மக்களாகப் பிறந்தவர்கள் வீடுபேறடையும் வழிவகைக்கே அகச்சமயம் ஆறினையும் இறைவன் அருளிச் செய்தான்.

ஐந்தாம் தந்திரம் முற்றிற்று

ஆறும் தந்திரம்

1. சிவகுருதரிசனம்

(1573—1589)

சிவகுருவாக எழுந்தருளிவருபவர் சிவபிரானே ஆவர். அக்குருவே நடராஜப்பெருமானும் ஆவர். அட்டமாசித்திகளும், அத்துவசோதனையும், இறைவனின் எட்டுக்குணங்களும், அட்டாங்க யோகங்களால் அடையும் வல்லமையும், மந்திரவல்லமையும், ஞானமும் பக்தியும் ஆகிய இவைகளெல்லாம் சிவகுருவின் அருளால் கைகூடுவனவாம்.

குருவானவர் சுத்தசிவமே ஆவர். சிவகுருவானவர், பசுவினது (ஆன்மாவினது) தளையாகிய பாசத்தை உபதேசத்தால் மாற்றியருளுவர். அதனால் பசுவானது திருவடிப்பேரின்பம் பெறும். மேலும், அக்குருவானவர் உயிர்களின் மலத்தைப்போக்கித் தூய்மைசெய்து திருவடி தீட்சையினைச் செய்தருளுவார். மூடர்கள் இதனை அறியாமல், அக்குருவும் நம்போன்ற மனிதர் தானே என்பர். புண்ணியசீலர்கள், சிவனே இக்குரு என்று அக்குருவின் திருவடியை வணங்குவர்.

சிவகுருவானவர் அஞ்ஞானத்தைப் போக்குவர்; அஞ்ஞானம் நீங்கியதும் உண்மை போன்று காணப்படும் உலகமாயா வலிமையும் புலனாகும்; அறுபத்து நான்கு சித்திகளின் மயக்கமும் நீங்கும். சிவகுருவே சிவஞானியாவர். அவர் சிவபெருமானே என்று அவரது

திருவடி வணங்குகின்றவர்களுக்கு உடல் தூய்மையுறுவதுடன் முத்தியும் கைகூடும். சிவபிரான், உயிர்களுக்கு உள்நின்று உணர்த்தியருளுவதால், சித்தமானது எல்லாப்பொருள்களையும் உள்ளபடியே உணரும்; அவ்வுணர்வால் பசுகரணங்களெல்லாம் பதிகரணங்களாதலால் இறைவனும் உயிரும் ஒன்றாகவே அமர்ந்திடும். இறைவன், சிவகுருவின் வடிவாக வந்து அருள் புரியாவிடின் எவராலும் எதையும் உணரமுடியாது.

பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் திருவடி கூடுதற்கு வாயில்களாகும். இவைகளால் சிவோகம்பாவனை உண்டாகும். சிவோகம்பாவனையால் மோட்சத்திற்கு வித்தாகிய திருவடிஞானம் திருவருட் சத்தியால் உண்டாவதாம்.

சிவமாகச் செய்யும் ஞானம் சிவஞானமாகும். அச்சிவஞானத்தால் உயிர்களின் அறிவு தெளிவடையும். அறிவு தெளிவதால் சித்திகள் கைகூடுவதுடன் வீடுபேறும் கிட்டும்.

2. திருவடிப் பேறு

(1590—1604)

அன்புடன் இறைவனைத் தொழுதால் அவ்விறைவன் சிவகுருவாக வந்து மும்மலங்களும் அகலும்படித் தீக்கையினைச் செய்வர். அதனால் அவருடைய திருவடிகள் ஆன்மாக்களின் உள்ளத்தே இடம்பெற்று நிலைபெறும். அப்படி உள்ளத்தே திருவடிகள் பதிந்த போதே, பொறி புலன்களுக்கு அடிமையாய்க்கிடந்த ஆன்மா, அப்பொறி புலன்களை அடிமைப்படுத்தும்

தலைமையைப்பெறும்; அறியாமையினின்றும் நீங்கும். சீவன் சிவன் என்கின்ற வேறுபாடும், பிறப்புக்கு ஏதுவான உரையும் உணர்வும் அகலும்.

இறைவன், தூலம் சூக்குமம் காரணம் என்னும் உயிர்களின் மூவகைச்சரீரங்களையும் தனது உடைமையாக ஆக்குகின்றான்; உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் காணிக்கையாகவும் ஏற்றுக்கொள்கின்றான். மனத்தினிடத்தும் கண்ணகத்தும் சிரத்தும் திருவடியைப்பதித்த இறைவன், ஆன்மாக்களுக்குத் திருவடிப் பேறுகிய கதியமைத்த விதமும், வேதாகமங்களில் விதிகளையமைத்த விதமும் அவ்விறைவனது அருளால் அல்லாமல் சிற்றறிவு உடைய உயிர்களால் வெளிப் படுத்திக் (விரித்துக்) கூற முடியாததாகும். திருவடி தீக்கையினையும் திருநோக்கத் தீக்கையினையும் செய்யும் இறைவனைச் சிவகுருவடிவில் காணலாம்.

உயிர்களை மும்மலக்கட்டினின்று விடுவிப்பதும், திருவருட்சித்திகளை அடைவிப்பதும் சிவலோகவாழ்வினைக் கூட்டுவிப்பதும் திருவடிஞானமே ஆகும். திருவருள் ஆணையின்வழி உயிர்கள் ஒழுகாவிட்டால் பழவினைகள், உள்ளத்தை மயக்கி ஆசையுள் வீழ்த்தி, பிறப்பு இறப்புக்களில் ஆழ்த்தும். சிவனடியார்கள் பெறும் இன்பவாழ்க்கை மன்னர்களுக்கும் இல்லை. நன்னெறிச் சென்றால் இறைவன் திருவடியடையலாம். முனிவர்களும், இறைவனது திருவடிகளைத் தமது முடிக்கு ஆபரணமாக அணிந்துகொண்டுள்ளார்கள். மந்திரம், மருந்து, நூலுணர்வு, தானம், அழகு, தூய நெறி ஆகிய இவையனைத்தும் இறைவனின் திருவடியிணைகளேயாம்.

3. ஞாதுரு ஞான ஞேயம்

(*காண்பான், காட்சி, காட்சிப்பொருள்.*)

(1605—1613)

சிவானந்தத்திலே அழுந்தி நிற்போமாகுல் ஆணவ மலம் தொடராது; தொடர்ந்தாலும், ஆங்காரம் நீங்கித் திருவருள் நினைவாகவேயிருந்து பேரின்பப்பெருவாழ்வு அடையலாம். உண்மைப்பொருளை ஆராய்கின்றவர்களுக்கு, சிவஞானம் முதலியன நிலைபெறும். மெய்ப் பொருளை அறிந்த ஆன்மாவின் அறிவே முத்தியைக் கொடுக்க உதவியாகும்.

உயிர்களைத் தன்வழி இழுத்துத் தடுமாற்றம் அடையும்படிச்செய்யும் முப்பத்தாறுதத்துவங்களையும் களைந்து, ஆவியை இறைவன் திருவடியில் நிலைப்பிக்கச் செய்வதுதிருவடிஞானமேயாம்; அப்போதுஉயிரானது சிவமாம் பெருவாழ்வடையும். பிறப்பு இறப்பாகிய அச்சத்தைப்போக்கி ஆண்டுகொள்பவன் இறைவனே யாம். தீக்கை பெறுமுன்னம் அறியவேண்டிய உண் மைகளை அறியாதிருந்த அறிவிலார்க்கு, சிவதீக்கை பெற்றுப் பாசம் ஒழிந்தபின்பு, அறிதலும் அறியாதிருத் தலும் ஆகிய தன்மையைச் சிவன் நீக்குகின்ருன்; உயிரையும் சிவமாக்குவான்.

ஞானக்கண், உபதேசம், சிவயோகம், அடிமைத் தன்மை, திருவடி ஞானம் ஆகிய இவைகளை அருளு பவன் இறைவனேயாம். மோனநிலை கைவரப்பெற்ற வர்களுக்கு முத்திப்பேறு கிட்டும்; அநேக சித்திகள் கைகூடும்; அசபையும் சித்திக்கும்; பஞ்சகிருத்தியமும் இறைவன் அருளால் செய்தல் கூடும். காண்பான்,

காட்சி, காட்சிப்பொருள் என்னும் மூன்றினையும் திருவருளால் உள்ளத்தே கொள்கின்ற மெய்யுணர்வுடையோனாகிய சிவஞானியே, இறைவன் திருக்கூத்தினைத் தரிசித்துத் திருவடியடைவன்.

4. துறவு

(1614—1623)

உண்மைஞானம் பெற்று, பிறப்பு இறப்பு நீங்குதலே துறவுநிலை ஆகும்; இறைவனது திருவடிகளை மறவாமல் துதிப்போர்க்கு அவ்விறைவன் முத்தியுலகை அளிப்பன். உயிர்களின் மல இருள் நீங்கும்படி உயிர்க்குயிராய் மறைந்துநின்று, பின் பரிபாகத்தால் வெளிப்பட்ட இறைவன், சிவகுருவாக வந்து ஆட்கொள்வான். அப்போது அவ்வுயிர், சிவத்தை விரும்பித் துறவெய்தி அருட்சுடராக விளங்கும். இல்லறநெறி நிற்பார்க்கு இல்லறங்கொண்டவனையும், துறவிகளுக்காகத் துறவுநிலையைக் கொண்டவனையும், எவரும் இல்லாத தனியனையும், காட்டினிடத்தே வசிப்பவனையும், பிச்சையெடுத்து உண்பவனையும் துறவிகளுக்குப் பிறவியறுப்பவனையும் உள்ளவன் சிவபிரானேயாம்.

அறநெறியிலே செல்லாதவர்கள் துன்பத்தால் வருந்துவார்கள். சிவகுருவால் ஆட்கொள்ளப்பட்ட உயிரானது பிறப்பு இறப்புக்களினின்றும், ஐம்புல ஆசைகளினின்றும் நீங்கி இறைவன் திருவடியடையும். சரியை முதலானவைகளில் பயிலும் பக்குவன் செய்யும் தொண்டானது அருட்தொண்டாய்த்திகழும். இயற்கைத் துறவியாகிய சிவபிரான், மெய்யடியார்களுக்கு அருட்பெருஞ்ஜோதியாய் விளங்குவன்; யோகப்

பயிற்சியாளருக்குத் தோழனுவான்; சிவஞானமுடையோருக்கு உருவத்திருமேனிகொண்டு அருள்புரிவான்; உலகப்பற்று அற்றவர்க்குத் திருவடிப்பேறளிப்பான்.

ஆன்மாவிற்கு நாகம்போன்றதான உடம்பு ஒன்று; அதன் ஐந்து படங்கள் போன்றதான ஐம்பொறிகள்; அப்பொறிகளின் வாயிலாக அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயன்களையும் உயிர் அனுபவிக்கும். அவ்வான்மாவின் அகமாகிய உள்ளப் புற்றினிடத்தே சிவன் உறைவான்.

பராசத்தியானவள், சட்டைபோல உடம்பினைக் காத்தருளுவாள். பிராணுயாம முறையால் நடுநாடி வழியாக மேலேறி நோக்கினுல், உச்சித்துளையில் கோயில்கொண்டருளும் சிவபிரானின் ஜோதிஸ்வருபம் வெளிப்படும்.

5. தவம்

(1624—1632)

புலன்களின்வழிச் செல்லா நிலைமையுடையவரது உள்ளமானது எப்போதும் நடுக்கம் அடையாது; ஆயுளும் நீடிக்கும். அவர்களே பற்றற்ருனுகிய இறைவனைப்பற்றி, ஏனைய பற்றுக்களை அறுத்தவராவார்கள். ஆருயிர்களை மாயாகாரியமான உடலோடு கூட்டுவதாகிய உயிர்த்தோற்றமும், உடல் நிலைத்திருத்தற்கு வேண்டிய உலகமும் உலகியற்பொருள்களும் ஆகிய பெருநிலத் தோற்றமும், தவத்தின் பெருமையும் ஆகிய இவைகளெல்லாம் இறைவனது திருவருள் பெற்றவர்களுக்கே தெரியவரும்; மற்றவர் அறியமாட்டார்.

பிச்சையேற்றுண்ணும் பலர், பிறப்பு இறப்புக்களால் உண்டாகும் துன்பத்தினை அறியமாட்டார்கள். தவம் செய்பவர்கள் இம்மை மறுமைப் பயன்களையும் விடுபேற்றினையும் அடைவார்கள். சிவபிரான், பற்றறுத வர்களுக்குப் பாலில் நெய்போல மறைந்து நிற்பான்; பற்று அற்றவர்களுக்கு வெளிப்பட்டு அருள்புரிவான். அப்பிரான், பொன்போன்ற சடையினையும் திருமேனியையும் உடையவன். தவத்தினர்களே அப்பிரானை அணுகமுடியும்.

பெரிய வல்லரசுகளும் பகைத்தெழுந்து சண்டையுட்பட்டு மாண்டுபோவதைப் பார்த்து, அப்போது உண்டாகும் ஞானத்தால் அறிவுடையோர் தவத்தை மேற்கொள்வார்கள். அறிவை வெளிமுகமாகவிடாமல் இமைப்பொழுதாவது அகமுகமாக நோக்கினால், அப்பார்வை பசுமரத்தாணிபோல் உயிரின்கண் பதியும்; அப்பதிவால் பிறவி நீங்கும்.

ஞானம் வேண்டப்படுமாயின் தவம் வேண்டும்; ஞானசமாதியாகிய திருவடியுணர்வு கைகூடுமானால் தவங்கள் வேண்டியதில்லை. யோக ஞான நெறியில் நிற்பவர்களுக்கு எந்தத் தவமும் வேண்டாம்.

6. தவநிந்தை

(1633—1644)

உயிர்க்கு உயிராகிய சிவன், அவ்வுயிரினுள் விளங்கினால் எதையும் கற்கவேண்டியதில்லை. உடம்புள் உத்தமன் கோயில்கொண்டால் பக்தி வேண்டியதில்லை. 'தான் அவனாதல்' என்னும் சமாதி கைகூடினால் சாதல் வேண்டியதில்லை. புலன்களின்வழிச் செல்லாதவர்கள்

தவத்திற்காகக் காட்டைநோக்கிச் செல்லவேண்டாம். உண்மைப்பொருளை அறிந்து மனம் அடங்கினுல் எந்த நூலையும் கற்கவேண்டாம். சமாதி கைகூடின் மந்திரம் ஜபித்தல், பூஜைசெய்தல் முதலியன வேண்டாம். பற்றற்றபின் சுத்தம் வேண்டியதில்லை. தன்செயலற்றபின் ஆராயும் சித்தம் வேண்டியதில்லை.

உடம்பினுலாகிய பயனை உணர்ந்தவர்கள், உண்மைத்தவம் செய்வார்கள்; குரு உபதேசப்படி நடப்பார்கள்; சிவபுண்ணியம்செய்வார்கள். இதனையுணர்ந்தவர்களே மனிதரினும் தேவரினும் மேம்பட்டவர்கள் ஆவார்கள். சிவஞானிகளுடன் சேர்ந்து அவர் வழி நிற்கின்றவர்களுக்குப் பிறவி இல்லை. அவர்களுடைய ஏவலைக் கேட்டுத் தொண்டு செய்யின் இறைவன் திருவடியடையலாம்.

மனமாகிய உறையிலிருந்து அறிவாகிய வாளை உருவி, காமம் முதலிய ஆறு பகைவர்களை அழித்து, 'தான் நான்' (சிவன், சீவன்) என்னும் பாவனையை அவ்வாளினுல் ஈர்ந்து, சிவோகம்பாவனை செய்து, ஐம்பொறிகளும் புலன்வழிச் செல்லாமல் தடுத்தால் சிவ ஒளியுடன் ஜீவ ஒளியைக் காணலாம்.

ஜீவனேடு இணைந்து நிற்கும் சிவபிரானைத் துதிப்பதும், மெய்யடியார்களை வணங்கித் தொழுவதும் ஆகிய இவைகளைச் செய்யின், மோட்சத்தை அளிக்கும் இறைவன் வெளிப்பட்டு அருள்புரிவான். சிவத்தன்மையையும் தந்தருளுவான். பூஜை செய்தல், திருமறை ஓதல் முதலியவைகளை, கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகும்படிச் செய்யல்வேண்டும். சிவனையே வேண்டிச் செய்யும் தவத்தை இன்பமெனக்கொள்ளும்

பக்தர்கட்குப் பிறப்பு முதலிய துன்பம் வராமல் காப்பவன் அச்சிவனேயாம். திருவருள் நூல்களை அருட்கண்கொண்டு கற்றுணராதவர்கள், பூமியில் பிறந்து சோற்றிற்கு அலையும் நிலையுடையராவர்.

தவத்தில் முதிர்ச்சியடையும் விதமும், தவத்தின் பயனை அனுபவிக்கும் விதமும், ஓடித்திரியும் பிராண வாயுவை அடக்கும் விதமும் உணரவல்லவர்களால் தான், சிவபிரானை நெஞ்சத்து நிலைநிறுத்தமுடியும். சிவ ஞானிகளின் இணக்கத்தால் எல்லாப் பேற்றையும் அடையலாம்.

7. அருளுடைமையின் ஞானம் வருதல்

(1645—1654)

சிவபிரானின் திருவருள் உண்டானால் செல்வம், ஞானம், பெருந்தன்மை, சிவமாம் பெருவாழ்வு ஆகிய இவைகள் தானே வந்தடையும். சித்தர்கள் ஐந்து கண்டங்களிலும் சஞ்சரித்து ஆங்காங்குள்ள பக்குவர்களுக்குத் தமிழ்த்தத்துவங்களைப் போதிப்பார்கள்.

புண்ணியத்தையும் பாவத்தையும் ஒழிக்கவேண்டும். அதாவது, மேற்கூறிய இரண்டிலும் பற்றற்று இருக்கவேண்டும். தவம் முற்றுப்பெறும் காலத்து இறைவன் எதிர்தோன்றி அருள் புரிவான். நன்மார்க்கத்தில் ஒழுகும் உயிர்களுக்கு, அவ்வுயிர்களுக்குள்ளே இறைவன் விளங்குவான். சிவபிரானின் திருவருளால் சிலர் தேவராவர்; சிலர், பூமியில் மானிடராக இருந்தாலும் அவர்கள் தெய்வத்துக்குச் சமானமாவார்கள். இவர்களை வினைகள் சேரமாட்டா. இவர்களுக்குச் சிவலோகவாழ்வு கிட்டும்.

இயமம் நியமம் முதலான ஒழுக்கங்களை மேற்கொண்டு சமாதியோகத்திலிருந்து இறைவன் அருள் பெற்ருல் சிவமாம் பெருவாழ்வு அடையலாம். இறைவனின் காட்சியால் உயிர்களனைத்தும் சிவத்தன்மை எய்தும்.

8. அவவேடம்

(1655—1660)

ஆடியும், பாடியும், அழுதும், தேடியும் இறைவன் திருவுருவத்தைக்காண்பதே பிறவிப்பயனாகும். பொய்த்தவவேடம் கொண்டு பிறரைப் பயப்படுத்துவது பிறவிப்பயனல்ல. பொய்த்தவ வேடம்கொள்வதால், நாட்டின் பெருமையும் நன்மையும் கெட்டொழியும். ஆதலால், நல்லவர்கள் அப்பொய்வேடத்தை நீங்கச் செய்வது நாட்டிற்கு நலந்தரும்.

நாட்டவர்கள்செய்யும் புண்ணியத்தால் இன்பமும், பாவத்தால் துன்பமும் நாட்டில் நிலைத்து நிற்கும். ஆதலால் நாட்டின் அரசன், பொய்வேடத்தாரால் நாட்டிற்குத் துன்பமுண்டாவதைக்கருதி, அப்பொய் வேடத்தாரை நாட்டிலிருந்துநீக்கினுல் மக்கள் இன்பம் பெறுவர்.

பொய்த்தவம் செய்பவர்கள் நரகம் அடைவர்; புண்ணியம் செய்தவர்களாகமாட்டார்கள். உண்மை ஞானத்தை மேற்கொள்ளுதலால் உண்மைத் தவப் பயன்கள் நிலைத்து நிற்கும். சாப்பாட்டிற்காகவே பொய்வேடத்தைக் கொள்கின்றனர்; உண்மைவேடம் பூண்டால் பலன் அதிகம் உண்டு என்பதை அப்பொய் வேடத்தார் உணரவேண்டும்.

9. தவவேடம்

(1661—1664)

நற்றவமிகுந்தவரே உண்மைச் சிவக்கோலமுடைய வர்கள்; பாவச்செயல் மிகுந்தவரே கொலைத்தொழில் புரியும் வனவேடராவர். சிவக்கோலமுடையவர்களே தவவேடம் தாங்கும் தகுதிபெற்றவர்கள். சிவயோகி யர்க்குச் சாதனங்களாவன:- விபூதி, செம்பொற்குண்ட லங்கள், பஞ்சாட்சரம் ஆகியவைகளாம். கோவணம், போர்வை, திருச்சடையில் மயிலிறகாலாகிய குல்லாய், உடம்பு முழுவதும் திருவெண்ணீறு, கையில் மண்டை ஓடு, வலக்கையில் பிரம்பு ஆகிய இவைகள் சிவயோகி யின் அடையாளங்களாம். மேலும், காதில் அணியும் குண்டலம், உருத்திராக்கக் கண்டிகை, பஞ்சாட்சரம், வெண்சங்கு, கப்பரை, திருநீற்றுமடல், பாதக்குறடு, ஆசனம், யோகபட்டம், யோகதண்டம் ஆகிய இவை களும் உரியனவாம்.

10. திருநீறு

(1665—1667)

பூணூலையும் சிகையையும் அறியாதவர்கள் மூடர் களாவர். நூலென்பது, மறைமுடிவாகிய பஞ்சாட்சர மாகும்; சிகை என்பது, சிவஞானமாகும். இதனை உணர்ந்தோர் அந்தணராவர். இறைவன் அணியும் கவசமாகிய திருநீற்றைப் பூசிக்கொள்வதில் மகிழ்ச்சி யுடையவர்களை எப்படிப்பட்ட துன்பங்களும் சேரா வாம்; அவர்களுக்குச் சாயுஜ்ஜியமுத்தியும் கைகூடும்.

விபூதியானது, சிவாக்கினிகாரியத்தில் அரசு, ஆல், அத்தி முதலிய சமித்துக்கள் எரிக்கப்பட்டு நீருக்கப்

படுவதாகும். இறைவன் திருவடிஞானம் பெற்றவர்களே மனிதர்களில் சிறந்தோராவர்.

11. ஞானவேடம்

(1668—1675)

சிவஞானமில்லாதவர்கள், ஞானவேடம் தரித்தாலும் நரகத்தில் அழுந்துவர். சிவஞானமுடையவர்கள் ஞானவேடம் கொள்ளாவிட்டாலும் முக்தர்களாவர். சிவஞானம் பெறவிரும்புவோரே ஞானவேடம் கொள்ளல்வேண்டும். சிற்றறிவுடையவர்கள், சிவவேடம் பூண்டும் பயனில்லை. ஞானமுடையவர்கள், சிவக் கோலமிலராயினும் சிவஞானம் உடையவரேயாவர். பொய்ஞ்ஞானம் உடையவர்கள், ஆராயாமல் கூறும் சமயக்குற்றம் உள்ளோராவர். அத்துவித ஞானம் உடையவர்கள் ஒன்றும் பேசமாட்டார்கள்.

இறைவன், சரியை முதலியவைகளால் வழிபடுவோரது உள்ளத்திலே வீற்றிருந்து அருள் புரிவன். மெய்ஞ்ஞானம் இல்லாதவர்கள், நாய்போன்று வீணே கத்தித்திரிவார்கள். குரங்குபோலத் தாவி அலையும் மனமுடையோர் சிலர், பிறரைக் கொத்தித் திரிவர். சிவஞானமுடையோர், செயலற்றுச் செத்தாரைப்போலத் திரிவார்கள்.

சிவஞானிகளே அடியார்களாவார்கள். அவர்களல்லாதார் கொள்ளும் வேடமும் சிவக்கோலம் ஆகாது. ஞானிக்குத் தவவேடம் சிறந்ததாகும். தவக்கோலம் இல்லாதவர்கள், சிவஞானம் கைவரப் பெறாதவர்களாவார்கள். சிவஞானி, மோனநிலையுடையவனாதலால்

முக்தன் ஆவான்; சித்தனும் ஆவான். பொய்த்தவசியானவன், இச்சித்தனுடன் பேசுவற்குங்கூடத் தகுதியற்றவன் ஆவன்.

யான், எனது என்னும் பற்றற்ற தன்மை, தான் சிவமாந்தன்மை அடைதல், உலகில் காணப்படும் சராசரங்கள் அனைத்தையும் சிவமாகவே காணுதல், பிச்சைப்பாத்திரங்கொள்ளல் ஆகிய இவையனைத்தும் திருவடிநிலை பெற்றவர்க்குரிய அடையாளங்களாம்.

12. சிவவேடம்

(1676—1679)

சிவபிரானுக்கு அடிமை பூண்டு, அப்பிரானின் உடைமையாகிய சரீரத்தில் இறைவன் எழுந்தருளியுள்ளான் என்பதை உணரும் உண்மைஞானம் உடையோரே அஞ்ஞானம் நீங்கிய உண்மைச் சிவக்கோலம் உடையவராவர். உடலின்மீது அணியப்படும் வேடத்தால் உயிருக்கு யாதொரு பயனுமில்லை. உடலானது உயிரைவிட்டு நீங்கினால் அவ்வேடமும் நீங்கிவிடும். உயிர் அழிவில்லாதது என்னும் உண்மையினை உணராதவர்கள், கடலில் அகப்பட்ட கட்டைபோன்று பிறப்பு இறப்புக்களில் உழன்று துன்புறுவர்.

உலகப்பொருள்களில் மயக்கம், ஆணவ இருள், மகளிரின் சேர்க்கை ஆகிய இவைகள் அற்று, மெய்யடியார்களுடன்சேர்ந்து, தன்முனைப்பாகிய செயலற்று ஒழுகுகின்றவர்களே உண்மைச் சிவவேடத்தராவர். ஓடும் பிராணவாயுவை விண்போகாமல் அடக்கவேண்டும். அப்படியில்லாமல், பொய் வேடத்தால் ஒருபிரயோஜனமும் இல்லை. இறைவனை உள்ளத்தே கொண்டால் திருவடியின்பம் பெறுதல்கூடும்.

13. அபக்குவன்

(1680—1689)

குருடும் குருடும் சேர்ந்தால் குழியில் விழுவது போல, அஞ்ஞானம் நீங்கப்பெறாத குருவினைக் கொண்டால், கொண்டவனும் குருவும் பிறவிக்குழியில் விழ வேண்டியதுதான்.

மாயக்கண்ணாடியாகிய திரோதானசத்தி, முன்புறம் பிரகாசமுள்ளதாயும், பின்புறம் ஒளியிழந்ததாயும் உள்ள முகம்பார்க்கும் கண்ணாடி போன்றதாம். இச்சத்தி, பந்தகாலத்தில் பின்புறத்தையும், முத்திக்காலத்தில் முன்புறத்தையும் காட்டுவதாகும். வினைகள் ஒழிய முயற்சிக்காதவர்கள் அச்சத்தியின் - கண்ணாடியின் பின்புறத்தையே விரும்பிப் பந்தத்துள் மூழ்குவர். தாய் போன்று இருக்கும் திரோதானசத்தியின் தன்மையை உணர்ந்துகொண்டவர்கட்குப் பிறவி இல்லை.

மனம், வாக்கு, காயம் ஆகிய முப்பொறிகளும் ஒன்றுபட்டு இறைவனை வழிபட்டால், உயிர் சிவம் ஆகும். பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் ஐந்து பெரும்பாவங்களைச் செய்பவர்கள் பாதகராவர். அவர்களையும் மற்றையோரையும் அப்படிச் செய்யா வண்ணம் தண்டிப்பது; வேந்தனது கடமையாகும். அத்தண்டனையாவது, நாடுகடத்தலேயாம். அவ்வண்ணம் செய்யாவிடின் நாட்டில் பஞ்சம் உண்டாகும்.

சிவவழிபாட்டின்கண்நின்று சிவனையுணராதவர்கள் அனைவரும் பிறப்பால் துன்புறுவார்கள். மனத்தைச் சிவன்பால்வைத்து, ஞானப்பெருவெளியில் நினைப்புக்

கொண்டு அகமுகம் நோக்கில் திருவடிஞானம் உண்டாகும். உண்மைப்பொருளை எப்போதும் நினைந்து மேம்பாடு அடையாமல் மயக்கம் கொண்டவனுக்கு உபதேசம் செய்யக்கூடாது. ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய ஐந்துமலங்களையும் மாற்றும் வழிவகைகளை ஆராயாதவன், காமம் முதலான குற்றங்களினின்றும் நீங்காதவன் ஆவான். இப்படிப்பட்டவன், உபதேசம் பெற்றுக்கொள்ளத் தகுதியில்லாதவனாவான்.

14. பக்குவன்

(1690—1703)

சிவகுருவின் திருவடியடைந்து வழிபாடு செய்பவர், சன்மார்க்கம் அறிந்தவர் ஆவர். இதனை அறியாதவர் விடுபேறடையமாட்டார்கள். நல்ல குருவினைக் கொள்ளவேண்டும். அக்குருவிற்கு உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் தத்தம் செய்யவேண்டும். அக்குருவுடனேயே உறைதல் வேண்டும். அவனருளால் உண்மைத் தத்துவங்களை உணர்தல்வேண்டும். இப்படி ஒழுகுகின்றவர்கள் சிவனடி சேர்வர்.

சுவாதி விசாகம் முதலிய நாள்களும், விருச்சிகம் கடகம் முதலிய கோள்களும், திங்கள் முதலிய கிழமைகளும் உபதேசம்பெறச் சிறந்தனவாகும்.

சரியை முதலான நான்கு பாதங்களிலும் சித்தி பெற்றவர்களுடைய நெஞ்சத்தினிடத்தே இறைவன் எழுந்தருளியிருப்பான். இறைவனது திருவடிப்பேரின்பத்தில் அன்பு மிகுந்தவனே பக்குவனாவான்.

சிவஞானத்தில் அன்பு அதிகரித்தால் குருவின் திருவடியில் பெருங்காதல் உண்டாகும். அப்படி உள்ளவனே சரியை முதலான நான்கும் கைவரப் பெற்றவனுவான். அவனே பக்குவன். சிவகுருவானவர் உபதேசித்தபடி ஒழுகுபவனும் பக்குவனுவான்.

வேதாந்தம் என்பது :- மண், பொன், பெண் என்னும் மூன்று ஆசைகளையும் விட்ட நிலையாகும். புலன்களின் வழியே செல்லும் உலகவாழ்வுக்கு ஆதார மான இந்திரியங்களை மாற்றி, அப்புலன்களை நல்வழிச் செலுத்தும் சுத்தாத்துவித சித்தாந்தத்தில், உலகியல் ஆசையைவிட்ட வேதாந்தி வந்துசேர்ந்து சிவகுருவின் திருவடியினை வணங்குவான். அப்படிப்பட்டவனே நல்ல சீடன்.

பண்பு, வாய்மை, இரக்கம், நல்லறிவு, பொறுமை, குருவினடி நீங்காமை, உண்மைஞானம், தெளிவு, ஆய்வு, அருள் நிகழ்ச்சி ஆகிய பத்துத் தன்மைகளும் உடையவனே நற்சீடன்-பக்குவன் ஆவன்.

ஆறும் தந்திரம் முற்றிற்று

ஏழாம் தந்திரம்

1. ஆறுதாரம்

(1704—1711)

நான்கு இதழ்களுள்ள மூலாதாரம், ஆறு இதழ்களுள்ள சுவாதிட்டானம், பத்து இதழ்களுள்ள மணிபூரகம், பன்னிரண்டு இதழ்களுள்ள அநாகதம், பதினாறு இதழ்களுள்ள விசுத்தி, இரண்டு இதழ்களுள்ள ஆஞ்ஞை இந்த ஆறு ஆதாரங்களிலிருந்து தியானித்தால் இறைவன் திருவடியைக்காணலாம். பன்னிரண்டு கலைகளுடன் கூடிய சூரியமண்டலம், பதினாறு, கலைகளுடன் கூடிய சந்திரமண்டலம், பிருதிவி முதல் நாதம் ஈருகச் சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்கள் ஆகிய இவைகளுக்கு மேலாகப் பராசத்தியானவள் விற்றிருந்தருளுவாள்; சிவபிரான், அதற்குமேல் தோற்றுவான். அதுவே, விமலனுக்கு இடமாகும். இறைவன் மேகத்துக்கும் கற்பகவிருட்சத்துக்கும் ஒப்பாகநின்று பிரதிப்பிரயோஜனம் கருதாது, தான், நான், நீ என்னும் மூவிடப்பெயர்களும், அவன், அவள், அது என்னும் திணை பால் பெயர்களும் சேர்ந்து பெயர்த்தன்மை ஆறினையும் அருள்கின்றான்.

ஷோடசகலாப்பிராசாதத்தாலே எப்போதும் பிரணவத்தை எழுப்பி ஆறு ஆதாரங்களையும் குருவினது அருளால் சோதனைசெய்தால், வழிபாடு செய்ய இயைபு உண்டாகும். மூலாதாரம் முதல் வழிபாடு செய்தால் சிவபோகம் விளையும்.

தூல உடம்பு அழியும் உடலாகும்; சூக்கும உடம்பு உயிருடன் செல்லும் உடம்பாகும். தத்துவ மாகிய உடம்புக்கு அத்துவாக்கள் ஆறும் அங்கங்களா கும். விசுத்தித் தானத்தில் வழிபடும் அறிவே, தூய அறிவாய்ச் சிவ அறிவுள் அடங்கி விளங்கும்.

2. அண்டலிங்கம்

(1712—1725)

உலகமும், உலகின்கண் தோன்றும் சராசரங்கள் அனைத்தும் சிவவடிவாம். சத்தியை முதற்காரணமாகக் கொண்டு இறைவன் உலகினைப் படைத்தருளுகிறுன். போகம், முத்தி, புத்தி, சித்தி, ஆகம நூல், முப்பத்தாறு தத்துவம், அத்துவாக்கள் ஆகிய இவை அனைத்தும் சிவனது ஆணையால் நிகழ்வனவாம். பஞ்சபூதங்களைத் தன்னுருவாகக்கொண்ட சகுணபரசிவத்தை அளவில் லாத தேவர்கள் வழிபடுகின்றனர்; ஆனுல் அத்தேவர் கள், நிர்க்குணசிவத்தை அறியமாட்டார்கள்.

தீ, அயன், மால், ஞாயிறு, இந்திரன் முதலிய தேவர்களுக்கும் அவர்களுடன் கலந்து உள்நின்று உணர்த்துபவன் சிவனேயாவான்; எல்லா இடங்களி லும் நிறைந்து குளிர்ந்து அருள்புரிபவனும் அச்சிவனே யாம். மண் முதலியவற்றினின்றும் இறைவன், தன்னை வழிபடுவோர்களுக்கு அருள்புரிவன்; அப்படிப்பட்ட முழுமுதற்பொருளை வழிபடுவார் இல்லை. உண்மை தெரிந்து வழிபடுகின்றவர்களுக்கு, சகஸ்ராரத்தில் வீற் றிருக்கும் பராசத்தியின் பேரருள் கிடைக்கும்.

கருப்பக்கிருகத்தின்மேல் கட்டப்படும் கோபுரம் தூலலிங்கமாகும்; கருப்பக்கிருகத்துள்ள இலிங்கவடி வம் சூக்குமலிங்கமாகும்; பலிபீடம் இடபலிங்கமாகும்.

முத்து, மாணிக்கம், பவழம், சித்திரவேலை செய்யப்பட்ட மரம், பளிங்குபோன்றதான வெண்கற்கள், திருநீறு, மரகதம், அருள்நூல்கள், திருவமுது, அரிசி ஆகிய இப்பத்தும் சிவலிங்கம் அமைக்கும் துணைப் பொருள்களாகும். மேலும் தயிர், நெய், பால், சாணம், செம்பு, அக்கினி, பாதரசம், சங்கு, சுடப்பட்ட செங்கல், வில்வம், பொன் ஆகியவைகளில் ஒன்றைச் சிவலிங்கமாக வைத்து வழிபடலாம்.

உயிரும் சிவனும் ஒருதன்மையனவாக நிற்கும் நிலையை உணர்ந்தவன் 'யான்' 'எனது' என்னும் செருக்கை அறுத்தவனுவன். ஆகவே, இறைவன், அவனது சரீரத்தையே கோயிலாகக் கொண்டருளுவான். இறைவன், மனித யாக்கையிலும் சூரியமண்டலத்தை இடமாகக்கொண்டு எழுந்தருளியிருந்து சஞ்சிதவினைகளை ஒழிப்பான் - அழிப்பான்.

இறைவனது திருவடிகள், கீழுலகமாகும்; திருமுடி, ஆகாயத்துக்கும் அப்பாற்பட்டதாகும்; திருமேனி ஆகாயமாம். ஆதலால் இதுவே சிவபிரான் உலகமே உருவமாகக்கொண்ட திருக்கோலமாகும். நிலம் ஆவுடையார்; ஆகாயம் இலிங்கம்: கடல் திருமஞ்சனசாலை; மேகம் கங்கைநீர்; நட்சத்திரங்கள் ஆகாயலிங்கத்தின்மீது விளங்கும் மாலை; திரு ஆடை எட்டுத் திக்குகளாகும். இவையே அண்டலிங்கத்தின் அடையாளங்களாகும்.

3. பிண்டலிங்கம்

(1726—1729)

மக்களின் சரீர அமைப்பு:- சிவலிங்கம், சிதம்பரம், சதாசிவன், அருட்பெருங்கூத்து ஆகிய இவைகளாக

அமைந்திருக்கிறது. மானிடயாக்கை ஐம்பூதசேர்க்கை யால் ஆனதாகும். இறந்தவர்கள், மீண்டும் வினைக் கீடாகப் பிறக்கின்றனர்; இறைவனை வணங்கினால் பிறப்பு அறும். சரீரம் எடுத்தபோதே பிரமன் முதலான ஐந்து மூர்த்திகளும், சரீரத்தை வழியாகக்கொண்டு உள்ளிருந்து அருள்புரிகின்றனர்; இறைவன், அன்பினை வாயிலாகக்கொண்டு சிவமாக்கி ஆண்டருளுகின்றான்.

நாடிகள் பத்தினையும் தூய்மை செய்துகொண்டு புலன்வழி சேராமல் சிவனை வழிபட்டால் இறைவன், அந்நாடிகளை இடமாகக்கொண்டு அருள்புரிவான்.

4. சதாசிவலிங்கம்

(1730—1752)

இரண்டு திருவடிகள், பத்துத் திருக்கரங்கள், ஐந்து முகங்கள், பதினைந்து கண்கள் இத்தனையுங்கொண்டு விளங்குவர் சதாசிவக்கடவுள். அயன், அரி, உருத்திரன், மகேசன், திருவருட்சத்தி ஆகிய இவர்கள் அனைவரை யும் பொதுவாகச் சதாசிவன் என்று கூறப்படும்.

திருவருட்சத்தியினுள்ளே ஐந்துகலைகளும் தோன் றும்; அச்சத்தியின் அருளால் கதிர்கள் உண்டாம். அச் சத்தியினுள்ளே சிவன் அமர்ந்தபின், அத்திருவருட் சத்தியானவள் உலகத்தை இயக்குவாள். அவ்வுலகத் துள்ளே ஆறு அங்கங்கள், நான்கு வேதங்கள், சரியை முதலான நான்கு பாதங்கள், சமயங்கள் ஆகிய இவை யனைத்தும் நிலைபெற்றன.

சித்தாந்த சமயத்தில் கூறப்படும் மேலாலவத்தை ஐந்து, கீழாலவத்தை ஐந்து ஆகப் பத்து நிலைகள்

உள்ளன. மேலும், அச்சமயத்தில் மேடம் முதலான இராசிகள் பன்னிரண்டும், பிரமன், திருமால், உருத் திரன், சதாசிவன், மகேசன், சத்தி என்னும் திருமேனி கள் ஆறும், பஞ்சபூதம், ஞாயிறு, திங்கள், உயிர் ஆகிய வடிவங்கள் எட்டும் உள்ளன. இவை அனைத்தையும் கொண்டருளுவோன் சதாசிவனேயாவன்.

('நடுவு கிழக்கு' என்னும் இம்மந்திரம் சதாசிவத் தின் முகங்களது வரிசை முறையையும் நிறங்களையும் கூறுகின்றது.) ஈசானம் - நடு, படிகநிறம். தத்புருஷம்- கிழக்கு, மஞ்சள் குங்குமநிறம். அகோரம் - தெற்கு, கறுப்புநிறம். வாமதேவம் - வடக்கு, சிவப்புநிறம். சத்தியோஜாதம் - மேற்கு, பால்நிறம் ஆகும். எல்லாத் தத்துவங்களும் சதாசிவத்தின் கலப்பால் இயங்குவன வாகும்; ஆதலால், தத்துவங்களனைத்தும் சதாசிவம் என்றே அழைக்கப்படும். சதாசிவனது திருவடிகளை அருச்சித்துப் போற்றல்வேண்டும். சதாசிவனை வணங் கித் துதிப்போமானால் மனத்தின் மயக்கம் அகன்று திருவடிஞானத்தெளிவு பிறக்கும்.

திருவருட்சத்தியின் ஐந்து திருமுகங்களாவன :- வடக்கில் வாமதேவ முகமும், மேற்கில் சத்தியோஜாத முகமும், கிழக்கில் தத்புருஷ முகமும், தெற்கில் அகோர முகமும், வடகிழக்கில் ஈசானமுகமுமாகும். அவயவங் கட்குரிய மந்திரங்களாவன:- ஈசானம் - உச்சி. தத்புரு ஷம் - முகம். அகோரம் - இருதயம். வாமதேவம் - குய்யம் (தொப்பூழ்). சத்தியோஜாதம் - பாதம். இவை பஞ்சப்பிரம மந்திரங்கள் எனப்படும். நெஞ்சு - இருத யாய நம:, சிரசு - சிரசே நம:, சிகை - சிகாயை நம:,

கவசம் - கவசாய நம:, கண் - நேத்திரேப்பியோ நம:, அம்பு – அஸ்திராய நம: என்பனவாம்.

சிவனுக்கு இருதயம் ஞானசத்தியாகும்; சிரம் பராசத்தியாகும்; சிகை ஆதிசத்தியாகும்; கவசம் இச்சா சத்தியாகும்; நேத்திரம் கிரியாசத்தியாகும். திருவருட் சத்தியின் வடிவே சிவனது வடிவாகும். இறைவன், நவந்தருபேதங்கொண்டு நின்று உலகினை இயக்கியருளு கின்றான். இறைவன் அருளால் சிவனை உணரலாம்; அவனைப் பாடிப் பரவினால் நமது நெஞ்சகத்தே அவ் விறைவன், கோயில்கொண்டருளுவான். மனித உடல், சதாசிவ உருவமான சிவலிங்க உருவமாகும்.

இலிங்க உருவத்தின் அடிப்பீடம் பிரணவ உருவ மாகும்; இலிங்கத்தின் கண்டமாகிய அதோமுகம், பிரணவ எழுத்துக்களில் மகாரத்தைக் குறிக்கும்; இலிங்கத்தின் நடுவட்டம், உகாரத்தைக் குறிக்கும்; மேல் இலிங்கபாகம் அகாரத்தைக் குறிக்கும்.

5. ஆத்மலிங்கம்

(1753—1762)

அகாரம் சிவன்; உகாரம் சத்தி; சிவத்துடன் சத்தி கூடுமாயின் பொருள்களெல்லாம் இயங்கிநிற்கும். இவ் வகார உகாரங்களை உணர்ந்தால் அவையே இலிங்க மாம். ஆதாரமும் ஆதேயமுமான (முறையே) விந்துவும் நாதமும் உலகமாக விரிவடைந்தன. விந்து பீடமாகும்; நாதம் சிவலிங்கமாகும். இவ்விரண்டின் சேர்க்கையே மனமணியிலிங்கமாகிய ஆத்மலிங்கம் என்று சொல்லப் படும். ஆலயங்களில் இருக்கும் இலிங்கம் தாபரலிங்க மாகும். அடியார்கள் சங்கமலிங்கமாகும்; அவ்வடி யார்களின் திருவேடங்களும் இலிங்கமாகும்.

மூலாதாரத்தே சிவ ஒளியையும் ஐம்பது அக்கரங்களையும் காணலாம். உச்சித்தாமரையில் மனோன்மணியுடன் விளங்குவது அகார முதல்வனாகிய சிவபெருமானேயாம். சிவலிங்கபீடம் உயிர்நிலையாகும்; பீடத்தின் குழி சிவஞானமாகும்; குழிமேல் தோன்றும் இலிங்கம் சிவமெய்யாகும்; பரமான்மா சதாசிவமாகும். உயிர்களின் உள்ளத்தே இறைவன் குடிகொண்டு வாழும்போது, அவ்வின்பப்பெருவாழ்வில் உயிரானது தன்னையும் சிவனையும் நாடும்.

உயிர்கள் உய்யும்பொருட்டு, பழமையினாலேயே திருவருளால் அவ்வுயிர்களுக்குக் கட்புலனாகும்படி இறைவன் தோன்றிநின்றனன். எல்லாத் தேவர்களும் அப்பரமனைப் பரவிப் பணிந்து தொழுவார்கள்.

6. ஞானலிங்கம்

(1763—1772)

உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்றிலும் இறைவன் பொருந்தியிருப்பவன்; அப்பரமனே, உயிர்களுக்குக் குருவுமாகத்தோன்றி அருள்செய்வான். அப்படிப்பட்ட பெருமானைத் 'தா' என்று கேட்பவர்களுக்கு அப்பொழுதே வேண்டுவதை அளிப்பான். அவனே சதாசிவனும். சதாசிவன் நவந்தரு பேதங்களையுடையவன்; இவ்வொன்பதும் பரமன் தன் மனதில் கொள்ளும் இச்சாமாத்திரத்தில் உண்டாவதாகும். தேவர்கள் அனைவருக்கும், இந்திரன் முதலான எண் திசைக்கடவுளருக்கும், பிரமன், திருமால், உருத்திரன், ஈசன் ஆகிய நால்வருக்கும் முழுமுதற்கடவுள் சதாசிவனேயாகும்.

மனோன்மணியானவள் சதாசிவத்தோடு பிரிப்பில்லாமல் நிற்பவள்; அன்னை, அத்தன் என்னும் இவ்விருவரில் எவரை வழிபட்டாலும் சதாசிவனுக்குச் செய்யும் வழிபாடேயாம். எல்லாத் தெய்வ வடிவங்களாகத் தோன்றுபவன் சிவபிரானேயாம்; அவனது உடம்பில் ஓர்பாதி தனதாக்கிக் கொள்பவள் பராசத்தியாவள். சத்திதத்துவத்துக்கு மேலே பராசத்தியிருப்பாள்; அப்பரையினுள்ளேதான் நின்மலசிவத்துக்கு இடமாகும். அதற்குமேல், யாதினும் தோயாது நிற்கும் தூய ஒளியாகிய சிவம் நிற்கும்; மேல், பராசத்தியுடன் கூடியும் கூடாமலும் ஈசன் தானுன உண்மை நிலையாகும்.

சிவத்தினைக் காணப்பெற்றால் உலக உண்மைகள் விளங்கும். சிற்சத்தியினிடத்தே அப்பெருமான் எழும் இடமாகும். இவ்வுண்மையைத் தெரிந்தால் அவர்கள் இருவரையும் மறவாதிருக்கலாம். சிவத்தின் உண்மை நிலையை மாதொருபாகனுகக் கண்ட அடியார்களது இதயத்தே சிவன் எழுந்தருளியிருப்பான். அப்பனும் அம்மையும் ஒன்றாய்க்கலந்து கூடியசேர்க்கை ஞானம் உண்டாகும் இடமாகும். அவ்விருவரும் கூடியிருந்த இடம் கொப்பூழாகிய சுவாதிட்டானமாகும். பரமன், பரையை உடன்வைத்து மகிழ்ந்திருந்த இடமாவது நெஞ்சகமாகிய அநாகதத்தானமாகும்.

சத்தியும் சிவமும் இன்றி எப்பொருளும் தோன்றாது; சத்தியே எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாம்.

7. சிவலிங்கம்

(1773—1777)

உலகம், நீர், தீ, காற்று, ஆகாயம் இவைகள் விளங்குகின்ற விளக்கம் இறைவனாலேயாம். இவை

யெல்லாமான சிவனை ஒரு எல்லைப்படுத்தி நாம் வழி படல்வேண்டும். இறைவனைத் திருமஞ்சனநீராட்டி, மலராலருச்சித்து, அவனது நாமங்களை ஜபித்து, திரு வடியை உள்ளன்போடு உணர்ந்து உருகவேண்டும். இவையே ஒரு குறியின்கண்வைத்து வழிபடும் வகை யாம். இவ்வண்ணம் வழிபடுவதால் ஐம்புலன்களையும் வென்று இன்பமுறலாம்.

அயன், மால், உருத்திரன், மகேசன், முத்திப்பயனை அளிக்கும் சதாசிவன் ஆகிய இவ்வடிவங்களனைத்தும் பயனை அளிக்கும் இறைவனே ஆகும்; அவனே சிவ லிங்கமாம்.

உயிரானது உடலைவிட்டுப் பிரியும்வரையில், உட லோடிருந்த அளவு, பிராணவாயுவை அடக்கி ஒழுகி ுல் திருவடிப்பேருகிய பரகதி அடையலாம்.

8. சம்பிரதாயம் (பண்டைமுறை)

(1778—1791)

இறைவன், சிவகுருவாக எழுந்தருளிவந்து ஆன் மாக்களின் பக்குவம் கண்டு சிவதீக்கை செய்தருளு வான். அச்சிவதீக்கையால் பிறப்பு அறும். சிவகுரு வானவர் திட்சை செய்யும்போது வடக்குமுகமாக இருப்பர். சீடன், ஆசாரியனுக்கு இடப்பாகமாகிய மேற்கு முகமாக அமர்வான். ஆசாரியன், சீடனை நாள் தோறும் 'சிவசிவ' என்று சொல்லும்படிக்குக் கட் டளையிடுவார். அச்சிவன் எழுந்தருளியிருக்கும் இடம் உச்சிக்குக்கீழும் உள்நாக்குக்கு மேலுமாகும். அதுவே உயிர்நிலையுங்கூட ஆம்.

எல்லா உயிர்களுக்கும் தலைவனான சிவபிரானது உண்மையினை எவரும் ஒரு சிறிதும் அறியமாட்டார். மாயையானது, கடவுளுக்கும் உயிருக்கும் இடையில் நின்று வேறுபடுத்துகிறது; இறைவனது திருவருளால் பிரிப்பதாகிய மாறுபாட்டினை நீக்கினால் இறைவனைக் காணலாம். ஜீவனுடன் மறைந்து நின்ற இறைவன், ஜீவனுக்குப் பக்குவம்வந்ததும் துன்பப்படலை நீக்கிப் பற்று நீங்கும்படிச்செய்தருளி, தானும் வெளிப்பட்டு உயிரையும் தானாக்கிவிடுவான். அடிமைகொண்ட சிவன், ஆட்கொள்ளப்பட்ட ஜீவனுக்குத் தாம் தந்த உடல் பொருள் ஆவி இம்மூன்றினையும், அவற்றாலாகிய பயனை ஜீவன் அடைந்தபின், அடிமைகொண்ட அப் பிரானே திரும்பப்பெற்றுக்கொள்வான்.

உடலும் தேகியாகிய உயிரும் திருவருளால் கூடின் செம்மையாக நிற்கும். அவ்வுடலும் உயிரும் சிறந்து விளங்கும் வழியை உணராதவர்கள், அலையும் பேய்க்குச் சமானமாவார்கள். பதி பசு பாச உணர் வுடையோர்களுக்கு உலக உண்மை தோன்றும்; மேலும், அவர்களுக்கு எப்போதும் எக்காலத்தும் துன்பமே இல்லை. அவ்வுணர்ச்சியுடையார்கள், பதியை அறிந்தகாலத்தில் முப்பொருள்களின் உண்மைநிலை யைக் கண்டவர்களாவார்கள்.

ஆன்மா, அளவில்லாத பிறப்புக்களில் உழன்று, கொப்பூழினிடத்தில் பேருறக்கமாகிய கேவல துரிய நிலையினை அடையும்; அப்போது ஆவியானது குவிந்து அடங்கிநிற்கும். பின், நெற்றியில் முப்பத்தாறுதத்துவங் களுடன்கூடிய தூலஉடல் முதலான ஐவகை உடல்க ளுடன் புணர்வினை அடையும். இவற்றில் உழன்று

பக்குவம் வாய்ந்தவர்களுக்கு அருள்தந்த தூய்மை உண்டாகும். தூய்மையாவது:- மாயா காரியங்களின் உண்மையுணர்ந்து அவற்றினிடத்தில் பற்றில்லாமல் இறைவனிடத்தில் பற்றுவைத்து ஒழுகுதலாகும்.

கன்மகாண்டியும் பக்திகாண்டியும் இறைவனை அறியமாட்டார்கள். அறியின், அவர்களுக்குச் சிவ போதம் இல்லையாம்; இருவரும் அப்பிரானை அறிந்தால் சிவபோதம் அறிந்தவராவர். உடம்பைத் தானெனக் கருதும் உயிர்போல, அவ்வுயிரைத் தானெனக்கருதி இறைவன் தினந்தோறும் உணர்வான். உயிர்கள்மீது அருள்மழை பொழியும் அவ்விறைவனை முதல்வன் என்று கூறுவார்கள். இறைவன், அருட்டிருமேனி கொண்டு யாவரையும் திருந்தச் செய்தருளுவான்.

9. திருவருள் வைப்பு

(1792—1813)

உயிர்களுக்கு இருநிலையாவது:- அஞ்ஞானமும் ஞானமுமாம். உருவாவது:- உடலும் உயிருமாம். அருளாவது:- அறமும் தவமுமாம். பொருளாவது:- சிவபோகமாகிய பேரின்பமாகும். இறைவன், காண்ப தற்கும் எண்ணுவதற்கும் அரியன்; தொடுவதற்கும் அடைவதற்கும் முடியாத நெடுந்தூரத்திலுள்ளவன். சிவத்தைப் பேணும் தவமுடையார்க்கு, உள்ளொளி யாக விளங்கும் இறைவனது திருவடிஞானம் உண் டாகும்; அதனால், ஆணவ இருள் நீங்கும். ஆணவ இருள் நீங்கியவருள்ளத்தில் உலகியலின் உண்மைத் தன்மை விளங்கும். வெறுக்கத்தகுந்த அஞ்ஞானம் நீங்கினால் இறைவன் காட்சி அளிப்பான். சிந்தையில்

அவ்விறைவனை நாடினால் சிவஞானத்துடன் தேவருலகத்து இருக்கலாம்.

பதி பசு பாச உண்மைகளை அறியாமலேயே காலங்கள் வீணாகக் கழிந்தன. அஞ்ஞானம் நீங்கப்பெற்று இறைவனது திருவடிஞானமே துணையென்று அவ்வுணர்வினைச் சார்ந்து நின்று அறிபவனே சிவனருட்டன்மையுடையோனாவான். நல்வினை தீவினை என்னும் இருவினையும் திருவருளால் நீங்கியபின் ஆன்மா, தன்னை அறியும், அன்போடு இறைவனை அறிந்தபின், அவ்வான்மா திருவடியின்பத்தை நுகரும். கன்மம் நீங்கிய போது சிவபிரானை அறியலாம். தேவர்கள் சிவனை அறியாது சுவர்க்க போகங்களை மாத்திரம் அறிவர். எவ்விடத்தும் நிறைந்துள்ள திருவருளின் எல்லையை, அத்திருவருள் பெற்றவரே அறிவர்.

உயிர்கள் ஞானத்தில் பொருந்த, இறைவன் அவ்வுயிர்களின் அறிவுக்கு அறிவாய் நின்று அருளினன். பொறிகளின்வழியாக ஆசையினையும் அவ்வுயிர்களுக்குப் புகுத்தினான். அதோடல்லாமல், தானும் அவ்வுயிர்களினோடு கலந்தும் இருந்தான். நன்னெறி ஒழுக்கம் உடையவர்கள் அச்சிவமாகவே இருப்பார்கள்.

உயிர்களைப் பாசத்தினோடு கூட்டி வைத்ததும், பாசத்தினின்று விடுவித்ததும், முத்தியை அளித்ததும், உயிரும் சிவமும் பிரிப்பின்றி ஒன்றாகச் செய்ததுமாகிய எல்லாம் திருவருட் செயலே ஆகும். உயிர்களுக்கு ஞானத்தையும் முத்தியையும் அளித்தவனும் இறைவனேயாம். அவனே அறவாழி அந்தணனாகும். திருவருளுடையோனது உள்ளத்தே இறைவன் எழுந்தருளியிருப்பான். அருளில்லாதாரது உள்ளத்தே இறைவன்

புகுந்தாலும் அவ்வருளில்லாதார் உணர்தற்கரியவன் இறைவன். உயிர்களின் கரணங்களையெல்லாம் சிவ கரணங்களாகச் செய்து ஆனந்திப்பவன் இறைவன். சிவகரணங்களைப்பெற்ற உயிர்கள் சிவசொருபத்தை அடையும். உலகமெல்லாம் திருவருள் இயக்கத்தால் இயங்குவன. அதனால் எல்லாம் அருட்செய்கையே யாகும்.

அருட்கண்ணுடையோருக்கே இறைவன் தோன்றுவான். பிறவிக் குருடனுக்குச் சூரிய வெளிச்சமும் தோன்றாதவாறுபோல, திருவருட்கண் இல்லாதார்க்கு இறைவன் தோன்றான். இறைவனொருவனே படைப்பு முதலான ஐந்தொழிலையும் செய்வான். சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய இந்நான்குநிலையும் சிவனுக்குரிய அருவ நிலையாகும். சதாசிவன் அருவுருவநிலையாகும். ஈசன், அரன், மால், அயன் நான்கும் உருவநிலையாகும்.

இறைவன், சத்தியைத் தனது திருமேனியாகக் கொண்டு உலகத்தைக் கருத்தளவால் (சங்கற்பமாத் திரையால்) இயக்குகின்றான். உயிருக்குயிராய் நின்று இயக்கினும் பொருள்தன்மையில் அவ்விறைவன் வேறாய் நிற்பான். இறைவன் இயைந்து இயக்கும் நிலையை விளையாட்டென்று சொல்லப்படும். இறைவன் சத்தியைத் தொழிற்படுத்துதலால் மகாமாயை (குடிலை) யினுள்ளே நாதம் தோன்றும். மேலும், நிவிருத்தி முதலிய பஞ்சகலைகளும் தோன்றும். சுத்த மாயையாகிய விந்து எப்போதும் அழியாதது; வேண்டும் விளைவை என்றும் அது தந்துகொண்டே இருக்கும். பரவிந்து சுத்தமாயை ஆகும். தனி மாயை அசுத்தமாயையாகும். மாமாயை மூலப்பிரகிருதியாம்.

10. அருளொளி

(1814—1822)

திருவருளில் ஆழ்ந்து அறியும் அனுபவம் இல்லாத வர்கள், அவ்வருளின்வழி ஒழுகாமல் மருளின் வழியே நடப்பார்கள்; அதனால் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் பஞ்சமலங்களினின் றும் நீங்கமாட்டார்கள். திருவருளின் பெருமையை அறியாதவர்களும் திருவருளின் வியாபகத்தில் அடங்க மாட்டார்கள்; அவ்வருளோடு இணைந்தால் அத்திரு வருளை அறியலாம். அடுத்தடுத்துப் பிறவாதிருக்கும்படி அருள்புரியும் இறைவன், உயிர்களுக்கு அமுதம் அளிக் கும் இன்ப வடிவினன் ஆவான். அப்பெருமானுக்கு உள்ள ஆயிரம் நாமங்களில் ஏதாவது ஒரு நாமத்தில் அன்புகொண்டு துதித்தல்வேண்டும். நற்பணிசெய்வோ மானால் இறைவன் திருவருள் கைகூடும்; அதனால் அப் பெருமான் என்றும் நம்முடன் கூடியிருப்பான்; தனது திருவடியையும் தந்தருளுவான்.

திருவருளின்முன், துன்பங்கள் அனைத்தும் நீங்கும். அருள்ஞானமுடையவர்கள் சிவமாகத் திகழ்வார்கள். திருவருளில்லாதவர்களுக்கு நினைப்பும் மறப்பும் எப் போதும் நீங்காது; திருவருளுடையோருக்கு ஒளியும் இருளுமாகிய நினைப்பும் மறப்பும்நீங்கும். இவ்விரண்டும் நீங்கப்பெற்றால் சிவமாகவே இருக்கலாம். மலம் நீங்கப் பெற்ற உயிரின் மனத்தில் சிவன் புகுவான்; புகுந்ததும் அவ்வுயிருக்குத் தெளிவு பிறக்கும்; தெளிவுபிறந்ததும் உயிர் சிவத்தன்மையை அடையும். இறைவனுக்குப் பிறப்புக்கள் கிடையா; பிறந்து இறக்கும் தெய்வங் களை மெய்ப்பொருளென்று கொள்ளலாகாது.

11. சிவபூசை

(1823—1846)

சிவபிரானுக்கு உயிர்களின் உள்ளமே கருப்பக் கிருகம்; உடம்பே ஆலயம்; வாய் கோபுரவாயில்; உயிரே சிவலிங்கம்; ஐம்புலன்களும் மணிவிளக்காகும். அந்தணர் வேள்விசெய்து, அதன் அவிசான உணவை உண்ணும் சிவபிரானுக்கு, அதன்படி உணவைக் காட்ட முடியாமற்போனால், தோத்திரப்பாடல்களை யாவது பாடலாம்; அவ்வழியே பால் அவிசு(உணவு) ஆகும்.

சிவன், உமையம்மையை இடப்பாகத்தேயுடைய வன்; சதாசிவன், அம்மையப்பனுமாக விளங்குபவன். சதாசிவக்கடவுளது ஐம்முகங்களில் மேல்முகம் ஈசான முகமாகும். அச்சதாசிவனை வழிபடுபவர்கள் அழகுடன் கூடிய முகத்தினர்களாய் விளங்குவார்கள். இறைவன் திருவடியை மறவாது நினைப்பவர்கள், அவனது உண்மைத்தன்மையை ஓதுபவர்கள் ஆகிய இவர்க ளன்றி ஏனையவர்களால் அவனைக் காணமுடியாது.

இறைவனைக் காணவல்லார்க்கு மலரும் நீருமே பொருள்களாகும். பஞ்சாமிர்தம், பதினாறு (ஷோடச) உபசாரங்கள், அஞ்சலி ஹஸ்தம், அருச்சனை இவ்வழி பாட்டால் இறைவன் உள்ளத்துள் உறைவான். தேவர்களும் இவ்வழிபாட்டினாலேதான் இறைவனைத் தம் உள்ளத்துள்பெற்றார்கள். பூவும் நீரும் கொண்டு வழிபடுபவர்களுக்கு இறைவன் அருள்புரிவான். வழி பாடு இயற்றாமல் அநேக பாவிகள் வழி தெரியாமல் விலகுகின்றார்கள்.

சிவனடியார்களுடைய திருவடி விளக்கிய (கழுவிய) நீர் சிவதீர்த்தமாகும். அந்நீரைத் தெளித்துக் கொண்டால் முத்தியும் கைகூடும். கடலையடுத்தும் நிலத்தையடுத்துமுள்ள ஆலயங்களில் தேவர்கள் வந்து, இறைவன் திருநாமங்களைச் சொல்லியும் ஆராதனை செய்தும் வழிபடுகின்றனர்; மேலும் பால், தயிர், நெய், வெண்ணெய், மோர் இவையாலான பஞ்சகவ்வியத்தை (ஆனைந்தை) இறைவனுக்கு ஆட்டி வணங்குவார்கள். இறைவனும், மலரும் மணமும் போல ஐம்பூதப் பன்பான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய இவைகளுடன் கலப்பால் விளங்குவான். இறைவனை, நெஞ்சத்து வஞ்சனைகளை அகற்றி வழிபடாதவர்கள் நரகத்துள் அழுந்துவர்.

உண்மையடியார்கள், வழிபாட்டிற்கு உரியன அல்லாத பொருள்களை நீக்கிவிடுவார்கள்; முழு அன்புடன் பூசனை புரிபவர்களுடைய உச்சியில் இறைவன் பொருந்தியிருந்து அருள்புரிவான். இறைவனை வழிபடுகின்றவர்களே மெய்ஞ்ஞானம் படைத்தவராவார்கள். இறைவன் திருவடியடைவதற்குக்காரணம் வழிபாடேயாகும்.

தேவர்கள் விண்ணுலகில் இறைவனைத் துதிக்கும் புகழுரைகள் மண்ணுலகில்வந்து குவியும். இறைவன், மூவரொடு (பிரமன், மால், உருத்திரன்) கலத்தலால் பன்மையாய் விளங்குந்தன்மையை எவரும் அறிய மாட்டார்கள். ஆசைகளை நீக்கி இறைவழிபாடியற்றினால் வீடுபேற்றிற்குச் செல்லும் வழியுண்டாகும். சகஸ்ராரத்தில் விளங்கும் இறைவனை ஒருசிலரே அறிவர். ஆஞ்ஞையில் இருக்கும் மாணிக்கமாகிய

பிரானைக்காணும் கருத்துடையவர்கள் யாரும் இல்லை. அன்பினைப்பெருக்கி இறைவனை இடையறாது தியானிப் பவர்களது மனதில் மாணிக்கமலை போன்று நிற்பன் அவ்விறைவன்.

தீமைகள் பலவற்றை நீக்கித் தூய்மைப்படுத்துவ தும், சிவபிரானின் அருளில்லாமல் யார்க்கும் எங்கும் எச்செயலும் இல்லை என்னும் உண்மையை உணர்த்து வதுமே சமயதிட்சையாகும். பஞ்சாட்சர ஜபத்தால் உள்ளும் புறமும் தூய்மையடையச் செய்வது விசேட தீட்சையாகும். கலாசுத்தி செய்வது நிருவாணதீட்சை யாகும். மேற்கூறிய மூன்று திட்சைகளையும் செய்விக் கும் உரிமையை அளிப்பது ஆசாரியாபிடேகம் ஆகும். பலவூழிக்காலங்களிலும் என்றும் ஒரேநிலையில் உள்ள இறைவனை, அருட்கண்ணால் அறிந்தவர்கட்கன்றி மற் றவர்களால் காணமுடியாது. திருமாலும் பிரமனும் பல ஊழிக்காலம் முயன்றும் காணமுடியாமல் மறைந்தே நின்றனன் அப்பிரான்.

12. குருபூசை

(1847—1856)

முத்தியெய்துதற்குரிய பஞ்சாட்சரத்தை உபதே சித்த சிவகுருவைப் பூசிக்கும் பூசையே குருபூசை யாம். அக்குருபூசையினையும், உள்ளத்தே ஆறு ஆதா ரங்களில் செய்யும் வழிபாட்டினையும், தத்துவாதீதனை இறைவனையும் இடையறாது வழிபாடு செய்தல்வேண் டும். சந்தனம், புட்பம் இவைகளைக்கொண்டு இறை வழிபாடியற்றினாலும், மாமிச உணவை நீக்கி வழிபாடு இயற்றுவோர்களுக்கே திருவடிகிட்டும். ஞானத்தின்

ஞானம் மேம்பட்டவிடத்துச் செய்யும் வழிபாடு ஞான பூசையாகும். ஞானநெறி நிற்றலே அருச்சனையாகும். அகப்பூசையில் ஆழ்ந்து நிற்பவர்களே உத்தமராவர். அவர்களே தன்செயலற்று இறைவன் திருவடிசேர்வர்.

உச்சி, காலை, மாலை என்னும் மூன்று காலங்களிலும் இறைவனது திருநாமத்தைச் (நமசிவாய) சொல்லி அவனது திருவுருவை வழிபடல் வேண்டும். ஏனைய இடங்களில் சிவபூசையினைச் செய்வதைவிட ஆலயங்களில் செய்வது நூறு மடங்கு பயன் அதிகமாகும்; அதனைவிட, தவம்செய்தவர்களுடைய திருமேனிகண்டு வழிபடுவது ஆயிரம் மடங்கு பயன் அதிகமாகும்; அதனைவிட, ஆசையற்ற சிவஞானிக்குப் பிச்சையிடுவது ஒருகோடி மடங்கு பயன் அதிகமாகும். ஆகவே, எல்லாவற்றிலும் சிறந்தது சிவஞானி உண்ட ஊண் ஆகும்.

இடகலை பிங்கலைகளின் வழியாகப் பிராணவாயு சஞ்சரிக்கும்போது செய்யும் வழிபாடுகள் எல்லாம் அசுரர்க்குரிய பயன்களாகும். நடுநாடியின் வழியாகப் பிராணனைச் செலுத்திக் கும்பகம் செய்து வழிபடின், அப்பயன் பூசைசெய்வார்க்குரியவாகும். இப்பூசையே இறைவனுக்குச் செய்யும் பெரும்பூசையுமாகும். ஆறு ஆதாரங்களுக்கும் மேற்பட்ட இடத்தில் நாட்டம் வைத்து, சாக்கிரமும் சொப்பனமும் அல்லாத நடுநிலைமையில் பிராணனை அடக்கிச் சிவனை வழிபடும் பூசை வீடுபேறளிக்கும் நற்பூசையாகும்.

மனம் பிராணவாயு இரண்டினையும் பஞ்சாட்சரத்தால் புலன்வழிச் செல்லவொட்டாமல் சிவனடிக்கே மாற்றி, பஞ்சபூதங்களையும் ஒடுக்கி, திருவருளையே

நினைக்கும் நினைவால், திருவருள் உடம்பாக ஆக்கிச் செய்யும் வழிபாடே சதாசிவ வழிபாடாகும். அகப் பூசை புறப்பூசை என்னும் இரண்டினையும் இறைவன் ஏற்றுக்கொள்வான்.

13. மகேசுரபூசை

(1857—1867)

இறைவனுக்குச் செய்யும் வழிபாடு இறைவனைச் சாருமே தவிர அடியார்களைச் சாராது: சிவனடியார் களுக்குச் செய்யும் சிறப்புக்கள் அனைத்தும் அடியார் களுக்குச் சாருவதோடு இறைவனுக்கும் சாரும். தபோதனர்கள் மகிழ்ந்து உண்டது, மூன்று உலகமும் ஏற்றுக்கொண்டதாகும். சிவகுருவுக்கு அன்புடன் அளித்த பொருள்கள் அயன், அரி, அரன் என்னும் மூவர்க்கும் மூவேழ்குரவருக்கும் (தந்தை, தாய், மனைவி இவர்களது குடிவகையில் ஏழு தலைமுறையிலுள்ள மூதாதையர்கள்) உதவிய பொருள்களாகும். ஞானிக்கு ஒருவேளை பகல் உணவு அளித்தால் அது ஆயிரம் பிராமணர்களுக்கு உணவளிப்பது, ஆயிரம் ஆலயங்கள் கட்டுவது ஆகிய இவைகளுக்கு ஏற்படும் பயனைவிட பெருமளவு பயனுள்ளதாகும். (அதாவது, ஞானிக்கு அளித்த உணவே அதிக பயனுள்ளதாம்.)

அடியார்களை இறைவன் என்று கருதி வழிபடு கின்றவர்களைச் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்னும் மூவினைகளும் வந்தடையமாட்டாவாம்; சிவப்பேறும் அடையலாம். சிவனடியார்கள் உண்ட உச்சிட்டத்தை உண்டால் முத்திப்பேறும் கிட்டும். அடியார் பூசையில் ஆழ்ந்தவர்களுக்கு எல்லா வினை களும் நீங்கும்.

14. அடியார் பெருமை

(1868—1883)

சிவனடியார்கள், வேந்தர்களை மதிக்கமாட்டார்கள். அவ்வடியார்கள் இருக்கும் நாட்டில் பகையும் பஞ்சமும் இல்லை. மழையுண்டாம்; பயிர்செழிக்கும். சிவனடியார்கள் தூய்மையுடன் இறைவனை வழிபட்டு அவனது திருவடி சேர்வர்; பின், சிவலோகத்தில் பேரானந்தப்பெருவாழ்வு அடைவர்.

இறைவன் ஆண், பெண், அலி என்பவற்றுள் ஒன்றும் அல்லன். அவன், உயிர்களின் உள்ளத்தினுள் மறைந்தும் அறிவொளியாகவும் விளங்குவான். அவனருளல்லாமல் உயிரின் அறிவால் அறியவொண்ணாதவன். மேலும், அவ்விறைவன், கருவிகளின் துணையில்லாமலேயே அனைத்தையும் உணர்வான்; அதனால் அவன், கண்ணின்றிக் காண்பான்; காதின்றிக் கேட்பான் ஆவான். இப்படிப்பட்ட அண்ணலின் பெருமையை அறிவதே அனுபவமாகும்.

சிவனடியார்கள், ஞானவழியிலே செல்வார்கள்; சிவவுலகையும் ஆள்வார்கள். அச்சிவனது புயங்கள் எட்டுத்திக்கிலும் பரவின; திருவடிகள், பாதாளம் ஏழினுக்கும் அப்பாற்பட்டன. திருமுடி, புற அண்டங்களுக்கும் அப்பாற்பட்டனவாகும். ஆங்காரம் அடங்கி மனதில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை வழிபடுகின்றவர், பிறப்பு இறப்புக்களை அடையமாட்டார்.

இறைபணி புரியும் அடியார்களது ஆவியை இறைவன், உழுநிலத்தைத் தமது விருப்பம்போல்

செய்யும் உழவர்போல, உழுநிலமாகக்கொண்டு இயக்கி யருளுகின்றான்.

ஒவ்வொருவருடைய ஏழுவகையாக விரிந்த பிறப்பும், அநாதியே இறைவனுக்கு அடிமை என்று எழுதிக் கொடுத்த ஆவணம் (அடிமைச்சீட்டு) எல்லோருக்கும் உண்டு; அவ்வோலையைப் பிரமன் எழுதினான்; அச் சீட்டில் திருமால் கைச்சாத்திட்டான். உண்மையாளர் களது மனத்தில் சிவன் உறைவான்; வணங்குகின்றவர் களது இதயத்தில் வசப்பட்டு ஒழுகுவான்; இவ்வண்ணம் இருக்கும் சிவபிரானை மதித்து உண்மையோடு நினைவார்கள், அவ்வெண்ணத்தைக் கைவிடமுடியாது.

தலையால் தம்மை வணங்கும் தேவர்களுக்கு இறைவன், தனது திருவடியினை அவர்களது தலையின் மீது சூட்டுவான். அவ்விறைவனது திருவடியையே நினைந்து பணி செய்கின்றவர்களுக்கு இன்பப்பயனை அளிப்பான்.

சிவனடியார்களுக்குப் பணி செய்கின்றவர்கள், இறைவனையடைய வல்லவராவார்கள். சிவனடியார் கள் வாயிலாகவே இறைவனை அடையலாம். சிவனடி யார்களைத் தேவர்களனைவரும் வணங்குவர்; அப்படி வணங்கினவர்களே பூமியில் வந்து இறைவனைப் பூசிப் பார்கள். சிவனடியார்கள் வாழும் நாட்டில் எல்லா நன்மையும் மிகும். அந்நாட்டில் வாழ்வோர் மீண்டும் பிறவாமல் சிவலோகம் அடைவர். அயனும் மாலும் தம் தொழிலிலேயே அழுந்தி ஆனந்தம் அடைவரே யன்றிச் சிவனை அறியமாட்டார்கள். சிவனடியார்கள், சிவனையே அறிவர்.

15. போசனவிதி

(1884, 1885)

அனைவரும் சிவனடியார்களை எதிர்கொண்டு அழைத்துவந்து அவர்களுக்குத் திருவமுது அளிக்க வேண்டும். அப்படிச் செய்யாதவர்கள் உண்மைக்குப் புறம்பானவர்கள் ஆவார்கள். இறைவன் மனத்துள்ளே இருக்கும் உண்மையை உணர்ந்தவர்கள், உச்சிப்பொழுதிலே தாம் உண்ணும் ஊண், இறைவன் உறையும் ஆலயமாகிய தன் உடலுக்கென்று உணர்வார்கள். அவ்விதம் உண்ணுஞ்சமயம் சிவம் வேறு தாம் வேறு என்று எண்ணமாட்டார்கள்; இறைவனுடன் ஒற்றுமைப்பட்டிருப்பார்கள். இதுவே ஏகாந்தமாய் இருப்பதாகும்.

16. பிட்சாவிதி

(1886—1891)

தேகத்தின்மீது வைத்த ஆசையால் பிச்சையுணவினைப் பிறர்கொடுக்க அதனைவாங்கியுண்ணுமல், யோக உணவாகிய அமிர்தத்தைத் தாமே தமது உடலில் சமைத்து உண்ணல்வேண்டும்.

பிரமதேவனைக்காட்டிலும் தான் மேலானவன் - உயர்ந்தோன் என்பதனை உலகத்தார்க்கு அறிவுறுத்தற்காகவே பிரமனது மண்டையோட்டில் பிச்சை எடுத்து உண்டான் இறைவன். உண்மையறியாதவர்கள் இறைவனைப் பிச்சையெடுத்துண்பவன் என்று கூறுவார்கள். தாம் உண்ணும் ஊண், சிவன் அளித்ததெனக் கொள்வோர் சிவனடியார்கள். அடியார்கள் நன்மார்க்கத்தில் வரும்பொருட்டு இறைவன் அருளுருக் கொண்டு

வெளிப்படுவான்: தன்னையும் அவர்களுக்கு உரிமை யாக்கிக் கொடுப்பான்; மேலும், திருவடியின்பத்தினை யும் அளிப்பான்.

சிவனடியார்கள் பசி, ஆசை, வெகுளி முதலிய வைகளில் ஈடுபடமாட்டார்கள்; உடலில் அபிமானம் வைத்து அகங்காரம் அடையமாட்டார்கள்; நிலையில் லாத இன்பங்களையும் விரும்பமாட்டார்கள்; சிவனையே நினைந்து இருப்பார்கள்.

சிவஞானிகள், இல்லறத்தாரிடம் சென்று பிச்சை யேற்பதாவது, அவர்களுக்குப் பயனளித்தற்பொருட் டேயாம்; வேறு சில ஞானிகள், தம் இருப்பிடத்துக்கு இல்லறவாசிகள் கொண்டுவந்து பிச்சையளிக்க அத னைப்பெற்று அவர்களுக்கு அருள்புரிவார்கள்.

17. முத்திரைபேதம்

(1892—1901)

தத்துவங்கள் அடங்க, அவைகளைத் தம் வசப் படுத்தியவர்களே சிவப்பொறியாகிய முத்திரையினைக் கொள்வர். இறைவனது திருவடியின்கண், மோன நிலையில் வாய்பேசாது மனத்தை நிறுத்தியவர்கள், நாதங்களைக் கேட்டு முத்தி அடைவார்கள். சிவ துரியம், ஜீவதுரியம், பரதுரியம் என்னும் இம்மூன்று துரியங்களையும், இம்மூன்றும் அடங்கும் இடமாகிய நாக்கினையும் அடக்கல்வேண்டும். இவையே, சாம்பவி கேசரி முத்திரையின் உண்மை ஆகும்; சிவஞான முத்திரையும் இதுவேயாகும்.

இறைவனின் அருட்பார்வையே, உயிர்களின் இனி உண்டாகும் பிறப்புக்களை அறுக்கும் பாணிமுத்திரை

யாகிய சின்முத்திரையாகும். ஓம் என்ற மொழியைப் பயிலும் உண்மையின் அடையாளம் கேசரி முத்திரை யாகும். இறைவனது திருநாமத்தை ஓதுதல் மெய்ஞ் ஞானமுத்திரை ஆகும்.

கண்டத்தானத்தே சதாசிவன் எழுந்தருளியிருப் பான்; சிவஞானத்தால் மனத்தினிடத்தே இறைவன் விளங்குவான்; சிவ உருவம், மோனத்திலே மறைந்து நிற்கும்; இதுவே மோனமுத்திரையாம். முடிந்தமுடி பான முத்தியும் இதுவேயாம். மௌனமானது வாய், மனம் என இருவகைப்படும். இவ்விரண்டும் சேர்ந் தாற்போல இருந்தால் திருவருள் கிடைக்கும்.

அட்டமாசித்திகள் யோகத்தின் முத்திரையாகும். எல்லா முத்திரைகளும் ஞான முத்திரையினுள்ளே அடங்குவனவாம். அட்டமாசித்திகளைப் பெற்றவன், செம்பைப் பொன்னுக்கும் வாதனுவான்; போகியான வன் புருஷார்த்தங்களாகிய நன்னெறியில் உள்ளவனு வான். ஆறு ஆதாரங்களிலும் சிவன் நின்று அருள் பவன் என்னும் பண்புடையவன் சிவத்தில் அடங்கி நிற்பான். மோனமுத்திரை முத்தர்களுக்கும், ஞான முத்திரை குருவுக்கும், தேனுமுத்திரை சித்தாந்தியர்க் கும் உரியதாகும். பிரமரந்திரம், சகஸ்ராரம், சந்திர மண்டலம் ஆகிய இவைகளில் பிராணவாயு செல்லும் வழியைக் கண்டவர்கள் மலம் அகன்று நலமுற்றிருப் பார்கள்.

18. பூரணகுகைநெறிச்சமாதி

(1902—1909)

யோகியின் உயிர் வளர்பிறையில் உடலைவிட்டு நீங்குமானல் சூரியமண்டலத்தே சென்று தங்கும்.

செல்லும்போது சுவர்க்க உலகத்தும், சந்திர மண்டலத்தும், பிறர் உலகத்தும் தங்கிச் செல்லும். சமாதி கைகூடாது உடலிலிருந்து வெளிப்பட்ட யோகியானவன், கன்மத்துக்கு ஈடாகப் பதவியடைந்து, மீண்டும் பிறக்குமிடத்து வினை நீங்கப்பெற்று, பெரிய யோகியாவான். மேலும், அந்த யோகி சிவயோகி ஆவதற்கு முன்பே அட்டமாசித்திகளும் கைவரப்பெற்றவனாக விளங்குவான்.

சிவயோகஞானி உடல் சிதைந்து நீங்கினால் சிவவுலகம் சென்று, மீண்டும் இவ்வுலகத்தில் பிறந்து, ஞானத்தால் பேரின்பமாகிய வீட்டின்பம் பெற்று வாழ்வார். எல்லா உலகமும் அந்த யோகியைப் போற்றும். அச்சிவயோகியர் 'தான் அவனாக' விளங்குவர்; சிவ குருவாகவும் விளங்குவர். அவர்கள் நினைத்த அனைத்தையும் அப்பொழுதே இறைவன் அளித்தருளுவான். சிவஞானிகள் எங்கும் எதையும் சிவமாகவே காண்பார்கள்.

19. சமாதிக்கிரியை

(1910—1922)

சிவஞானியின் உடலைச் சமாதிவைக்காமல் தீயினால் எரித்தால், நாட்டில் வெப்புநோய் அதிகரிக்கும்; அவர்களது உடல், நாய் நரிகளால் உண்ணப்பட்டால் உலகில் உள்நாட்டுக் கலகத்தால் பலர் மாண்டு, மாண்டவர்களுடைய உடல்கள் அந்நாய்நரிகளால் உண்ணப்படும். சிவஞானியின் உடல் சுடப்பட்டால் அது ஆலயத்தில் தீவைத்ததற்குச் சமமாகும்; அதனால், மழையில்லாமல் நாடு பஞ்சம் அடையும்; அரசர்களும் தங்களது பதவிகளை இழப்பார்கள்.

சிவஞானியரது உடலைச் சமாதிவைப்பது புண்ணியம் ஆகும். எவரும் பாதுகாக்காது அவரது உடல் அழியுமானால், நாடு அழிவதோடு அந்நாட்டில் துன்பமும் உண்டாகும். ஞானியினது உடலைச் சமாதி வைத்தால், அரசர்களும் மக்களும் அளவிலா இன்பம் அடைவார்கள்.

ஒன்பதுசாண் ஆழம்; ஐந்துசாண் அகலமாகிய சுற்றளவு; மூன்றுசாண் அகலமுள்ள முக்கோணம்; இந்த முறையில் அமைக்கப்படும் குகை, பதுமாசனமாகும். இதுவே, சமாதிக்குகையின் அளவிலக்கணமும் ஆகும்.

சிவஞானியின் வீட்டின்பக்கம், நடைச்சாலையின் பக்கம், குளக்கரை, ஆற்றின்பக்கம், மலர்ச்சோலை, நகரிலுள்ள மேட்டுப்பாங்கான பூமி, காடு, மலையடிவாரம் ஆகிய இவ்விடங்களெல்லாம் குகை அமைக்க நல்லிடங்களாம்.

குகைக்குள் பஞ்சலோகங்கள், நவமணிகள் ஆகிய இவைகளை அமைத்து, அதற்குமேல் தருப்பையைப் பரப்பி, அதன்மேல் வெண்ணீற்றைக் குவித்து, அதன் மேல் சிவஞானியின் உடலை வைக்கவேண்டும். சிவஞானியின் உடலின்மேல் வெண்ணீற்றைப்பூசி, வாசனைப்பொடியையும் தூவவேண்டும். சமாதிவைத்தபின் சாய்மணைவைத்து, அதன்மேல் பாவாடையும் இலையும் அமைத்து, கறிவகைகள், திருவமுது, இளநீர் ஆகிய இவைகளைப்படைத்து நிவேதிக்கவேண்டும். குகைக்கு மேலுள்ள வேதிகையில் அரசமரத்தையாவது சிவலிங்கத்தையாவது வைத்துப் பூசித்தல் வேண்டும்.

20. விந்துற்பனம்

(1923—1936)

விந்து என்னும் சுத்தமாயையில் குண்டலினியும், பரமாகாயத்தில் விந்துமாயாகாரியம் ஒன்பதும், அவற்றின் முறையால் அயன்முதலிய ஒன்பதின்மரும், முறையாகக் கரணங்கள், கலைகள், வைகரி முதலிய வாக்குகளாகிய ஓசைகள் ஆகிய இவைகளும் தோன்றும், சுத்தமாயையினின்று உயிர்களை இயக்கி, இறைவன் கொள்ளும் மூர்த்தங்கள் இருபத்தைந்தாகும்; நாதபேதம் இருபத்துநான்காகும்; நாதத்தின்வகை விந்து, பரவிந்து, நாதம், பரநாதம் என்னும் நான்காகும்.

பரவிந்துவிலே தோன்றுகின்ற மாமாயை, சிவவடிவங்கள் இருபத்தைந்தையும் தந்திடும். வரகேசி, தற்பரை, குடிலை என்னும் இம்மூன்றும் குண்டலினி என்னும் விந்துவினிடமாகத் தோன்றும். நிவிருத்தி, பிரதிட்டை, வித்யை, சாந்தி, சாந்தியாதீதை என்னும் ஐந்து கலைகளும் சுத்தமாயையினிடத்தே தோன்றும். இதனிடமிருந்தே அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து ஆகிய ஐந்து எழுத்துக்களும் தோன்றும்.

அந்தமும் ஆதியுமான பராபரன், எங்கும் நிறைந்திருக்கும் வியாபியாவான்; அவனே பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் பெருமையையுடையவன். விந்துவின் சத்தியால் அண்டம் முதலிய அனைத்தும் உண்டாவன. விந்து என்றாலும் காரணமாயை என்றாலும் ஒன்றே.

விந்துவானது, அகம் புறம் எங்கும் விரவி ஒளிர்கின்றது. விந்துவின் நிறம் வெண்மையாகும். நாதத்தின் நிறம் செம்மையாகும். சத்திக்கும் சிவத்துக்கும்

விந்துவும் நாதமும் நிலைக்களமாகும். இறைவனைப் போல விந்துவும் பழமையேயாம். விந்துவினின்றே படமும் கடமும் (வேட்டி-மட்குடம்) தோன்றுவன. விந்துவாகிய வித்தில் நாதமாகிய இறைவன் கலந்து நிற்பான். இம்முறையில், மாயை தொழிற்படும் உண்மையை எவரும் அறியமாட்டார்கள். சகஸ்ராரத்தில் இறைவன் எப்போதும் வீற்றிருந்தருளுவான்.

முளையானது வித்துக்குள்ளே அடங்கி நிற்கும். எனினும், வித்தும் முளையும் வெவ்வேறேயாம். முளை, வித்தின்வாயிலாகவே வெளிவரும். அதுபோல, விந்துவான சுத்தமாயையானது திருவருட்சத்தியுடனடங்கி, அச்சத்தியால் தொழிற்படும். ஆகையால், மாயையும் திருவருட்சத்தியும் ஒன்றல்ல; வெவ்வேறே ஆகும். இதுவே இறைவன் அருளிய நெறியாம்.

உண்ணப்பட்ட அன்னமானது, தூல உடம்பை வளர்ப்பதும், சூக்குும உடலில் காணும் மனத்தை வளர்ப்பதும் மலமாய்க் கழிவதுமாகிய மூன்று பிரிவை அடையும். முன்தினம் உண்ட அன்னரசம், தூல உடலாகவும் சூட்சும உடலிலுள்ள மன உடலாகவும் வளர்ந்துள்ளன. இரசம், இரத்தம், மாமிசம், மேதசு, அஸ்தி, மச்சை, சுக்கிலம் என்னும் ஏழுதாதுப்பொருள்களுள் இரசம், இரத்தம், சுக்கிலம் என்னும் மூன்றும் புல்நுனி நீர்போலக் கூடுவதே விந்து என்று சொல்லப்படும். இவ்விந்து இருபத்தொருநாள்வரை உடம்பில் வளரும். அதன்பின், மூன்றுநாள் வரையில் உடல் விந்துவாக இருந்த அவ்விந்து மனவிந்துவாக மாறும். அதனை ஞானவிந்துவாகக்கொண்டு இறைவனது திருவடி உணர்வில் நின்றால் அவ்விந்து அழியாது; உலக

மயக்கில் இருந்தால் விந்து அழியும். விந்து அழிந்தால் வாழ்நாளும் உடலும் பாழாகும். ஆதலால், விந்து அழியாமல் உடலைப் பாதுகாக்கவேண்டும்.

21. விந்துஜயம் - போகசரவோட்டம்

(1937—1974)

மாதர்களைப் பாராமல் சிவனையே நினைந்து, மூலாதாரத்திலிருந்து நடுநாடி வழியாகப் பிராணவாயுவை மேலே செலுத்தி யோகம் செய்கின்றவர் சிவயோகியராவர். சிவயோகத்தில் அழுந்திநிற்காமற் போனால், காமாதிகளில் துன்பப்பட்டு உடல்கெட்டு அழியும். மங்கையரைச் சேரவேண்டும் என்று விருப்பம் உண்டானால் வளர்பிறையில் பின் ஆறுநாட்களிலும், தேய்பிறையில் முன் ஆறு நாட்களிலும் கூடல்வேண்டும். யோகியர்கள், வளர்பிறையில் ஆறுநாட்களும், தேய்பிறையில் சூரியனுக்குரிய ஒன்பதுநாட்களில் 1, 8, 13, அமாவாசை ஆகிய இந்நாட்கள் நீங்கலாக மற்ற ஐந்து நாட்களும் ஆகப் பதினொரு நாட்கள் மங்கையரைக் கூட நன்னாட்களாகும். இல்லறவாழ்க்கையர், பூப்பு எய்திய மூன்றுநாட்கள் நீங்கலாக இருபத்தேழுநாட்களும் கலவிசெய்ய அமுதம் பெருகும்.

பெண்களைக் கூடுவதற்கு உரிய காலம் இரவுப் பொழுதேயாம். அக்காலமே விந்துவைக் கருப்பையில் தங்கவைக்கும் காலமாகும். வலதுமூக்கில் பிராணவாயு சஞ்சரிக்கும் காலத்தில் கலவிசெய்தல் வேண்டும். ஓர் சமயம், இடதுமூக்கில் பிராணவாயு சஞ்சரித்தாலும் அதை வலப்பக்கத்துக்கு மாற்றல் வேண்டும். மகப்பேறு கருதி விந்துவிடும் முறையே உயர்ந்ததாகும்.

நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு இந்நான்கும் உள்ள வளாயும், அன்பும் இளமையும் உள்ளவளாயும் இருக்கும் மங்கையரையே புணர்தல் வேண்டும்.

கருவிலிருந்து மகவு வெளிவரும் முறையிலே மகவுக்கு ஏற்படக்கூடிய வாழ்வுநாள், சாகும்நாள், குணங்கள், இன்பத் துன்பங்கள், செல்வம் முதலிய வைகளை இருவரது சேர்க்கையாலும், பிராணவாயு கலவிக்காலத்தில் ஓடிய ஓட்டத்தாலும் ஆராய்ந்து கவனித்தல் வேண்டும். விந்துவிலிருந்து வெளிவரும் உயிரான வித்தைச் சலனம் இல்லாமல் உணர்ந்தால், தயிர்கடையும் மத்துப்போன்று விளங்கித்தோன்றும்; அம்மத்தினுள்ளே மாம்பழமாகிய சிவன் விளங்கித் தோன்றுவான்.

கலவியின்போது நாயகனது எண்ணமே குழந்தை யின் மேல்அனுபவத்துக்குக் காரணமாக இறைவன் அமையச்செய்கின்ருன். விந்துவானது மூலத்துள்ளே இயற்கையாக வறட்சியடைந்து உடலுடன் கலந்து கரைந்து(வேறிடம் செல்லாது நின்று)விட்டால் பிராணன் அழியாது; அதிகபலம், நல்லறிவு, தவம், அட்டமா சித்திகள், ஜபம், மௌனம் ஆகிய இவை கைகூடும்.

விந்துவைக் கீழ்நோக்கவிடாமல் தடுத்துமேலேற்றி சந்திரமண்டலத்திலுள்ள அமுதத்தையே உணவாகக் கொண்டு அழியாமல் இருப்பவரே சிவயோகியர்கள் ஆவார்கள். யோகி, ஞானி, பரமயோகி, பரமஞானி ஆகிய இவர்கள் ஆசையுற்ருலும் விந்துவை வெளி விடாது உள்ளே அடக்கிவைக்கும் பெருமையுடைய வர்களேயாம். விந்து அழிவதால் சிலர் வருந்துகின்ருர் கள். சிவனையே நினைவார்களுக்கு விந்து கட்டுப்பட்டு

நிற்கும். மாதர்களைக் கூற்றுவனென நினைத்தல்வேண்டும். அப்படி நினைத்தால் காமம் அழியும்: அதனால் இறப்பு இல்லாமல் நூறுகோடி ஆண்டுகள் வாழலாம்.

விந்துவை அடக்கினவன் நீண்டநாள் வாழ்வான்: விந்துவை அடக்காதவன் விரைவிலே அழிவான். விந்துவினால் வெல்லப்பட்டவர்கள் பெண்களைக் கூடினாலும் அழியமாட்டார்கள். தனஞ்ஜயன் என்னும் வாயுவானது, உயிரைப் போக்கக்கூடியதாக இருந்தாலும் அவர்களை அழிக்காது. ஆடவரும் மகளிரும் சேர விரும்பினால், சேர்வதற்குத் தகுதியான நாளின் முன்னாளிலே குடலில் இருக்கும் மலத்தைப் போக்கி, வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்றினையும் தத்தம் நிலையில் இருக்கச்செய்து அதன்பின், கலவி செய்தல் வேண்டும்.

மேல்நிலமாகிய நிராதாரத்தே தோன்றும் விந்துவையும் நாதத்தையும் நடுநாடி வழியாகச் செலுத்தி, மேற்சென்று விந்துவாகிய அமிழ்தத்தை உண்டால் போகத்தில் இச்சை உண்டாகாது; விந்துவும் அடங்கிவிடும். விந்துவின் விளைவையும், அவ்விந்து முற்றி அதனாலடையும் பலனையும் அறிந்து, அடக்கும் முறையைக் கைக்கொண்டால் ஆயுள் நீடிக்கும். அடக்காதொழிந்தால் வாழ்நாள் நாசமாகும். விந்து என்னும் வித்தினை மூலாக்கினியினால் எரித்து, வலதுநாடிவழியாகச் சூரியமண்டலத்துக்குச் செலுத்தி, பின் அதற்கு மேலுள்ள சந்திரமண்டலத்திற்கு இடதுநாடிவழியாக ஏற்றினால் அவ்விந்து அமுதமாகும். விந்துவானது சிவாக்கினியில் கட்டுப்பட்டதாகும்: அப்போது அழிவற்ற சிவபோகம் விளையும்.

யோகியர் பெண்ணுடன் கூடினாலும் அது உடற் சேர்க்கையேயாம். அவர்களது உள்ளம் சிவனிடத்து இருப்பதால் விந்து வெளிப்படாது. அப்போது உண்டாவது சிவபோகமேயாம். சிவயோகியர் விந்துவினை மாதரிடத்தில் விட நேர்ந்தாலும், அது காதலால் விடுவதல்ல; மகப்பேற்றிற்காக விட்டவராவர். ஏனையோர் மாதரிடத்தே ஆசைகொண்டு வருந்துவர்.

விந்துவும் நாதமும் நடுநாடியின் வழியாக உடலினிடத்தே பொருந்த, மூலத்திலே எழுந்த அக்கினியானது மயிர்க்கால்தோறும் நிலைபெறும்படியாக, உலகசிந்தை சிவத்தினிடமாக மாற விந்துவும் கட்டுப்படும். இதுவே, உடல் நிலைக்கின்ற வித்தும் ஆகும்.

வேளாண்மை செய்பவன், விதைக்காக வைத்திருக்கும் நெல்லைக் குத்தித் தின்பானேயானால், அவன், விளைவின் பயனை அறியாதவன் ஆவான். அதுபோல, விந்துவைக்கட்டிச் சுழுமுனையில் ஏற்றாமல் மாதரிடத்தில் செலுத்துபவன், தமது வாழ்நாளைக் குறைத்துக் கொள்பவன் ஆவான். அவனால் உலகுக்கு யாதொரு பயனும் இல்லை.

அன்னத்தால் ஏற்படும் விந்துவைக் கீழ்நோக்க ஒட்டாமல் தடுத்து, நாதசத்தியின் உதவியால் பயன் படுத்திக்கொள்ளாமல் விட்டுவிட்டால் நாதமும் விந்துவும் அழியும். விந்துவின் பெருமையை அறிந்து, அவ் விந்துவைக் கட்டினவரது உடம்பு பொன்போல விளங்கும்; மேலும், அட்டமாசித்திகளும் கைகூடும்; நீண்டகாலமும் வாழலாம். அகாரம், உகாரம், மகாரம் ஆகிய இம்மூன்றும் முறையே பதி பசு பாசங்களாகத்

தோன்றும். சிவகுரு அருளிச்செய்த 'சிவயநம' என்னும் பஞ்சாட்சரமே உபதேசமாம். எல்லாப்பொருளிலிடத்தும் இறைவன் கலந்துள்ளான். பஞ்சாட்சர ஜபத்தால் விந்துவைக் கட்டுப்படுத்தினவர்களுக்குச் சிவோகம்பாவனை விளையும்.

விந்துவும் நாதமும் ஒன்றுசேர்ந்து இடகலையில் பொருந்துமானால், சகஸ்ராரப்பெருவெளியில் அமிழ்தம் பெருகும். காமத்தை விரும்பினால் எல்லாம் வீணாகும். இறைவனது திருவருளால் பொறிபுலன்கள் எல்லாம் இயங்குகின்றன என்று அறியவல்லவர்களுடைய அறிவிற்கு அறிவாகவே சிவபிரான் எழுந்தருளியிருப்பார்.

பாதம் நிலம்; பாதத்திலிருந்து கொப்பூழ்வரை அப்பு; கொப்பூழ்முதல் மார்பு வரை அனல்; மார்பு முதல் தோள்வரை காற்று; கழுத்துக்குமேல் ஆகாயமாகும். இவையே, உடம்பின்கண் ஐம்பூதங்கள் பொருந்திநிற்பனவாம்.

22. ஆதித்தநிலை – அண்டாதித்தன்

(1975—1984)

தங்களுக்கு ஒளியுண்டாகும்பொருட்டே தேவர்களும் நட்சத்திரங்களும் இறைவன் திருவடியினை வலம்வந்து வணங்குகின்றார்கள். அண்டச்சூரியன், திருமால், பல்லுயிர்கள் ஆகிய இவர்களுக்கெல்லாம் புகலிடமாக உள்ளவன் இறைவனேயாம். அவ்விறைவனே, எல்லாவுயிர்களும் சிறப்புடன் ஓங்க, சிவசூரியனாக விளங்குபவனாவான். இறைவனாகிய சிவசூரியனை, அண்டச்சூரியனானவன் துதிக்க, அவ்வண்டச்சூரியனுள்ளே சிவசூரியன் சுடரொளியாய்ப் பிரகாசிப்பான்.

எவராயினும் இறைவன் திருநாமத்தை அன்புடன் ஓதுவாரேயானால் சிவனருள் பெறலாம்.

மெய்ப்பொருளாயும், சத்தியாயும் சிவமாயும், அருளொளியாயும் நிற்பவன் அச்சிவசூரியனே ஆவான் (இறைவனே ஆவான்). வளையம், முக்கோணம், வட்டம், அறுகோணம், துலை, இருவட்டம் என்னும் ஆறு வகையான அடையாளங்களோடு மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களுள் வட்டவடிவமான விசுத்தித்தானத்தில் பதினாறு இதழ்களுள்ள தாமரையினிடத்தே ஆதித்தன் விளங்குவான்.

சூரியனுக்கு இருப்பிடமாயுள்ள முக்கோணத்தில் சூரியன் இருந்துகொண்டு எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்து விளங்குகின்றான். சூரியன் பிரகாசிக்காவிட்டால் உலகம் இருளால் சூழப்படும்; நால்வகை வாக்குகளும் செயற்படாது. சிவத்துள்ளே திருவருட் சத்தியானவள் மறைந்துநின்று அருள்புரிவதை எவரும் அறியமாட்டார்கள்.

மூலாதாரத்துக்குக் கீழே உள்ளதான பீஜத்தின் வழியே சூரியன்வரும்வழி ஆகும். அவ்வழியை யாவராலும் காணமுடியாது. மணிபூரகத்துக்கும் அனாகதத்துக்கும் நடுவேதான் ஞாயிறு தோன்றும். அச்சூரியன், தன்முனைப்புடைய எவராலும் அறியப்படாதவனாவன். சூரியன், ஆகாயத்தினிடமாகநின்று எல்லாப்பொருள்களையும் தன் கிரணங்களால் பிரகாசிக்கச்செய்கிறான். உயிர்களது கண்களும் அப்பிரகாசத்தால் விளக்கம் பெறுகின்றன.

உண்மை உணராதவர்கள், சூரியன் கயிலைமலையைச் சுற்றிவருகிறான் என்று கூறுவார்கள். உண்மை

உணர்ந்தவர்கள், உச்சித்துளைவாயிலாகச் சூரியனைக் காணும் முறைப்படிக் காண்பார்கள்.

23. பிண்டாதித்தன்

(1985—1987)

இறைவன் ஆன்மாக்களை விட்டு அகலாது அவர்களது கருத்துள்ளே நின்று அருள் புரிவான். அதனால், உயிர்களது மலங்கள் அழியும். சூரிய ஒளியானது நடுநாடியின் வழியாகச் சென்று எல்லா ஒளிகளையும் வென்று மேம்பட்டு ஒளிரும். (பிண்டாதித்தன் - அக ஞாயிறு. பிண்டம் - உடலாகிய சிறு உலகம்.)

பிராணவாயுவைச் சுழுமுனைவழியாகச் செலுத்தி உள்ளொளியைக் கண்டவர்கள், பல அண்டங்களை உணர்ந்தவராவர்; அப்படியுணர்ந்தவர்களுக்கு மெய்யன்புநிலை எளிதாக அடையும்.

24. மனவாதித்தன்

(1988—1992)

சூரியனும் சந்திரனும் மேலும்கீழுமாய்ப்பொருந்தத் தோன்றும் காலமே பூர்ணிமா (முழுமதி) ஆகும். சந்திரகலையானது சூரியகலையில் ஒடுங்கும் காலமே பூசைக்குரிய பொழுதாகும். அவ்விருநாடிகளும் நடுநாடிவழியாகச் செல்லும்போது மனம் தெளிவுறும். இந்நிலையுடையவர்கள் சிவமாயிருப்பவர்களாவார்கள். இடகலை, பிங்கலை, மூலக்கனல் ஆகிய இம்மூன்றும் நடுநாடிக்கண் கூடிப் பொருந்துமானால் அமிழ்தத்தை அளிக்கும் முழுமதி ஆகும். ஒன்பது கோள்களினிடத்தும் இறைவன் பொருந்தி நிற்பவன். அவனது

ஆணையின்வழியே அக்கோள்களும் இயங்கும். இறைவனது திருவருள் பெறுதவர்கள் பேரின்பம் அடைய மாட்டாதவர்களாய்ப் பிறப்பு இறப்புத் துன்பத்துள் அழுந்துவார்கள்.

25. ஞானுதித்தன்

(1993—2000)

விந்துவானது, பரவிந்து அபரவிந்து என இரு வகைப்படும். அபரவிந்துவே பரநாதமாகத் தோன்றி, அவற்றிலிருந்து ஐந்து (நிவிருத்தி முதலான) கலைக ளாகத் தோன்றிற்று. இவற்றின் மூலமாகவே இறைவன் தூண்டித் தொழிற்படுத்துவான். இந்நிலையே உயிர்களின் மனத்தினிடத்துத் தோன்றும் அருளுேதயம் எனப்படும். நான்கு வாக்குகளும் பஞ்சகலை களுக்கு உட்பட்டனவாகும். உலகத்திலே விளங்கும் சூரியனே மூலத்திடத்தும், விசுத்தித்தானமாகிய கண்டத்தினிடத்தும் விளங்கிப் பிரகாசிக்கும். அவ்வொளி எட்டுத்திசைகளிலும்சென்று பிரகாசிக்கும். திருவருள் பெற்றவர்க்கே இவ்வுண்மை தெரியும்.

உடலுள் கொப்பூழ், கண், நாசி, புருவமத்தியம், உச்சித்துளை என்னும் ஐந்து இடங்களிலும் பிரகாசிக்கின்ற ஜோதி ஸ்வரூபனுன இறைவனை அரன், அரி, அயன் என்னும் மூவரும் அறிந்திருந்தார்கள்.

26. சிவாதித்தன்

(2001—2004)

உலக இருளானது, சூரியன் சந்திரன் ஆகிய இவர்களால் நீங்குவதுபோல, அக இருளாகிய பாசமும் அஞ்ஞானமும் சிவஞான ஒளியால் நீங்கும். சூரியன்

பல மட்குடங்களில் தனித்தனியாகத் தோன்றினாலும் கதிரவன் ஒருவனேயாம். அச்சூரியனைக் கடத்துள் அடக்கிவிடவேண்டும் என்று குடத்தை மூடினாலும் அக்குடத்துள் அச்சூரியன் அடங்கமாட்டான். அது போல, உயிர்கள்தோறும் நீக்கமற நிற்கும் இறைவன் ஒருவனே ஆவன். அவ்விறைவனும் உடம்பில் அடங்காதவனாய் எங்கும் எப்போதும் அகத்தும் புறத்துமாய் நிற்பான்.

சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய இம்மூன்றும், அயன் அரி இவர்களாயும், உயிர் உடல் இவைகளாயும், பேரொளியாயும் உள்ளவன் அவ்விறைவனே யாவன். அக்கினி, சூரியன், சந்திரன், நிலம், நீர், அனல், காற்று, ஆகாயம், பல்லுயிர் ஆகிய இவை எட்டும் (அஷ்டமூர்த்தம்) தன்னைத் தியானிக்கும் அடியார்களுக்கு வெளிப்பட்டு அருளும் இறைவனது திருவுருவங்களாகும்.

27. பசு இலக்கணம் - பிராணன்

(2005—2006)

ஆன்மாக்கள் நினைத்த மாத்திரத்தில் உணர்பவனும், ஆன்மாக்களது உள்ளத்துள்ளே நின்று வேதங்களை அறிவிப்பவனும், உள்ளத்துள்ளே இருக்கும் அழியாப் பெருவிளக்காயுள்ளவனும் ஆகிய சிவபிரான் அன்னமயமாயிருப்பவனாவான். உலகவாழ்வில் சிவன் சீவன் என்னும் இரண்டு அன்னங்கள் இணைபிரியாது இருக்கின்றன. அவைகளுள் ஒன்று சிவபிரான்; மற்றொன்று சிற்றறிவுடைய சீவனாகும். அச்சீவன் தான்

வேறு என்று எண்ணிக்கொண்டு இருக்கும்வரையில் முத்தி அடையாது.

28. புருடன்

(2007—2010)

ஆன்மாக்கள் மலக்கட்டிலிருந்தும் நீங்கி இறைவனது திருவடியின்பம் பெற்று வாழ்வதற்காகவே, வைகரி முதலான வாக்குகளையும், பஞ்சமலங்களையும், புருடன் முதலான ஏழு உணர்ச்சி மெய்களையும், பிறப்பை ஒழிக்கும் ஞானம் ஆகிய இவைகளைச் சாட்சியாயுள்ள சிவன் ஆக்கி அருளுகின்றான். அணுவுக்கு அணுவாய் விளங்கும் இறைவனைத் திருவருளால் ஆராய்பவர்களே அவனது திருவடியடைதல் கூடும். இறைவன் திருவருளால் நன்னெறியில் ஒழுகுகின்றவர்களே பாசஇருளை ஓட்டிக் கூத்தப்பிரானையடைதல் கூடும். அணுவுள் சிவனும் சிவனுக்குள் அணுவுமாகக் கலந்து நிற்பதை எவரும் அறியமாட்டார்கள். அச்சிவபிரானே சராசரங்களான எல்லாப்பொருளுமாவன்.

29. சிவன்

(2011—2014)

ஆன்மாவிற்கு வடிவம் இல்லை. இறைவன் எல்லாவற்றினோடும் கலந்துநிற்பவன். யோகநெறி பயின்ற ஜீவன், அவ்விறைவனைக்கண்டு கருத்திலே அவனுருப் பெற்று இன்பம் பெறும். சிவன், மானிடவுருவங் கொண்ட குருவாகவந்து, யோகியரை, யோகத்தடைகள் நீங்கும்படியாக ஞானநிலைக்குத் தூண்டி அருளுவன். அப்போது உயிர், எதிலும் பற்று இல்லாமல்

பேருறக்கமாகிய துரியநிலையை அடைந்து, திருவடி ஞானத்திலேயே நிலைபெற்றிருக்கும்.

30. பசு

(2015—2016)

கற்ற மனிதர்கள் உருவவழிபாடுசெய்து பேரின்ப நிலையை அடைவார்கள். யோகநெறியாளர்கள், ஒரு குடம் நிறைந்த பால்போல இன்பநிலையை அடைவார்கள். ஏனையோர், அறிவிலிகளாய்த் துன்பப்படுவர்.

ஐம்புலவழியிலே செல்லும் உயிர்களைப் பற்றறும்படிச்செய்து தம் திருவடியில் கூட்டுவிப்பதே, இறைவன் ஆன்மாக்கள்மீது கொண்ட குறிப்பாகும். இக்குறிப்பினை இறைவன் திருவுள்ளங்கொண்டபின்னரே ஆன்மாக்கள் இதனை உணரமுடியும்.

31. போதன்

(2017—2022)

ஜீவனும் சிவனும் ஒன்றேயாம். ஜீவன், சிவனை அறியவில்லை. ஜீவன் சிவனை அறிந்தபின், ஜீவன் சிவனாகவே இருக்கும். இறைவனே உயிர்கட்கெல்லாம் கண்காணிப்பவனாவான். இறைவன், பொறிவாயில்களின் மூலமாக அல்லாமல் எவற்றையும் தானாகவே அறிபவன். உயிர்களினது அறிவுக்கு அறிவாய்நின்று அறிவித்தும் அறிபவன். ஆதலால் உயிர், சிவனாக விளங்கும். முப்பத்தாறு தத்துவங்களினது தன்மைகளைத் திருவருளால் அறிந்தால், அத்தத்துவங்களையெல்லாம் கடந்தவன் இறைவன் என்னும் உண்மை

புலனாகும். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்களே ஜீவன்முக்தர்களாவார்கள்.

32. ஐந்திந்திரியம் அடக்கும் அருமை

(2023—2030)

யோகத்தில் நிலைத்துநின்றால் பஞ்சேந்திரியங்களை அடக்கலாம். யோகப்பயிற்சியில்லாமல் ஐம்புலன்களை அடக்கமுடியாது. பொறிகளின் வாயிலாகப் பயனை அனுபவிப்பவர்கள், அப்பொறிகளைச் சுமந்துநிற்கும் உயிராக இருப்பார்கள். இந்திரியங்களாகிய ஐந்து சிங்கங்களின் நகமும் பற்களும் ஆகிய (முறையே) நல்வினை தீவினைகளை அறுத்துவிடுவோமானால் இறைவனது திருவடியை அடைதல்கூடும். மனத்தை ஐம்புலன்களும் விரும்பியபடி செல்ல விட்டுவிட்டால் பின், மனம் விரும்பி அனுபவிக்கும் பொருள்களை நம்மால் தேடிக்கொடுக்க முடியாததாகும்.

உடலின்கண் அளவில்லாத தொளைகள் - துவாரங்கள் இருக்கின்றன. அவைகள் ஆணவ இருள்நிறைந்த பாழறைகளாகும். அத்துவாரங்களின் வழியாகப் பஞ்சேந்திரியங்களும் மனமும் அடிக்கடிச் செல்லுமாயின் பிறப்பு இறப்புக்கள் நேரும். ஆகவே, அவைகளை இறைவன் திருவடியில் செல்லவிட்டால், அத்துவாரங்களின் வழியே செல்லாதனவாக இருக்கும்; பேரின்பமும் அடையலாம். முழுமுதலாகிய இறைவனைத் தொழுது அதன் பேற்றை அனுபவிக்க இடமாக அமைந்துள்ளது சிவலோகமாகும்; மக்கள்வாழ்க்கை இறைவனுக்குத் தொண்டு செய்யும் உண்மைஞானத்தில் சிறப்பெய்தும்.

33. ஐந்திந்திரியம் அடக்கும் முறைமை

(2031—2043)

ஒருமுழ ஆழமும் அரைமுழம் விசாலமும் உள்ள தான முகமாகிய குளம், நமது உடலின்கண்ணே இருக்கிறது. அக்குளத்துள்ளே வாழ்கின்ற புலன்களாகிற மீன்கள் பல உள்ளன. அம்மீன்களை நன்னெறியிற்படுத்த, செம்படவனுகிய சிவபிரான் வலையை வீசினுன். அதனுல், புலன்களாகிய மீன்கள் துன்பத்தினின்றும் நீங்கிப் பேரின்பமாகிய சிவ இன்பத்தை அடைந்தன. பஞ்சேந்திரியங்களையும் அடக்குபவனே அமரனுவான். உடற்கு இன்பமாகிய உண்ணல், பொருந்தல் (மாதரின்பம் துய்த்தல்) ஆகிய இரண்டு இன்பங்களையே மேற்கொண்டு ஒழுகுபவர்களுடைய பிராணன் விணுய்க்கழியும். அப்பிராணன் இருக்கும் வரையில்தான் உடலும் இருக்கும். ஐம்புலன்களையும் அடக்கிச் சிவவழிபாட்டில் செலுத்துவதே அறிவை நல்வழியில் செலுத்துவதாகும்.

ஐம்புலன்களாகிய யானையை அடக்குவதற்காக அறிவாகிய அங்குசம் தேவை. அதற்கும் தப்பி அவ்வேழம் செல்லுமானுல் நம்முடைய நற்செய்கைகளெல்லாம் அழிந்துவிடும். பஞ்சாட்சர ஜபத்தால் திருவருள் பெறலாம். விந்துவானது கட்டுப்பட்டால் பஞ்சேந்திரியங்கள் அடங்கும். அதனுல், பிராணவாயு நடுநாடிவழியில் பொருந்தும். பொருந்தவே விந்துவும் கட்டுப்பட்டு மேன்மேலும் உயர்வடையும்.சிவபிரானை இடைவிடாது சிந்திப்பேர்மானுல் மனவொடுக்கம் அவனது திருவருளால் பெறலாம். குருவின் உபதேசப்படி பஞ்சாட்சரஜபம் செய்பவர்களுடைய சிந்தையில் இறைவன் கோயிலாக்கொண்டு எழுந்தருளியிருப்பன்.

நாழிகை, நாட்கள் என்று இவ்வாறு நமது வாழ் நாட்கள் பலவாகக் கழிந்துவிட்டன. சரீரமும் விரை வில் நீர்மேல் எழுத்துக்கு ஒப்பாக மறையுந்தன்மை யுடையது. ஆகையால், ஆசையை விட்டு, புலன்க ளையும் விடயங்களில் செல்லவொட்டாமல் தடுத்தல் வேண்டும். சிவசிந்தனையோடு புலன்களைக் கட்டுப்படுத் தினால் இறைவனை நெஞ்சத்தினிடத்தே கண்டு வணங் கலாம். நம்மைப் பிறவித் துன்பத்துக்குள்ளாக்குவது ஆணவ இருளேயாம். சிவத்தினிடத்து அன்புகொண்டு மனதைச் செலுத்தினால் பஞ்சேந்திரியங்களையும் வெகு எளிதில் அடக்கலாம்.

34. அசற்குருநெறி

(2044—2048)

அறிவற்றவன், உண்மையுணராதவன், அன்பும் பணிவும் இல்லாதவன், இறைவனை இகழ்வோன், செருக்குடையோன், மந்திரம், யோகம், ஆகமநூல், ஞானம், பந்தம், மோட்சம் ஆகியவைகளை ஆராய்ந்து பார்க்காதவன், மேற்கூறிய இவைகளைப் பிறருக்குச் சந்தேகமறத் தெளிவிக்காதவன் ஆகிய இத்தன்மை யுடையவர்கள் 'அசற்குரு' என்று சொல்லப்படுவர். பாவியாகிய அசற்குரு பொய்ப்பொருளை உணர்த்து பவன் ஆவன். பலனில்லாதனவாகிய உபதேசத்தைப் பெற்றால் அறிவு கெடும். அசற்குருவால் நாட்டுக்கும் கேடு உண்டாகும்.

குருடரும், குருடருக்குக் கோல்கொண்டு வழி காட்டும் குருடருமாக இரு குருடர்களும் பாழ்ங்குழி யில் விழுவது போல, அசற்குரு வாயிலாக உபதேசம்

பெற்றவர்கள் அசற்குருவாகிய குருடருடன் சேர்ந்து குழியில் வீழ்வார்கள்.

35. சற்குருநெறி

(2049—2066)

இறைவனுடைய திருவடியை அடையும்படி உபதேசிப்பவனும், தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஆன்மாக்களை அடையும்படிச் செய்பவனும், திருவடிதிட்சையால் பாசத்தை ஒழியும்படிச் செய்பவனுமே உண்மைக்குரு ஆவன். அடியார்களது வினைகள் நீங்கும்படியும், அவ்வடியார்களைக் கோள்கள் துன்புறுத்தாமலும், எமதூதர்கள் அவர்களை அடையவொட்டாமலும் தடுத்தருளினவன் சிவகுருவேயாம். பக்குவம் வந்த ஒருவனுக்கு, சிவகுருவானவன் அருள் புரிவான். அருள்பெற்றவன் மீண்டும் பிறவியெடுக்க மாட்டான்.

சிவபிரானது திருவருளால் பாசத்தினின்றும் நீங்கியவரும், பிறருடைய பாசத்தை நீக்குபவருமே மெய்க்குரவராவர். ஞானமில்லாமல் மாயையில் ஈடுபடுவோர் மெய்க்குரவராகார். சிவநெறியில் நிற்கும் சிவனடியார்கட்குத் திருவடிப்பேறளிப்பவனே சிவகுருவாவன். ஆசாரியனால் ஸ்பரிச தீட்சை பெற்றவர் அனைவரும் மும்மலமகன்று அரனடி சேர்வர்.

உயிருக்குச் சிவனுகுந்தன்மை வெளிப்பட்டால் அவ்வுயிர், திருவடிஞானத்தால் தானுகவே தன்னை உணர்தல்கூடும். இச்சரீரத்திலேயே தன்னையும் இறைவனையும் உண்மைஞானத்தால் உணர்ந்துகொள்ளலாம்.

பிறப்பும் இறப்பும் என்றும் அழியாத வழிக ளாகும். பிறப்பினைக் கண்டவர்கள் கருவழி கண்டவ ராவார்கள்; இவ்வழியைக் காணுதவர்கள், ஆசாரியரது உபதேச வழியிலே சென்று பெருவழியாகிய முத்தி அடைந்தவராவார்கள். பேரின்பவடிவினனே சிவகுரு என்று அழைக்கப்படுபவன். அவனே உயிர்களைச் சிவபோகம் அடையும்படிச்செய்து, சித்தத்தைச் சிவன் பால் வைக்கும்படிச்செய்து பாசத்தையும் நீக்கித் திருவடிப்பேற்றையும் அருளுவான்.

சிவம், பாசம், ஆன்மா ஆகிய இம்முப்பொருள் களையும் எடுத்துக்காட்டி, சித்தாகிய அறிவுடையதும், அசித்தாகிய அறிவில்லாததும் ஆகிய உயிர், உடல், உலகம் ஆகிய இவைகட்கெல்லாம் சார்பிடமாயுள்ள சிவனையும் அறிவித்து, சுத்தம் அசுத்தம் என்னும் இவ் விரண்டையும் அருள்செய்து, பஞ்சாட்சரத்தையும் உபதேசிப்பவன் சிவகுருவேயாம். சிவத்தை அடைய முயல்கின்றவரே சாதகர் - சன்மார்க்கப் பயிற்சியாள ராவர். உயிர்கள், திருவடியின்பம்பெறும்போது பசுகர ணங்களெல்லாம் பதிகரணங்களாக அமைந்துவிடும். அப்போது இறைவனும் அவ்வுயிர்களை எப்பொழு தும் அவ்வின்பத்துள் நிலைப்பிக்கும்படி அருளுவான். இதுவே உயிர்கள் அடையும் சிவகதிப்பேறு ஆகும். இது, இறைவனது திருவிளையாட்டும் ஆகும்.

உயிர்களைத் தாழ்வான பிறவிகளில் பிறக்கச் செய்து, மீண்டும் அதினின்றும் திருப்பிப் போகங் களைப் புசிப்பித்துப் புவனங்களில் இருத்தி, இருவினை களை ஊட்டி, பின் ஞானப்பிறவியை அளித்துப் பிற வாமையை அருளி மோட்சம் அடையும்படிச்செய்து

மோனநிலையையும் அருளுகின்றான். இவையே இறைவன் உயிர்கட்குச் செய்விக்கும் செய்கையாம். ஆன்மாக்களின் உடம்பே இறைவனது பஞ்சகிருத்திய விளையாட்டுக்கு இடமாகும். ஆன்மாக்களுக்கு அறிவுடையன, அறிவில்லாதன ஆகிய இவைகளை நன்கு அறிவித்து மலங்களையும் நீக்கி, அவ்வான்மாக்களைத் 'தானாக'ச் செய்கின்றான். இவையே உயிர்களினது உடம்பின்கண் செய்யும் திருவிளையாட்டாகும்.

உச்சித்தாமரையிலே ஊறுகின்ற அமிழ்தத்தையுண்டு இறைவனை மறவாதவரே பிறப்பறுத்த பெரியோராவர்; ஏனையோர் சோற்றுக்குக்கேடாய் வீணாய் வாழ்கின்றவராவர். சிவகுருவானவர், உயிர்களின் மலங்களை எரிக்கின்றார்; உபதேசத்தால் ஆணவத்தை அறுக்கின்றார்; பசு பாசத்தைக் கெடும்படிச் செய்கின்றார்.

36. கூடாவொழுக்கம்

(2067—2083)

கண்காணிப்பவர்கள் இல்லையென்ற எண்ணத்தால் தீய செயல்களைப் பலர் புரிவார்கள். இறைவனே கண்காணியாளனாக எங்கும் கலந்திருக்கின்றான். கண்காணியாக உள்ள பெருமானைக் கண்டறிந்தவர்கள் தீய செயல்களைச் செய்யமாட்டார்கள். மக்கள் பொய் சொல்லியும் தீய செயல்களைச் செய்தும் துன்புறுகின்றார்கள். அம்மக்கள், உண்மைபேசி நன்னெறியில் ஒழுகுவார்களானால் தேவர்களும் அவர்களை வணங்கும்படிச் செய்தருளுவன் இறைவன். வேடத்தால் பக்தியுடையவர்போல நடித்துப் பிறருக்கு உபதேசித்து வாழும் வஞ்சகர்களுக்கு மறுபிறப்பு உண்டாகும்.

பிறப்புக்கு ஆதாரமான கன்மத்தைச் சிவகுருவின் பார்வையால் எரிக்கப்பட்டுக் கர்ப்பாசயத்தைப் பாழ் செய்தவர்களுக்கு என்றும் பிறப்பில்லையாம்.

அறிவுடையோர்களுக்கு எல்லாத் தலங்களும் அகத்தின்கண் உள்ளன. ஆன்மாவைச் சரீரத்தோடு சேர்ப்பவனும், காயமே கோயிலாகக் கொண்டவனும் ஆகிய இறைவனைச் சரீரத்தினுள்ளேயே இருக்கும் எண்ணம் இல்லாதவர்கள் தேசத்துக்குள்ளே தேடித் திரிவார்கள்.

திருவருட்சத்தி பதிந்தவர்கள் ஒருபக்கம்; ஞான நெறியில் நின்றவர்கள் ஒருபக்கம்; தவம் செய்பவர்கள் ஒருபக்கம்; ஆன்ம இயல்பை உணர்ந்தவர்கள் ஒரு பக்கம். ஆக இவ்விதம் அவரவர்களது பகுத்தறிவிற் கேற்றபடி அமைத்தவன் இறைவன். இவ்வுண்மை யினை உணராதவர்கள் இவை என்ன! என்று அதிசயிப் பார்கள்.

பார்க்குந்தன்மை இழந்தவர்கட்குப் பார்வையை மறைக்கும் படலமே கண்ணொளியாகும். காண ஆசை கொள்ளாதவர்கள், இறைவனைக்காணும் தன்மையிருந் தும் காணாத ஒளியுடையோராவர். குருடர்கள் இறை வனைக் காணவேண்டுமென்ற ஆசையால் கண்ணில்லா திருந்தும் அருட்கண்ணால் - அகக்கண்ணால் கண்டவ ராவார். ஜீவபோதமில்லாமல் சிவபோதமாய்க் கண்ட வர்கள் பிறப்பை ஒழித்தவராவர்.

அட்டமூர்த்தங்களும் இறைவனது ஆணையின் வழிப் புடைபெயர்வனவாம். ஞான மார்க்கத்தை ஆராய்பவர்கள் பிறப்பு இறப்புத் துன்பங்களினின்றும்

நீங்கித் திருவடி இன்பத்திலேயே இருப்பார்கள். சிவத்துடன் கலந்தவர்களுக்கு மும்மலம் எப்பொழுதும் வந்தடையமாட்டா.

பிராணனாகிய உயிர் தங்கினால் அவ்வுடலிலே உணர்வு நிலைபெறும்; அப்போது மறந்து நினைக்கும் உணர்வு உண்டாகாது; உடலும் அழியாது. ஆகவே, உயிர்ப்பும் உடலும் ஒற்றுமையுடன் வாழ்வது இறைவனது திருவுளப்பாங்காகும். இதனைப் பலர் அறியமாட்டார்கள். உயிரினது உண்மையைத் திருவருளால் அறியும் உணர்வே மெய்யுணர்வாகும். உடலைச் சாகும்படிச்செய்வது உயிரல்ல. இவ்வுண்மையை இறைவன் திருவருளாலன்றி அறியமுடியாது.

உலகுக்கு உறுதியானவனும், ஐம்பூதங்களுள்ளும் கலந்து நிற்பவனும் ஆகிய தேவாதிதேவனை, தன்னிடத்து வாழ்பவனாகச் செய்வதே தன்னை அறியும் மேலான அறிவாகும். சிற்றின்பத்தினை ஒழித்தால் திருவடிப்பேறு கைகூடும்.

மனமானது இயங்குதற்கு மூலகாரணன் இறைவனே ஆவன். பிறப்புக்கு வித்தாகிய காமம் வெகுளி மயக்கங்களை அறுக்கவேண்டுமானால் சரியையாதிகளில் ஒழுகல்வேண்டும். அதனால் பேரின்பம் வந்தடையும்.

37. கேடுகண்டிரங்கல்

(2084—2101)

கன்மத்தை ஈட்டுபவர்கள் பிறந்து உழல்வார்கள். நன்னெறியில் ஒழுகாதவர்கள், தமது வாழ்நாள் அழியுந் தன்மையை அறியாதவர்களாய் விளக்குத்தீயில் வீழ்ந்து

மடியும் விட்டிற்பூச்சியைப் போன்றவராவார்கள். நாட்கள் வெகுவிரைவாகக் கழிவதால் சமயவாதங்களை விட்டு அன்பினால் இறைவனை வணங்கல் வேண்டும். உடம்பையே உயிராகக்கொண்டு அதற்கு உணவு கொடுத்து வளர்த்தும் அது முடிவில் பிணமாகிறது.

இறைவன், சனகர் முதலானோருக்குக் கல்லாலின் கீழிருந்து அருளியதே முதல் நூலாகும். அம்முதல் நூலாகிய மோனஞானத்தை உணர்ந்தவர்கள் சந்தான பரம்பரையாகவந்த நந்தி, சநற்குமரர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதிமாமுனிவர் என்னும் நால்வராவர். புகழும் தவமும் மெய்யடியாரிடத்திலேயே எப்போதும் நண்ணுவதாகும். அதுதெய்வம் இதுதெய்வம் என்று அறிவிலிகள் கூறுவார்கள். அதனால் அவர்கள் தாழ்ந்த பிறப்பையெடுத்து உழல்பவராவார்கள். மெய்யடியார்களுக்கு எல்லாம் சிவமயமாகவே தோன்றும். அறிவிலிகள் துன்பத்துள் ஆழ்வார்கள். மானிடப் பிறவியைப்பெற்றும் இறைவன் திருவடியைப் பேறாதவர்கள் முத்தியின்பத்தை இழந்தோராவர்.

மக்கள், இளமைக்காலத்தில் காமத்தில் ஈடுபட்டுச் சிவபத்தி நீங்கியவர்களாய், இறைவன் திருவருளால் பெறும் பேரின்பத்தையும் மறந்தார்கள். இறைவனது உண்மைத் தன்மையினை வினவாது வாழ்நாளைக் கழித்தோமே என்று வருந்துதல்வேண்டும். குரு வைத்தருளிய குறிகண்டு தேடவும் பாடவும் ஆடவும் வல்லவர், திருவடி இன்பத்தினை அடைவர்; அவர்கள் பெறும் பேற்றினை எவராலும் அளவிட்டுக் கூறமுடியாது.

கடவுளைச் சாகும்வரையிலும் தொழவேண்டும்; தொழாவிடின் ஐம்புலன்களால் ஆட்கொள்ளப்பட்டு

நாம் எங்கும் அலையநேரிடும். மிருகம் பறவை ஆகிய இவைகள் அனைத்தும் ஈசன்பால் அன்பு வைத்துச் சிந்திக்கின்றன. மக்களாகப் பிறந்தவர்களுள் அப்படி நினைக்கின்றவர்களே பிறவிப்பயனை அடைவார்கள். மாந்தர்கள், இறைவனை வணங்கித் தவம் செய்யாது நெறி தவறுகின்றார்கள்.

வாழ்நாட்களும் கழிந்துவிட்டன. ஆடம்பரமாக இருந்து என் செய்தீர்கள்? மனம் முதலியவைகள் அடங்கியிருந்தால் திருவடியின்பம் பெறலாம். சிவ பிரானே உண்மைக்கடவுள் என்று உணர்ந்து அவனது திருவடியின்பம் பெறாதவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்புக்களுக்கு ஆளாவார்கள்.

38. இதோபதேசம்

(2102—2121)

பிறவியை மறக்கவேண்டும். இறக்கும்போதும் சிவபிரானைச் சிந்திக்கவேண்டும். அப்படிச் செய்தால் பிறப்பு இறப்பு என்னும் இரண்டையும் இறைவன் தீர்த்தருளுவான். இதுவே சிவநெறியாகும். கூடிய மட்டும் இறைவனைச் சிந்தியுங்கள்; இயன்ற அளவு அவனது உண்மையினைச் சொல்லுங்கள். இறைவன் இல்லையென்றாலும் அவன் எங்கும் உள்ளவன்.

குலம் ஒன்றே; தேவன் ஒருவனே என்று நினைப் பது மிகவும் நல்லது. அதனால் பிறப்பு இறப்பும் இல்லை; நாம் தேடிச்சென்று அடையும் சிவகதியில்லை; நம் முடைய சித்தத்தின் உள்ளேயே சிவகதியானது தானே வந்து நிலைபெறும். சிவபிரானை இடையறாது வணங் கிப் பஞ்சாட்சரம் ஓதி உய்யுங்கள். இச்சரீரத்தைவிட்டு

மற்ெருரு சரீரத்தில் புகுவதாகிய பிறவியை அடையாமல் மோட்சநெறியை நாடுங்கள். இறைவனது திருவருள்பெற்ருல், எப்போது இவ்வுடல் நமக்கு வந்தது என்பதை நாம் அறியலாம். இறைவன் எப்போதும் நம்முடன் உள்ளான். இறக்கும்பொழுதும் அவ்விறைவனைச் சிந்தித்தால் பெரும்பயனை அடையலாம்.

உயிர் பிரிந்து செல்லும்போதும் பயனடைய வேண்டுமாளுல், சிவபிரானை நினையுங்கள்; அதனுல் சிவகதி அடையலாம். மேலும், பிறப்பும் இல்லையாம். கூட்டமாகவும் தனித்துமிருந்து இறைவனைத் தொழுங்கள்; அவனது புகழைப்பாடித் திருவடிகளைப் பணியுங்கள். எல்லாம் சிவமாகக்காணும் அறிவு பெற்ருர்க்கு இறைவன் வெளிப்பட்டு அருளுவான். ஜீவன், உடலை விட்டுப் போகும்போது இறைவனை நாடிளுல், அவ்விறைவன், அந்தஜீவனைத் தேவர்களின்நடுவே இருக்குமாறு அருள்புரிவான்.

இறைவன்பால் இன்புறுதலும், நற்றவத்தில் அன்புறுதலும், மெய்ஞ்ஞானத்தில் விருப்புறுதலும் உடையவர்கள் மெய்ஞ்ஞானப் பண்பினராகவே இருப்பார்கள். உண்மைத்தவம், மெய்த்தாள், மெய்ந்நெறி ஆகிய இம்மூன்றும் மேற்கொள்ளத் தக்கனவாம். இவற்றினை மேற்கொள்பவர்கட்கு எல்லாம் எளிதாகவும் இனிமையாகவும் கைகூடும்.

இறைவன், தம்மைச் சார்ந்தவர்களுக்குப் பேரின்பம் கொடுத்தருளுவான்; சாராதவர்கட்குப் பிறவியை அளிப்பான்; மெய்ஞ்ஞானம் உடையவர்களுக்குத் திருவடியினைக் காட்டியருளுவான். அம்மெய்ஞ்ஞானமுடையோரே சிவ இன்பம் - சிவானந்தம் நுகர்வர்.

இறைவனைச் சிலர் விரும்பமாட்டார்கள்; அவ்விருப்ப மில்லாதவர்களிடத்தும் சிவன், பாலில் நெய்போலத் தோன்றியிருப்பன்.

சிவபிரானாலே அமைக்கப்பட்ட உலகம் எவ் வளவு ஊழிக்காலம் நின்றுள்ளது என்பதனை எவரும் அறியமாட்டார்கள். பிறப்பு இறப்பையே கொண்ட மக்கள் சிவத்தைப்பற்றி யாதொன்றும் அறியாமலே அழிகின்றார்கள். சற்குருவை அடைந்தும் வஞ்சகரா யிருப்பவர் உலகில் இருப்பார்களானால் அவர்களைக் கண்டு இறைவனும் அஞ்சுவான். மேலும், உலகில் பஞ்சம் உண்டாகும். அவ்வஞ்சகர்களும் நரகை அடைவார்கள். குருவின் சொற்படி நடப்பவர்களைத் தரிசித்தால் எல்லாம் கைகூடும்.

அளவில்லாத தேவர்கள் பயன்கருதிச் சிவனை வழி பட்டார்கள். அதனால், இறைவன் திருவடிப்பேறு அவர்களுக்கு உண்டாகாது. திருவடிப்பேறு அடை யக்கூடிய நன்னெறியைக் காட்டியருள்பவன் சிவகுரு வானதால், அவனை வழிபடில் இறைவனது திருவடிப் பேற்றினை அடையலாம்.

மானிடர்களும் தேவர்களும் பசுபாசத் தன்மை களை உடையவர்களாய்ப் பிறப்பு இறப்புக்களிலே ஈடு பட்டுக் காலங்கழிவதைக் கண்டு இறைவன், சிவகுரு வாக எழுந்தருளிவந்து ஆட்கொள்வான்; அச்சிவகுரு வைச் சிவனென்றே வழிபடல் வேண்டும். சீடர்க ளுடைய பிறந்து அலைவதாகிய வருத்தத்தை நீக்கி அருள்புரிபவன் சிவகுருவேயான சிவபிரானாவான்.

ஏழாம் தந்திரம் முற்றிற்று

எட்டாம் தந்திரம்

1. உடலிற் பஞ்சபேதம்

(2122—2138)

தேகமாகிய பைக்குள்ளே ஊன் முதலிய பொருள் கள் அடங்கியுள்ளன; அப்பையே மாயையின் காரிய மான உடம்பாகும். அல்லாமலும், உடம்பினுள்ளே உள்ள உள்ளம் என்பதும் மற்றோர் பையாகும். உள்ளத்துள்ளே உயிருடன் கலந்திருக்கின்ற கள்வ ஞகிய இறைவன், வெளியே புறப்பட்டால் மாயைப் பையாகிய உடம்பு மண்ணுடன் கலந்து அழியும். இறைவனுல் அமைக்கப்பட்ட இந்த உடம்பானது தூலம் சூக்குமம் என இருவகைப்படும். சூட்சும தேகமானது ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என் னும் தன்மாத்திரை ஐந்தும்; புத்தி, மனம், ஆங்காரம் என்னும் மூன்றும் சேர்ந்ததாகிய எட்டும் சூட்சுமசரீர மாகும். மேலே சொல்லப்பட்ட எட்டினுள்ளே, தன் மாத்திரை ஐந்தும் புலன் அல்லது இந்திரியம் என்று சொல்லப்படும்; புத்தி, மனம், ஆங்காரம் என்பவை அந்தக்கரணமாகும். இவ்வெட்டையும் கட்டுமலமாகச் சேர்த்தருளிய சிவபிரானே உயிரின் பக்குவம் கண்டு அவிழ்த்தருளுவான்.

அன்னரசம், இரத்தம், ஊன், கொழுப்பு, எலும்பு, எலும்புக்குள்ளிருக்கும் பொருள், சுக்கிலம் என்னும் இவ்வேழு தாதுப் பொருள்களின் கலப்பே உடம்பு ஆகும். இறைவனது திருவடியின் பெருமையையும்,

அவ்விறைவன் உயிருடன் கலந்து நின்றதையும், உடலையும் எவர் அறிவார்? அவனது திருவருளாலன்றி எவரும் அறியமாட்டார்கள். இவ்வுடம்பே இறைவனுக்குத் திருக்கோயில் - நடமாடும் கோயிலாகும்.

எட்டுச்சாண் அளவான உடம்பில் கண் கால் முதலிய உறுப்புக்கள், இந்திரியங்கள், புறப்புறக் கருவிகள் அறுபது, அகப்புறக்கருவிகள் எட்டு ஆக அறுபத்தெட்டும், தூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம் என்னும் நான்கு உடம்புகளும் கூடியுள்ளனவாகும். நான்குவகையான உடம்புக்கும் உயிராக விளங்கும் ஜீவன், சிவத்துடன் அடங்கியே நிற்கும். உயிரை விட்டுப் பிரியாத சிவன் கடத்தில் கதிரவன்போல எல்லா உயிருடனும் கலந்துநிற்பன். தூலம், சூக்குமம், காரணம் என்னும் மூன்று உடம்பையும் இறைவன் சுத்தமாயையில் ஒடுக்குவான். மகாகாரண உடம்பு இறைவன் திருவடியில் ஒடுங்கும்.

உயிர், பல அண்டங்களில் பல பிறவிகளை வெகு விரைவாக எடுக்கும். பாம்பு தோலுரிப்பதுபோலவும், முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்படுவதுபோலவும், நனவை மறந்து கனவில் செல்வதுபோலவும் சென்று பயன் அனுபவித்து மீண்டும் பிறக்கும். மேலும் அவ்வுயிர், இருவினைப்பயனை அனுபவிக்கும்பொருட்டு உடலைத்துறந்து சுவர்க்க நரகங்களை அனுபவித்துப் பின், பிறவியெடுக்கும்; இறப்பையும் அடையும். இறைவன், பக்குவ ஆன்மாக்களுக்கு ஆணவ கன்ம மல மாயைகளை முழுவதும் நீக்கி முத்தியின்பத்தை அருளுவான். ஏனைய பக்குவமில்லாத ஆன்மாக்கள், வானும் நிலனும் புகுந்து வருந்தும்.

ஞானத்திற் சரியையாளருக்குச் சிவபிரானே உடம்பாகும்; ஞானத்திற் கிரியையாளருக்கு அப்பிரானின் திருவருளே உடம்பாகும்; ஞானத்தில் யோகியருக்கு விந்துவும் நாதமுமே உடம்பாகும்; ஞானத்தில் ஞானியராகிய மௌனிக்கு முப்பாழாகிய ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றும் கடந்த இறைவனுடைய திருவடிப்பேறே உடம்பாகும். விஞ்ஞானகலருக்கு ஆணவமலமும், பிரளயாகலருக்கு ஆணவமும் மாயையும், சகலருக்கு ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றும் சரீரமாகும். மெய்ஞ்ஞானிகளுக்குச் சிவனடியே சரீரமாகும்.

பரிசுத்தமான மனம் வாக்குக் காயம் உடையவர்களுடைய அகத்தின்கண் இறைவன் இருந்து விளையாடியருளுவான். ஐம்பொறியடக்கமும் அந்தக்கரண சுத்தமும் இல்லாதவர்களிடம் இறைவன் தோன்ருன்; மேலும், அவர்கள் துன்புறுவார்கள்.

2. உடல் விடல்

(2139—2141)

இறைவனது திருவடிகளையே பரிசுத்தமான மனத்துடன் தியானித்திருப்போமாஞல் தேகப்பற்று நீங்கும். உயிர் நீங்குங்காலத்தில் செய்யப்படும் விரதம், தானம் ஆகிய இவைகள் உறுதுணையாகாவாம்; இறைவனே உறுதுணையாவான். பெண்களிடம் கொண்ட விருப்பத்தால் நெஞ்சம் வருத்தமுறும். உடல் அழியுந் தன்மையுடையது என்ற நினைப்புடையவர்கள், தமது சரீரத்தைச் சுமை என்றே கருதுவதோடு அல்லாமல் அவர்களுடைய மனமும் இறைவனிடத்தில் நிலைத்து நிற்கும்.

3. அவத்தைபேதம் (கீழாலவத்தை)

(2142—2166)

நிலம் முதல் புருடன் ஈருக உள்ள இருபத்தைந்து தத்துவங்களும் மத்திமையாகிய புருவமத்தியில் நின்று தொழிற்படும்; இது, நனவு நிலையாகும். தசவாயுக் களும் அந்தக்கரணம் நான்கும் ஆகிய பதினுன்கும் கண்டத்தினிடமாக நின்று தொழிற்படும்; இது, கனவு நிலையாகும். நினைவும் புருடனும் ஆகிய இரண்டு கருவி களும் நெஞ்சத்தினிடமாக நின்று தொழிற்படும்; இது, உறக்க நிலையாகும். கொப்பூழினிடமாகப் புருடன் மாத்திரம் நின்று தொழிற்படும்; இது, பேருறக்க நிலை யாகும்.

சாக்கிரத்தில் சாக்கிரம்; (நனவில் நனவு) சாக்கி ரத்தில் சொப்பனம்; சாக்கிரத்தில் சுழுத்தி; (உறக்கம்) சாக்கிரத்தில் துரியம்; (பேருறக்கம்) சாக்கிரத்தில் துரியாதீதம்; (உயிர்ப்பு அடங்கல்) என ஐந்துவகை யும்; அதில் நான்கு:- சாக்கிரத்தில் சாக்கிரம் ஒழிந்த ஏனைய நான்கும்; அதில் இரண்டு:- துரியமும் துரியா தீதமும்; அதில் ஒன்று:- துரியாதீதமும்; பிருதிவி முத லாகச் சிவம் ஈருக உள்ள தத்துவங்கள் முப்பத்தாறும் ஒழுங்காக நடைபெறுவது சிவபிரானின் திருவாணை (நியதி) ஆகும்.

கன்மேந்திரியம் ஐந்தும் ஞானேந்திரியம் ஐந்தும் ஆக இந்திரியம் ஈரைந்தும், வசனுதி ஐந்தும் சத்தாதி ஐந்தும் ஆக மாத்திரை ஈரைந்தும், தசவாயுக்களும், அந்தக்கரணம் நான்கும், ஆன்மா ஒன்றும் பந்தித்ததே சரீரமாகும்.

நிலத்தின் நிறம் பொன்னிறமாகும்; நீரின் நிறம் வெண்மை; நெருப்பின்நிறம் செம்மை; காற்று கருப்பு நிறம்; ஆகாயம் புகைநிறம். இவையே ஐம்பூதங்களின் நிறங்களாகும். இருபத்தைந்து தத்துவங்கள் யானைக்குச் சமானம்; வசனாதி ஐந்தும் காலாட்படையாகும்; சப்தாதி ஐந்தும் குதிரைகளாகும்; வாக்குகள் நான்கும் அமைச்சரை ஒக்கும்.

உடம்பைப்பெற்றும் உடம்புள்ளிருக்கும் உயிரை எவரும் அறியவில்லை. இறைவனுடைய திருவடியை அடையும்பொருட்டே உடம்பொடு உயிரைப் பெற்றோம் என்ற உணர்ச்சியில்லாதவர்கள் மடம்புகு நாய் போல் (ஊன், இறைச்சி முதலியவைகள் மடத்தில் இல்லாததால்) மயங்குகின்றார்கள்.

அசபாமந்திரத்தால் பிறப்பு இறப்புக்களை நீக்கலாம். சிவமயமான உடல் அழியாது. இறைவனது திருவடிக்கீழும் இருக்கலாம். ஞானகுருவானவர் உள்ளத்துள்ளேயிருந்து அறுபத்துநான்கு கலைகளை உணர்த்துவதால் உள்ளமானது சிவன்பால் ஒடுங்குகிறது.

ஆகாயத்துக்கு ஓசை ஒன்றும்; வாயுவுக்கு ஊறு, ஓசை என்னும் இரண்டும்; வன்னிக்கு ஊறு, ஓசை, ஒளி என்னும் மூன்றும்; அப்புவுக்கு ஊறு, ஓசை, ஒளி, சுவை என்னும் நான்கும்; பிருதிவிக்கு ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தும் படைப்பிற்கு முன்பு இவ்வாறு கலந்து விரிவடைந்ததில்லை. சிவபிரான், மாயையை முதற்காரணமாகக் கொண்டு உலகைப் படைக்கத் திருவுளம்கொண்டான்,

சொப்பனத்தில் நிகழும் அவத்தைகள் ஐந்து, ஐம்புலன்கள், அந்தக்கரணங்கள் ஆகிய இவைகளின்

தன்மையை உணர்ந்தபிறகு மனமானது சிவபிரானது திருவடியை அடைய அடங்கிநிற்கும். உயிரானது முதலில் கண்டத்தானத்தில் நின்று கனவு காணும்; பின், கண்டத்தானத்தைவிட்டுக் கிழறங்கி நெஞ்சத்தினிடமாக நின்று அறிவிழந்து மயக்கமுற்று நிற்கும். அங்கு மூலப்பகுதிதோன்ருது அடங்கிநிற்கும். இதுவே, உறக்கநிலையாகும்.

உறக்கத்தானமாகிய நெஞ்சத்தினிடத்தே எண்ணம், பிராணன், புருடன் என்னும் மூன்றும் தொழிற்படும். பேருறக்கமாகிய நாபியினிடத்தே பிரர்ணன், புருடன் என்னும் இரண்டும் தொழிற்படும். உயிரானது, புருடனுடன்கூடி மூலப்பகுதி என்கின்ற திரிபுணர்ச்சிப் பண்பை அனுபவித்துக்கொண்டிருக்கும்; துரியத்தினின்றும் எழுந்து தருக்கடையும். உள்ளமானது, உலகமும் பின்னடையும்படியாக வேகமுடன் சென்று மூலப்பகுதியுடன் தனித்து நிற்கும்.

ஊமை எழுத்தாகிய 'ம்' என்பதனேடு பேசும் எழுத்துக்களாகிய அகாரமும் உகாரமும் (சத்தியும் சிவமும்) சேர்ந்தால் 'ஓம்' என்ருகும். ஆமையின் ஐந்து உறுப்புக்கள் அடங்குதல்போல உயிரும் சிற்றறிவு அகன்று நிற்கும். பேருறக்கம் என்னும் துரியமானது சாக்கிரத்துள்ளே இருக்கும். நரிகள் என்று சொல்லும் ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆக பதினன்கும் நுகர்ச்சியில்லாமல் விஷத்தையுண்டது ஒத்து அடங்கிநிற்கின்றன. பொறிகளும் புலன்களும் வேகமாகப் பறந்தன. ஆகவே, துரியாதீதத்தின் இன்பநிலையைச் சொல்ல முடியாததாகும்.

பஞ்ச மலங்களும் உயிர்களினூடே நிற்பதால், எப்படிப்பட்ட உயிரும் பிறந்து இறந்து கொடிய வினையால் துன்புறும். அனுபவிக்கவேண்டிய மாயா காரியங்கள், இறைவனது திருவருள் அடையும்காலம் வரை ஊட்டாது நீங்காது. இறைவன் திருவருள் பெறுவதாவது வீடுபேறு அடைதலாகும். மாயையை அடைதலில்லாத பிறப்பு சிவஞானப்பிறப்பேயாதலால் அவ்வுயிர் முத்தியை அடையும். உயிர்க்கு அதிமூட மாகிய உறக்கம் உண்டாவது ஆணவம் மிகுந்திருத்த லாலேதான். அதனால், அவ்வுயிர் இருவினைக்கீடான கன்மங்களையே செய்து கேவலவத்தையை அடையும்.

ஆசானானவன், துயிலும் மாணவனை எழுப்பச் சிறிய கோலை உபயோகப்படுத்துவதுபோல, இறை வனும் ஆணவத்தால் மதிமயங்கிக் கிடக்கும் உயிர் களைத் தட்டி எழுப்பச் சுத்தமாயை என்னும் கருவி யைக் கொண்டு அருள்செய்கின்றான்.

உயிர் நீங்கினால் உடல் தனித்துக்கிடக்கும். உயிர் உள்ளமட்டுமே உடலும் சேர்ந்திருக்கும். நீரும் நீரை யுடைய குடமும் பிரிந்தாலும் மறுபடியும் சேர்ந்து கொள்ளும். உயிர்நீங்கிய உடல் அப்படியல்ல; பிரிந்தது பிரிந்ததேயாம்.

ஆன்மாவானது மனமாகிய குதிரைமேலேறி, அக நகராகிய உள்ளத்தை வலம்வரும்போது ஞானேந்திரி யங்களும் கன்மேந்திரியங்களும் அடங்கிக்கிடக்கும். மலங்கள், தம்மைவிட்டு நீங்கும் உண்மையை நனவில் கண்டவர்கள் சிவத்தோடு உணர்வு நீங்காமல் சேர்ந்து எப்போதும் இன்பம் அடைவார்கள். இதுவே, அழி வில்லாத நித்திய வாழ்க்கையாகும்.

4. மத்திய சாக்கிராவத்தை

(2167 - 2183)

சாக்கிரத்தில் சாக்கிரநிலையில் திரோதாயி தொழிற் படுத்தும்; சாக்கிரத்தில் சொப்பனம் என்னும் நிலையில் சுத்த மாயையின் தொடர்பும், சாக்கிரத்தில் சுழுத்தி என்னும் நிலையில் கன்மத்தொடர்பும், சாக்கிர துரியத் தில் அசுத்தமாயையினுடைய தொடர்பும் உண்டாம். அசுத்தமாயையானது துரியாதீத நிலையில் கலாதியோடு அடங்கியிருக்கும். துரியத்தில் அராகமானது முனைத்து நிற்கும். சுழுத்தியின்கண் வித்தையானது முனைப்புற்றுச் சேரும். சொப்பனத்தில் இருபத்தைந்து கருவிகளும் தொழிற்படும்.

கண்ணுள்ளவன், குருடனுக்குக் கோல் அளிப்பது போலச் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆகிய இவர்களுக்கு இறைவன், ஆணவக்குருடு நீங்குவதற் காக மாயாகாரிய உடம்பாகிய கோலினை அருள்செய் கின்றான். அவ்வுடம்பினைப்பெற்று முத்திற உயிர்களும் கருமங்களில் முயலும். சிலந்திக்கூட்டில் சிலந்தி யானது, தான் தங்கியிருக்க மத்தியில் வலுவான இடத்தை அமைத்துக்கொண்டிருந்து அவ்வலையில் அகப்படும் உணவுகளை உண்ணுவதுபோல, இறை வனும் உயிர்களின் இருவினைக்கீடாக உடம்பை அருளி, அவ்வுயிர்கள் ஐம்புலன்களையும் அனுபவித்தற் பொருட்டுத் தானும் உடனியைந்து உண்பிக்கத் துணை செய்கின்றான்.

இறைவனது மூர்த்திபேதங்கள் இருபத்தைந்து ஆகும். அவற்றுள் சிறந்த திருவுருவம் சிவபெருமா னது திருமூர்த்தமேயாகும். அவனுடைய புகழைப்

பாடுகின்றவர்கட்கு அப்பிரான் இனியனுவான். ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு, (அவற்றுடன் புருடதத்து வத்தையும் சேர்த்தால் இருபத்தைந்தாகும்) வித்தியா தத்துவம் ஏழு, சிவதத்துவம் ஐந்து ஆக, சைவர்களின் தத்துவம் முப்பத்தாறுகும். வேதாந்திகள் கொள்ளும் தத்துவம் இருபத்தெட்டாகும்.

இடகலே பிங்கலேகளால் செய்யப்படும் யோகப் பயிற்சியினுல் ஏற்படும் அனுபவத்துடன் உயிர் உலாவி மூலாதாரத்தில் புகுந்திருந்து நாடிகளே நிமிர்ந்திருக்கும் படிச் செய்யும். அத்துடன், உளத்தே உள்ள மூன்று மண்டலங்களினுடனும் கலந்து தனது உண்மை கண்ட பிறகு இறைவன் திருவடியை அடையும். பத்து நாடிகளும், தச வாயுக்களும் பிராணுயாமக் கிரமத்தினுலே நடுநாடியின் வழியாகச்சென்று ஒடுங் கும். அப்போது இன்பமும் சுவையும் திருவடியுணர்ச் சியும் ஆகிய இவைகள் உடலினிடத்தே விளங்கும். திருவருளாணேயால் கருவுக்குள்ளே ஆவனவும் அழி வனவும் புகுவனவும் ஆம். காட்டிக் காண்பவனுகிய சிவபிரானது ஆணேயின்வழி ஏவல் செய்பவர்களே புத்தடியராவர்.

ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து ஆக பத்தும்; சப்தம் முதலிய ஐந்து, வசனம் முதலிய ஐந்து ஆக பத்தும் சேர்ந்து இருபதும்; அந்தக்கரணங்கள் நான்கும்; புருடன், ஆன்மா, ஈசன், சிவன் ஆக நான்கும் கூடிய இருபத்தெட்டும் வேதாந்தநெறி தத்துவங்க ளாகும். நாம் ஒருநாளேக்கு விடும் மூச்சு இருபத்தோ ராயிரத்து அறுநூறு ஆகும். யோகப்பயிற்சி உடை யோருக்கு ஐவகைப்பாசங்களும் நீங்கும்; இறைவனும்

தோன்றியருளுவான். நான்குகோடியே நாற்பத்தெண்ணுயிரத்து ஐந்நூறு தத்துவங்களும் தொண்ணூற்ருறு தத்துவங்களுள் அடங்கும்; அத்தொண்ணூற்ருறும் இருபத்தைந்து தத்துவங்களுள் அடங்கும். தத்துவங்கள் தொண்ணூற்ருறும் பொது; சைவர்களுக்குத் தத்துவங்கள் முப்பத்தாறு; வேதாந்திகளுக்கு இருபத்தெட்டு; வைணவர்களுக்கு இருபத்துநான்கு; மாயாவாதிக்கு இருபத்தைந்து என்று சொல்லப்படும்.

தத்துவங்களின் உண்மையை உணர்பவர்கள் சிவஞானியராவர். பொய்த்தத்துவங்கள் அகன்றபொழுது சிவமாகவும் விளங்கலாம். அவத்தைகளும் தத்துவங்களும் தனக்கு வேருனவை என்னும் உண்மையினை உணர்ந்தவர்கள் சிவத்துடன் ஒன்றியே நிற்பார்கள். ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் பஞ்ச மலங்களையும் உடையவன் அயன். மாயேயம் ஒழிந்த ஏனைய நான்கும் உடையவன் திருமால். மாயை, மாயேயம் என்னும் இரண்டும் ஒழிந்த ஏனைய மூன்றும் உடையவன் உருத்திரன். ஆணவம், திரோதாயி என்னும் இரண்டும் உடையவன் சதாசிவன். ஆணவம் மாத்திரம் உடையவன் மகேச்சுரன் என்று சொல்லப்படும்.

5. அத்துவாக்கள்

(2184—2186)

பிருதிவிமுதல் சிவம் ஈருகத் தத்துவங்கள் முப்பத்தாறு; நம:, சுவதா, சுவாஹா, வஷட், வௌஷட், ஹூம், ஹூம்பட் என்னும் சப்தகோடி மகாமந்திரங்கள்; புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கு; பதங்கள்

எண்பத்தொன்று; (வியோமவியாபினி, வியோமரூபாய முதலானவை) கலைகள் ஐந்து; உடலிலுள்ள மூன்று மண்டலங்கள் ஆகிய இவைகளின் நலங்களை அறிந்தவர்களோடு கூடியிருப்பது இருபத்தைந்து தத்துவங்களாகும். குருவின் உபதேசப்படி சென்று காண்கின்றவர்களுக்குத் தத்துவங்களனைத்தும் தோன்றுது.

சாக்கிரத்தில் சாக்கிரம் முதற்கொண்டு தூலசரீரத்தின் உச்சிவரையிலும் நின்று, துரியாதீதத்திலே அருளும் சிவத்தின் கருணைநிறைந்த கூத்தினைக்கண்டு வழிபட்டு, அதற்குமேல் காணப்படும் சிவதத்துவங்கள் ஐந்தினையும் உணர்பவர்கள் சிவமயமாகவே எல்லாவற்றையும் காண்பார்கள்.

6. சுத்த நனவாதி பருவம்

(2187—2226)

மகாமாயையினின்றும் வந்தனவாகிய சாக்கிரம் முதலாகச் சொல்லப்படும் தூலப்பகுதி, சூட்சுமப் பகுதி, இருபத்தைந்து தத்துவங்கள் ஆகிய இவற்றுடன் சேர்ந்து தொழிற்படுகின்ற உயிரின் நிலையானது சாக்கிரத்தில் சொப்பனம்போலக் காணப்படும்.

சாக்கிரத்தில் துரியாதீத நிலையை அடைந்தவர், பரிசுத்தநிலையில் பிறந்தவராவர். அவருடைய கிடப்பும் இறைவன் திருவடி ஞானத்திலே உள்ளதாகும். சாக்கிரத்தில் துரியநிலையடைந்தவர் நிகழ்ந்தவரோடு சமானமாவர். சாக்கிரத்தில் சுழுத்திநிலை, தவழ்ந்தவரோடு ஒக்கும். சாக்கிரத்தில் சொப்பனநிலை, வளர்ந்து நடந்தாரோடு ஒக்கும். சாக்கிரத்தில் சாக்கிரநிலை ஓடுவாரோடு ஒக்கும். இவைகள் எல்லாம் சிவனிடத்தில்

செல்லுதலாதலால் நற்றவமாகும். மேற்கூறிய தபோதனர்செய்யும் கிரியைகள் சிவதத்துவமாகும். அவரது யோகம், திருவருள் யோகமாகும். திருமேனி, அருள் விளக்கமாகும். ஞானமும், இறைவனின் எண்குணங்களாகும். ஆகவே அவர்கள்நிலை அறியமுடியாத மேம்பாடுடையதாகும்.

ஆணவம் உமியையும், மாயை தவிட்டையும், கன்மம் முளையையும், உயிர் அரிசியையும் ஒக்கும். உயிர், சிவபிரானை ஒவ்வாது. ஆதலால், பாசங்களை விட்டுநீங்கி இறைவன் திருவடியினைப் பேணல்வேண்டும். உயிர்கள் பலவகையுடையன. ஆனாலும், அவ்வுயிர்களின் தன்மை ஒன்றேயாகும். இவ்வுயிர்களை இறைவன் ஒருவனே நடத்துகின்றான். இறைவன் உயிர்களுக்கு அருள் செய்வானாயின் உயிர்கள் அவ்விறைவனைவிட்டு அகலாது. ஐம்பொறிகளும் அந்தக்கரணங்களும் அறியாமையுடன் சேர்ந்து உயிரைக் கெடுக்கும். கெடுகின்ற ஆன்மா, மேலும் மயங்குமானால் ஏழ்நரகத்தும் வீழ்ந்து துன்புறும்.

துரியாதீதம், துரியம், சுழுத்தி இம்மூன்று நிலையிலும் உயிர்கள் வினையை அனுபவிக்காது. கனவு நினைவுகள் மாத்திரம் நுகர்வுநிலையாகும். நனவில் ஐம்பொறிகளும் தொழிற்படும். சுழுத்தியில் மனம் முதலியவைகள் தொழிற்படும். மாயை என்கின்ற மூலப்பகுதியினது நுகர்வே துரியமாகும். சாக்கிரத்தில் துரியாதீதமானது, தன்னை வேறென்று உணரும் நிலை பொருந்தியதாகும். சாக்கிரத்தில் சாக்கிரநிலையில் பதினென்று தத்துவங்கள் தொழிற்படும். சாக்கிர சொப்பனத்தில் ஆறுதத்துவங்கள் தொழிற்படும். இவ்வாறும்

சூட்சுமநிலையே சாக்கிர சுழுத்தியாகும். சாக்கிர துரியம் மாயையுடன் மாத்திரம் கூடிநிற்றலாகும். உயிரானது, துரியத்தில் புருடனுடன் மாத்திரம் நிற்கும். துரியாதீதத்தில் மாயையுடன்செல்லும். இவ்வாறுள்ள நிலையில் உடம்பு இருந்தும் வினை நிகழ்ச்சி இல்லாமையால் ஒன்றும் பயனில்லை.

பேருறக்கத்தில் உயிரானது கருவிகளுடன் சேராமல் தன்னளவாக அறிவாய் நிற்கும். பின், அவ்வுயிர் இறைவனுகிய சிவச்சுடரில் சேர்ந்துநிற்கும். நனவுத்தானம் புருவநடுவாகும்; இங்கு தொழிற்படும் கருவிகள் முப்பத்தைந்தாகும். சொப்பனத்தானம் கழுத்தாகும்; இங்கு இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். சுழுத்தித்தானம் நெஞ்சினிடமாகும்; இங்கு மூன்று கருவிகள் தொழிற்படும். துரியத்தானம் நாபித்தானமாகும்; இங்கு தொழிற்படும் கருவிகள் இரண்டாகும். துரியாதீதத்தானம் மூலத்தானமாகும்; இங்கு தொழிற்படும் கருவி ஒன்ருகும். ஐம்பூதங்கள், மனம், புத்தி, அகங்காரம் என்னும் எட்டும் கூடியதே சூட்சுமதேகமாகும். இவ்வெட்டும் சேர்ந்து தொழிற்படுவதே சாக்கிரநிலையாகும். சொப்பனத்தில் மனம், புத்தி, அகங்காரம் என்னும் மூன்றும் தொழிற்படும். சுழுத்தியில் புத்தியும் அகங்காரமும் தொழிற்படும். துரியத்தில் அகங்காரம் மாத்திரம் தொழிற்படும்.

சாக்கிர சாக்கிரம் ஐம்புல ஒடுக்கமாகும். சாக்கிர சொப்பனம் நினைத்தலாகும். சாக்கிரசுழுத்தி, உறக்கமாகும். சாக்கிர துரியம் எண்ணமாகும். சாக்கிர துரியாதீதம் பிராணன் அடங்குதலாகும். சொப்பனத்தில் சாக்கிரம்போலக் காண்பது கனவில் நனவு ஆகும்.

சொப்பனத்தில் சொப்பனம், கனவுகண்டு பின் மறத்தலாகும். சொப்பன சுழுத்தி, கனவுகாணுதிருத்தலாகும். கனவில் துரியம் உத்தேசமாகக் காண்டல். (துரியாதீதத்தில் அவ்வுத்தேசக் காண்டலும் - செயலுமில்லை.) சுழுத்தியில் சாக்கிரம் தோன்றுது. சுழுத்தியில் சொப்பனம், உயிரினிடத்தில் தனது உண்மை மாத்திரம் தோன்றல். சுழுத்தியில் சுழுத்தி, சுட்டுணர்வும் சிற்றுணர்வும் அழிவை அடைதல். சுழுத்தியில் துரியம், சொற்கழிவு (சொல்லுக்கு அடங்காத) ஆகிய பாழ் நிலையாகும்.

துரியத்தில் சாக்கிரமாவது, உயிருக்கு நேரும் இன்ப உறுதியினை அறியும் அறிவாகும். துரியத்தில் சொப்பனமாவது, தன்னை உணரும் அறிவாகும். துரியத்தில் சுழுத்தியாவது, அருள் வெளியாகும். துரியத்தில் துரியமாவது, சிவபூரணத்தில் ஒடுங்குவதாகும். சிற்றறிவு, சர்வஞ்ஞத்துவத்தில் ஒடுங்கியிருந்து, அவ்வறிவினை அறிதலே அறிவினிடத்தில் சாக்கிரமாகும். அறிவினை அறிகின்றேம் என்ற நினைவும் தோன்றுமல் அவ்வறிவினிடத்தில் ஒடுங்குதலே அறிவினிடத்தில் சொப்பனமாகும். தன்னை மறத்தலே அறிவினிடத்தில் சுழுத்தியாகும். சிவம் தோன்றுதலே அறிவினிடத்தில் துரிய உறக்கமாகும். தான் (ஆன்மா) எங்குமாம் என்ற பெருநிலை தோன்றியபின் ஐம்மலத்தினின்றும் நீங்கப்பெற்று, மெய்ஞ்ஞானமே தன்னுருவாயிருக்கும் நிலையையுணர்ந்து ஐம்புலன்களின் நெறியினை விட்டு நீங்கும்; சூட்சும நிலையினையும் அடையும்.

இறைவன் உயிர்க்குயிராய் நிற்கும்போது அருவனுகவும், உடலாய் நிற்கும்போது உருவனுகவும்,

வேறாய் நிற்கும்போது சார்புப் புணர்வாகவும், அறிவாகவும், அறிவுடன் கூடிய நிறைவாக (பூரணமாக)வும் விளங்குவான். மேலும், அவ்விறைவன், சத்தியுடனும் கலந்து வெளிப்பட்டு அருளுவான். அப்படியில்லாவிட்டால் உலகமும் உயிர்களும் இயங்காமல் எல்லாம் இருள்மூடிக்கிடக்கும்.

இறைவன், சத்தியைத் தொழிற்படுத்தும்போது உலகம்தோன்றி உயிர்களும் உய்யும். அவ்வுயிர்களின் மலத்தைப் போக்குவதற்காகவே பாசம், பஞ்சமலம், (முப்பத்தாறு) தத்துவங்கள் ஆகிய இவைகளை இறைவன் சேர்த்தருளுவான். மலக்கலப்பினால் உயிரின் சத்தியும், அறிவும், சிவமும் மறைந்திருந்தன. மலப்பிணிப்பு அகன்றால் எல்லாம் விளங்கித் தோன்றும். நமது எண்ணத்தினுள்ளே காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று சிங்கங்களும், நெஞ்சினுள்ளே அந்தக் கரணங்களாகிய நான்கு நரிக்குட்டிகளும், மெய் வாய் முதலான ஐந்து ஆனைகளும் உள்ளன. நெஞ்சினுக்குப் பிரவிருத்தி (ஓடுதல்) நிவிருத்தி (ஒடுங்குதல்) என்னும் இரண்டு தொழில்களும் உள்ளன.

புரியட்டகமும் தசவாயுக்களும், நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் தோன்றுகின்ற கண்களாம். அவைகளில் மனம் அழுந்தாதபடி நீக்கி உண்மை வழியாகிய சரியையாதிகளில் ஒழுகினால், இறைவன் வெளிப்பட்டு அருளுவான்.

சாக்கிரத்தில் தொழிற்படும் பிருதிவி முதலான இருபது தத்துவங்களும், சொப்பனத்துத் தொழிற்படுகின்ற கருவிகளுடன் உயிர் செல்லும்பொழுது

அகன்றுவிடும். சொப்பனக் கருவிகள் குற்றமுடையன ஆதலால், அவைகளை உதறித் தள்ளின் நினைவு ஒடுங்க உயிரானது உறக்கத்தில் நிற்கும். இப்படி நிற்கும் உயிரானது, சிவகுருவின் திருவருளால் சாக்கிர துரியத்தனாகி உலகத்திலே பொருந்தி நியமமாதிகளைச் செய்யின், சாக்கிர துரியாதீதநிலை வாய்க்கும். அதன் கண் சிலகாலம் அழுந்திநின்றால், உயிர் சிவமாந்தன்மை அடையும். சிவமாந்தன்மை பெற்ற அவ்வுயிர், துரியாதீதத்திலே சிவலோக போகங்களை அனுபவிக்கும். அயன் முதலாக சிவன் ஈறாகவுள்ள பஞ்சமூர்த்திகளின் வடிவங்களைவிட்டு மோனநிலை அடைந்து சிவமாகி முதல்வனாகி விளங்கும்.

அகத்தே இறைவனைக் கண்டு கருதி ஸஹஸ்ராரத்தில் பொருந்திநிற்கும் அகத்தவமுடையவர்கள், வெளி அண்டங்களில் காணப்படுபவைகள் அனைத்தையும் உளத்தே காணப்பெறுவார்கள். உயிர்கள் பக்குவமானபோது அறியாமல் புலம்பின; திருவருட் சத்தியினையும் அறியாது மயங்கின. வேறு பிரித்துக் காண முடியாத இறைவனை ஞானத்தால் அறிவோர், அப்பெருமானின் திருவடிப் பேரின்பம் அடைவார்கள். விளக்கினுக்குத் தூண்டுவோன் ஒருவன் வேண்டப்படுவதுபோல, அறிவிக்க அறியும் அறிவினையுடைய உயிருக்கு அறிவிக்கப் பேரறிவுப் பொருளான இறைவன் வேண்டப்படுவனாவன். மூலாதாரத்தில் ஏற்றும் விளக்கானது புருவநடுவான சந்திரமண்டலத்தை ஒளியிடமாகக்கொண்டு பிரகாசிக்கும். தன்னுடைய அறிவைக்கொண்டு காணமுடியாதனவற்றைத் திருவருள் துணையால் காண்பவனே அறிவுடையோன் ஆவன். ஆன்ம ஞானத்தால் அறிய முயற்சிப்பவன் அறிவிலி

ஆவான். உயிர்களை அவத்தைகளில் செலுத்தி மறைவாக இருந்து அறிவிக்கும் இறைவனை, அவனது அருளில்லாமல் யார்தான் அறியமுடியும் !

ஆன்மா, மாயையிற்பொருந்தி மூலப்பகுதியோடுருவான். மாயையைக் கூட்டுவிப்பது, அதில் நிலைபெறச் செய்வதற்கல்ல; மலத்தை வாட்டி மாயையையும் ஒருங்கே நீக்குவதற்கேயாகும். மாயையுடன் கூடாவிட்டால் ஜீவன் பிறப்புள் தங்கும்.

7. கேவல சகல சுத்தம்

(2227—2268)

உயிரானது, தன்னை அறிகின்றபொழுது சுத்தன் என்றும், அறியும் அறிவு பெறாதபோது கேவலன் என்றும் பெயர்பெறும். அவ்வுயிர் கேவலத்தினின்றும் நீங்கப்பெற்றுச் சுத்தனாக ஆவதற்காக மாயையுடன் கலந்தபோது சகலன் எனப்பெயர்பெறும். அறிவுடைப் பொருள் சத்து; அறிவிலாப்பொருள் அசத்து; இவ்விரண்டுடனும் உயிர்க்குச் சம்பந்தம் இருப்பதால் உயிர் சதசத்தாகும். தான் முன்செய்த தீவினை நல்வினைப் பயன்களால், தானே தனக்குப் பகைவனும் நண்பனுமாக ஆகின்றான். செய்யும் வினைக்கேற்ப மறுமையும் இம்மையும் தானே தனக்கு ஏற்படுகின்றன. தான்செய்த வினைப்பயன்களைத் தானே அனுபவிக்க வேண்டும். ஆதலால், தனக்குத் தலைவன் தானேயாம்.

கேவலநிலையில் இருந்த உயிரானது தத்துவங்களுடன் கூடியதும் அவ்வுயிர்க்குச் சிறிது அறிவு தோன்றும். அதனால், காமியவினைகளும் மாயேயமாகிய கருவிகளும் உயிருடன் சேர்ந்து தொழிற்படும்போது

அவ்வுயிர், அக்கருவிகளினிடத்தில் பற்றுக்கொள்ளும். இதுவே, சகலநிலை ஆகும். சகலர், கருவிகளுடன் சேர்ந்த சகநிலையுடையவராவர். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலப் பிணிப்பு உடையவர்கள் அயன், திருமால், பல தேவர்கள், மக்கள், புழு என்பனவாம். சுத்தமாயையினுல் உடல் பெற்று அசுத்த மாயையின்கண் தங்குவோர் இருமலமுடையவராவார்கள். இவர்கள், மாயை என்னும் மலம் நீங்கப்பெற்று ஏனைய ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடையவர்கள். இவ்விரண்டினையும் உடையவர்கள் ஸ்ரீகண்ட உருத்திரரும் நூற்றெட்டு உருத்திரர்களும் ஆவார்கள்.

ஆணவமலமாத்திரம் உள்ளவர் விஞ்ஞானகலர் ஆவர். இம்மலமுடையவர்கள் அனந்தர் முதலான அஷ்டவித்தியேசுரர், சப்தகோடி மகாமந்திரர், மற்றும் பலராவர். சுத்தமாயையிலே உள்ளவர்களில் சிலர் பக்குவம் பெற்று இறைவனருளால் அவ்வொருமல மாகிய ஆணவமலம் நீங்கப்பெற்று உயர்ந்தோரும் ஆவர்; அவர்கள், விந்து நாதம் இவைகளை விட்டுப் பிரணவ வடிவத்திலும் அடங்கிநிற்பர். இதுவே, சுத்தாவத்தைத் தொழிலாகும்.

கேவல அவத்தை (கேவலகேவலம், சகலகேவலம், சுத்தகேவலம்) மூன்றேயன்றி நான்கு வகைகளும் உண்டு. இவையெல்லாம் கேவலநிலையேயாம். உயிரானது மாயையுடன் சேர்ந்தபின்தான், அவ்வுயிர்களுக்கு இச்சை விளங்கும். அதனுல் மாயை அகன்றுவிடும். அப்போது இறைவன், உயிரின் பக்குவம் கண்டு மலம் அறுத்தருளினுன். தத்துவங்களெல்லாம் கருத்திலிருந்து நீங்குமானுல் அறியாமைநீங்கும். அப்போது இறைவன்,

தன்னுள்ளே உயிர் புகும்படியாகச் சிவாகாயத்தை அறிவித்தருளுவான். உயிரும் இறைவனுள்ளே அடையும். இதுவே சுத்தாவத்தையாகும்.

உயிர்கள் ஆணவக்கட்டால் உள்ளடங்கிக்கிடந்தன. இறைவன் அவ்வுயிர்களை ஐவகை மலங்களால் ஆட்டிவைக்கின்றனன். ஆட்டுதற்காகக் கேவலநிலையிலும் சகலநிலையிலும் உயிரைப்புகுத்துவிக்கின்றான். அதனால், உயிர் பிறப்பு நீங்கும். மலமற்ற உயிர், இறைவனிடத்தில் துரியத்தின் நிலைப்பேற்றை அடையும். அப்போது தனக்குள்ளே தன்னை அறியும். இருபத்தைந்து தத்துவங்களும் ஆன்மாவில் ஒடுங்கும். ஆன்மாவும் அனந்ததேவரால் ஒடுக்கப்படும். சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்னும் மூன்று தத்துவங்களும் ஒடுக்கநிலைச் சிவனால் ஒடுக்கப்படும். சத்தி சிவம் என்னும் இரண்டு தத்துவங்களும் சுத்தசிவனால் ஒடுக்கப்படும். மீண்டும் தோன்றும்பொழுது இம்முறையே தோன்றும்.

ஆணவமலக்கட்டுற்றவர் விஞ்ஞானகலர். இவர், உண்மை ஞானத்தால் கட்டற்றவராவர். பிரளயாகலர் இருமலக்கட்டுடையவர்; இவர், ஊழியால் கட்டற்றவராவர். மும்மலக் கட்டுடையவர் சகலர்; இவர், தூல சரீரமுடையவர். விஞ்ஞானகலருடைய கேவலநிலையில் விந்துசத்தியானது தொழிற்படும். அப்போது உயிர், தேகம் முதலியவற்றை அடையும். அவ்வுடலின் தன்மை மந்திர சரீரமாகும். பிரளயாகலருடைய சரீரம் சுத்தமாயையால் அமைந்ததாகும். அவர்கள் செய்யும் கன்மங்களும் இறைபணிகளேயாம். இந்நிலையினர் நூற்றெட்டு உருத்திரர்களாவர். சகலராவார் இந்திரன்,

வானவர், மக்கள், அயன், அரி, புழு முதலாயினோர். இவர்கள், இருவினைக்கீடாகப் பிறந்து அல்லலுறும் இயல்பினராவர். இவர்கள் அனைவரும் இறைவனது திருவருளாலே, மும்மலம் மும்மலகாரியம் முதலான தொடர்ச்சிகள் நீங்கத் தூயோராவர்.

சுத்தமாயை, அசுத்தமாயை, கிரியாசத்தி ஆகிய இவைகள் உயிர்களுக்குப் பக்குவத்திற்கேற்ப உடம்பாக அமையும். விஞ்ஞானகலருக்கும் பிரளயாகலருக்கும் சுத்த மாயையிலிருந்து தேகம் தோன்றும். சகலருக்கு அசுத்தமாயையிலிருந்து தேகம் தோன்றும். சகலர் இருப்பது இவ்வுலகத்தேயாம். கேவலம், சகலம், சுத்தம் என்னும் இம்மூன்றும் முத்திறப்படும்வகையில்:- கேவலகேவலம், கேவலசகலம், கேவலசுத்தம்; சகலசகலம், சகலகேவலம், சகலசுத்தம்; சுத்தசுத்தம், சுத்தகேவலம், சுத்தசகலம் என ஒன்பதுவகைப்படும். திருவருளால் அறிகின்றவர்களுக்கு ஆன்மா, இவ்வொன்பதினையும் பொருந்திச் சுத்தப்படும்நிலை தெரியவரும்.

கேவலகேவலமானது அதீதத்திற்கும் அப்பாற்பட்டதாகும். கேவலசகலத்திற்குச் சுத்தமாயை நிலைக்கள (இருப்பிட)மாகும். இந்நிலை விஞ்ஞானகலரது நிலையாகும். அவரது உடல், இறைவன் விளங்கும் தவ உடம்பாகும். சகலத்தில்கேவலம், சாக்கிரத்துக்கு அப்பாற்பட்டதாகும். சகலத்தில் சகலம், சாக்கிரத்தில் சாக்கிரமாகும். சகலத்தில் சுத்தம் அருள்நிலையாகும். சகலத்தில் இம்மூன்று நிலையாகும். சுத்தத்தில் சுத்தமாவது, இறைவனது திருவுருவைப் பெறுவதாகும். சுத்தத்தில் கேவலமாவது, தவவொடுக்கமாகும். சுத்த

சகலமாவது, இன்பநிலையமாகும். சாக்கிர சாக்கிரம், சாக்கிர சொப்பனம், சாக்கிர சுழுத்தி, சாக்கிர துரியம், சாக்கிர துரியாதீதம் ஆக இவ்வைந்தும் இன்பமாக நிலைபெறும்; ஐம்மலங்களும் விட்டுநீங்கும்.

சாக்கிராதீதத்தில் ஆணவம் நீங்கும். இந்நிலை அருளில்தங்கும் நிலைக்கும் அப்பாற்பட்டதாகும்; பரசிவ சம்பந்தத்தை உயிர்களினிடத்திலே விளங்கும்படிச் செய்யும். இந்நிலை அடைந்தவரை மலம் குணம் ஆகிய இவைகள் பொருந்தாவாம்; பந்தம், மோட்சம், ஒடுக்கம், அதீதம் ஆகிய இவைகளும் தோன்றுவாம். தான் நுகர்ந்துகொண்டிருப்பது இறைவனது திருவடியின்பம் என்று அவனது அருளால் அறிந்த பிறகு சித்தத்திற்கு வேறு எந்தச் செயலும் இல்லை. உயிர்களுக்குப் பந்தமும் மோட்சமும் ஏற்பட்ட காரணம் இறைவனது திருவிளையாட்டேயாகும். இதனை உணர்ந்த உயிரானது சிவனிடத்திலே பற்றுவைத்து இன்பம் அடையும். கருவினிடத்திலே அதீதமாவது, அசுத்தமாயையுடன் கலப்பிப்பதாகும். துரியமாவது, மாயாகாரியப்பொருள்களை அனுபவிப்பதற்கு எழுகின்ற விருப்பமாகும். சூக்கும உடம்பு சொப்பனநிலையாகும். தூலவுடம்பு சாக்கிரநிலையாகும்.

துரியாதீதத்தில் ஆணவம் மாத்திரம் உயிர்களைப் பந்தித்திருக்கும். துரியத்தில் அசுத்தமாயை சேர்ந்திருக்கும். சுழுத்தியில் இருவினைகள் கூடிநிற்கும். சொப்பனத்தில் சுத்தமாயை கூடிநிற்கும். சாக்கிரத்தில் திரோதாயியுடன் மலங்களும் சேர்ந்திருக்கும். உயிர்கள், உருவநிலையை அடையும்போது வினைப்பயன் நுகர்வு உண்டாகி, பொறிகளின் வாயிலாகப் புலன்களை

நுகரும். இதுவே, உயிர் கருவுற்றுச் சகலத்தின்கண் காணப்படும் நிலையாகும். இருவினையொப்பு வாய்க்கப் பெற்றதும் இறைவனின் திருவருட்சத்தி பதியும். பின், ஞானத்தில் நிலைபெற, ஞானசாரியன் உபதேசிக்க, ஆணவமலம் நீங்கப்பெற்று உயிர் பிறவாமை பெறும். இதுவே சுத்தநிலையாகும். உயிர், துரியாதீத நிலையை அடைந்தபின், பெறுதற்கரிய சித்திகளும் முத்திகளும் கைகூடும். பரசிவம் உயிருக்கு ஆதேயமாகும்.

உயிர், தன்னை (ஆன்மாவை) அறிவதற்கு முன்பு உடலையே தான் என்று கருதும். தன்னைக் கண்டபின், அப்பால் நிலையாகிய துரியத்தையும் காணும். அந்நிலை இறைவனுடன் ஒன்றாகக் கலக்கும் நிலையாகும். அக் கலப்புப் பெறுவிட்டால் மீண்டும் பிறக்கும். சாக்கிர நிலையில் துரியாதீதம் பொருந்துமானால் மாயாமயக்க மானது கெடும்; அதனால் பிறப்பு அறும். நீங்கவே முத்தி கைகூடும். அந்நிலையில் வாக்கும் மனமும் பொருந்தாது. விருப்பு வெறுப்புக்கள் துரியாதீதத்தில் வரமாட்டா. ஆன்ம தத்துவங்கள் இருபத்துநான்கும் அசுத்தமாயையை உடையன. வித்தியா தத்துவங்கள் ஏழும் சுத்தாசுத்தமாகும். சிவதத்துவங்கள் ஐந்தும் சுத்தமாகும். இவை மூன்றும் உயிர்களுக்குக் கருவி யாகப் பொருந்திநிற்கும்.

செவிலித்தாயாகிய அசுத்தமாயையும், நற்றாயாகிய சுத்தமாயையும், தந்தையாகிய சிவபிரானும் சேர்ந்து பெற்ற குழந்தை உடலாகும். இந்நிலையில் கேவலத்தில் கிடந்த உயிரானது உடம்பைப்பெற்று, சகலநிலையை அடைகின்றது. அவ்வுயிர், திருவருளினாலே சுத்த நிலையை அடைந்து புண்ணிய உயிராகிறது.

8. பராவத்தை

(2269—2295)

இறைவன் ஐம்மலங்களினின்றும் இயல்பாகவே நீங்கினவன்; நினைப்பவர்களின் நெஞ்சத்திலே விளங்குபவன்; பிறப்பில்லாதவன்; உயிர்கள், தேகவாஞ்சையை ஒழித்திடவேண்டி அவ்விறைவன் மாயையுடன்கலந்து நிற்பன். உயிர்கள் தேகத்தால் ஆற்றலடைந்து, அவ்வாற்றலால் நல்லொழுக்கத்தில் ஒழுகும். முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பால் விளங்குகின்ற இறைவனைத் திருவருளினுல் அறிகின்ற அறிவே உண்மையறிவாகும். அவ்வண்ணம் அறிகின்றவர்கட்கே இறைவன் இனியனுவான்.

பூதம் ஐந்து, பொறி ஐந்து, புலன் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆகிய இருபத்துநான்கு தத்துவங்களையும் கடந்துநின்ற உயிரானது, நடுநாடியில் தங்கி மெல்லிய மூச்சுடன் உறக்கம் - யோகநித்திரைகொள்ளும். இந்நிலையில், ஆணவமாகிய நஞ்சு இடர்செய்யாதபடி இறைவன், திருவடிஞானம் அருள்புரிகிருன். துரியசாக்கிரத்தில் ஆன்மா தனித்து நிற்கும். துரிய சாக்கிரம், துரிய சொப்பனம், துரிய சுழுத்தி என்ற இம்மூன்றனுள் பரதுரியத்தில் உயிரானது அருட்சத்தியோடும் கூடியிருக்கும். பரதுரியாதீதத்தில் அவ்வுயிரானது சிவமேயாகும்.

தபோதனர்களுக்குப் பற்றுக்கோடாக இருந்த குறிகள் முதலியவை, பயிற்சி முற்றியபிறகு வேண்டியதில்லை. சிவபிரானே அறிவுக்குள்ளே அறிவாய்நின்று வெளிப்பட்டுப் புலனுவான். அப்பிரானைப் பற்றும்படியாகப்பற்ற, பயிற்சி செய்யாதவர்கள், அம்மெய்ப்

பொருளாம் பரமன் நிலையை அடையமாட்டார்கள். அவர்களுக்குப் பாசமும் பற்றும் நீங்காவாம். மறைந்துள்ள மாயையானது நிலையில்லாதது. அம்மாயையின் மயக்கமானது நீங்கினால் உண்மைஞானமும் சிவானந்தமும் நிலைபெற்று நிற்கும். அதனால், சிவபிரானின் வியாபகத்துடன் நின்று விளங்குவர்.

துரியாதீதத்தில் இருந்த உயிரானது, பஞ்சாட்சர ஜபத்தை இடைவிடாமல் செய்தால், (நரிகளாகிய) ஞானேந்திரிய கன்மேந்திரிய அந்தக்கரணங்கள் ஆகிய வைகளைத் துரத்தி இறைவன் அருள்புரிவான். சாக்கிர துரியநிலையில் உயிருடன் இறைவன் கலந்ததும் மாயை முதலான மலங்கள் மறைந்துவிடும். உடனே உயிரும் இறைவனது வடிவமாகும். பொறி புலன்கள் விரிவு அடையுமானால், அவைகள் சாக்கிரத்தைப் பொருந்தும்; விளக்குப்போன்று அசையாமல் மாயையானது வலிமையுடன் நிற்கும். இக்கருவிகளனைத்தும் சாக்கிர துரியத்தில் நீங்காமல் பொருந்திச் செயலற்றிருக்கும். உயிரினது உண்மைத்தன்மையை அறியாதபோது உடலையே 'நான்' என்று கூறுவார்கள். தன்னையறிந்து துரியத்தைப் பொருந்திநின்ற மாத்திரத்தில் பிறவி நீங்காது; எங்கும் கலந்திருப்பவனாகிய இறைவனது திருவருளினாலேயே பிறவி நீங்கும். கருவின்பாற்பட்ட பிறப்பினால் உண்டாவது உடலாகும். அயனும் அரியும் பிறப்பு இறப்புக்களை உடையவர்களேயாவர். சிவகுருவால் உபதேசம் பெற்று இறைவன் திருவடியடைந்த பின் ஜீவனும் சிவனும் ஒருவராகவே விளங்குவர். உயிரானது மூன்று அவத்தைகளையும் பொருந்தியபின், துரியாதீதநிலையை அடையும்; அப்போது சிவனுடன் ஒன்றாகும் பேற்றைப் பெறும்.

பரதுரியசாக்கிரமானது எங்கும்பரவி உலகநுகர்வுகளைப் புசித்தது. பரதுரியக்கனவும் மெய்மை அமைதியாகும். சுழுத்திநிலை நீங்கும்போது புலனுவது சிவதுரியநிலையாகும். இந்நிலையையடைந்தவன் சிவதுரியத்தனும் ஆவன். ஜீவன்,(ஜீவதுரியம்,சிவதுரியாதீதம்,பரநனவு, பரகனவு, பரசுழுத்தி, பரதுரியம், சிவநனவு, சிவக்கனவு, சிவசுழுத்தி, சிவதுரியம் என்னும்) பத்துநிலைகளையும் அருளால் கண்டு நீங்கி, இறைவனது திருவடிக்கீழ்த் தங்கி, அப்பத்து நிலைகளோடு துரியாதீத நிலையினையும் விடுத்து இன்புற்றிருக்கும். பரமமானது பரம், சிவம் என்னும் இரண்டிற்கும் மேலானதாகும். பரம்பரன் என்பது அப்பரத்துக்கு மேலானதாகும். பரசாக்கிரம் பரசொப்பனம் என்னும் இவ்விரண்டும் உயிர்களின் பிறப்பை நீக்கும். அதற்குமேல் இறைவனது உண்மைநிலையினை உயிர் அடையும். பராவத்தையுடையவர், பரசிவம் முதல் அயன் ஈருகவுள்ள ஒன்பது வடிவமாக விளங்குவர்.

ஏழு உலகங்களும் பிறப்புக்களும் மாயாகாரியப் பொருள்களின் கலப்பாகும். அவற்றுடன் சேர்ந்திருக்கும் உயிரும் அழியுந்தன்மையுடையது. இவ்வுண்மையினை அறியாதவர்கள் கலப்பறியாதவர்களாவார்கள்; அறிவாராயின், இறைவனை உள்ளத்தே குறிக்கும் வலிமையுடையராவர். பொன்னுபரணத்தை நகை என்ற எண்ணத்தோடு பார்க்கும்போது தங்கம் என்பது தோன்றுது. பொன் என்ற நோக்கத்தோடு பார்த்தால் நகை என்பது தோன்றுதவாறுபோல ஆன்மாவானது, 'தான்' கருவி கரணங்களே என்று எண்ணினுல் ஆன்ம தரிசனம் இல்லை; ஆன்மா, 'தான்' வேறு என்று நோக்கும்போது கருவி கரணங்கள் மறையும். மரத்தால்

செய்யப்பட்ட யானையை நோக்கும்போது மரம் என்ற எண்ணம் தோன்றாது; மரத்தைப்பற்றி நினைக்கும் போது யானையின் எண்ணம் தோன்றாது. அதுபோல இவ்வுலகத்தையும் ஏனைய பொருள்களையும் நோக்கும் போது, இறைவனின் எண்ணம் நமது உள்ளத்தே தோன்றுவதில்லை. இறைவனின் குணம், பண்பு இவை களை எண்ணும்போது, உலகு உடல் இவைகளைப் பற்றிய எண்ணம் இல்லை.

உயிர், திரோதானமலம் மாயாமலம் ஆகிய இவ் விரண்டையும் நீக்கி அறிவாக நின்று, சிவவடிவமாக மேம்பட்டு, திருவருட்சத்தியின் துணையால் அடங்கி நிற்கும். இதுவே, திருவடிப்பேறு - முத்தி ஆகும். ஆன்மதத்துவம் இருபத்துநான்குடன் புருடதத்துவம், மூலப்பகுதி, அசுத்தமாயை ஆகியவைகளும் அழியுந் தன்மை உடையன ஆகும். சுத்தமாயை ஐந்தினையும் திருவருளால் உயிரினது அறிவினிடத்தே கண்டு, இவை களால் பிரயோஜனம் இல்லை என்று அறிந்து, பரா வத்தையினை உள்ளுதலே சுத்தநிலையாகும். இறைவன், அருளும் பரமும் அன்புமாயிருந்து அருள்புரிகின்றான்; உயிருடன் கலந்து நிற்கும் தூல சூக்கும தேகங்கள் உயிர்களைவிட்டு அகலும் பக்குவம்கண்டு சிவகுருவாய் வந்து அருள்புரிகின்றான்; பின், அவ்வுயிர்களை விட்டு எப்போதும் நீங்காதவனாக உடனுறைகின்றான்.

9. முக்குண நிர்க்குணம்

(2296)

சாத்துவிகம் சாக்கிரமாகும். இராசதம் சொப்பன மாகும். தாமதம் சுழுத்தியாகும். இம்மூன்று குணங்

களையும் அழியும்படிச்செய்து, அருட்குணம் மேல் ஓங்கிநிற்கும் நிலையே துரியநிலையாகும்.

10. அண்டாதிபேதம்

(2297—2298)

அண்டங்கள் அளவில்லாதனவாகும், இவ்வண்டங்கள் அனைத்தையும் இருப்பிடமாகக்கொண்டு இறைவன் அவ்வண்டத்துள் கலந்துள்ளான். அண்டக்கூட்டங்களாகிற ஆசனத்தின்மீது அமர்ந்திருக்கும் இறைவன், ஐவகை வடிவங்கொண்டும், தத்துவங்களுக்கெல்லாம் அப்பாலாய் நின்றும் இருக்கின்றான். இத்தத்துவங்கள், அண்டங்களின் எண்ணிக்கைக்கு எண்மடங்கு அதிகமானதாகும்.

11. பதினொராந்தானமும் அவத்தையெனக்காணல்

(2299—2301)

சிவதத்துவம் சுத்தமாயையின் ஐந்துநிலைகளில் சம்ஹாரக்கிரமத்தின் முடிவில் காணப்படுவது. வித்தியா தத்துவங்களின் ஈறான அசுத்தமாயை, மயக்கமுள்ள இன்பத்தன்மையாகும். ஓங்காரம், அகார உகார மகாரமென்னும் மூன்று எழுத்துக்களுடன் கூடியதாகும். உடல், மெய் என்றதில் காணப்படும் இருபது மெய்களுடன் அம்மூன்றும் சேர்ந்து இருபத்துமூன்றாகும். அவ்விருபத்துமூன்றாவது தத்துவமே அகங்கார தத்துவமாகும். அவ்வகங்காரமே உயிருக்குக் காயமாகும். புருடனுடன் சுத்த மாயா தத்துவங்கள் ஐந்தும்சேர்ந்து ஆறாகும். இவ்வாறும் துரியாதீதத்தில் தொழிற்படும்.

அசுத்தமாயை ஏழும் சுத்தமாயையிலுள்ள ஆசான் மெய் ஒன்றும் ஆக எட்டும் துரியத்தில் தொழிற்படும். பதினொரு தத்துவங்களும் பராவத்தைக்கு உள்ளன. இப்பதினொன்றும் உயிரிடத்தில்கூடினால் தூல சூக்கும தேகங்கள் உண்டாகும். இது, இறையருளாலல்லாமல் வேறில்லை.

12. கலவு செலவு

(2302—2303)

ஆன்மதரிசனம், பரைதரிசனம், சிவதரிசனம் ஆக மூன்றும் சாக்கிராதீதத்தில் சுத்தமாகும். கோபத்தை அடக்கிச் சிந்தையைச் சிவபிரானிடத்தே வைத்து எப் போதும் சிந்திப்போமானால், ஆணவம் நீங்கப்பெற்று, இறைவன் திருவருளால், அவனது திருவடிப்பேற்றை அடையலாம்.

13. நின்மலாவத்தை

(2304—2354)

நினைவு, சொல், செயல் ஆகிய இவைகள் எவையும் அடையாத நிலையே நின்மலாவத்தை எனப்படும். இந் நிலையினை அடைந்தவர்கள், ஆமையின் வயதைக்காட் டிலும் அதிகமாக ஆயிரம் ஆண்டு வாழ்வார்கள். சிவானந்தத்தை அடையும் உரிமை ஆன்மாவுக்கே உள்ளது. இதனை வேதமும் உணர்த்துகிறது. ஆன் மாவே இறைவனுக்கு மைந்தனாகும். இருபத்தைந்து தத்துவங்களும் (ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு; புருட தத்துவம் ஒன்று ஆக இருபத்தைந்து) கூடிய இடத்து உயிர் என்னும் பெயருண்டாகும். தேகம் கெட்டபின், ஆன்மா என்னும் பெயரில்லை. (நாமம் கெட்டதே அல்லாமல் நாமி கெடுவதேயில்லை.)

சிவனையே நினைந்திருக்கும் உயிரானது துரிய நிலையை அடையும். அந்நிலையில் இறைவன் திருவருளால் முதல்வனுகித் திருவடிப்பேற்றைப் பெற்று இன்பவடிவாகவே எப்போதும் இருக்கும்.

உயிரானது சிவனுடன் ஒன்றிநிற்கும்பொழுது எல்லாப்பொருள்களும் அவ்வுயிருள் ஒடுங்கியிருக்கும். உயிரும் அப்பொருள்களினுள்ளே கலந்துநிற்கும். அப்போது முப்பத்தாறு தத்துவங்களுமகலும். உயிருக்கு, கரணங்களற்ற துரியநிலையில் படிந்த கன்மவாதனை நீங்காது. பஞ்சாட்சர வடிவினனுன இறைவன் அருள் புரிந்தவுடன், உயிர்களின் கருவிகளனைத்தும் அகலும். அகன்றதும் அவ்வுயிர், சுத்த துரியாதீதத்தில் உறையும். உயிரானது, சுத்த அதீதசாக்கிரத்தில் படிந்தால், இறைவன் திருவருள்பெற்று என்றும் நீங்காது. அந்நிலையில், சிந்தனையால் அடையும் சுகத்தைப் பொருந்தாமல் சமாதி கூடுமானுல், இறைவனது திருவடியின்பத்தில் அவ்வுயிர் நிலைபெற்றிருக்கும்.

மங்கைபங்கனது திருவுருவமே சத்திசிவமாகும். அதனுல், உயிர்களும் ஆண் பெண் என்னும் இருவுருவங்களை அடைந்தன. தன்னி(சிவத்தி)லிருந்தும் உயிரைப் பிரிக்காது தன்னுட்கொள்ளுதலே அருட்கேவலம் என்னும் நின்மல கேவலமாகும்.

காற்றூடி, கொள்ளிவட்டம், கடல் அலை ஆகிய இவைகள்போல, மாறிமாறித் துன்புறும் உயிர்களினுடைய பிறவித்துயரம் கண்டு, அவற்றைத் திருவருளால் அகற்றும்பொருட்டு இறைவன், பக்குவத்தை அவ்வுயிர்களுக்கு வருவித்து, அத்துன்பத்தையும் நீக்கி அருள்புரிகின்றுன். உயிர் சிவத்தன்மை அடைந்தபின்,

மலங்களால் ஏற்படுகின்ற கொடிய குணங்களும் நீங்கும். அண்டத்திலுள்ளவை பிண்டத்திலும் உள் ளன. ஐம்புலன்களாகிய யானைகளையடக்கி, அறிவென் னும் ஞானதீபத்தையேற்றி, இறைவனை எப்போதும் காணும் பேறெய்தியவர்கள் சிவலோக இன்பத்தை வெகு எளிதில் பெறுவார்கள்.

பிராணவாயுவை நடுநாடியின்வழியாகச் செலுத்து கின்றவர்களுக்கு நடராஜப்பெருமானின் சிலம்பொலி யும் உடுக்கையொலியும் மிகுந்து கேட்கும். செயலற் றிருப்பதே சிவானந்தம் அல்லது சமாதியாகும். செய லற்றிருப்பவர்கள் சிவயோகத்தை நாடமாட்டார்கள்; உலகவாழ்விலும் ஈடுபடமாட்டார்கள். மேலும், அவர் களுக்குப் பேரின்பமான வீட்டுநிலையும் கைகூடும். ஒருவனுக்கு, 'தானே அவனாகும்' சமாதி கைகூடப் பெறின், அவன் பஞ்சமலங்கள், பசுத்தன்மை (பொய், கொலை, களவு, கள், காமம், கடன்கொள்ளல், யாசித் தல், கோபித்தல் ஆகிய) எட்டுக் குற்றங்களும் நீங்கப் பெற்று, சிவலோக வாழ்வையும் பெறுவான்.

ஆன்மாவுக்குப் பக்குவம் வந்ததும் சத்திநிபாதம் வந்துசேரும். அதனால், இறைவனின் திருவடி தோன் றும்; ஆணவத்தன்மையும் தோன்றும். ஆன்மாவுக்குப் பழைமையாகிய சரியையாதி நான்குமுண்டு. ஆதலால், பந்தம் மோட்சம் என்னும் இருநிலையும் உண்டாகும். ஆகவே, அவ்வான்மா திருவருளிலும் தோயும். பந்த மோட்சங்கள் உயிர்க்குத் தோன்றியபின், அவ்வுயிர் அவற்றினை மயக்கத்தாலும் தெளிவாலும் அறியும். பின், அவ்வுயிர் திருவருளின்வழியே ஒழுகும். அப் போது சிவ ஒளி உயிர்க்குத் தோன்றும்.

சிற்றுணர்வாகிய ஒளி, ஆணவஇருள், பரை ஆகிய இவற்றைத் திருவருளால் ஆன்மா அறியும். திருவருளே சிவானந்தமாகும். இறைவனது அருள்பெற்ற ஆன்மாவானது செயலற்றிருக்கும் - சமாதியடையும். மேலும், அவ்வுயிர், இறைவன் திருவருள்நெறியை உணர்ந்தால் திருவடிப் பேரின்பம் அடையும். அறிவில்லாத கீழ் மக்களுக்கு மெய்ஞ்ஞான நூல்களை அறிவிக்கவேண்டியதில்லை; அறிவுநிறைந்த மெய்ஞ்ஞானிகளுக்கு ஞான நூல்கள் வேண்டுவதில்லை. அறிவினைப் பெற்றும் அறியாமையுடையோம் என்று வருந்துவோர்க்கே மெய்ஞ்ஞான நூல்களை அறிவிக்கவேண்டும்.

உயிர்க்குச் 'சதசத்து' என்னும் பெயருள்ளது. சத்துடன்கூடிச் சத்தாகியும், அசத்துடன்கூடி அசத்தாகியும் நிற்பது போல, சிவசத்துடன்கூடிச் சிவசத்தாகவும் அவ்வுயிர் நிற்கும். ஆன்மாக்கள் தாமாக அறியும் தன்மையுடையன அல்ல; அறிவில்லாதனவும் அல்ல; அறிவித்தால் அறியுந்தன்மை உடையன. உயிரினது அறிவு, சதசத்து என்னும் உண்மையை அறிந்தால் அவ்வுயிர், தானே அறியும் நிலையை அடையும். அப்போது அவ்வுயிர், இறைவனுடன் கலந்து நிற்கும். முப்பத்தாறு தத்துவங்களின் உண்மையை உணர்பவர்களுக்கே தத்துவஞானம் கைவரப்பெறும். திருவடி ஞானம் கைவரப்பெற்ற ஆன்மாவானது சிவமாகும்.

ஞானசத்தியைத் தன் திருமேனியாகவும், கிரியா சத்தியை அங்கங்களாகவும், இச்சாசத்தியை உயிராகவும் இறைவன் கொண்டு அருளுவான். அதனால், சிருட்டி முதலான பஞ்சகிருத்தியங்களையும் செய்பவனாவான். அவ்விறைவனது சின்முத்திரையால் ஞானிகள்

இறைவன் திருவடிப்பேற்றையும் அடைந்தார்கள். உயிருக்கு அன்பு, அறிவு, ஆற்றல், தூலவுடம்பு, சூக்குமவுடம்பு ஆகியவைகளை இறைவன் அளித்த காரணம், அவ்வுயிர்களை நன்னெறிப்படுத்தற்கேயாம்.

இச்சாஞானக்கிரியைகள், இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ளனவாயினும் அம்மூன்றும் இறைவனுக்கு, தாமேவிளங்குவன; ஆன்மாவுக்கு இறைவன் உணர்த்த உணரும்தன்மையனவாகும். சுத்தமாயை அசுத்தமாயை இவைகளால் இச்சா ஞானக்கிரியைகள் நிகழ்வனவாகும். பாழைவிட்டு அப்பால் நிலையில் ஆனந்தாதீதனாய் உள்ளவன் இறைவனேயாம். இறைவன், எல்லாம் தானாகிநிற்கின்றான். அவன், யாவையும் அல்லனாகவும் ஆகின்றான். மிகவும் தூரத்திலுள்ளவன். அப்பிரானை உள்ளபடி உணர்ந்தால் உயிருக்குயிராய் (உடனாய்) நிற்கின்றான்.

உயிருக்கு இச்சையை அளித்து அலையச்செய்வது கிரியாசத்தியாகும். அவ்விச்சையை வாட்டி நீக்குவது ஞானசத்தியாகும். உலகப்பற்றற்ற உயிர், இறைவனது திருவடியடையும். ஐம்மலம்தீர்ந்து தெளிவடைந்தவர், இறைவனுடன் கலந்தவராவர். தத்துவஞானம் இல்லாதவர், ஐம்மல இருளில் தோய்ந்து மயக்கமுற்றவராவர். இவர்களுடைய தன்மையாவன:- முறையே மோட்சம் நரகம் இவைகளை அடைதலாம். இவையெல்லாம் திருவருளின்படி இயங்குவன என்பதை உணராதவர்கள் மெய்ஞ்ஞானமில்லாதவராவர். உயிர்கள், சுத்தமாயை அசுத்தமாயை என்னும் இரு மாயைகளில் திருவருளால் பொருந்திச் செய்யவேண்டியவற்றைச் செய்யும்; ஞானசத்தியினைப் பொருந்தி விளக்கம்பெறும். மேலும்

அவ்வுயிர்கள் பிரகிருதியைப் பொருந்தி அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவிக்கும். இவையெல்லாம் திருவருளால் நிகழ்வனவாம். தத்துவஞானம் கைவரப் பெற்றவர்கள் நரகம், சுவர்க்கம், ஐம்மலக் கூட்டம் ஆகியவைகளை அறவேவிட்டுச் சிவமாக விளங்குவர். அதனால், பிறப்பினின்று நீங்கினவர்களும் ஆவார்கள்.

திருவருட்சத்தியானது, இறைவனை உயிர்கட்குக் காட்டியருளுவதால், உயிர்கள் பேரின்பப்பெருவாழ்வு அடையும். சூரியோதயத்தால் தாமரை நீலோத்பலம் முதலிய பூக்களுக்கு, மலர்தல் குவிதல் முதலியவை இயங்குதல்போல, திருவருட்கலப்பால் உலகம் தோன்றி நின்றழியும். பேதம், அபேதம், பேதாபேதம், ஞானம், நாதம், பரநாதம் ஆகிய இவைகளெல்லாம் ஆன்மா வின்பொருட்டு, திருவருளின் இச்சையால் உண்டா வனவாம். உலகைப் படைத்து, அவற்றில் உயிரைப் படைத்து, அவ்வுயிர்களுக்கு அறிவைத்தந்து, அவ்வறி வால் பக்குவம் அடைந்த ஆன்மாக்களைப் பிரித்து, முடிவில் திருவடியில் அடையச்செய்வது ஆகிய எல் லாம் திருவருளேயாம்.

முப்பத்தாறு தத்துவங்களை விட்டுத் தன்னையறிந்து சிவமாந்தன்மையடைந்தவன், எல்லாப்பொருள்களும் தன்னிடத்தில் நிற்கும் நிலையை அறிவான்; அறிந்து, அப்பொருள்களுக்கு வேருகி அருளை அடைந்தால் ஜீவன்முத்தி அடைந்தவனுவான். அவனே திருவரு ளைத் தெளிந்தவனும் ஆவான். அப்படித் தெளிந்தவ னுக்கே இறைவன் சிவதீக்கை புரிந்தருளுவான். அவனே சிவமாந்தன்மை அடைந்தவனும் ஆவான். மேலும்; அவ்வுயிர், குரு உபதேசப்படி யோக ஞான

நெறிகளில் ஒழுகி இறைவன் திருவடியினை அடையும். சிவமாந்தன்மை அடையாதவர், தான் வேறு சிவம் வேறு என்று கூறுவர். சிவத்தன்மை பெற்றவர் ஜீவனும் சிவனும் ஒன்று என்றே ஓதுவர். 'தான்' இல்லாமல் தலைவன் தானான நிலையே உண்மைநிலை - தத்துவசுத்தநிலை ஆகும். தன்னை அறியும் வகையிலே தனது இறைவனைத் தன்னிடத்திலேயே உள்ளதை உணர்ந்தவனே சிறந்தோனாவன். அவனுக்கே இறைவனும் வெளிப்பட்டு அருள்புரிவான். ஆன்மா, இறைவனைச் சாராவிட்டால் இறைவனும் சார்தற்கரியவனாவன். சன்மார்க்கவழியிலே செல்லுவோமானால், இறைவன் வெளிப்படுவான். ஜீவனாகவும் சிவனாகவும் உள்ள இறைவன் உள்ளத்துள்ளேயும் அமர்ந்தருளுவான்.

மனம் குவிந்தவர்கள், இறைவன் உயிர்க்குயிராக இருந்து எழுலகங்களையும் காத்தருளுகின்றான் என்று கூறுவர். அதனை நினையாதவர்கள் வருந்துகின்றவர்களாவார்கள். திடசித்தம் உள்ளவர்கள் இறைவனடி சேர்வார்கள். தன்னை (ஆன்மாவை) அறியாதவர்கள் இறைவனையும் அறியமாட்டார்கள். இவர்கள் மேலும் மேலும் பிறப்பிலே உழல்வார்கள். சிவத்தைக் காணுவோமேயானால் சிவத்தன்மை எய்தலாம். எல்லாம் திருவருட்சத்தியின் வழியே என்று உணராது, நாமே அறிவோம் என்று நினைப்பவர்கள் பிறப்பு இறப்பினை மாற்றும் வழியை உணராதவர்களேயாவார்கள்.

14. அறிவுதயம்

(2355—2369)

தன்னை (ஆன்மாவை) அறிந்தவனுக்கு என்றும் அழிவில்லை; அறியாதவன் துன்புறுவான். (இறைவனை

அறியும்பொருட்டே தன்னையறிதல்வேண்டும்.) தன்னை அறியும் அறிவு பெற்றபின், ஜீவனும் சிவனும் ஒன்று என்ற நிலையுண்டாகும். அறிவுஸ்வரூபமாக உள்ளது ஆன்மா; இறைவனும் ஞானஸ்வரூபனே. ஆன்மா, 'தான்' அறிவு வடிவென்று உணர்ந்து இறைவனுடன் கலந்தால் என்றும் இன்புற்றிருக்கலாம். ஆன்மாக்களுக்கு அழிவும் தோற்றமும் இல்லை. ஆன்மாக்களுக்கு இறைவனே ஆதாரமானவன். ஆன்மா, இறைவனது திருவருளால் தன்னையும் தலைவனையும் அறிகின்றது.

சிவமாந்தன்மையடைந்த ஆன்மாக்களை அட்டமா சித்திகள் தாமேவந்தடையும். ஆன்மாவானது,இறைவனருளால் அறிவு அறியாமை என்னும் இரண்டிற்கும் அப்பாற்பட்டதான முற்றறிவைப் பெற்றதும் சிவத் தன்மைபெற்று இன்பமாக வாழும். அறிவு அறியாமை என்கின்ற இரண்டினையும் புலன்களையும் கடந்து நீங்கினவன் எவ்விடத்தும் தானாக விளங்குவான். அவனே சிவனுமாவான். அருள் வெளியாவதும் தவநிலைக்களமாவதும் அறிவுடையாரது இருதயமாகும். அந்நல்லறிவுடையாரது நெஞ்சகத்தில்தான், இறைவனும் எழுந்தருளியிருப்பான். மும்மூர்த்திகளாக விளங்குபவன் சிவபிரான் ஒருவனேயாம். அன்பர்க்குச் சமீபித்தும், அல்லாதார்க்குத் தூரத்தும் உள்ளவன் அப்பிரானே.

மாயையான விளக்கானது சிலகாலம் இருந்து அழிந்துவிடும். ஞானவிளக்கானது ஆன்மாவுக்கு அறிவினை விளக்கிப் பிரகாசிக்கும். உடலாகிய விளக்கானது துன்பம் உறும். செம்மை விளக்காகிய இறைவன், திருவடிப்பேற்றினை அருளுவன். இறைவனைத் தேடுவதும் நாடுவதும் பாடுவதும் கூடுவதுமே நிறைந்த

மனத்துடன் செய்யும் வழிபாடாகும். அநாதிமுதலே பிறப்பினுள் வந்தவர்கள், பின்பு மலபரிபாகம் பெற்றவ ராவார்கள். அதன்பின், அவர்கள் தம்மைத் தெரிந்து இறைவனது திருவடியினைச் சார்ந்து பிறப்பு அற்று என்றும் சிவத்தன்மையுடன் வாழ்வார்கள்.

15. ஆறந்தம்

(2370—2404)

ஆறந்தமாவன:- வேதாந்தம், சித்தாந்தம், நாதாந் தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்பன வாம். ஆறு அந்தங்களையும் அறிபவர்கள் பரிசுத்தமான வர்களும் மலமற்றவர்களும் ஆவார்கள். இவைகளை அறியாதவர்கள், உலகத்தின் தோற்றத்தையும் ஒடுக் கத்தையும் அறியாதவர்களாவார்கள். வேதாந்த சித்தாந் தப் பயிற்சியால், துரியநிலையிலே ஆன்மாவைக் கண்ட வர்கள் இறைவனுடன் ஒன்றாகக் கலந்ததான சிவ யோகத்தை அடைவார்கள். இவர்களுக்கே மலம் நீங்கும்; சிவப்பேறும் கைகூடும்.

உயிரானது, இறைவனுடன் ஒன்றுபடும்போது ஐம்பொறிகளும் பற்றும் நீங்கி, இரு மாயைகள் தம் மைத்தொடாராத தன்மையையும் உணர்ந்து இறைவன் திருவடிப்பேற்றையும் அடைந்து பேரின்பமடையும். இதனை உணர்த்துவது சித்தாந்தமாகும். அயன், அரி, அரன், சதாசிவன், மகேசன் ஆகிய இவர்களையும், அதற்மேல் பரவிந்து, பரநாதம் ஆகிய இவைகளையும் விட்டு, முப்பத்தாறு தத்துவங்களும் நீங்கினபோது ஆன்மாவின் உண்மை நன்குவிளங்கும். உயிரானது தத் துவப்பிணைப்பிலிருந்து விடுபட்ட தெளிவால் நாதாந் தத்தைக் கடக்கும். பின், அகவிருள் நீங்கி உள்ளுணர்வு

பிறத்தலால் நாதமுடிவில் உண்டான மெய்ஞ்ஞானத்தைப்பெறும். இயம நியமங்களை மேற்கொண்டவர், பின் அவைகளைக் கடந்து சமாதிநிலையை அடைவர். உயிரானது, சிவத்தன்மை பெற்றதும் பற்றற்ற நிலை அடையும். இதுவே, யோகாந்தக்கொள்கை ஆகும்.

நிவிருத்தி முதலான பஞ்சகலைகளும் சப்ததாதுக்களும் மாயையினிடத்தில் ஒடுங்கும் முறையினை ஆய்ந்து தெளிதலே கலாந்தமாகும். மேற்கூறிய கலாந்தம் மற்றும் ஓர்வகையால் கூறுவதும் உண்டு. அவை ;- மந்திரம், தந்திரம், தெளிவு, உபதேசம், ஞானமென்னும் ஐந்தினையும் திருவருட்பிரகாசத்தில் அமைத்து ஆய்கின்றவர்களுக்கு இறைவன் அருள்புரிகின்றான் என்பதாகும். வேதாகமம் என்னும் கலைகள் அநாதியாகும். அக்கலைகளின்வழியே ஒழுகுதல் தந்திரமாகும். காரண பஞ்சாக்கரமே மந்திரமாகும். குருமொழியே உபதேசமாகும். இறைவனே ஞானக்கலையாகும். பெரியோர்கள் ஒழுகிக் காட்டிய வழியைப் பின்பற்றுவதே ஆசாரமாகும். அவ்வொழுக்கத்தில் அழுந்திய அன்பே நேயமாகும். ஆசாரமும் நேயமுமாகிய இரண்டும் கலாந்தமாகும். 'தான் அவனாகும்' சமாதிநிலையில் தலைப்படுதலே கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், சித்தாந்தம் என்று சொல்லப்படும். சித்தாந்தமென்று சொல்லப்படுவது: காட்சி, காணப்படும்பொருள், காண்போன் என்னும் நிலையாகும். ஞாதுரு ஞானமாகிய இரண்டும் இறைவன் திருவடியில் ஒடுங்கியதும் மோனம் கைகூடும். இதுவே சிவானந்தமாகும்.

முப்பொருள் உண்மையினை உரைத்தருளினவன் இறைவனாவன். அவ்வுண்மைகளாகிய சிவாகமங்கள்

சமயங்களைப்பற்றிக் கூறுகின்றன. முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்துநிற்பன வேதாந்த சித்தாந்த உண்மைகளாகும். வேதாந்தமும் சித்தாந்தமும் மாறுபாடில்லாத ஒற்றுமையுடையனவாம். அறிவின் முடிவே ஞானமாகும். யோகாந்தமே ஞேயமாகும். நாதாந்தம் இன்பமாகும். இன்பவடிவே தோற்றமாகும். மோன நிலையே திருவடிப்பேறுகும். ஜீவ உபாதி ஏழையும் விட்டநிலையே தொம்பதமாகும். (நீ) இறைவனது அறிவின் முடிவு தற்பதமாகும். (அது) ஆன்மாவும் இறைவனும் ஒன்றுபடும் நிலை அசிபதம் (ஆகிருய்) ஆகும். இதுவே 'தொந்தத்தசி' பதம் ஆகும்.

அண்டங்களுக்கு அப்பாலுள்ள பேரொளியுள்ளே இருக்கும் ஞான வெளியே திருச்சிற்றம்பலமாகும். திருச்சிற்றம்பலமாகிய பராசத்தியையே அதிட்டித்து நிற்கின்றவன் சிவபிரானுவான். சிவவழிபாடு, திருமறை ஓதல், ஆலயவழிபாடு ஆகிய இவைகளைச் செய்வோமானால், வினைகளெல்லாம் நம்மைவிட்டு நீங்கும்படி இறைவன் அருள்புரிவான்.

இறைவன், ஆன்மா, இருவினை, இருமாயை ஆகிய இவைகளை மக்கள் நினைக்காதவர்களாய் இருக்கின்றூர்கள். சிவபிரானே இவை அனைத்தையும் உள்ளத்தினுள்ளேயிருந்து உணர்த்துகின்றுன்; இருவினைகளையும் புசிப்பிக்கின்றுன்; அப்பிரானே எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ளவன். ஜீவனும் சிவனும் இரண்டறக் கலப்பதே சிவசாயுஜ்ஜியமாகும். வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இரண்டுமே உயிர்களைச் சிவத்தன்மையடையச்செய்யும். ஏனைய நான்கு அந்தமும் அவ்வளவு சிறப்புடையன அல்ல. ஆகவே, வேதாந்தஞான சித்தாந்தமே சிறப்புடையனவாகும்.

சித்தாந்தஞானத்தில் ஜீவன்முத்திநிலை (பசுத்துவ நீக்கம்) கைகூடும். ஆதலால், சித்தாந்தவழியிலே நிற்போர் முத்திசித்தித்தவராவர். வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இரண்டும் பரமாகாயத்திலும் ஆன்மாக்களின் நெஞ்சகமாகிய சிற்றம்பலத்திலும் இறைவனைக் காட்டும். உருவம் அருவம் என்னும் இரண்டும் இறைவனது திருவுருவமாகும். விந்து, நாதம், சதாசிவம் ஆகிய இவைகள் தத்துவமாகும்.

இறைவனால் அருளிச்செய்யப்பட்ட வேதம் ஆகமம் என்னும் இரண்டும் முறையே பொதுவும் சிறப்பும் ஆகும். வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய இரண்டும் வேற்றுமையில்லாப் பெரியோர்க்கு ஒரே முடிபு ஆகும். சிவசுழுத்தி, ஜீவசுழுத்தி, பரசுழுத்தி என்னும் மூன்றும், மாயையினாலாகிய இன்பமும், சாம்பவி முத்திரை முதலிய பயிற்சியால் ஏற்படும் இன்பமும், நடனானந்தமும் ஆகிய இவைகள், ஜீவன்முத்தன் அடையும் இன்பங்களாம்.

இறைவனே பஞ்சகலைகளுக்கும் முதல்வனாவன். ஒரே முடிவையுடைய வேதாந்த சித்தாந்தநெறியிலே நின்றால் யோகாந்தம் நேர்படும். அதனால், நடராஜப் பெருமானின் திருவடியடையலாம். உயிருக்கு ஐம் மலங்கள் நீங்கினபோது துரியாதீதநிலையை அடைந்து ஆணவம் அடங்கும். அப்போது அவ்வுயிர், தன்னையும் தலைவனையும் காணும்; மாயாமலம் கெட்டுத் தத்துவங்களையும் கடந்து சிவமாக விளங்கும். சிவோகம் பாவனையைப்பற்றி ஆராயப்படும் நூல் ஆகமமாகும். வேதம் ஆகமம் என்னும் இரண்டனுள் மேம்பட்டது ஆகமமாகும்.

16. பதிபசுபாசம் வேறின்மை

(2405—2424)

ஆன்மா, இறைவன், பாசம் ஆகிய இம்மூன்றும் அநாதியாகும். ஆன்மாவுக்குச் சிவத்துவம் உண்டாகும்போது பிறப்பு நீங்கும். ஆன்மாக்கள் அளவில்லாதன. பிரமன் முதலானவர்களும் பசுக்களேயாவர். அப்பசுக்களைப் பந்தித்துநிற்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றும் பாசமாகும்; இறைவனருளால் பசுத்தன்மையும் பாசமும் நீங்கினால், அப்பசுக்கள் தலைவனாகிய சிவபிரானைப்பற்றிநிற்கும். பாசத்தில் கிடக்கின்ற ஆன்மாக்கள், அதனினின்றும் விடுபடவேண்டின் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றினையும் மேற்கொண்டால் சரியையாதியின் பயனாக ஞானம் உண்டாகும். ஆசாபாசங்களில்லாமல் இறைவனையும் தொழல்வேண்டும். அப்போது ஆன்மாக்கள், பாசத்தினின்றும் விடுபட்டு உயர்நிலை அடையும்.

இறைவன், ஆன்மாக்களின் ஆணவமலம் நீங்கற்பொருட்டே மாயாமலத்தைச் சேர்த்து உடல், கருவி, இன்பம் ஆகிய இவைகளைத் தந்தருளினான். தன்னை அன்புடன் தியானிப்பவர்களைப் பாசத்துள்ளே வைக்க மாட்டான். ஜீவன்முத்தன், தம்மைவிட்டு நீங்கிய பசுபாசங்களைப் பொருந்தமாட்டான். முப்பொருளுண்மை இறைவனது நிலை பசுபாச நீக்கம் ஆகிய இவைகளை ஆராய்கின்றவர்கட்கு அவை விளங்குமாறு இறைவன் அளித்தருளுகின்றான்.

பிண்டத்தின் அமைப்பே ஆலயமாகும். சிவம், ஆன்மாவுக்குத் தூரத்தே உள்ளபோது பாசமானது

ஆன்மாவுக்கு முன்பாக இருக்கும். சிவத்தை ஆன்மா அணுகும்போது பின்னால் நிற்கும் - மறையும். பஞ்சாட்சரஜபமானது உயிருக்கு நன்னெறியினை உண்டாக்கும். அந்நன்னெறியிலே நிற்பவர்களுடைய பசுபாசப் பற்றுக்களை அறவே நீக்கியருளுவன் இறைவன். அப்போது, அப்பசுபாசங்கள் உயிர்களினிடத்தினின்றும் நீங்கும்.

பதி, பசு, பாசம், வீட்டின்பம், பசுபாச நீக்கம் ஆகிய இவ்வுண்மைகளைக் காட்டியருள்வது சுத்த சைவமாகும். இப்படிப்பட்ட உண்மைஞானத்தை அருளியவன் சிவபிரானேயாவன். உயிர்கள் ஒருமலம், இருமலம், மும்மலம் என்னும் மூவகைப் பந்தத்தால் ஆவன. அம்மூன்றும் எப்போதும் நீங்காத நிலையினை அறிந்தவன் இறைவன் ஒருவனே. அப்பிரான் எங்கும் நிறைந்தவன். உயிர்களின் பந்தத்தை விடுவிப்பவனும் அவ்விறைவனேயாம். பஞ்சகிருத்தியத்தை இறைவன் செய்தருளுவதால் உயிர்கள் மலபந்தத்திலிருந்து விடுபட்டுப் பரிசுத்தத்தை அடைகின்றன; அப்பரிசுத்தத் தன்மையால் இறைவன் திருவடியையும் அடைகின்றன. பஞ்சகிருத்தியத்தை விந்து, நாதம், சத்தி, சிவம், பரம் என்னும் ஐந்து நிலைகளாலும் செய்விப்பன்; இதனைச் செய்விப்பவன் ஈசானன் ஆவான்.

இறைவன் ஐந்தொழிலையும் நவந்தரு பேதங்களில் நின்று சங்கற்பத்தால் செய்கின்றான். அவ்வொன்பதாவன:- பரசிவம், பராசத்தி, பரநாதம், பரவிந்து, சதாசிவன், ஈசன், உருத்திரன், திருமால், அயன் என்று சொல்லப்படும். உலகினைப் படைக்கின்றவன் சிவனாவன். சிருட்டி, திதி, சம்ஹார்ரம், திரோபவம் என்னும்

நான்கும் சிவபிரானிடத்தில் முன்னுண்டான திருவருள் வாயிலாகத் தோன்றுவன. திருவருள், உயிர்களுக்கு உடற்பற்று அழியும்படிச் செய்வித்து, அவ்வுயிர்களைச் சிவமாந்தன்மையில் வாழ்விக்கும். மேலும், அவ்வுயிர் களுக்குச் சகல நிலையை அருளினவன் சிவபிரானுவன்.

உயிரானது, பதிபசுபாச உண்மைகளைத் திருவரு ளால் உணரும்போது, பாசத்திலிருந்து பசு விடுபட்டு வேருகிப் பதியினைச் சென்றடையும். அதுவே வீடு பேறும் ஆகும். பசுவின் மலநீக்கம் காரணமாக, பதி யானது பாசத்திலே விருப்பமுறச் செய்தலால் அவ் வுயிரானது இருவினைகளைச் செய்து, அவற்றின் பயன் களான சுவர்க்க நரகங்களை அடையும். அதன்பின், 'நான்' என்னும் தன்முனைப்பு வந்துசேரும்படியாகத் திரோதான சத்தியானது அவ்வுயிரினிடத்தில் வந்து பொருந்தும். அவ்வாணவம் நீங்கும்பொருட்டு மாயை யிலே புகுத்தி இருவினைப் பயன்களையும் ஊட்டுவது திரோதான சத்தியாகும். அவ்வண்ணம் ஊட்டுதலால் ஆணவம் நீங்கும்; நீங்கியபின், உயிரானது இறைவனடி சேரும்.

உயிர், தூய்மைத்தன்மை அடையும்பொருட்டுப் பதியும் பசுவுடன் கலத்தலால் பதியும் பசுவாகும். ஆன்மாவுக்குப் பாசத்தினைப் பயிற்றுவித்தல்வேண்டி, பதியானது முதன்மையாக விளங்கும். முனிவர்கள், சின்முத்திரைக்கு விளக்கம் கேட்டதற்கு அத்தத்தி (கையி)னுலேயே இறைவன் விடை அருளினுன். மேலும், அக்கரத்தினுலேயே தொட்டு அம்முனிவர்க ளுக்குத் திட்சையும் புரிந்தருளினுன். அதனுல், அம் முனிவர்கள் இறையடிசேர்ந்தார்கள்.

17. அடித்தலையறியும் திறங்கூறல்

(2425—2434)

கால் (வ) என்னும் சத்தியாகிய திருவருளையும் இறைவனையும் உணராதவர்கள் வீணர்களாவார்கள். திருவருளானது, சத்தியருள் ஞானத்தை உயிருக்குக் காட்ட, அவ்வுயிர் வீட்டின்பத்தினை அடையும். 'சிவ சிவ' என்னும் செம்பொருளையுணர்ந்த ஆன்மா சிவ மாகவே விளங்கும். இறைவன், நிலமும் அண்டமும் கீழும் மேலுமாக இருக்கும்படி ஒளிப்பிழம்பாய் நின்றான். அப்படி நின்றதற்குக் காரணம், அசுரரும் தேவரும் உய்ந்திடுவதற்கேயாம். அவ்விறைவனே உல கத்தையும் சிருட்டித்தருளினான். இறைவனது திரு வடியானது உயிரினது சிந்தையின்கண் உள்ளதாகும். உயிரின் சிந்தையும் அவ்விறைவனது திருவடியின்கீழ் உள்ளதாகும். திருவருளால் இறைவன் உயிர்களை நோக்காவிடில், உயிரும் இறைவனை அறிந்துகொள்ள முடியாவாம்.

இறைவனது திருவடியிலே நமது சிரசை வைத்த லும், அவன் திருவடிப்புகழை ஓதலும் செய்வோமா னால், சிவபிரான் அருள்புரிவான். மேலும், அப்பிரானை நான்கு காலங்களிலும் தொழுவோமானால் முத்தியை அளிப்பான். இறைவன், தன்னை நினைப்பவர்களது மனத்தில் நிலைபெற்றுநிற்பான். அல்லாதவர்களிடத்து வெறுத்துநிற்பான். பக்குவம் அடைந்தவர்களைத் தாங் கியும் நிற்பான்.

மூலக்கனலால் வெதுப்பம் அடைந்த மனம், பக்குவம் அடையும். வசப்படுத்தப்பட்ட மனமுடை யவர்களே இறைவனை அடைவார்கள். இறைவன்

உயிரின் கன்மத்துக்கேற்றபடி குற்றத்தையும் குணத்தையும் பார்த்து அவற்றிற்கேற்ப அருள்செய்கின்ருன்.

18. முக்குற்றம்

(2435, 2436)

உயிருக்குக் காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்று குற்றங்கள் உள்ளன. அவை, நன்மைகள் எல்லாவற்றையும் கெடுப்பனவாகும். இம்மூன்றனுள் அகப்பட்ட உயிரானது மயக்கமுற்று இருளாயிருந்து அழியும். முக்குற்றத்தினின்றும் விடுபட்டவர் பிறவித்துன்பம் அடையார்; நீங்காதார் அத்துன்பத்துள் ஆழ்வர். முக்குற்றங்களையும் நீக்கிஞல் சிவானந்தம் கிடைக்கும்; சிவஜோதியும் உண்டாகும்.

19. முப்பதம்

(2437—2444)

'நீ அது ஆகின்ருய்' என்ற முறையில் சிவபெருமானது திருவுருவை அடைந்தவன், பாசங்களற்றுச் சிவமாகவே விளங்குவான். தொண்ணூற்ருறு வகையான கருவிகளும் அவற்றின் மாறுபட்ட வேறுபாடுகளும் நாதாந்தத்தின் தன்மையும் நிலையற்றன என்னும் உண்மையை அறிந்து ஒழுகுதலே தன்னைக்காண்டல் என்கின்ற 'தொம்பத' உண்மையாகும். 'அசி' (ஆகிருய்) பதம் சேராவிடத்து 'தத்' (அது) பதமும் 'தொம்' (நீ) பதமும் தனியாகவேநிற்கும். 'அசி' பதம் சேரும்போதுதான் சத்திநிபாதம் வந்து கைகூடும். அத்திருவருள் விழ்ச்சியால் ஜீவ சிவ பேதமில்லாமல் இறைவன் கலந்து நிற்பான். ஆன்மாவும் திருவருளும்

ஒன்றுகூடுமிடத்து, இறைவன் கலந்தருளும் இன்பம் எப்போதும் தெவிட்டாது விளங்கும்.

ஐம்பதுவயதாகியும் சிலர், முப்பதமாகிய 'தத்துவமசி' மகாவாக்கியத்தால் சிவனை அறியாமல் இருக்கின்றார்கள். முப்பதத்திடை பிராணாயாமப் பயிற்சி செய்வதே சிவனோடு கலக்கும் யோகமாகும். இந்த யோகத்தின் வாயிலாகவே உயிரும், சிவத்துடன் கூடிச் சிவமாகும். மேலாலவத்தையில் உண்டாகும் துரியநிலையில் ஜாக்கிரம் பொருந்துவதுண்டு. இதன் விரிவே சொப்பனமும் சுழுத்தியும் ஆகும். இவையே உபசாந்தமாம். அதுவும் கழிந்தபோது, சிவனிடத்தில் உண்மையைப் புலப்படுத்துவதாகிய அரிய துரியமே அசி பதமாகும்.

20. முப்பரம்

(2445—2451)

சரீரத்தினுள்ளே சோம சூரிய அக்கினி என்று மூன்று மண்டலங்கள் உள்ளன. அவைகளுடன், குண்டலினிசத்தியைப் பிராணாயாமத்தால் எழுப்பிக் கலந்து நின்று இறைவனைத் தியானித்திருப்போமானால் எல்லாநலமும் வந்தடையும். இறைவன், உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்றபடி எழுந்தருளிவந்து அருள்புரிவான். அருள்பெற்ற அவ்வுயிர் சலனமற்றிருக்கும். சொல்லாமற்சொன்ன உபதேசம் சிவபரத்தைச்சார்ந்ததாகும். வேதத்தை வெளியிட்டவர் சதாசிவராகும். இவர்களுடைய திருவடிஞானத்தால் நாம் பெறும் பேரின்பமானது பெருகும்.

இறைவனது திருவடியைப் பற்றுவோமானால் அவ்விறைவனுடன் நாம் இரண்டறக்கலந்து இறவா

இன்பம் அடையலாம். இறைவனைப் பற்றினால் பாசம் நம்மைப் பற்றாது. அவனது திருவடியைத் துணையாகக் கொண்டால், அவ்விறைவன், நம்மை இன்பத்தில் மூழ்குவிப்பன். ஜாக்கிரத்தில் கலை, வித்தை, அராகம், புருடன், மாயை ஆகிய இவ்வைந்தும் செயலற்றிருக்க உயிர்மாத்திரம் தனித்து நிற்கும்நிலை கேவலமாகும். தன்னில் தானாகநின்று அகன்றநிலையில் உள்ள அதீதத் துள்ளே விளங்கும் சிவத்தை உணர்ந்துகொள்ளும் அவ்வுயிர், தற்பரமாய் விளங்கும். உயிர், தன்னைக் காண்டலாகிய தன் உண்மையினை அறியும் தூயநிலை என்னும் நின்மலாவத்தையில் இறைவனது பரிபூரணம் நிறைந்திருப்பதால், உயிரின் விரிவும் புலனாகும். பின் கன்மம், மலம், மாயை ஆகிய இவைகளை மீறிநிற்ற லாகிய தூடணமும் உண்டாகும். உலகம், உண்டி, உடல் ஆகிய இவைகளின் நிலையாமையின் உண்மை நினைவும் உண்டாகும். இவையே அகம் நாடுதலைச் செய்யும் ஆதிநிலையாகும்.

21. பரலட்சணம்

(2452—2465)

இறைவன், துரியாதீதத்திலே வியாபித்துள்ளவன். ஆணவத்தால் அறிவிழந்த உயிரானது இறைவனரு ளால் உண்மை அறிவை அடையும். பின், இறைவ னுடன் கலக்கும். சிவஞானம்பெற்றவர் புண்ணியசீல ராவர். துரியநிலைநீங்கித் துரியாதீதநிலையை அடைந்து, பொன்னம்பலக்கூத்தனை ஓங்கார வட்டத்தினுள்ளே ஆய்ந்தறிய வல்லவர்கள் குற்றமற்றவராவார்கள். கந்த கத்தின்முன், வெண்மையான பாதரசம் நிறமாறுதல் அடைவதைப்போல இறைவனுடன் உயிரானது

பிரிவில்லாமல் சேரும். தன்னை (ஆன்மாவை) அறிவதற்காகவே இறைவன் உயிர்களைப் படைத்தருளினுன். தன்னை அறியும் உயிர் உலகப்பொருள்களை அறியாது. பின், திருவருட்பிரகாசத்தில் ஆன்மாவுக்கு மெய்ஞ்ஞான இன்ப வடிவம் தோன்றும். இறைவன், தன் (சிவ)மயமாவதற்கே இங்ஙனம் அருள்செய்கின்ருன்.

நிலம் முதல் எல்லாவற்றையும் உற்பத்திசெய்து விசும்பைத் தாங்கிநிற்பவன் சிவபிரானுவன். அம்மையானவள் ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி ஆகிய இச்சத்திகளின் பெயர்களைக்கொண்டு பஞ்சகிருத்தியங்களைச் செய்தருளுகின்ருள். இது, அவ்வம்மைக்கு ஓர் திருவிளையாட்டாகும். இத்திருவிளையாட்டை இறைவனது திருவுள்ளத்தை நிலைக்களமாகக்கொண்டு இயற்றுவாள். ஆன்மாக்களைக் காத்தற்பொருட்டுத் திருவருளானது மேல், கீழ், மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவையோடு கலந்து, விந்து என்று சொல்லப்படும் ஒளியாக நின்று காத்தருளும். அவ்வருளாகிய பரை சிவத்துள் விளங்கும். சரியையாதிகளால் ஞானம் கைகூடும்.

உடலின்கண் உள்ள ஆறு ஆதாரங்களும் தத்துவங்களும் வருத்தத்தை உண்டுபண்ணுபவை ஆகும். ஞானவொளி தோன்றியதும் மாயையானது செயலற்றுக்கிடக்கும். உயிரானது, இறைவன் திருவருளால் உலகையறியும் அறிவைப்பெற்று நீங்கியபின் இறைவனுடன் ஒன்ருய்க் கலக்கும். பஞ்ச பூதங்களிலும் இறைவன் கலந்துநின்று அருள்புரிகின்ருன். பரமாகாயசத்தியே இறைவனது வடிவமாகும். சிவபிரானை நெஞ்சகத்திலே சிந்திக்கின்றவர்களுக்கு இறைவன்

வெளிப்பட்டுத் தானாகி நின்றருளுவான். இறைவன் திருவருளுக்கு மேலாகவுள்ளது வேறொன்றுமில்லை.

22. முத்துரியம்

(2466—2473)

ஜீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்னும் மூன்றும் 'நீ அது ஆகிறாய்'. என்னும் தொந்தத்தசி பதத்தின் வியாபகம் - கூட்டம் அல்லது இனம் ஆகும். ஜீவ அவத்தையாகிய நனவின்கண், துரியமானது தொம்பதம் (நீ) ஆக நிற்கும். ஜீவனது துரியத்தில் ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்றினில் பராவத்தை முடிந்த இடமாகும். அதுவே, துரியத்தின் ஜாக்கிரமாகும். சிவதுரியத்திலே சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் மூன்றும் வந்துமேவும். ஜீவ துரியத்தில் ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் என்னும் நான்கும்; பரதுரியத்திலும் மேற்கூறிய ஜாக்கிராதி நான்கும்; சிவதுரியத்தில் துரியம், துரியாதீதம் என்னும் இரண்டும் ஆக இப்பத்தும் 'கலந்த ஈரைந்து' ஆகும். இப்பத்து அவத்தைகளில் மூன்று துரியங்களும் உள்ளன. குரு உபதேசப்படி செந்நெறிவழியே சென்றால் இரண்டறக்கலத்தலானது கைகூடும். துரிய நிலையாகிய திருவருளை இடைவிடாமல் உணர்ந்திருந்தால் இறைவன், உண்மையின்பம் அளிப்பான்.

23. மும்முத்தி

(2474—2477)

உயிரின் முத்தி அதீதநிலையாகும். பரமுத்தி திருவருட்செயலின் நிலையாகும். சிவமுத்தி ஆனந்தமாகிய இன்ப வடிவாகும். ஆக, முத்தி மூன்றாகும். பிறப்பு

இல்லாமல் வாழ்வதை அறியாதவர், மேலும் மேலும் பிறப்புறுவார்கள். அறிந்தவர்கள் திருவருளைப் பெறுவார்கள். அத்திருவருளைப் பெற்றவர்கள், உள்ளும் புறம்பும் வேறு எப்பொருளும் இல்லையென்றே அகலுவர். அவ்வண்ணம் நீங்கப்பெற்றவர்கள் இறைவனுடன் ஒன்றுதலாகிய முத்தியை அடைவார்கள். சிவத்தன்மை பெற்ற உயிர், மும்மலங்களையும் முக்குணங்களையும் நீக்கி, 'தத்துவமசி' (அது நீஆகிருய்) மகாவாக்கியத்தால் ஐக்கியத்தைப்பெறும். அதுவே 'ஸோஹம்' (அவனே நான்) என்னும் நெறியாகும். அந்நிலையை எய்தியவன் 'அமலன்' என்று அழைக்கப்படுகின்ருன்.

தாபத் திரயங்கள் (தன்னைப்பற்றி வருவன; பிற உயிர்களைப்பற்றி வருவன; தெய்வத்தைப்பற்றி வருவனவாகிய முத்துன்பங்கள்.) ஒழிந்தால் திருவருட் சத்தி வெளிப்படும். சமாதியும் கைகூடும். இறைவன், பேரின்பத்திலே அவ்வுயிரை அழுந்தவைப்பன்.

24. முச்சொரூபம்

(2478 - 2484)

இறைவனுல் ஐம்மலங்களையும் அகற்றப்பெற்ற உயிரானது, சிவஞானம் மிகுந்து, சிவலோகத்தை அடைந்து, பந்த பாசங்களை வெல்ல முயன்று ஆன்மப் பேறு, பரமுத்தி, சிவமுத்தி என்னும் மும்முத்தியினைப் பெற்று இறைவனுடன் கலந்திருக்கும். மூவகை ஆன்மாக்களுக்கும் (தூலம், சூக்குமம், காரணம் என்னும்) மூன்று வகையான உடல்களும் உள்ளன. இம்மூன்று உடல்களில் முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றும். உயிர்க்கு உயிராய்க் கலந்துநிற்கும் ஜோதிஸ்வருபனை

இறைவனை, அவனருளால் கண்டால் பிறவிப்பெருங் கடலை நீந்தலாம்.

ஊழிக்காலம் கழிந்ததும் யாவையும் அரனடிக்கீழ் அடங்கி, கலப்பினால் ஒன்றாக இருந்தாலும் இறைவனின் பெருமையை ஒருவராலும் அறிந்து அளவிட்டுக் கூற முடியாது. ஆன்மா, சார்ந்ததன் வண்ணம் என்பதைத் தத்துவமசி மகாவாக்கியம் காட்டுவதாகும்.

'முத்திராந்தம்' என்றுசொல்லப்படுவது, இறவாத இன்பத்திலே அழுந்திய அனுபூதியாகும். உச்சிக்கு மேல் இருக்கும் ஆயிர இதழ்த் தாமரையின் உள்ளே விளங்கும் பேரொளியை நோக்கிச் செல்லும், மூலத் தாமரையினின்றும் எழும் நாதமானது வசப்பட்டால் 'அமுதேச்வரி' வெளிப்பட்டு அருள்புரிவாள்.

25. முக்கரணம்

(2485—2487)

தூல உடல், சூக்கும உடல், காரண உடல் என்னும் மூன்றினையும் திருவருளால் தனக்கு வேறென்று உயிர் காண்பதுபோல, சிவம் பரம் ஜீவன் என்னும் மூன்றும் உடனுறை பேதமும் ஒன்றாகும். மூலக் கனலைப் பிரணவத்தால் எழுப்பி ஒளிரும்படிச்செய்தல், ரேசக பூரக கும்பகங்களைச்செய்தல், சுக்கிலத்தை மேலெழும்படிச்செய்தல் ஆகிய இவைகளைத் தெளிந்த பெரியோர்கள் அரனடிக்கீழ் இருப்பர். மனம் வாக்குக் காயங்களின் சோர்வினை நீக்கி அருளை அளித்தவன் சிவபிரானாவன். (புருவமத்தியில் விளங்கும்) மனோன்மணியானவள் மேலே ஓங்க, அதன்மேல் உன்மனையாகிய திருவருளினால் நிருவிகற்ப சமாதி கைகூடும்.

26. முச்சூனிய தொந்தத்தசி

(2488—2494)

அநாதியேயுள்ள தத்பதம், தொம்பதம், அசிபதம் என்னும் முப்பதங்களும் துரியத்திலே தோற்றமுறும். உயிர், பரம், சிவம் என்னும் மூன்றும் அத்தோற்றத் திலே நிற்பனவாம். இவையே தொந்தத்தசியாம். மும் மலமும் முக்குணங்களுமழிந்தால் இறைவன் வெளிப் பட்டு அருள்புரிவான். அப்போது, நிலவிலே இருள் அடங்குவதுபோல இறைவன் சந்நிதானத்திலே மலங் களும் குணங்களும் அழியும். தொந்தத்தசி பதத்தை, பிராணவாயுவில் தோன்றும்படியாகப் பத்து அவத்தை களையும் கருதல்வேண்டும். மேலும், சிவ பர ஜீவ என்னும் மூன்றினையும் அப்பத்து அவத்தைகளில் வைத்து ஓதல்வேண்டும். அவ்வண்ணம் ஓதுதலால் உயிரின் அறிவானது மெய்ஞ்ஞான இன்பவடிவிலே செல்லும். தொம்பதமாகிய நீ என்னும் உயிர், அஞ்ஞா னத்துள் கிடக்கும். தத்பதமாகிய இறைவன், அவ் வறியாமையை நீக்க உயிருடன் கலப்பால் ஒன்றுவன். திருவருளினிடத்தே அசிபதம் தோன்றும். முக்குணங் களும் மும்மலங்களும் நிகழ்வதும் அழிவதும் ஆகிய காரியங்கள், அகார உகார மகாரங்களால் ஆவனவாம். இம்மூன்றுமே பத்தாகப் பகுக்கப்பட்ட அவத்தை களுள் மூன்றிலே ('தாமாம்') துரியமும் தொந்தத் தசிபதமே.

27. முப்பாழ்

(2495—2500)

காரியப்பாழ் ஏழும், (உடல், பொறி, அந்தக்கர ணம் நான்கு, பிராணவாயு ஆக ஏழு) காரணப்பாழ்

ஏழும் (எல்லாம் அழித்தல், எல்லாம் படைத்தல், எல்லாம் அறிதல், எல்லாவற்றிற்கும் காரணமாதல், எங்கும் வியாபித்திருத்தல், எல்லாம் தானுதல், எல்லாம் காத்தல் என்னும் ஏழு.) திருவருளால் காண அகலும். காரிய காரண துன்பங்கள் நீங்கலும் உபசாந்தமும் அகலும். ஆக முப்பாழும் அகன்றதும் பிறவி நீங்கும். மாயப்பாழ், உயிர்ப்பாழ், அருட்பாழ் என்னும் மூன்றும் 'சேய' (நீண்டதான) முப்பாழாகும். சிவசத்தியாகிய திருவருளிலே உயிர் அடங்கி, வியாபக வியாப்பிய வியாத்தியாக நிற்கும் என்ற முப்பாழும் 'தூய' முப்பாழாகும்.

துரியம் அடங்கிய நிலையினை, சொல்லறும்பாழை அறிவிலிகள் பரம்பரன் என்று சொல்லுவார்கள். துரியாதீதமே பரம்பரனுகும். உள்ளமே உயிரென்றும், உயிரே உடலென்றும் கூறுவது ஒன்றுபட்ட நிலைமையில் கூறுவதாகும். இதனை, அருளால் உள்ளவண்ணம் உணர்ந்தவர்களுக்குப் பிறப்பு, உலகம், பாழ் ஆகிய இவைகள் இல்லை.

28. காரியகாரணவுபாதி

(2501—2505)

உபாதிகள் ஒழியப்பெற்ற உயிர், அரனடி சார்ந்து சிவமாக விளங்கும். காரிய உபாதிகள் நீங்கினுல் சொப்பனத்தில் ஜாக்கிரம் உண்டாவதுபோல, முப்பத்தாறு தத்துவங்களும் நீங்கியபோது சுழுத்தி வந்து பொருந்தும். அவ்வுறக்கமும் எய்தாத முத்திநிலையை உயிர் அடைந்து இன்பமுறும். ஆன்மதத்துவம் இருபத்துநான்கும் அகாரம். சிவதத்துவம் ஐந்தும் உகாரம்.

வித்தியாதத்துவம் ஏழும் மகாரம் ஆகும். சிகாரம் சிவம். வகாரம் இறைவனுடைய திருமேனி. யகாரம் ஆன்மாவாம்.

காரியவுபாதி ஏழின் வசப்பட்ட ஜீவனது துன்பங்களை, காரணவுபாதி ஏழில் பரம்பொருளின் திருவருள் கலந்து நீக்கும்.

29. உபசாந்தம்

(2506—2511)

மோட்சத்துக்குக் காரணம் (வித்து) சிவஞானமாகும். பக்திக்குக் காரணம் (ஹேது) இறைவனைப் பணிவுடன் தொழுதலாகும். மனத்தைத் தன்வசப் படுத்தலாகிய சித்திக்குக் காரணம் சிவனுடன் உறைதலாகும். சத்திக்குக் (சத்திநிபாதத்துக்குக்) காரணம் உபசாந்தமாகிய புலனடக்கமாகும். அசுத்தமாயையில் காரிய உபாதி ஏழும் ஒடுங்கும். காரண உபாதி ஏழும் சுத்தமாயையில் ஒடுங்கும். இவ்விரண்டு உபாதிகளும் அற்றால், திருவருட்பெருமையானது வந்து கூடும். இப்படிக் கூடுதலே உபசாந்தமாகும்.

செயலறுதலாகிய துரியமே அந்தக்கரண சுத்தியாகும். ஜாக்கிர அதீதமானது பரமானந்தமாகும். ஆன்ம தரிசனமாவது சிவத்துடன் கூடுவதாகும். உபசாந்தமாவது இறைவனது திருவடிஞானத்தில் வியாத்தியாயிருத்தல் - ஒடுங்கி நிற்றலாகும். தத்துவங்களின் உண்மையை அறிந்து அதன்படி ஒழுகுதலே தத்துவசுத்தியாகும். ஆணவ இருளை மனத்திலிருந்து நீக்குதல், பாசத்தை ஒழித்தலான 'தீர்' சுத்தியாகும். அருளில் 'தான்' (ஆன்மா) அடங்கிநிற்கும் நிலையினை அறிதல்

மும்மல சுத்தி ஆகும். இறைவனுடைய திருவடியில் வியாத்தியாயிருத்தலே உபசாந்தமாகும். திருவருளின் பெருக்கினால் உயிரானது, அத்திருவருளுடன் ஒன்றி நிற்கும்.

30. புறங்கூறாமை

(2512—2526)

இறைவனைத் திருவருளால் காணும் சக்தியற்றவர்கள், உபசாந்தம் அறிந்தோம் என்பார்கள். இவர்கள், மனம் - புலன் அடங்காதவர்கள் ஆவார்கள். வினை பெருமை வார்த்தைகளைப் பேசாமல் நெஞ்சம் அடங்கி இருத்தல் வேண்டும். மன அடக்கத்துடன் சிவத்தை வழிபடும் தவம் கைவரப்பெற்றவர்கள், கற்பகவிருட்சம் போல வேண்டியவற்றை அளிக்கவல்லவராவார்கள். இறைவனிடம் பேரன்புகொண்டு மனத்தில் அப்பெருமானைத் தியானித்திருந்தால், எல்லாத் தேவர்களையும் அத்தியானபரர்களை இறைவன் வணங்கவைப்பான். தியானிக்கின்றவர்களின் நினைவைக்காட்டிலும் இறைவன் அவர்களை மிகநினைத்து, தியானிக்கின்றவர்களிடம் வந்து அடைவான்.

புலன்களைவென்று, மாறுபாடில்லாமல் தெய்வம் ஒருவனே என்று இறைவனை நினைத்திருத்தல் வேண்டும். இறைவனையே பாவித்திருப்பவர்களைத் தேவர்களும் விரும்பித் தொழுகின்றார்கள் - தொழுவார்கள். தேவர்களாலும் அறியமுடியாத இறைவனை, நமது நெஞ்சகத்தே வைத்து மூன்று காலமும் சிந்திப்போமானால் - பூஜிப்போமானால் சிவமாகலாம். நம் உள்ளத்துள்ளே உள்ள இறைவனை நாமே அறிவோம். யோகத்தால் பிரமரந்தரத்தில் இருக்கும் இறைவனது

திருக்கோலங்களையும் காணலாம். மேலும், உலகேழை யும் நம்முள் அடக்கிக் காணலாம். அறிவுக்கு அறிவாக இருக்கும் பிரானை உன்னும் உபசாந்தம் பெற்றவர்கள், மலமற்றவராவார்கள். அயன், மால், அரன் ஆகிய இம் மூவர்களுடைய பதங்கள் (பேறுகள்) துன்பம் உண் டாக்குவன என்று அவற்றை விட்டு, ஆணவ இருளை யும் துரந்து, செருக்கையும் யான் என்பதனையும்விட்டு, சிவபிரானிடத்து மனம் நிலைத்திருப்பவர்கள் சிவசித்தர் ஆவார்கள்.

31. எட்டிதழ்க்கமல முக்குண அவத்தை

(2527—2536)

இதயத்துள்ள எட்டிதழ்த் தாமரையில் அட்ட திக்குப் பாலகர்களும் அமர்ந்து காவல்புரிகின்றனர்கள். இதயத்தாமரையானது எட்டிதழ்களோடு கூடியதா கும். 'மாயாபுரி' என்று சொல்லப்படும் உடம்பில், முதுகந்தண்டாகிய வீணாதண்டத்துள் சூக்ஷ்மமான சுழுமுனைநாடி அடங்கியுள்ளது. அத்தண்டினுள்ளே இருக்கும் ஜோதியை ஆய்ந்து எழுவதே உய்யும் வழி யாகும். (நெஞ்சத்) தாமரையை இதழ்கள், கர்ணிகை, கர்ணிகையின்நடு என மூன்றாகப் பிரிக்கப்படும். இம் மூன்றிலும் இறைவன் விளங்குகின்றான். கர்ணிகை யிலும், அதன் நடுவிலும் உயிர் விளங்குகிறது.

இதயத்திலே அமுதப்பெருக்காகிய ஆறும், உள்ள மாகிய குளமும் உள்ளன. அங்கே அளவற்ற ஆனந்த மான சிவகதி விளங்குகிறது. அவ்வுள்ளத்தில் உமை யுடன் சிவபிரான் விளங்குபவனாவன். கன்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, மனம் புத்தி என்னும் இரண்டு ஆகப் பன்னிரண்டும் ஒழிந்து, ஆசையற்றவ

ருடைய நெஞ்சிலே, எட்டுத் திசைகளாயும் வாகனங் களோடுகூடிய அட்டதிக்குப் பாலகர்களாயும் விளங் கும் இறைவன் தோன்றுவான். கிழக்கு முதலாக வடக்கு ஈருக உள்ள ஏழு இதழ்களும் ஜீவனின் இடங் களாகும். வடகிழக்கு இதழாகிய எட்டாவது இதழ், இறைவனது இடமாகும். ஒன்பதாவது இதழ், சதா சிவனது இடமாகும். பத்தாவது இதழ், ஐக்கியத்தான (இரண்டற்ற இட)மாகும். ஊழியுள்ளும் ஊழியின் உச்சியுள்ளும் ஒன்றுபவன் எண்வகை வடிவினன் (அட்டமூர்த்தம்) ஆவன்.

ஆஞ்ஞைக்குமேலே ஸஹஸ்ராரம் என்னும் ஆயிர இதழ்த்தாமரை உள்ளது. இத்தாமரைப் பூவையல்லா மல் வேறு பூக்களை இறைவன் சூடமாட்டான். மனம் வாக்குக் காயங்களை ஒடுக்கியவர்களும், புலன்களை வென்றவர்களும் இருந்தாலும் இறந்தாலும் சிவப் பேறுடையவர்களேயாம்.

32. ஒன்பான் அவத்தை - ஒன்பான் அபிமானி

(2537—2545)

விச்வன், தைசதன், பிராக்ஞன், விராட்டன், ஹிரண்யகர்ப்பன், அவ்யாகிருதன், இதையன், பிரஜா பத்தியன், சாந்தன் (இவைமுறையே உலகவுருவினன், தழல் வண்ணன், பேரறிவினன், உலக முதல்வன், பொன்மேனியன், பிரிக்கப்படாதவன், கலப்பையன், உயிரின் முதல்வன், தண்ணளியோன்) என ஒன்பது நிலைகளாகும்.

ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய இவைக ளுடன் ஜீவன், பரம், சிவன் என்னும் மூன்றையும் சேர்க்க ஒன்பது அவத்தைகளாகும். (ஜீவஜாக்கிரம்,

ஜீவசொப்பனம், ஜீவசுழுத்தி; பரஜாக்கிரம், பரசொப்பனம், பரசுழுத்தி; சிவஜாக்கிரம், சிவசொப்பனம், சிவசுழுத்தி என ஒன்பதாம்.) பிறப்பிற்குக் காரணமாகிய மலம் குணம் ஆகிய இவைகளின் பற்றை அறுத்துப் பற்றுதற்கரிய சரியையாதி நான்கும் சத்தியஞானமும் ஆகிய பொதுவிலே மேன்மைதங்கிய துரியமே சொரூபமாகும். (சொரூபம் - இயற்கை உண்மை.) சிவ சிந்தனையால் உயிரின் தன்முனைப்பு, மும்மலம் ஆகிய இவைகள் ஒழியும். அதனால் சிவபோதம் கைகூடுவதோடு உயிர், சிறப்பையும் அடையும். பதினான்கு அறிவுநூல்களை அருளிய இறைவனை, இரவும் பகலும் ஏத்துவோமானால் வலியவினைகளையும் பிறப்பினையும் அவ்விறைவன் நீக்கி அருளுவான். எல்லோருக்கும் யாவைக்கும் இறைவன் 'ஆதிபரம்' ஆவன். மேலும் அவ்விறைவன், கலப்பால் பராபரையாய், ஜோதியாய், பரமாய், உயிராய், கலையாய், இருமாயையாய், வீடாய், திருவடிப்பேருய் ஆக ஒன்பதாக விளங்குவான்.

இறைவன், நமக்கு உடலளித்ததற்குக் காரணம், இறைபணி செய்தற்கேயாகும். ஒன்பது அவத்தைகளுள்ளேயும் ஒன்பது அதிதெய்வங்கள் உள்ளன. இவற்றுடன் ஜீவ பர சிவ என்னும் முத்துரியங்களும் பொருந்தும். இவ்வண்ணம் பொருந்தும்படிச் செய்து தானும் பொருந்தி நிற்பவன் இறைவன். இம்முறையை அறிந்தவனே சிவமாக விளங்குவான்.

33. சுத்தாசுத்தம்

(2546—2557)

நாசாக்கிரத்தினின்றும் வெளிப்படுகின்ற பிராண வாயுவின் பன்னிரண்டு விரற்கடையில் இறைவன்

இருப்பிடமாகும். இதனை எவரும் அறியவில்லை. மறைகளாலும் இதனைக் கூறமுடியவில்லை. பிறப்புக்கு வித்தாகிய கன்மத்தின் உண்மையைத் திருவருளால் கண்டு அகன்றால் செருக்கறும். அப்போது உயிரானது கன்மமாகிய குளத்துள் மூழ்காது. உயிரானது மாயையால் மறைக்கப்பட்ட நிலையினையுடையது. மாயை மறையுமானால், மறைபொருளாகிய சிவம் வெளிப்படும்.

(புருவமத்தியிலே தோன்றுகின்ற) அமுதநதியை அடைந்து, கபாலவாயிலைத் திறந்துகொண்டு உள்ளே சென்று, சிவசிந்தனையுடன் இருந்தால் அஞ்ஞானம் கெடும். அஞ்ஞானத்தைத் தவத்தினால் நீக்குவதே உயிர்க்கு மிக்கவன்மையாகும். கருப்பையே முத்திக்கு வாயிலாக அமைந்ததாகும். இப்பெருமையை உணராதவர் ஆசூசம் (தீட்டு)என்று சொல்லுவார்கள். நியமமுடையோர், இறைவனை அருச்சிக்கின்றவர், அழலோம்புவோர், ஞானி ஆகிய இவர்களுக்குத் தீட்டு என்பது எந்நாளும் இல்லையாம்.

இறைவனை வழிபாடுசெய்து வணங்குகின்றவர்களுக்கு, மனம் அடங்கித் திருவடிஞானம் உண்டாகும். கருக்குழியை நினைப்பவர்கள், சிவக் குறிகளை அடையமாட்டார்கள். மனம் அடங்கினவர்களுக்கே இறைவன் வெளிப்பட்டு அருள்புரிவான். இறைவன் நாமத்தையே தூயதாகக் கொண்டு ஒழுகுவதே சன்மார்க்கநெறி ஆகும். இறைவனடி போற்றும் அடியார்கள், சிவபுண்ணியசிலராவர்; அல்லாத மற்றவர்கள் பிறவிச்சூழலில் சிக்கி மயக்கம் அடைவார்கள். கன்மம் உடையவர்கள், வினையாகிய கன்மம் விளைவதையும், சிவஞானத்தால் வினை கெடுவதையும், மோட்சத்தையும் அறியமாட்டார்கள்.

34. முத்தி நிந்தை

(2558—2565)

வீடுபேற்றை நிந்தைசெய்பவர்கள் இரந்து உண்டு வாழ்வார்கள். குரு உபதேசப்படி இறைவனை நாடல், பாடல், ஆடல் ஆகிய இவைகளைச் செய்பவர்கள் வீடு பேற்றினை அடைவார்கள். அப்படிச் செய்யாதவர்கள் அற்பர்களே. பிராணவாயுவை முறைப்படி செய்து, ஏகாக்கிர சித்தத்துடன் இறைவனைப் பற்றினால், அவ் விறைவனும் நம்முள்ளே இருந்து அருள்புரிவான். இறைவன், உயிர்கள் பிறவிக்கடலைக் கடந்துநிற்கும் பொருட்டுத் தெப்பமாக நின்று அருள்புரிகின்றான்.

முத்திசேர் வகையினை இறைவன் காட்டினாலும் மூடர்கள் - தீவினையாளர்கள், காண மாட்டாதவர்க ளாய் அலைகின்றார்கள். ஞானமுள்ளவர்கள், இறைவன் திருவடியைச் சேர்வார்கள். தீவினையாளர்கள், எங்கும் ஊடுருவி நிற்கும் சிவத்தை நினைக்காமலிருக்கின்றார் கள். பஞ்சாட்சர ஜபத்துடன் சுழுமுனையில் மனதைச் செலுத்துகின்றவர்கள் வீடுபேற்றை அடைவார்கள். கோபமுடன் பேசும் தீவினையாளர்கள் தவம் மந்திரம் முதலியவைகளைச் செய்யவும் ஜபிக்கவும் மாட்டார்; அவர்கள், வல்வினையைச் சுமந்துகொண்டிருப்பர்.

35. இலக்கணாத்திரயம்

(2566, 2567)

இலக்கணை: விட்ட இலக்கணை விடாத இலக்கணை விட்டும்விடாத இலக்கணை என மூன்றுவகைப்படும். உயிர், ஆகாயத்தில்போவதுபோலக் கூறுவது விட்ட இலக்கணை. உயிர், செயலற்று ஒடுங்குவதே உபசாந்த மாகும். அவ்வொடுக்கத்தில் உயிர் ஒடுங்கும் என்பது

விடாத இலக்கணையாகும். சப்த ஸ்பரிச ரூப ரச கந்தம் என்னும் புலன்களை செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்னும் பொறிகள்வாயிலாகக் கொள்வது விட்டும் விடாத இலக்கணையாகும். இம்மூன்றினுக்கும் வேருக உயிரானது, சிவபிரானுக்கு அடிமையாகித் திருவடியில் ஒடுங்கிநிற்பதே இலக்கணுதீதமாகும். பிரணவமாகிய வில்லில், பஞ்சாட்சரமாகிய நாணைப் பூட்டி, உயிராகிய அம்பைக் கோத்து, சிவமாகிய குறியை எய்திறல் இந்திரியங்களாகிய ஐந்து யானைகளும் (ஜீவனது பசுத்தன்மையுடன்) சாய்ந்துவிடும். (அதாவது உயிர், தன்முனைப்பறும் என்பதாம்.)

36. தத்துவமசிவாக்கியம்

(2568—2586)

ஜீவதுரியத்திலே தொம்பத (நீ) நிலையும், பரதுரியத்திலே தத்பத (அது) நிலையும், சிவ துரியத்திலே அசிபத (ஆகின்ருய்) நிலையும் ஜீவனுக்கு உளதாம். 'நீ அது ஆகின்ருய்' என்பதே தத்துவமசியின் பொருளாகும். 'தொந்தத்தசி'யின் பொருள், நிலைபெறுதற் பொருட்டே வந்தது இவ்வுடம்பாகும். 'தத்துவமசி' என்பது வேதாந்த விளக்கமாகும். சிவம் - பஞ்சாட்சரம் சித்தாந்த விளக்கமாகும். தொம்பதம் தத்பதம் அசிபதம் என்னும் மூன்றும் ஜீவதுரியம் பரதுரியம் சிவதுரியமென்னும் முத்துரியமாம். முத்துரியத்தினிடத்தே பிரணவத்தை ஒருமுகமாக நிறுத்துவோமாஞல் சிவப்பேறடையலாம். நாதாந்தத்தில் ஐந்தவத்தைகளையும் முன் வைத்து, மலத்தைப் பின் வைத்தால் சிவநிலை வந்தடையும். நாதமுடிவு சாந்தநிலை ஆகும். அந்நிலையில் இறைவனைச் சிந்தித்தல்வேண்டும்.

வளர்ச்சியற்றது, பேரற்றது, நினைவுக்கும் அப்பாற்பட்டது, தானே காரணமானது ஆகிய இத்தன்மை வாய்ந்தவன் சிவபிரான் ஒருவனேயாவன்.

மகாவாக்கியம்

'நீ அது ஆனாய்' என்னும் மகாவாக்கியம் 'அது நான் ஆனேன்' என நின்றது. அதுவரையிலும் எட்டாமல் நின்ற சிவத்தின் அருள்பெற்றதும் உயிரானது எல்லையற்ற ஆனந்தம் அடையும். உயிர், இறைவனது திருவருள் பெற்றதும் சிவத்துவத்தையடையும். வாய், மூக்கு, புருவம், நெற்றிநடுவாகிய மத்தகம், உச்சி ஆகிய ஐந்தும் சிவத்துக்கு இருப்பிடமாகும். நெற்றியின் நடுவாகிய மத்தகத்தில் உன்மனை சமனை முதலான சத்திகள் உள்ளன. அங்கே சுழுமுனை நாடி, நான்கு வாக்குகள் முதலியன அனைத்தும் விளங்கும்.

சுட்டறிவு, சிற்றறிவு, அறியாமையாகிய ஆணவம் ஆகிய இவைகளை நீக்கி, எல்லாம் அறிபவராகி எங்கும் உள்ள இறைவனைப் பேணும் குறியறியாதவர், கொள்கையறியாதவராவர். இறைவனைப் பணிவதெல்லாம், நாம் சிறப்புடன்வாழ்தற்பொருட்டேயாம். இறைவன் ஒருவனே நம்மை அடிமையாக்கிக்கொண்டு, நமது மலங்களைப் போக்கவல்லவனாவன். ஜோதி ஸ்வரூபனை உள்ளத்தே வைத்து வணங்குவோமானால், மீண்டும் பிறப்பு இல்லாமல் தனது திருவடிநிழலிலே நம்மையெல்லாம் வைப்பான். ஐம்பொறிகள், அந்தக்கரணங்கள், உயிர், உலகம் ஆகிய இவையனைத்தும் இறைவன் ஆட்டிவைக்க ஆடுகின்றன. நன்னெறியில் வாழ்வோமானால் சிவத்துவத்தை அடையலாம்.

37. விசுவக்கிராசம்

(2587—2594)

ஆகாயத்தில் தோன்றும் (சாயா) புருடனது நிழல் போலவும், நீரில் தோன்றும் குமிழிபோலவும், தீயிற் கற்பூரம் போலவும் உயிர், சிவத்தில் கலக்கும். உடலும் உயிரும் ஒன்ருகப் பொருந்தியிருந்தாலும், உடலை விட்டு உயிரானது சிவத்தினிடத்தே கலக்கும். உயிர், உலகத்தை - உலகியலை விட்டுநீங்க வழி அறியாமற் போனால், தாழ்ந்த சராசரத்தினை ஒக்கும். ஜீவ அறிவு கெட்டுச் சிவத்துடன் இருக்கும் ஆன்மா, சிதாகாய வடிவினனாகும். உயிரை அடிமையாக்கிக்கொண்ட இறைவன், அவ்வுயிருக்குள்ளே நின்றருளுவான். ஆன்மாவைச் சிவமாக்கிய இறைவன், சிவதுரியாதீதத்தில் இருந்தருளினான். அந்நிலையைப் பெத்தர்களாகிய நம்மால் சொல்லமுடியாது.

38. வாய்மை

(2595—2609)

பற்றற்றிருந்து ஒழுகுவதே உபதேசமாகும். சிவத்தினிடத்தில் மனத்தை நிறுத்திச் சமாதியெய்தினால் ஆன்மா பிரகாசமுடையதாகும். உலகப் பொருள்களையும் நூற்பொருள்களையும் அறிவதால் ஒரு பிரயோஜனமும் இல்லை. எல்லாம் அறிந்த இறைவனை அறிந்து 'அவ்விறைவனே நான்' என்று கூறினால் திருவடிப் பேறு உண்டாகும்.

இருளகன்ற உள்ளத்தின்கண் இறைவனை நாடி விருப்பத்துடன் இருப்பதும், இறைவன் திருவருளால்

மயக்கமுற்ற மனத்தை மாற்றலும், திருவடிபோற்ற லும் ஆகிய இவைகளால் அருள் கைவரப்பெறலாம். இறைவன், மெய்யன்பர்களது உள்ளத்தே கலந்திருப் பானே அல்லாமல், பொய்யர்களுடைய மனத்தில் சிறிதும் கலந்திருக்கமாட்டான். (அப்படிப்பட்ட) இறைவனை, உயிர் நீங்கும்போது நினைக்கின்றவர்களே உண்மைக் கருத்தினை அடைந்தோராவர். அன்பு செய் வதற்கு உரியதான காலை மாலையாகிய இருபொழுதும் உண்மையாகவே இறைவன்பால் அன்பு செய்வோ மானால் புலனடக்கம் பெறலாம். அப்போது, இறை வனும் வெளிப்பட்டு அருள்புரிவான். இறைவன்பால் வைக்கும் அன்பினால், திருவருள் பெறுவதல்லாமல் பொய்யும் புலனும் எய்தாது. மேலும், சரீரத்திலுள்ள ஒன்பது வாயில்களையும் அடைப்போமானால், தேகத் தில் ஓடும் வாசியை மேற்கொண்டு செலுத்தி யோகம் கைவரப்பெறலாம்.

உடல், உலகியற்பொருள் ஆகிய பொய்ப்பொரு ளின் பற்றற்றவர்களுக்கே சிவன், புகலிடமாவன். உடற்பற்றை நீக்குவோமானால் திருவருள் பெறலாம். இறைவனை உணர்வுடன் ஏத்துவோமாயின், திருவடி யடைந்து பேரின்பம் பெற்றுச் சிவமாகவே விளங்க லாம். அப்படிப்பட்ட பேறு பெற்றவர்களது உள் ளத்தே இறைவன் விரும்பி எழுந்தருளியிருப்பான்.

சிவமாகிய பழத்தை உண்ணவொட்டாது இடை யூறு செய்கின்ற காமக் குரோதாதியாகிய பறவைகளை, சிவஞானமாகிய கூர்மை அம்பினால் எய்தித் துரத்து வோமானால் (அப்பறவைகள் ஓடிவிடும்) சிவப்பழம் உண்ணலாம். (சிவகதி பெறலாம்.) உயிரின் ஐம்புலப்

பாசங்களை அறுத்தருளிய இறைவனைத் தொடர்ந்தால், உயிரின் மயக்கத்தை நீக்கிய அவ்விறைவன், உயிர்கள் உய்யும்வண்ணம், உயிர்களின் மனம் குளியும்படி அருளுவான்.

39. ஞானிசெயல்

(2610—2612)

தத்துவஞானிகள், ஊழ்வினையை அனுபவிப்பார்கள்; ஆகாமிய வினைகளைச் செய்ய மாட்டார்கள்; கன்மத்தை விட்டிருக்கப்பார்ப்பார்கள்; தம்மையும் காண்பார்கள். அவர்களது ஐம்புலனும் கொடுமைகளைச் செய்யாது. இறையருளால் தத்துவஞானிகள், சஞ்சித வினையை நீக்கி ஆகாமியத்தை அழிப்பர். மனம் வாக்குக் காயங்கள் நன்னெறியில் நின்றால் வல்வினை பொருந்தாது. அம்மூன்றின் முனைப்பைக் கெடுத்தவர் அட்டாங்க யோகத்தால் தற்போதத்தை அழிக்கத் தகுந்த ஞானியர்களாவர்.

40. அவாவறுத்தல்

(2613—2622)

பிராண வாயுவைப்பற்றியும் சுழுமுனை நாடியைப் பற்றியும் பேசுவதனால் எவ்வித பயனும் இல்லை. தம்மிடத்திலுள்ளதும் தம்மைப் பற்றியதுமான ஆசையையும் செருக்கையும் நீக்கினால், இறைவன் இருக்குமிடம் மிக எளிமையாகும். உள்ளமே அவன் உறையுமிடமாகும்.

இறைவன், ஆசையை நீக்கினவர்களது உள்ளத்துள்ளே நின்று முத்தியை அருளுகின்றான். ஆசை அதிகரிக்குமானால் துன்பங்கள் உண்டாகும்; ஆசையற்றால் இன்பம் மிகும். தேவர்கள், சுகதுக்கக் கடலில்

மாண்டனர். பூவுலகத்தார், ஆசைக்கடலில் பட்டுப் பிறப்பிலேயே அழுந்தினர். அழியாத இன்பக்கடலே இறைவன் தாங்கி நின்று அருளுகின்றான். இருவினை, பாசம், தவம், நினைத்தல் ஆகிய இவைகள் நீங்கி, பின், ஐம்புல வியாபாரமும் (விரிவும்) நீங்கப்பெற்றுத் திருவருளில் அழுந்திநிற்பவரே ஞானிகளாவர்.

உண்மையை உணர்ந்து நிற்க முத்தி கைகூடும். பெண்மயக்கம் அழிந்தால் அட்டமாசித்திகள் வந்தடையும். வைராக்கியமுள்ள ஞானி, தான் ஒடுங்கிநிற்கும் சிவதுரியத்தைக் கைவிட்டால் திருவடியையடைந்து அப்பேரின்பத்திலே - அவ்வன்பிலே அமர்ந்திருப்பர்.

41. பத்தியுடைமை

(2623—2632)

முத்தியை அளிக்கும் சிவஞானமாகவும், மறைகளாகவும், தேவாதி தேவனாகவும், பரிசுத்தனாகவும். ஜோதி ஸ்வரூபனாகவும், அடியார்களால் போற்றப்படுபவனாகவும் உள்ளவன் பசுபதியாகிய இறைவனாவன். அவன் நீரைப் போலவும் நெருப்பைப் போலவும் முறையே இன்பமும் துன்பமும் அருளுவான். முறை - ஒழுக்கம் தவறாதவருடைய சித்தத்தில் அவ்விறைவன் உமாபதியாக நின்றருளுவான்.

ஏழுலகத்தார்களும் ஒன்றுகூடினாலும் காண முடியாத ஒப்பற்றவன் சிவபிரான். அப்படிப்பட்ட இறைவன் இருக்குமிடத்தை எவரும் அறிந்து சொல்ல முடியாது. மேலும் அவன், பக்தர்களது உண்மைப் பக்தியில் விளங்குபவன். அப்பக்தியுள்ளவர்கள் அல்லாமல் வேறு எவராலும் அப்பிரானை அறிந்து சொல்ல

முடியாது. பசுக்கன்ருனது தாயை அழைப்பதுபோல, நாமும் இறைவனை அன்புடன் அழைப்போமாருல், அவ்விறைவன், பசுக்களாகிய நம்முடைய உள்ளத்தே வந்து நின்று அருள்புரிவான். இறைவன்பால் அன்பு செய்கின்றவர்கள் பெத்தத்தில் எல்லாம் சிவன்செயல் என்று பணிசெய்வதாலும், முத்தியின்கண் ஜிவபோதம் இழந்து சிவபோதமாக நிற்றலாலும் பக்திப்பட்டோர்க்குப் பணியொன்றும் இல்லையாம்.

பிராணுயாமக்கிரமத்திருல் பத்துவித நாதங்களின் ஒலியைக் கேட்டு, அமிர்தத்தால் குளிர்ந்துள்ள மேருவாகிய புருவநடுவை அடைந்து இறைவனை ஏத்தல் வேண்டும். நமக்கெல்லாம் உறுதுணையாக உள்ள சிவபிரானை வழிபட்டால் பிறப்பறுத்து வாழலாம். மேலும், அப்பிரான் ஜோதிஸ்வருபனுகவும் நின்றருளுவான்.

42. முத்தியுடைமை

(2633—2634)

தத்துவங்கள் முப்பத்தாறும் வேறு என்றறிந்து நீங்கி, சிவப்பணி செய்பவர்கள் பேரானந்தப் பேரறிவினராவர். ஜீவன், முத்தியைத்தேடி உள்ளங்கனிந்து இடைவிடாது அலையும். அப்போது, அந்தக்கரணங்கள் நான்கும், துன்பந்தரும் உலகவியாபாரங்களில் அலையும் பொருட்டு அவ்வுயிரைத் தன்வசப்படுத்த நாடும்.

43. சோதனை

(2635—2648)

செயலற்று இருக்கின்ற இடமே திருத்தமுற்ற (திருந்திய) இடமாகும். இதுவே (அத்துவ) சோதனை

யாகும். இறைவன் பேரறிவினனும், மறைகளுள்ளே பரிபூரணமாக நிறைவுற்றவனும், தேவாதி தேவனும், பொறிவாயில் ஐந்தவித்தவனும் ஆக உள்ளவன். அப்படிப்பட்டவனது திருவடியில் அன்புடன் கூடியிருத்தல் வேண்டும். அவனருளால், ஏகாக்கிர சித்தத்துடன் அவனை உணர்ந்தால் திருவருள் பெறலாம். அதனுல், சிவமாகவும் ஆகலாம். இறைவன், எல்லாப் பொருள்களினிடத்தும் கலந்து நிற்பவன்.

அன்புடன் இறைவனை நாடுவோமானுல், உமா தேவியுடன் அவ்விறைவன் மனத்துள்ளே எழுந்தருளியிருப்பான். மேலும், அங்கிசொருபத்துடனும் விளங்குவான். மற்றும், நாடுபவர்களுக்குத் தம் திருவடியினையும் தந்தருளுவான். ஆன்மாக்களுக்கு (அத்துவ) சோதனை செய்யும்போது சிவகுருவாகத் தொடர்ந்தருளுவான். அப்பிரானே, திருவடியடையும் வழியையும் காட்டியருளுவான். ஞானத்தால், மும்மலம் அழிவுற்று இறைவனை உணர்ந்து அவனுடன் இரண்டறக்கலந்து நிற்கலாம். அப்போது, பலவகைப்பட்ட மாயாகாரியப் பற்றுக்கள் விட்டொழியும்.

ஆன்மா, இறைவனுல் அளிக்கப்பட்ட ஞான வாளைப் பெற்றபின், அவ்வான்மாவைத் தியவழியில் செலுத்த எவராலும் இயலாது. இறைவனுல் (அத்துவ) சோதனை செய்யப்பட்ட பின், அவ்வான்மாவே ‘ அவனிவன்’ ஆகும். (அத்துவ) சோதனையால் இறைவன் திருவடியடைதலோடு சிவமாந்தன்மையும் பெறலாம். பின், செயற்கரியவற்றைச் செய்யும் தீரரும் ஆகலாம்.

எட்டாம் தந்திரம் முற்றிற்று

ஒன்பதாம் தந்திரம்

1. குருமட தரிசனம்

(2649—2655)

மடங்கள்தோறும், சிவபிரானைக் குறித்துச் செய்யப்படும் அன்னப்பலியுடன்கூடிய அவியின் புகையும், திருமறை ஒலியும் முழங்கும். இவற்றைக்கண்ட அன்பர்கள், மனம் அடங்கி இறைவன் திருவடியடைந்து, பேரானந்தம் அடைவர்.

ஜீவனது உள்ளமல்லாது சிவனுக்கு வேறிடமும், சிவனது திருவுள்ளமல்லாது ஜீவனுக்கு வேறிடமும் இல்லையாம். அப்படியிருப்பது சிலர் அறிந்திருந்தும், இறைவனை வேறுபடுத்திக் கூறுகின்றனர். சிவகுருவாகிய இறைவனே, உலகாகவும் உயிராகவும் இருந்து இயக்குகின்றான். இறைவனுக்கு, சிவகுருவின் முகமே ஆசனம். மடம் இடமாகும். உள்ளத்தே பரனை இருத்துதலே காட்சியாகும். உள்ளத்தை இறைவனுக்கு ஆசனமாகச்செய்து எட்டுவித கிரியைகளைச் செய்யின், அவ்வுள்ளமே சிதாகாசமாகும். உள்நினைந்திருப்பதே இறைவனுக்குப் பீடமாகும். திருவருட்சத்தியே ஆசனமாகும். உயிர்களைக் காத்தற்பொருட்டு உலக இன்பங்களை அளித்த தெய்வம் சிவமாகும். இவையனைத்தும் சிந்தையை அகமுகமாக்கிய அறிவுடையோர்களுக்கே விளங்கும். மூலப்பிரகிருதிமாயை, அசுத்தமாயை ஆகிய இரண்டு மாயையின் மறைப்பால் அன்னமயகோசம் முதலான பஞ்சகோசங்களும் மறைந்துள்ளன. அவைகளைத் தெளிந்தால் இறைவன் வெளிப்படுவான்.

இறைவனை உணரும்போது தன்னையும் அறிபவரே ஞானம் நிறைந்த மோனத்தராவர்.

2. ஞானகுரு தரிசனம்

(2656—2674)

முப்பத்தாறு தத்துவங்களும் அடங்கிவிடுமானால் சிவனுடன் ஐக்கியம்பெறலாம். சிவபதம் அடையலாம். பேரானந்தம் மிகும். மூன்று துரியங்களையும் கடந்தவன் பரமசிவன். அவனே, எல்லாமாக உள்ளவன். நினைப்பும் மறப்பும் ஒழிந்த இடமே திருவடிப்பேறாகும். இறைவனை வணங்கத் தலையையும், வாழ்த்த வாயையும், காணக் கண்களையும், நினைக்க நெஞ்சையும் பெற்றிருத்தல் வேண்டும் - பெற்றிருக்கின்றோம். கருட உபாசனையால் பாம்பின் விடம் தீருவதுபோல், சிவகுருவின் - சிவபிரானின் திருவுருவைச் சிந்தனையில் கொண்ட உயிர், அப்போதே மும்மலமும் அழியப்பெற்று, சிவனாகும். எப்போதும் இதயத்துள்ளே இருக்கும் பிரானை அறிந்தால் - கண்டால் 'அவனிவன்' ஆகலாம். திருவருளால் இறைவனை அறியும் அறிவு தோன்றியபின் நினைப்பு, மறப்பு, மயக்கமுற்றஅறிவு, ஜாக்கிர சொப்பன சுழுத்தி, ஜீவ பர சிவ துரியங்கள் ஆகிய இவைகளெல்லாம் நீங்கும். நீங்கவே, திருவருள்பெற்ற உயிர் மோன நிலையடையும்.

ஆஞ்ஞையில் உள்ள திருவருட்சத்தியின் துணையால் பரமகுருவாகிய இறைவனைப் பற்றல்வேண்டும். இறைவனது ஊர், திருக்கயிலாய மலையாகும். ஐந்து கோசங்கள், தத்துவக் கூட்டம் ஆகிய இவைகளைத் தானாகவே கருதி உயிர் இருக்கும். இவைகளெல்லாம்

தனக்கு வேருனவை என்று கருதும் உயிருக்கு, சரியை யிற் சரியையாதி பதினுறும், தத்துவதரிசனம் முதலாகச் சிவபோகம் ஈருக உள்ள தசாங்கமும் - தசகாரியமும் விளங்கும். அவற்றைக்கொண்டு அவ்வுயிர் தாளுகவே நிற்கும். கூடிப்பிரிதலை அறியாத இறைவனைச் சிந்தித் தால் தற்போதம் கெடும். இறைவனிடத்தில் ஒடுங்கிக் காண்கின்றவர்களுக்கு, வினைகளும் மாயையும் அடி யோடு ஒழியும். இறைவனைத்தலைப்பட்டால் பலவகைப் பாசங்கள் நீங்கும். இடையருத சிந்தனையால் தருமவடி வினனுன இறைவனைத் தலைப்படலாம்.

அற்பத்தன்மை உள்ளவர்களும் இறைவனைச் சிந்திப்பார்களானுல், நற்குணங்கள் நிறைந்த உயர்ந் தோராவர். இறைவனைத் தலைப்படும்போது, ஏதாவது இடையூறுகள் நேர்ந்தால் அவைகளை, விதி என்று கொண்டு அவ்விடையூறுகளை நீக்க முயலவேண்டும். சிவசிந்தனையுள்ளவர்களே சிவபக்தராவார்கள். அவர்க ளுடைய இதயத்தில் இறைவன் நின்று அவர்களுக்கு முத்திநெறியினையும் காட்டியருளுவான். ஞான ஒளி, உயிரின் அஞ்ஞானத்தைப் போக்குவதுபோல, ஆசாரி யன், அவ்வுயிருக்குச் சன்மார்க்கத்தை உபதேசிப்பான். ஞான ஒளியானது, புருவநடுவிலே பிரகாசிக்கும். அவ் வொளியே எல்லா ஒளிகட்கும் மேலான ஒளியாம். எல்லா உலகமும் இறைவனையே பதியென்று துதிக்கும். இறைவனது ஆணையின்வழியே எல்லாம் நடக்கும். தத்துவஞானம் கைவரப்பெற்றவர்களுக்கு முத்தியுல கினையும் அவ்விறைவன் அமைத்தருளினுன்.

இறைவன், எல்லோருக்கும் முதல்வன்; நம் கடவுள் என்பதைத்தவிர வேருென்றையும் நாங்கள்

அறியோம் என்று விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் கூறுவர். இறைவன் திருவருள் பெற்றவர்கள், உண்மையினையறிந்து பேரின்பத்துடன் இருந்தார்கள் - இருப்பார்கள். பசுக்களாகிய ஆன்மாக்கள் வணங்கும்படியான இறைவன், ஆன்மாக்களின் உருவம் தாங்கி, தன்னைத் துதிக்கும்படி உயிர்களுக்கு அருள்புரிந்தான். அருள்பெற்ற ஆன்மாக்கள், மனம் தெளிந்தோம்; இனி, எந்தத் தேவரையும் வணங்கமாட்டோம்; நாம் சிவமானோம் என்று கூறும்.

3. பிரணவ சமாதி

(2675—2680)

தூலப்பிரணவம், தூலசரீரத்துக்கு மகிழ்ச்சிதரும். சூக்குமப் பிரணவம், சூக்கும சரீரத்துக்கு மகிழ்ச்சி தரும். காரணப் பிரணவம், திருவருட்சத்தி பதியச் செய்யும். மகாகாரணப் பிரணவம். முத்தி அளிக்கும். ஓம் என்பதனுள் மகாவாக்கியம், சகள நிஷ்களம், (உருவம், அருவம்) உயிர்களின் வேறுபாடுகள், சித்தி முத்தி (சித்தி-பிறப்பு) ஆகிய இவைகள் தோன்றும். ஐம்பூதங்கள், சராசரங்கள் ஆகிய இவைகள் ஓங்காரத்துள்ளே உதித்தன. மகாகாரணப் பிரணவத்துள்ளே (விஞ்ஞானகலராதி) மூவகை உயிர்கள் அடைந்தன. அம்மகாகாரணப்பிரணவத்துள்ளே (ஜீவ பர சிவ) முத்துரிய உருவங்களும் தோன்றும். அகார உகார மகாரங்கள், இன்பமும் இறைவனுமாகும். அம்மூன்றுமே சராசரங்களுமாகும். ஆதாரநிலைகளும் ஓங்காரமாகும். ஓங்கார உண்மையினை உணர்ந்தவர், பரந்த ஞானத்தின் தொகுப்பை உணர்ந்தவராவர். மன மயக்கம்

நீரவேண்டுமாகுல், சிவகுருவின் உபதேசம் பெறல் வேண்டும்.

4. ஒளி

(2681—2697)

ஒளிவடிவான ஆன்மாவை அறிந்தால் உடம்பு மறையும். அழியக்கூடிய தேகத்தை அறிந்தால் பிறப்பு நேரும். ஆத்மதரிசனம் செய்யின் சிவஒளி தோன்றும். ஆன்மாவின் பாசத்தை நீக்கும்பொருட்டே இறைவன் உடனிருந்தான் - இருக்கின்ருன். ஞானவொளிபெற்ற உயிர்களால் புவனங்களிலுள்ளவை அனைத்தையும் அறிந்துகொள்ள முடியும். அவ்வொளியே சிவ ஒளி யாகும். மளவிருளகன்ற இதயத்தில் ஒளிப்பிழம்பாகிய இறைவன் எழுந்தருளியிருப்பான். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய இவர்கள், இறைவன் தந்த ஒளியால் பிரகாசிக்கின்றனர். அவர்களுக்கு இயற்கையாகவே பிரகாசிக்க ஒளி கிடையாது. இறைவன், அம்மூவருக்கும் ஒளி தந்ததுமல்லாமல், அவர்களுடன் வேறறக் கலந்தும் உள்ளான். இறைவன், சூரிய சந்திரர்களை வலக்கண் இடக்கண்களாகக் கொண்டும், அக்கினியை நெற்றிக்கண்ணுகக் கொண்டும் விளங்குகிருன். பஞ்ச பூதங்களும், இறைவன் திருவருளாலேயே விளக்கம் பெற்றுள்ளன.

சிருட்டி ஆரம்பகாலத்தில் நின்மல சிவத்தினிடமாகத் தோன்றிய வெள்ளொளி, பராசத்தியின் சிவந்த ஒளி, ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி ஆகிய இவைகளின் ஒளி, ஆக இவ்வாறு ஒளிகளுடனும் கலந்து நிற்பது சிவ ஒளியாகும். இறைவன்,

உயிர்களிடத்தில் கலந்து நின்று அவ்வப்போது திருவருள் பாலிக்கின்ருன். மேலும், உயிர்களின் இதயத் தாமரையிலே எழுந்தருளியிருப்பவனும் ஆவன்.

இறைவன், உலகமுடிவில் (பேரூழிக்காலத்தில்) தோன்றும் இருளில் பேரொளிப் பிழம்பாய் நிற்பவன்; அன்பர்களுக்கு வெளிப்படுபவன்; விடமுண்டு கண்டங் கறுத்தவன். இவையெல்லாம் அவனது திருவுளப் பாங்கின் வண்ணமே நிகழ்வன - நிகழ்ந்தனவாகும். இறைவன் சிவஒளி, அருட்சத்தி ஒளி, ஆன்ம ஒளி இம்மூன்றுமாகத் தோன்றி உடனிருந்து அருள்புரி கின்ருன். இறைவன், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவனும், உடனுறைபவனும், தேவாதி தேவனும், ஞானப்பிரகாசனும், உயிர்களின் ஆணவ இருளைப் போக்குபவனுமாக உள்ளவனுவான்.

திருவடிப்பேற்றினை உணர்ந்தவர்களுடைய இதயத்துள்ளே இறைவன், ஞான ஒளியாக நின்றருளுவான். இறைவனே ஞானசூரியனுவன். மாயையின் இருள் நீங்கப்பெற்ற உயிர், ஞானத்துறவியாகும் - இறைவனுகும். இறைவன், ஆன்மாக்களுக்கு மகிழ்ச்சியை அருளுகின்ற சூரியனைப் போன்றவன். இருவினையொப்பு வந்ததும், முன்செய்த வினைகள் அனைத்தும் நீங்கும். அப்போது, பூவின் மணம்போல சிவ ஜீவ ஐக்கியம் உண்டாகும். வேதங்களுக்குத் தலைவன் சிவபிரான். வேதநீதிக்கு உட்பட்டு, அதன்வழி கடைப்பிடிப்போர் அப்பிரானையே அடைவர். வியாபகமான உலகத்திலுள்ள அனைவர்களும் இறைவனையே துதித்திருத்தல் வேண்டும்.

5. தூலபஞ்சாக்கரம்

(2698—2708)

வேதங்கள், ஆகமங்கள் இவையெல்லாம் பிரணவ சகிதமான ஐம்பதெழுத்துக்களால் ஆனவையே. இவ்வைம்பத்தொரு எழுத்துக்களும் திருவைந்தெழுத்தில் அடங்கின. உயிரெழுத்துக்கள் பதினாறு; மெய்யெழுத்துக்கள் முப்பத்தைந்து; ஆகக் கூடிய எழுத்துக்கள் ஐம்பத்தொன்றாகும். 'நமசிவாய' என்பது இறைவன் திருநாமமாகும். உகாராதிகள், சிவபிரானின் திருவருட் சத்தியாகும். அச்சத்தியின் உள்ளொளியாயுள்ளவன் இறைவன். 'சிவாயநம' என்பது சிவ வேதமாகும். (சிவ உணர்வு) 'நமசிவாய' என்பது மூலமந்திரமாகும். ('கோணம்' எனப்படுவது, சிவ உணர்வினைப் பெற்ற உயிரின் பெயராகும்.) மூலம், இலிங்கம், உந்தி, இதயம், கண்டம், துண்டம் (புருவநடு) என்னும் ஆறு ஆதாரங்களின் இடமாக அகரம் தோன்றும். அவ்வகரம், மூலாதாரத்தில் தோன்றி மேலேசென்று சகஸ்ராரத்தில் மோதுண்டு அட்சர வடிவாய் வெளிப்படும். இவ்வோசையே ஐந்தெழுத்தாகும். (ஊதா, நீலம், பச்சை, சிவப்பு, மஞ்சள், பழுப்பு, இளநீலம் என்னும்) ஏழு நிறங்கள் கூடிய கதிர்கள் ஒன்றுபட்ட நிலையில் உண்டான ஒளி அதிகப்பட்டபோது உயிர், கரணங்களை விட்டு வெளியே செல்லும். (அதாவது, உயிர் இறப்பினை மேற்கொண்டு உடம்பைவிட்டு அகலும்.) அந்நிலையில் அவ்வுயிருக்கு முத்தியளிப்பது ஐந்தெழுத்தாகும்.

யோகப்பயிற்சி செய்யும்போதும் ஐந்தெழுத்தையே மந்திரமாகக்கொண்டு செய்தல்வேண்டும்; அதனையே

துதித்தலும் வேண்டும். சிவகுருவினுல் உபதேசிக்கப் பட்ட பஞ்சாட்சரமானது பிறப்பை அறுப்பதோடு திருவருள்வழியையும் காட்டும். தீவினைத் துன்பங்கள் வந்தடையும்போது ஐந்தெழுத்தை ஓதினுல் இறைவன் திருவடியை அடையலாம்; சிவனுருவமும் பெறலாம். ஐந்தெழுத்தின் பெருமையை உணராதவர்கள், அஞ் ஞானத்தைப் போக்கமுடியாது - அழிக்கமுடியாது.

6. சூக்குமபஞ்சாக்கரம்

(2709—2717)

இறைவனைப்பற்றி விவாதிப்பவர்கள் அறிவிலிகள். இடையருது சிவபிரானை 'சிவாயநம' என்று ஜபிப்பவர் களது உடம்பை இறைவன் பொன்னிறமாக்குவன்.

பஞ்சாட்சரம்:- சி-சிவன்; வ-சத்தி; ய-ஆன்மா; ந - மலம்; ம - மாயை ஆகும். பாவத்தை உண்டாக்கக் கூடிய ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோ தாயி என்னும் பஞ்ச மலங்களும், சிவசத்திகளோடு ஜீவனுனது கூட, நீங்கும். பஞ்சாட்சரத்தால், மல மாயை கன்மங்கள் ஒழியும். அதனுல், பிறப்பு நீங்கும்; பிறப்பற்றதும் உயிர், சிவனுகும்.

(நம) நகர மகரங்களால் குறிக்கப்பட்ட மலங்களை ஒழித்து, அந்தம் முதலிலுள்ள எழுத்துக்களான 'நம' என்பவைகளை நீக்கி, 'சிவயசிவ' என்று ஓதினுல் சிவ ஞானயோகம் சித்திக்கும். 'சிவாய' என்னும் எழுத்துக் களால் வினை அகலும். தெளிவுபெற்ற ஞானமில்லாத ஊமையர்கள் 'சிவசிவ' என்பதன் உண்மையைத் தெரிந்துகொள்ளவில்லை. 'சிவசிவ' என்பதன் சிறப்பினை உணர்ந்தவர்கள் திருவருளைப் பெற்றவர்களாவார்கள்.

தீவினையாளர்கள் 'சிவசிவ' என்று சொல்லமாட்டார்கள். 'சிவசிவ' என்று சொன்னால் தீவினைமாளும்; தேவராகலாம்; சிவகதியும் பெறலாம். 'நம' என்னும் எழுத்தினைநாவில் ஒடுக்கி, (ய-என்னும் எழுத்தைக் கண்டத்தில்நிறுத்தி) 'சிவ' என்னும் எழுத்தினை, சிந்தையுள்ளே பதியவைத்தால் பாவம் அகலும்; அஞ்ஞானம் நீங்கும்; பிறப்பும் அறும்.

7. அதிசூக்கும பஞ்சாக்கரம்

(2718—2721)

'சிவாயநம' என்றே எண்ணிக்கொண்டிருந்தால் இடையூறில்லாமல் இறைவனுக்கு அடிமையாகலாம்; பேரின்பப் பெருவாழ்வும் பெறலாம். யோகத்தால் சூரிய மண்டலத்துள்ளே ஐயறிவும் ஒன்றுபடுமாறு சென்று, உலகத்தை மறந்து அசைவற்றிருந்தால், இறைவன் அப்போது நெஞ்சகத்தில் நீங்காது நிலை பெற்று நின்றருளுவான். 'சி' என்னும் அதிசூக்கும பஞ்சாக்கரமாகிய ஓரெழுத்தில்தான், இறைவன் இருப்பதாகும். அதனைச் சாதித்தால் அது முத்தியைக் கொடுக்கும். திருவைந்தெழுத்து, வேதங்களினுள்ளே முதிர்ந்த பழமாகும். (விதி எழுத்தை மாற்றும்) 'சி' என்னும் எழுத்தை அறியாத மூடர்கள், எல்லா எழுத்துக்களையும் (அகாராதி க்ஷகாராந்தமானவைகளையும்) அறிவோம் என்று கூறுவார்கள்.

8. திருக்கூத்துத்தரிசனம்

(2722—2803)

உலகமெல்லாம் சிவத்தின் திருக்கூத்தேயாம். திருநடனக் கூத்து :- சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து,

பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து என ஐந்து வகைப்படும். இறைவனுக்கு, திரு வருள்நிலையே ஆனந்தக்கூத்தாடும் நடனசபை ஆகும். ஆடரங்கு, பாடல்கள், பல இசைவாத்தியங்கள், அபி நயம் ஆகிய இவைகளெல்லாம் இன்பமேயாம். சரா சரங்களிலுள்ள உயிர்களனைத்தும் முத்தி அடையும் பொருட்டே இன்பமயமான இக்கூத்தினை இறைவன் நிகழ்த்துகின்றான். இக்கூத்தினால், கூத்தனுக்கும் ஆனந்தமே. ஞானமாகிய பரமும், (பரம் – முழுமுதல்) சத்தாகிய பரமும் (சத்து - என்றும் உள்ளது.) கூடி யதே கருணையுடைய சிவகாமி(சிவானந்தசத்தி)யாகும். சமயநெறியுடையோர்களுக்கு, மேலான ஆனந்தத்தை அளிப்பவன் இறைவனாவன். நம் இதயத்து அப்பெரு மானை இருத்தி மனத்தெளிவு அடைவதே சிவானந்தக் கூத்தால் அடையும் பயனும்.

உருவம் இல்லாத இறைவன், உருவத்துடன் கூடி, உயிர்களின்பொருட்டே பஞ்சகிருத்தியத் தாண் டவத்தையும், அருட்சத்தியைக்கொண்டு பஞ்சகிருத்தி யங்களையும் செய்தருளுகின்றான். பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட வெவ்வேறு விதமான பல்லாயிர அண் டங்களையும் இறைவன், பஞ்சகிருத்தியத்தால் ஆண்டு கொண்டு அருளுகின்றான்.

வேதங்கள், ஆகமங்கள், கீதங்கள், ஏழு அண்டங் கள், ஐம்பூதங்கள், புவனங்கள் இருநூற்று இருபத்து நான்கு உலகங்கள்) ஆகிய இவையெல்லாம் தொழிற் படுவதற்காக நாததத்துவத்தை இடமாகக்கொண்டு இறைவன், திருநடனமாடினான் - ஆடுகின்றான். ஐம் பூதங்கள்; ஐம்பொறிகள்: ஐம்புலன்கள்; வேதாகமங் கள்; ஏனைய கலைகள், காலம், ஊழி, அண்டம், போதம்

ஆகிய ஐந்து: ஆக இவைகளில் கலந்து இறைவன் திருக்கூத்தினைச் செய்வான். இறைவன், திருக்கூத்தினை நிகழ்த்தும்போது தேவாசுரர்கள், மற்றும் தேவர்கள், அண்ட சராசரங்கள் ஆகிய எல்லாம் ஆடும்.

சுந்தரக்கூத்து

சதாசிவ தத்துவத்தின் (சாதாக்கிய தத்துவத்தின்) உச்சியிலே இறைவன், உமையம்மை காணும்படித் திருவருட்கூத்தினை இயற்றுவான்.

கொடுகொட்டி, பாண்டரங்கம், கோடு,சங்காரம், நடம் எட்டு, ஐந்து, ஆறு ஆகிய இத்திரு நடனங்களை இறைவன் புரிந்தருளுகின்ருன்.

கொடுகொட்டி :- யாவற்றையும் அழித்து நின்று ஆடும் திருநடனம்.

பாண்டரங்கம் :- திரிபுர தகனம் செய்தபோது, அந்நீற்றினைத் தரித்து ஆடிய கூத்து.

கோடு :- பிரமனது சிரசைக் (கபாலத்தைக்) கையிலேந்தி ஆடிய கூத்து. இக்கூத்து 'கபாலக்கூத்து' எனவும் படும்.

சங்காரம் :- ஒவ்வொரு நாளும் நடைபெறும் அழித்தற்ருெழிலுக்காக ஆடும் திருநடனம்.

நடம் எட்டு :- பஞ்ச கிருத்தியத் தாண்டவத்துடன் காளிக்கூத்து, முனி நடனம், ஆனந்த நடனம் ஆக மூன்றும் சேர்ந்து நடனம் எட்டாகும்.

(நடம்) ஐந்து:- குற்ருலம், மதுரை, சிதம்பரம், பேரூர், திருவாலங்காடு ஆகிய இவ்வைந்து க்ஷேத்திரங்களில் ஆடிய கூத்து.

(நடம்) ஆறு :- ஆறு சமயங்களிலும் அவ்வவர் சமயத்துக்கேற்றதான கூத்துக்களாகும்.

பரமாண்டத்துள்ளே (அப்பால் அண்டத்துள்ளே) பராசத்தியின் திருவடிகளும், ஒளிப்பிழம்பாகிய இறைவனும், நாதமும் காணப்படும். அவ்வண்டத்துள்ளே பரனாகிய இறைவன், நடனமிடுகின்றான். சைவசமயத்துக்குத் தலைவனான இறைவன், சுழுமுனை நாடியினுள் உள்ள அறிவினிடமாக, 'தொம் தீம்' என்று தாளத்துடன் நடம் செய்கின்றான். அப்போது, நீண்டகாலம் திருவருள் அவ்வறிவினுள்ளே தங்கியிற்கும்; அழிதல் இல்லை. இறைவன், ஒன்பது பேதமான (அருவம் நான்கு, உருவம் நான்கு, அருவுருவம் ஒன்று ஆக ஒன்பது) கூத்துக்களை இயற்றியருளுகின்றான்.

பரை, ஆதி, இச்சை, கிரியை, ஞானம் ஆகிய பஞ்ச சத்திகள்; உருவபேதங்களாகிய அயன், அரி, அரன், ஈசன்; அருவுருவ பேதமாகிய சதாசிவம்; எட்டு பதமுத்திகள்; கணபதி, அயன், அரி, முருகன், உருத்திரன், இந்திரன், சண்டி, ஈசன் ஆகிய எட்டு பதங்கள்; அணிமா முதலான அட்டசித்திகள்; (பஞ்சபூதங்கள், ஞாயிறு, திங்கள், உயிர் ஆகிய) எட்டு சிவபதங்கள்; நிரீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்யுக்ஷணம், தாளத்திரயம், திக்பந்தனம், அவகுண்டனம், தேனு முத்திரை ஆகிய எட்டு சுத்திகள் இவைகள் அனைத்திலும் இறைவன் திருநடனம் இயற்றியருளுவான். சப்த மேகங்கள், சப்த தீவுகள், எழுவகைத் தோற்றங்கள், ஏழு சிவபாஸ்கரர்கள், ஏழுநாக்கு, (ஐம்பொறிகள், மனம், புத்தி) இவ்வேழு; இவைகளெல்லாம் சிவபிரானின் திருவடிக்கீழ் அடங்கியிருக்கும்.

பொற்பதிக்கூத்து

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய ஐந்து முகங்களிலும், அருவம் உருவம் அருவுருவம் ஆகிய மூன்று உருவங்களிலும் நின்று இறைவன் திருநடம்புரிவான். இறைவனின் திருவடி இன்பம் கண்டவர் மெய்யடியாராவர். இறைவனது திருவருளைப் பெற்றவர் அருளடியாராவர். இறைவன் திருவடி சேர்ந்தவர் அடியாராவர். திருக்கூத்தினைக் கண்டவர் சிவனடியாராவர். பொறி புலன்கள் அடங்கி நின்றவர்களது மனத்திலே இறைவன், திருநடனம் புரிதலோடு அல்லாமல் நிட்டையும் கூட்டுவித்து, உணர்விலும் பொருந்தியிருந்து அருள்புரிவான்.

விம்முதல், வெருவுதல், விழுதல், எழுதல் மெய் சோருதல், தம்மை மறத்தல் ஆகிய இவையெல்லாம் திருவம்பலக்கூத்தில் அன்புவைப்பவர்கட்கு உண்டாகும் மெய் அடையாளங்களாம். ஆசைகெடுதல், மனத் தளர்ச்சி நீங்குதல், பிராணன் புத்தியின் வசப்பட்டுப் புலன் அடங்குதல், பேரின்ப நாட்டம் பெருகுதல் ஆகிய இவையெல்லாம் பொற்பதிக்கூத்தினைத் தரிசித்து இன்பம் பெறுவார்க்கு உண்டாவனவாம். காளி, மேரு மலை, பேய்க்கூட்டம், பூவுலகம், பஞ்ச பூதங்கள் இவைகளுடன் ஆடிய சிவபிரான், தில்லையம்பலத்தே நின்று நடனமாடி அருளுகின்றார்.

மேருமலையானது அண்டத்தின் நடுவாக இருப்பது போல, உடம்பில் சுழுமுனை நாடியானது நடுநாடியாக உள்ளது. உடம்பில் இடா பிங்கலா என்னும் இரு நாடிகளும் உள்ளன. வடதுருவம் தென்துருவம் போல, தில்லையும் பொதியமலையும் பூமியின் மத்திய

ரேகையில் உள்ளன. இவையே சிவபூமியாகும். இடைகலை பிங்கலைகளான மேருமலைக்கும் இலங்கைக்கும் நடுவே உள்ளது சுழுமுனையாகிய தில்லையாகும். இத் தில்லையில் இறைவன் எப்போதும் நடனமிடுகின்றான்.

பொற்றில்லைக்கூத்து

இறைவன் ஏழு அண்டங்களையும், பஞ்ச பூதங்களிலும் கலந்து நிற்கும் ஐந்து ஆகாயங்களையும் (மண்ணில் ஆகாயம், நீரில் ஆகாயம், நெருப்பில் ஆகாயம், வாயுவில் ஆகாயம், ஆகாயத்தில் ஆகாயம்.) பதியாகக் கொண்டு நடமிடுவதுபோல, ஆன்மாக்களின் நடுநாடியாகிய சுழுமுனையிலே திருவருட்சத்தியைத் திருவம்பலமாகக்கொண்டு திருக்கூத்து இயற்றுகின்றான்.

உயிர்களுக்கு இன்பம் அளிக்கும்பொருட்டே இறைவன், உமாதேவியுடன் கூடி, நித்தியானந்தத்தோடு (அழியா இன்பத்துடன்) நிருத்தம்செய்கின்றான். இறைவன் நடனம் செய்யும்போது அவனது கையிலுள்ள அக்கினி; சடை, சடையின்மீதுள்ள ஊமத்த மலர், பிறைமதி; பூமி அண்டம் ஆகிய இவையெல்லாம் ஆடின. அவ்விறைவன் நாதசத்தியுடன் கூடி நடனமாடினான். இதனை, 'நாதாந்த நடனம்' என்று சொல்லப்படும். தில்லையில் ஆடும் கூத்தானது 'அகிலாண்ட நடனம்' ஆகும். சிவலோகமாகிய தில்லையை அடைந்தவர்கள், சாலோகத்தினை அடைந்தவராவர். இக்கூத்து, உண்மை ஞானானந்தக்கூத்து ஆகும். சிவபிரான் பாதிச்சரீரியாகிய தேவியுடன் நடனமாடுகின்றான். அவனுடைய திருப்பாதங்களே மூவேழ் உலகம், ஏழு அண்டங்கள், நூற்றெட்டுச் சமயங்கள் ஆகிய இவைகளை ஆட்டுவிக்கின்றன. இடைகலை பிங்கலை

என்னும் இரு நாடிகளும் மேருமலையும் இலங்கையு மாகும். நடுநாடியாகிய சுழுமுனையானது தில்லையாகும். நடுநாடியைப்போன்று தில்லைவனமும் நடுநின்று உலக மனைத்தையும் இயக்குவிக்கின்றது. ஒன்பது தீர்த்தங் களும் ஏழுமலைகளும் தென்னாட்டில் உள்ளன. வேதா கமங்களும் ஆதியில் தென்னாட்டில்தான் உள்ளன - பிறந்தனவாம்.

தேவாதி தேவனாகிய சிவபிரானானவன் நாதம், சரியையாதி நாற்பாதங்கள், வேதம், ஓமாக்கினி, ஞானம் ஆகியவைகளில் நடனமாடி அருளுகின்றான். மேலும் தேவரோடும், பாட்டுக்களுள்ளும், பராசத்தி யோடும், ஜீவனுள்ளும் ஆடியருளுகின்றான். திருவம் பலத்தை நடன சபையாகக்கொண்டு, கூத்தப்பிரான் நடனமிடுகின்றான். அவனது உபய திருவடிகளும் பரஞானமும் அபரஞானமும் ஆகும். ஐந்து வகை யான வாக்குகளாயுள்ள நாதங்களிலும் நின்று நடன மிடுகின்றான். பலவகைத் திருக்கோலங்களைக் கொண் டும் நடனமிடுபவன் இறைவன். அவ்வண்ணம் திருக் கோலங்கள் கொண்டருளுவதும் மக்கள் உய்தற் பொருட்டேயாகும். பிரானை, உள்ளத்துள்ளே கண்டு கொண்டால் பிறப்பும் நீங்கும். ஐவகைச் சபைகளுள் முதன்மை பெற்றதான மணிமன்றமாகிய திருவாலங் காட்டிலே இறைவன், திருநடனமாடியருளுகின்றான்.

சிவகுருவின் - சிவனின் திருவுருவையே எப்போ தும் இடைவிடாது தியானித்தல் வேண்டும். அருவுரு வாக உள்ளதும் அச்சிவனின் உருவமேயாம். திரிபுரை யாகிய திருவருளும் அக்குருவடிவமாகும். உருவாயும் அருவாயும் உள்ளவள் உமாதேவியாவள். திருச்சிற்றம்

பலத்தே நடனமிடும் சிவனது திருவுருவை உள்ளத்து நினைப்பதே நன்னெறியாகும். அவ்வுருவே, அருவுருவமாக நடனமிடும் சிவபிரானின் அருளுருவாம். அதனை முற்றும் உணர்ந்தவர்களுக்கு அருள்வழியாக உள்ளதும் அவ்வம்பலமேயாகும்.

உச்சிக்குமேல் பன்னிரண்டங்குலம்வரை பிராண வாயுவானது சஞ்சரிக்கும். அவ்வுச்சிக்குமேலே உள்ள வெளியே, பெருமான் திருக்கூத்தாடும் திருச்சிற்றம்பலமாகும். காற்று, மேகம், மின்னல், வானவில், இடி ஆகிய இவைகளுக்கெல்லாம் ஆகாயம் இடந்தந்தும், தான் அவைகளில் படியாது தனித்துநிற்குமாறுபோல, ஆதாரங்கள் ஆறினும் தோன்றும் ஒளிகளுடன் கலந்தும், வேருகி ஒளிவடிவாக மறைந்தும் நிற்கின்ருன் இறைவன். மேலும், ஆன்மாக்களின் உள்ளத்தும் அறிவிலும் எப்போதும் திருநடனமிடுகின்ருன். திருவருட்சத்தியுடன் இறைவன் கலந்து நடனமியற்றுவதால் உயிர்களுக்கு இன்பம் பெருகும்; ஞானமும் உண்டாகும். (ஆகவே) சிவமும் சத்தியும் திருக்கூத்தின்மேல் நாட்டம் கொள்கின்றனர். எல்லா இன்பமும் சத்தியின் வடிவமாகும். நிகரற்றதான பேரின்பம், உமையவளின் திருமேனியாகும். சத்தி சிவம் என்னும் இரண்டும் ஒத்தநிலேயே இன்பமான - ஆனந்தமான ஒரு நடனமாகும். புருவநடுவின் வெளியை உற்றுப் பார்த்தால் அங்கு, சிவமந்திரம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். அப்புருவ நடுவே சிற்றம்பலமுமாகும்.

சதாசிவன், மகேசன், உருத்திரன், திருமால், அயன், சாத்தவி, சாம்பவி என்னும் ஏழு நிலேகளேயும் இறைவன், சிவாசனமாகக்கொண்டு கூத்தினே இயற்றுகின்ருன். ஏழுகோடிக் கணக்கிலுள்ள அண்டங்கள்,

பிண்டங்கள், திசைகள், தீவுகள், சிவலிங்கங்கள் ஆகிய இவ்விடங்களெல்லாம் சிவபிரான் திருநடனம் செய்யும் ஆலயங்கள் ஆகும். வெளியாகிய உடலேயும், திருவடியின்கீழே கரிய முயலகனையும், மேலாடைபோன்றதான எட்டுத்திக்குகளாகிய கைகளையும், விருப்பமுள்ள முச்சுடர்களான மூன்று கண்களையுங்கொண்டு இறைவன், ஆகாயமன்றினுள்ளே திருநடனம் புரிகின்றான். அகில சராசரங்கள், திருவடி, பஞ்சபூதங்கள், பஞ்சாட்சரம் ஆகிய இவைகளனைத்தும் சிவபிரானின் நடனசாலைகளாகும். இறைவன், பாண்டரங்கக் கூத்து இயற்றும் பொழுது ஒலிக்கும் முழவு, குழல் இவைகளில் ஓம் என்ற பிரணவநாதத்தைக் கேட்டும், பூதகணம், தேவகணம், மானிடர் ஆகிய இவர்கள் அனைவரும் இறைவனைத் தரிசித்தும் தோத்தரித்தார்கள். அதனால், உயர் கதியையும் அடைந்தார்கள்.

அம்பலக் கூத்தினைக் கண்டவர்களுக்கெல்லாம் ஆனந்தக்கண்ணீர் வடியும்; மனம் உருகும்; உள்ளத்துள் ஆனந்த அமுதும் ஊறும்; உலகை மறந்திருக்கும் நிலையும் உண்டாகும். அக்கினி, உடுக்கை, அக்கமணி, பாசம், அங்குசம், சூலம், கபாலம் ஆகிய இவைகளையும், நீலவிழிகளோடு கூடிய மங்கையை ஒருபாகமும் கொண்டு இறைவன், திருநடனம் செய்தருளுகின்றான். மேலும், நடனத்துக்கு வேண்டிய பதினொரு உறுப்புக்களையும், பாதத்தில் சிலம்பையும், கையில் உடுக்கையுங்கொண்டு அகத்தும் புறத்தும் நடனமிடுகின்றான். சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், ஈசன், உருத்திரன், திருமால், அயன் ஆகிய ஒன்பது நிலைகள்; அட்ட திக்குகள், அட்டமூர்த்தங்கள் ஆகப் பதினாறு; ஆறுசமயங்கள்; இன்பம் அளிக்கும் (மேல்) ஏழு உலகங்கள்;

ஐம்பத்தாறு தேசங்கள் ஆகியவைகளெல்லாம், இறைவன் ஆடும் கூத்திஞல் தங்கள் தங்கள் தொழில்களை நிகழ்த்துவனவாம். இறைவன், ஏழிசையினுள்ளும் இசைந்து நடனமிடுகின்ருன்.

இரண்டாயிரத்து நூற்றறுபது ஆன சுவாசங்களிலும், ஆதாரங்களின் வழியாக ஆன்மாவினிடத்தும், மூன்று மண்டலங்களிலும் இறைவன் ஆடியருளுகின்ருன். கற்பகத்தையும் சிந்தாமணியையும் ஒத்த இறைவன், அன்பர்களது இதயத்திலே நின்று, அவர்களையும் தாஞக்கிக் (சிவமாக்கிக்) கொண்டான். இறைவன் ஆடுதலைச் செய்யும்போது, புவனங்கள் ஆடும். அவன் ஆடும்வரையில் நம் உள்ளமும் ஆடும். மேலும், பல பூதங்களும் ஆடிடும். எல்லா உயிர்களும் பெருமானது ஆடலைத் தரிசித்து இன்புற்றன. திருநடன உண்மையினை அறியாதவர்கள் இறைவன், தனக்காக நடனம் செய்தான் என்பார்கள். உண்மை உணர்ந்தோர்கள், ஆன்மாக்கள் உய்யும்பொருட்டே நடனம் செய்கின்ருன் என்பதனை உணர்வார்கள்.

பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் இவ்விருவரும் தரிசிக்கும்படிக்கு உருவம் அருவம் அருவுருவம் ஆக உள்ள திருவருட்சத்திக்குள் இறைவன், அருளே திருமேனியாகக்கொண்டு அம்பலத்தே ஆடலைச் செய்தருளிஞன். சிவசத்திகளின் திருநடனத்தால் ஆன்மாக்களைப் பற்றிநின்ற தீமைகளெல்லாம் ஒழிந்தன. நாதத்தின் முடிவும், நான்குவகை ஞானமுடிவும், வேதாந்தமும், சிவானந்தமும் திருவருள் நடனத்தால் வந்தடையும். சதாசிவானந்தத்திலே நாதப்பிரமமான 'ஓம்' என்னும் பிரணவம் சிவநடனம்செய்யும் நிலையமாகும்.

சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் ஐந்துநிலைகளிலுள்ள சிவம் முதலான ஐவரின் உழைப்புக்கள் மெய்ஞ்ஞானக்கூத்தால் நீங்கும். அக்கூத்தால் பசு பாசங்கள் விலகும். இறைவனைத் திருவருளால் தரிசித்து வணங்கினவர்கள் சிவ தத்துவத்தை அடைந்து இன்பம் பெறுவார்கள். இறைவன் மெய்ஞ்ஞானம் உடையவர்களிடத்தில் அத்வைதமாக நின்றருளினான். ஆனந்த நடனத்தின் உண்மையை ஒருவரும் அறியவில்லை. அதனை அறிந்தால் தன்முனைப்பு நீங்கப்பெற்று இன்பம் பெறலாம்.

'சி' காரம் வலது கை. 'வ' காரம் இடது கை. 'ய' காரம் (வலது) அணைத்த கை. 'ந' காரம் மழுவினையுடைய வலது கை. 'ம' காரம் ஊன்றிய திருவடியாகும். உடுக்கையினால் படைப்பும், அமைத்த கையால் காப்பும், அங்கி ஏந்திய கையால் சங்காரமும், ஊன்றிய திருவடியால் மறைப்பும், தூக்கிய திருவடியால் அனுக்கிரகமும் நிகழ்வனவாம்.

ஒளிகட்கெல்லாம் ஒளியைத் தந்த ஜோதிஸ்வரூபனை சிவபிரானைப் பார்த்து நிற்கும் சிவகாமியம்மையானவள், அயன் அரி அரன் ஆகிய மூவரும் சதாசிவனிடத்தில் ஒடுங்கும் முறையைத் திருவுளங்கொண்டருளினள். அவளே வேதங்களை அருளிச்செய்தவளுமாவள்.

இறைவனுடைய திருவடியே எல்லா உயிர்களும் அடைதற்குரிய புகலிடமாகும். சிவமும் சத்தியும் ஒன்றே. அச்சத்தியே பராசத்தியாயும் இச்சாசத்தியாயும் நிற்கும். திருவருட்கூத்தினையும் நடிக்கும்.

9. ஆகாசப்பேறு

(2804—2812)

இறைவன், உள்ளத்துள்ளே நின்று விளங்குகின்றமையால் உடல், சிதாகாசமாக விளங்கும். இறைவன், எல்லாவற்றையும் தாங்கி நிற்கும் பெருந்தாளோன் ஆவன். அவனே, ஆதிப்பிரானுயும் உள்ளவன். சூரிய ஒளி, சிவஒளி, ஜீவஒளி ஆக இம்மூன்று ஒளியாயுள்ளவன் இறைவன். ஆன்மாவின் தேக ஒளியைச் சூரிய ஒளி விழுங்கியதால் சரீர அமைப்புக்கள் அழிவதாயின.

சிற்றின்பத்துக்குக் கன்னியர் பயன்படுவர்போல, பேரின்பத்துக்கு இறைவன் பயன்படுவன். சிவ ஒளியுடன் கலந்திருக்கும் அண்டஒளி, பிண்டஒளி, அகண்ட ஒளி இம்மூன்றும் தெரியாதபடி சிவ ஒளியுள் அடங்கி (ஒடுங்கி) நின்றுல் கற்பகோடி காலம் வாழலாம். ஞானவெளி நிறத்தனும், தேவர் குலக்கொழுந்தும், பாம்பை உத்தரியமாகத் தரித்தவனும், சர்வவியாபியும், அப்பாலானவனும், ஜோதி ஸ்வரூபனும் ஆக உள்ளவன் சிவபிரான். அப்பிரான் உலகம், உயிர் ஆகிய இவைகளைப் படைத்து, பின் அவைகள் தொழிற்படத் திருவுளங்கொள்கின்ருன். அப்போது திருவருட்சத்தி வெளிப்படுவாள். அச்சமயம் ஆன்மாக்களின் உள்ளம் ஞானவெளியாகும். இறைவன், தன்னை இடையருது தியானிக்கின்றவர்களை விட்டு எப்போதும் நீங்கமாட்டான்; உலகப்பற்றுடையவர்களுக்கு வேருகி நீங்கி நிற்பான். இறைவனைப் பணிந்தால் ஆனந்தானுபவம் பெறலாம்.

புறத்திலுள்ள ஆகாசம், புவனங்களுக்கு இடமாகும். ஆன்மாக்களது (உள்ளம்) இதயமாகிய அறிவு

வெளி சிவபிரானின் இடமாகும். சிவத்தினுள்ளே உள்ள வெளி, ஜோதி ஸ்வரூபமாகும். உலகவெளி சமாதியின் (நிட்டைகூடும்) இடமாகும்.

10. ஞானோதயம்

(2813 - 2824)

பொருள்களை ஜாக்கிரத்திலும் சொப்பனத்திலும் கண்டு ஆனந்தித்தலே இரண்டு ஆனந்தங்களாகும். இறைவன், நமக்கெல்லாம் தோன்றாத்துணையாக உள்ளவன், பேரின்பம் அளிப்பவன் என்ற இரண்டு காரணங்களாலேயே நாம் இறைவனுக்கு அடிமைப்பட்டோமே அல்லாமல், கருமை செம்மை என்னும் நிறங் காரணமாக அல்ல. மேலோர்கள் உரைக்கும் - உபதேசிக்கும் தவநெறியே சென்றால் இறைவனது திருவடி அடையலாம். தத்துவங்களிலிருந்து ஜீவனை வேறு படுத்தி, சிவ ஒளி பரவும்படிச்செய்து, உயிரின் ஞான விளக்கை விளங்குமாறு தூண்டுதலாகிய பக்தியும் அன்பும் உடையவர்களுக்கு இறைவனது திருவடிப் பேரின்பம் கிட்டும்.

தத்துவஞானத்தின் தன்மை அறிந்தவர்களிடமே தத்துவனாகிய இறைவன் தலைப்படுவான். மலரும் மணமும் போல, இறைவனும் அடிமையும் கூடிக் கலந்து பிரிப்பின்றி நிற்பர். உயிரும் சிவமும் ஒன்றே; இதனைத் திருவருளால் அறியலாம். துன்பத்திலிருந்து நீங்கி உய்யவல்லவர்கட்கு உயிரே சிவஞானமும் சிவ தெய்வமும் ஆகும். அவர்கட்குப் பிரணவமே ஒடுக்க மாகும். மேலும், அவர்களுடைய அறிவு மாறுபடாத உள்ளறிவாகும். இறைவன், தன்னைக் காணவல்லார் கட்கே கண்மணியும் கடலமுதமும் போன்றவன்;

பேணவல்லார்கட்கு வெளிப்பட்டு அருள் புரிபவன்; அன்புமேம்பட்டவர்க்குத் துணையும் ஆவன். மேலும், தன் திருவடிப்பற்றினையுடைய தேவர்களது உள்ளத்துள்ளே நின்று துணை செய்பவனுமாவான்.

11. சத்தியஞானனந்தம்

(2825—2834)

இறைவன், முப்பாழ்களுடன் கலந்தும் அவைகளுக்கு அப்பாற்பட்டும் உள்ளவன். மேலான இன்ப வடிவினனாகவும் தற்பரனாகவும் சத்திய ஞானனந்த (உண்மை அறிவு ஆனந்த) வடிவினனாகவும் விளங்குவன் ஆவன்.

ஒருமலருக்கு தூய்மை, சிறப்பு, மணம், நிறம், அழகு இவ்வைந்தும் உள்ளன போல, சிவத்துக்கும் பஞ்ச சத்திகள் உண்டு. சத்தியோடு கூடிய சிவத்தைப் பரஞானத்தால் அறிய முடியுமே அல்லாது அபர ஞானத்தால் அறியமுடியாது. திருவருட்சத்தி பதியப் பெற்று குரு உபதேசம் பெற்ற ஆன்மாவினது உடல் நீலோற்பலமலர் போன்றதாகும். (பஞ்ச குணங்களை யுடைய மலர்போல) உயிருக்கும் சிவத்தின் குணங்கள் சிவசத்தியால் உடலுள்ளபோதேதோன்றிநிற்பனவாம்.

மனம் உருகப் பாக்கள் பலவற்றைச் செய்து இறைவனது புகழைப் பாடுவோமேயானல், அவ் விறைவனுடன் இரண்டறக்கலக்கலாம். துரியம் அடங்கிக் கிடக்கும் சமயத்தில், இறைவனது திருவடியின்பமானது ஆன்மாவினது தேக மயிர்க்கால்கள்தோறும் தேங்கிக் கிடக்கும். இன்பத்தை அருளும். இறைவன், கூற்றுவனை வென்று, எல்லா அண்டங்களையும் கடந்து

நாததத்துவத்தில் நிற்கின்ற ஒப்பிலாதவனுவான். அவ் விறைவன், சத்திகளுடன் சேர்ந்திருந்தும் மயக்கம் இல்லாத ஞானப்பிரகாசன் ஆவான். முப்பத்தாறு தத்துவங்களையும், மலங்களையும், துரிய அவத்தைகளை யும், பாசங்களையும் நீக்கினுல் சிவமாகலாம். இதன் மூலமாக சத்தியஞானுனந்தம் (உண்மையறிவுஇன்பம்) பெறலாம். இதனை அடைந்தவனே ஞானியாவான். மும்மலங்கள் அழிந்து, முப்பாழும் அழிந்து, பாசங்க ளும் நீங்கினுல் சத்தியஞானுனந்தம் பெறலாம். இந் நிலையே மேன்மை வாய்ந்த துரியநிலையாகும்.

12. சொரூப உதயம்

(2835—2846)

இறைவன் எவ்விடத்தும் உள்ளவன் ஆதலால் இறைவனுடன் சேர்ந்த ஆன்மாவும் எங்கும் நிறை வுற்றதாகும். இதுவே, சொரூபநிலையாகும் - அரியதுரிய நிலையுமாகும். பஞ்சபூதங்களிலும் கலந்து நிற்கின்ற இறைவனை, ஓர் அளவில் - எல்லையில் அமைத்து வழி படுகின்ற முறையை எவராலும் சொல்ல முடியாது. பிரமன் முதலிய தேவர்களும் மண்ணுலகத்தாரும் இறைவனைப் பாடிப் பணிவார்கள். அவ்விறைவன், அண்டங்களுக்கெல்லாம் அதிபனுகை இருந்து அருள் புரிகின்ருன்.

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், மண், பொன் இவைகள்மீதுள்ள விருப் பத்தையும், ஆணவத்தையும் அறவே விட்டு, சமயக் குறிகளையும் தன்னையும் அறிந்து, இறைவனை வழிபடு கின்றவர்கள் தேவர்களுக்கு அதிபர்கள் ஆவார்கள்.

அயன், அரி, அரன் ஆகிய இம்மூவருள் ஒருவனை அரன், அம்மூவருள் ஒருவனாகியும் வேறாகியும் நிற்பது போல, ஜீவனும் சிவனும் கலப்பால் ஒன்றாயிருப்பினும் சிவன் வேறாவன். அச்சிவன், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவன். (அவாங்மனோகோசரன்) உயிர்கள், (சிவ ஜீவ பரம் என்னும்) முத்துரியங்களால் இறைவனை அடையக்கூடுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.

இறைவன், அருவனாக இருந்தும் உயிருக்கு ஐவகைச்சரீரத்தையும் அளித்து அத்துடன் சேர்ந்திருக்கின்றான். காரணமில்லாமலேயே தனக்குத் தானே முதல்வனாக விளங்குபவன். எல்லாவற்றுடனும் கலந்துள்ளவனாயினும் அருவநிலையில்லாதவன். அப்படிப்பட்ட சிவபிரானை, சிவகுரு அருளாலன்றி எவரும் அடைய முடியாது. தனது (இறைவனது) உருவைப் பற்றிச் சிந்திக்கின்றவர்களது சித்தத்தில் ஜோதிவடிவினனாக இறைவன் விளங்குவான். மேலும், சிந்திக்கின்றவர்கள் பலவூழிகளையும் காண்பார்கள்; தேவரும் ஆவார்கள். இறைவன், நம்முள் படிந்தால் நாமும் பரஞ்சோதியிடத்தில் படியலாம். இவ்வண்ணம் பரஸ்பரம் படிந்தபின் இறைவன் நமக்குள்ளே நிலையாய் நின்று தன்னைப்பற்றி நமக்கு உபதேசிப்பான்.

நீலோற்பலமலரினிடத்தே சொரூபமாகிய வாசனையும், உருவமாகிய உருவ - வடிவ அழகும், குணமாகிய மென்மையும் ஆகிய இவை பொருந்தியுள்ளன போல சத்தி, சிவம், பரம், ஜீவன் ஆகிய இந்நான்கும் சிவ குருவினிடத்தே பொருந்தி இருத்தலால் 'சொரூபக் குரவன் சுகோதயந்தானே' அனந்தமோன சொரூபத்தன் (இன்பமயமான வடிவினன்) சிவகுரு ஆவன்.

அவனிடத்தில் சத்தி, சிவம், பரம், ஜீவன் இவைகளைக் காணுமிடத்து, அகார உகார மகாரங்களும் தோன்றும். அப்பிரணவத்தில் உள்ளொளியாய்த் தோன்றுவது திருவருளாகும்.

சிவகுருவானவர், அஞ்ஞானமுடையோரை ஞானிகளாக ஆக்குகின்றார். அதனால் அவர்கள் ஞானம் பெற்று விளங்குகின்றார்கள்.

13. ஊழ்

(2847—2852)

இறைவனது திருவடியையே மனத்திற்கொண்டு ஒழுகுகின்றவர்கள், தங்களது சரீரத்துக்கு எது நேர்ந்தாலும் கவலைப்படமாட்டார்கள். நாம் முற்பிறப்புக்களில் செய்த கன்மபலனை அனுபவிக்க இறைவனால் விதிக்கப்பட்டதே அல்லாமல், இறைவன் தானாகச் செய்யப்பட்ட விதியின் சம்பந்தம் ஒன்றுமேயில்லை. இறைவனது திருவடியை நாம் பணிவோமானால் நம் உள்ளம், இறைவன் தங்கியிருக்கும் நல்ல நிலமாக விளங்கும். அவரவர்கள் செய்த வினைப்பயனை அவரவர்களே அனுபவிப்பர்.

வானத்திலிருந்து பேரிடி இடித்தாலும், கடல் பொங்கினும், காட்டுத்தீ பரவி நாடெல்லாம் வெந்தாலும், ஊழிக்காற்று வீசினும் அடியார்கள் இறைவனையே மனவொருமைப்பாட்டுடன் நாடுவார்கள். ஆனை துரத்தினாலும், அம்பானது சரீரத்தினுள் போய்ப் பாய்ந்து வெளிவந்தாலும், புலியானது வளைத்துக் கொண்டாலும் ஞானத்தொண்டில் ஈடுபட்டவர்கள் ஞானவழிபாட்டிலேயே சிறந்து விளங்குவார்கள்.

கூடு அழியின் மற்றோர் கூட்டினை அமைப்பது போல, உடம்பு அழியுமானால் மற்றோர் உடம்பை இறைவன் படைத்து அளிக்கின்றான். வீடு அழியுமானால் மற்றோர் வீட்டிற்குச் சென்று சுகமாக இருப்பது போல, நாடு அழிந்தாலும் அந்நாட்டில் வாழும் நம்மவர்கள் வேறுநாடு சென்று சுகமே வாழ்வார்கள். இறையருளைப் பெற்றவர்கள் இத்தன்மையை நன்கு அறிவார்கள்.

14. சிவதரிசனம்

(2853—2855)

தெளிந்த சிந்தையினையுடைய தவத்தரின் உள்ளத்துள்ளே இறைவன் வீற்றிருந்தருளுவான். அழிவில்லாத இறைவனை ஆய்ந்து உள்ளத்தே கொள்பவர்கள், தாம் எடுத்த பிறவிப்பயனைப் பெற்றவர் ஆவார்கள். உயிர்களுக்கு இன்னருள் புரிந்து எப்போதும் பாதுகாக்கின்றவன் இறைவன்.

15. சிவசொருபதரிசனம்

(2856—2863)

இறைவனால் அளிக்கப்படும் பேரின்பம் குற்றமில்லாத ஆனந்தமாகும். உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று உருவங்களையும் கடந்து அப்பாலான சத்தியஞான இன்ப வடிவினனாக விளங்குபவன் இறைவன். இதுவே, வேதத்தில் கூறப்படும் மேன்மையான இறைவனின் திருவுருவமாகும். ஆன்மாக்களின் உணர்வாயும், உயிராயும், சேர்க்கையாயும், பிணக்காயும் உள்ளவன் சிவபிரான். அவன், நமது இதயத்துள்ளே கலந்திருக்கிறான். அப்பிரான் ஆழ்ந்து அறிவதான அனுபவத்தால் அல்லாமல் எண்ணற்கரியவன்.

இறைவன், தன்னை நினைப்பவர்களது உள்ளும் புறமும் நின்று அவர்களது விருப்பத்தை முடித்தருளு பவன். மேலும், அவர்களது உச்சியினிடமாக நின்று தெளிவிக்கும் தேற்றத்தனும் ஆவன். விளக்கமுற்ற - தெளிந்த மனத்துடன் இறைவனை நோக்குவோமே யானால் இறைவனும் நம்மை நோக்கி அருளுவான். இறைவன், சத்தியஞானானந்த வடிவினன்; பேரின்ப ஜோதி; சுத்தப்பிரம துரியத்துள் பிரகாசமாக உள்ள வன். மேலும், எல்லாவற்றிற்கும் கடந்ததாய் உள்ள தனிப்பெரும் பொருளாவன்.

முத்தியும் சித்தியும் கைவரப்பெற்ற ஞானமுடை யவன்; பத்திநிலை கைகூடியபின் பரத்துள் நிற்பன். பின், திருவருட்சத்தியுள் படிவதால் மெய்ஞ்ஞானமும் கைகூடி, சுத்தாவத்தையைக் கடந்துநிற்பன். அவனே 'சுகானந்த போதர்' - சுகானந்த ஞானியாம். துரியா தீத நிலையை அடைந்தால் நினைப்பும் மறப்பும் ஏற் படாது. அந்நிலையில் உயிர், ஜீவபோதம் கெட்டுச் சிவபோதமாக விளங்கும். இறைவனும் அந்நிலையில் அவ்வுயிரைத் தானாக்கிக்கொள்வான்.

16. முத்திபேதம், கரும நிருவாணம்

(2864—2865)

மோட்சமாவது, முறையே உயிரும் அருளும் சிவமும் செயலறலாகிய துரியத்தின்கண் அடைதலா கும். உயிர், சிவத்துடன் கூடுவதே வீடுபேறாகும். இதுவே, நிருவாணம் - முத்தி ஆகும். பரம்பொருளா கிய இறைவனை, தங்கள் பற்றறப் பற்றி நின்றவர்களும் கற்றறிந்து அடங்கினவர்களும், சுற்றம் அற்றவர்களும்

அடைந்து பேரின்பம்அனுபவிப்பர், அவர்களே மோன நிலையில் நின்றவர்கள் ஆவார்கள்.

17. சூனிய சம்பாஷணை

(2866—2935)

இறைவன், ஆன்மாவின் சரீரத்தை சூதாடுபலகையாகவும், ஐம்பொறிகளைச் சூதாடு கருவிகளாகவும், வலம் இடம் புருவமத்தி இம்மூன்றிடங்களையும் ஐம்பத்தொன்று அட்சரங்களையும் சூதாடுகருவியிலுள்ள அறை (கட்டங்)களாகவும், உயிர்களைக் கையாளாகவும் கொண்டு சூதாடுகின்றான். இவ்வண்ணம் ஆடும் இறைவனது மறைப்புச்சத்தியை எவராலும் அறிய முடியாது.

காமம் முதலாகிய சிறு செடிகள் (தூறு) சரீரத்திலிடமாக முளைத்துக் கிடக்கின்றன. அவைகளை அழித்துத் தூய்மைநெறியிலே செல்லும் வகைகளை அறிபவர்கள், ஏனையோர்களால் அன்புவைத்துப் போற்றப் படுபவர்கள் ஆவார்கள்.

மூலாதாரத்தில் நான்கு இதழ்களையுடைய தாமரை உள்ளது. பிராணவாயுவைக்கொண்டு சுழுமுனையாகிய ஏணியின்மீது ஏறி இறைவனை ஏறிட்டுக் கண்டால் எழுவகைப் பிறப்பையும் அறுக்கலாம். யோகப்பயிற்சியால் வைராக்கியம் (பாகல்) கிடைக்கும். தத்துவ ஆராய்ச்சியால் (புழுதியைத் தோண்டலால்) சிவம் (பூசனி) வெளிப்படும். வெளிப்பட்டதும் (தோட்டக் குடிகளான) இந்திரியாதி விஷயங்கள் ஓட்டம்பிடிக்கும். முடிவில் ஆன்மலாபம் (வாழைக்கனி) பெறலாம்.

ஐம்பூதங்களாகிய வித்திலிருந்து ஜீவன் என்னும் பயிர் முளையும். அது முளைய திருவருட்சத்தியென்னும் நிலம் (செய்) உண்டு. நிலமாகிய திருவருட்சத்தியின் தெளிவை அறிந்தவர்கள் ஐம்பூதவித்தில் மயக்கம் கொள்ளாமல் சிவத்தினிடத்தே மனதைச் செலுத்து வார்கள்.

சுழுத்தி, சொப்பனம், ஜாக்கிரம் என்னும் மூன்றி லும் இறைவன் கலந்துள்ளான். இம்மூன்று நிலையிலும் மனமாகிய வயலிலே தத்துவ ஆராய்ச்சியென்னும் உழவைச் செய்தால் சிவானந்தம் விளையும். இடைகலை பிங்கலை சுழுமுனையாகிய மூன்று நாடிகளின் மூலமாகப் பயிலும் பிராணவாயு ஏர் ஆகும். முக்கோண வடிவ மான மூலாதாரமே ஏரினால் உழப்படும் நிலமாகும். பிராணவாயுவைக் கிரமப்படிக் கட்டினால் நடுநாடி யாகிய வீணைத்தண்டுறப் பாயும். (உள்நாக்கினை ஒட்டி யுள்ள சிறு தொளையை அடைப்பவர்) நாவினை அணை யாகச் செய்து, காமம் முதலிய ஆறுபகைகளுமில்லாத யோகவயலில் உழவுசெய்தல் வேண்டும். பாசத்தின் வசப்பட்டு, களர்நிலத்தை உழுவதான பயனற்ற காரியத்தைப் புரிகின்றவர் அடுத்தடுத்துப் பிறவியை யெய்துவர்.

இடைகலையும் பிங்கலையும் இரண்டு ஏற்றங்களா கும். ஆறு ஆதாரங்கள், உச்சியிலுள்ள ஸஹஸ்ராரம் ஆக ஏழும் ஏழுகிணறுகளாகும். (மூத்தாளாகிய) இடை நாடியான சந்திரகலையால் இரேசகமும், (இளையாளாகிய) பிங்கலை நாடியான சூரியகலையால் பூரகமும், நடுநாடி யின் வழியாகக் கும்பகமும் செய்தால், பிராணவாயு வானது நாடிகளின் வழியாகப் பாயும். அவ்வண்ணம்

செய்யாவிட்டால் பிராண வாயுவானது பாழாய்விடும். (சரீரமும் விரைவில் அழியும்.)

(பட்டிப் பசுக்களாகிய) ஆன்ம தத்துவங்கள் இருபத்துநான்காகும். (குட்டிப்பசுக்களாகிய)வித்தியா தத்துவங்கள் ஏழும், சிவதத்துவங்கள் ஐந்தும் ஆகப் பன்னிரண்டும் அளவில்லாத பாலைச் சொரிந்தாலும் (அகமுகவாயிலாக வரும் இன்பங்கள் அளவில்லனவா யிருந்தாலும்) ஆன்மாவுக்குப் பட்டிப்பசுக்களே (புற முக நாட்டமே) வாய்த்ததாகும். உயிர்கள், புலன் களின் வாயிலாக இன்பம்பெற (ஈற்றுப் பசுக்களாகிய) இருபத்துநான்கு தத்துவங்கள் உள்ளன. (ஊற்றுப் பசுக்களாகிய) வித்தியா தத்துவங்கள் ஏழும் தரும் அறிவு, உயர்வுபெற்றதாகும். ஆகவே, அதற்கு ஒரு குடம் பால் போதுமானதாகும். (காற்றுப் பசுக்களா கிய) தசவாயுக்களின்வாயிலாக உயிர், இன்பம் பெறும் போது (மாற்றுப் பசுக்களாகிய) ஐம்புல இன்பங்கள் உயிரை வந்து தொடராது.

ஜீவனது தேகத்தின் உச்சியிலுள்ள கபாலத்தில் அரும்புபோலுள்ள அமிழ்த ஊற்றானது செம்பாலாக வழிந்தது. (அது, ஆயிரம் இதழுடைய தாமரையாகும்). பிரணவம் உள்ளே அடங்க, பஞ்சாட்சரத்தில் அந்த அமிழ்தினை, உயிரானது தடுத்துத் தனதாக்கிக்கொண் டது. (நெல்) அரிக்கட்டுகள் உண்டாவதற்கு உரிய தான நாற்றங்காலாகிய வயல்போன்றதான துன்பம் நிறைந்துள்ள உடலினிடத்தில், வெளியில் திரிகின்ற நான்கு விரற்கடை அளவுள்ள மூச்சுக் காற்றையும் (பன்னிரண்டு அங்குல சுவாசத்தில் எட்டு விரற்கடை அளவுள்ள சுவாசம் மாத்திரம் பூரகம் செய்யப்படு கிறது.) வெளியே நிறுத்தாமல் உள்ளே நிறுத்தி,

மனத்தை (நல்லான்கறவை)யும் அப்பிராணவாயுவுடன் கூட்டினால் சுக்கிலமானது முத்திக்கு வித்தாகும்.

மனதைப்பண்படுத்தி, சுத்தவாதனையாகிய எருவை யிட்டு, மோனமாகிய வித்தினை நட்டால் ஞானமாகிய முளை தோன்றும். அம்முளையில் சிவானந்தமாகிய செந்நெல் பிறக்கும். அந்நெல்லால் பேரின்பமாகிய அமிழ்தச்சோற்றினைச் சமைத்து உண்ணலாம்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் மோட்சத்திற்கு வித்தாகும். அமிழ்தம் நிறைந்துள்ள கேணியும் மோட்சத்துக்கு வேண்டியுள்ளதே. இதனால் விளைந்த திருவடிஞானமாகிய அமிழ்தம், சரீரத்திலுள்ள சோம சூரிய அக்கினி என்னும் மூன்று மண்டலங்களிலும் நிறைந்து (விளைந்து) இருந்தது. சிறந்த வஞ்சிக்கொடியானது, களர் (உவர்) நிலத்தில் தோன்றியதால் அழிவை அடைதல்போல, பண்படாத நெஞ்சம் உள்ளவர்கள் பிறப்பிலேயே உழன்று இறப்பார்கள்.

சூக்ஷுமமான மனத்தினிடத்தில் சிவாக்கினியை வளர்த்து, அதனிடத்துப் பாசத்தை வைத்து அழிப்போமேயானால், சத்திநிபாதம் அடையலாம். அதனால், பேரின்பவீட்டில் இனிமையுடனும் வாழலாம். புருவ நடுவிலிருந்து ஒழுகும் அமிர்ததாரையை ஜீவன் நுகர்வதால் ஞானம் பெற்று அச்சிவன் ஆன்மலாபம் பெறுகிறது. அப்போது இறைவன், அவ்வுயிரினிடத்தில் தமது திருவருட்சத்தியைப் பதியவைக்கின்றான். பிரமனால் சிருட்டிக்கப்பட்ட உடலினிடத்தே ஐம்பொறிகளாகிய ஐந்து பசுக்கள் அடக்குவாரில்லாமல் வெறிகொண்டு திரிகின்றன. அவைகளை அடக்குகின்ற

இறைவனை அன்புடன் நினைத்தால் அவ்விறைவன் வெளிப்பட்டு அருள்புரிவான்.

பஞ்சப்பிராணனாகிய பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன்; ஞானேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆக ஐந்து; கன்மேந்திரியங்களாகிய வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஆக ஐந்து; புத்தி, சித்தம், அகங்காரம் மூன்று ஆக சேர்ந்து பதின்மூன்று; (பத்து-மூன்று, பதின்மூன்று.) இன்பம் துன்பமாக (தேமா) இரண்டு; நினைத்தல், படித்தல், புகழ்தல், தொண்டுசெய்தல், அருச்சனை, நட்டல், வந்தித்தல், ஆனந்தித்தல், தற்போதமிழத்தலாகிய (திப்பிலி) ஒன்பது. இவைகளனைத்தும் நம்வசப்படுமாயின், காமக்குரோதாதிகள் நம்மைவிட்டு அகலும். வைராக்கியத்தை நழுவவிட்டுவிட்டால் காமக்குரோதாதிகளை இறைவன் நம்மிடம் கொடுத்து (மூட்டி) விடுவான்.

சதாசிவத்தைத் தவிர வேறு எவராலும் எழுதப்படாத வேதப்பொருளை, கன்னியான மனோன்மனியானவள் தெளிந்து ஓதினள். பிறப்பு இறப்பு இல்லாத இறைவனது திருவடியாகிய மலரிலுள்ள தேனை உயிர் நுகருமேயானால், அவ்வுயிர் பேரின்பத்திலே மூழ்கியிருக்குமேயல்லாது மீண்டும் பிறவாது. இரேசகவாயுவும் பூரகவாயுவும் வீணாய்க்கழிகின்ற வாயுக்களாம். நான்குவிரற்கடை அளவுள்ள வாயுவே கும்பகத்தால் பயன் தருவதாகும். அப்போது ஞானேந்திரியங்கள் அழிவுபெறும். சரீரமும் விருத்தியடையும். (நீண்ட காலம் இருக்கும்.)

(மூங்கில் முளையாகிய) ஜீவனது மனத்திடத்தில் (வேம்பாகிய) சிவபிரான் எழுந்தருளியுள்ளான். சிவ

பிரானிடத்தில் திரோதானசத்தி இருக்கின்றது. மறைப்பாகிய அஞ்ஞானத்தை இறைவனது திருவருளால் போக்குவார் இல்லாததால் (வேம்பான) சிவமானது உயிருடன் சேராமல் பிரிந்து - வேறுபட்டிருக்கின்றது. (அஞ்ஞானம் நீங்கப்பெற்ற உயிருடன் இறைவன் கலந்திருப்பான்).

பத்து நாடிகள் (பத்துப் புலிகள்); பிருதிவி முதலான பூதங்களைந்து, சுவை முதலான ஐந்து, வாக்காதி ஐந்து ஆக பதினைந்து (யானை பதினைந்து); ஞானேந்திரியங்கள் ஐந்து (வித்தகர் ஐவர்); உடலில் ஊழியம்செய்பவர்களான (விநோதகர்) பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்ஜயன் என்னும் தசவாயுக்கள்; (ஈரெண்மர்: இரண்டும் - எட்டும், பத்து.) சத்துவம், ரஜஸ், தமஸ் (மூவர்): பிறத்தல், கற்றல், தேடல், கூடல், வாழ்வு, தாழ்வு என்னும் ஆறு (மருத்துவர் அறுவர்); ஐந்து அவஸ்தைகளான ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதிதம் (ஐவர்): ஆகிய இவைகளெல்லாம் உடம்பின்கண் அமர்ந்திருக்கின்றனவாம்.

இரேசக பூரகங்கள் (இரண்டு கடாக்கள்) உடம்பிலே உள்ளன. இவைகள் இரண்டையும் மேய்த்து நடத்துபவன் ஜிவன் (தொழும்பன்) ஆகும். இரேசக பூரகங்களை (இரண்டு கடாக்களை) இருத்திப் பிடித்தால் கும்பகம் (ஒரு கடா) ஆகும். மனத்தைப் பண்படச் செய்து பத்தியாகிய வலையினை அம்மனத்தில் விரித்தால் சிவம் (பருத்தி) அங்கு நிலைபெற்றிருக்கும். சிவம், சித்தத்தில் பொருந்தியதால் முக்குணங்கள் அழியும்.

அஞ்ஞானம் (கூகை), காமம் (பாம்பு), அறம் (கிளி), பாவம் (பூனை), சிற்றறிவு (நாகை), குரோதம் (பூழ்) ஆகிய இவைகள் சித்தத்துள்ளே உறைவன வாகும். சிற்றறிவை அஞ்ஞானமானது அடையும் போது ஜீவனானது (வெள்ளெலியானது) சிவனை அழைக்கும். (அத்தருணம் இறைவன் வெளிப்பட்டு அஞ்ஞானத்தை அடக்கி அருள்புரிவான்.) இதயத்தில் தோன்றும் தீய எண்ணங்களை அடக்க வேண்டும். உயிரானது தனது சித்தத்தில் இறைவனையே நினைந் திருந்தால், சார்ந்ததன் வண்ணமான ஜீவன் கொண்டு வந்த முக்குணங்கள் அழியும். மேலும், அஜ்ஜீவன், தேகத்திலே பற்றுவைத்தால் அம்முக்குணங்கள் நிலைத் திருக்கும். மாயைக்குப் பிறந்ததான முக்குணம் நீங்கும் வழி இவையாகும்.

சிவத்துடன் கலந்த உயிர், சூனியத்தைக் காணாது; அவ்வுயிரின் ஐம்புலன்களும் அடங்கி ஒழிந்தன. காமக் குரோதாதிகளான ஆறு பகைகளையும் அடக்கி ஒழுகி னால் (ஜீவ பர சிவ) முத்துரியத்தை உயிர் அடையும். ஆடை, சோறு, மூங்கிற்குழாயில் அடைக்கப்பட்ட எண்ணெய், கழுத்தணியாகிய காறை, அரைஞாண், கைவளையல் ஆகிய (நிலையற்ற மாயாகாரியப் பொருள்க ளாகிய) இவைகளில் பற்று வைக்கின்றவர்கள், கருக் குழியில் வீழ்ந்து துன்பம் அடைவார்கள்.

சிவசத்தியுடன் சேர்ந்து வாழுகின்ற இறைவனை நாமாக அறிய முடியாது; திருவருள் காட்டக் காண லாம். அறமும் பாவமும் (பருந்தும் கிளியும்) சுக துக் கங்களை உண்டாக்க மனம் முதலான அந்தக்கரணங் களையுடைய உயிருடன் பொருந்தின. பெருந்தவம்

செய்தால் முத்திப்பேருனது கிட்டும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவைகளோடு கூடியதான சுவை முதலான விஷயாதிகளை நீக்கிஞல் சிவானந்தப் பேறு கூடும்.

தெய்வநூற்பயிற்சி (இலை) இல்லை. பிரவிருத்தி யாகிய நோக்கம் (பூ) உண்டு. தத்துவ ஆராய்ச்சி (வண்டு) இல்லை. சத்தியம் - பேறு (தலை) இல்லை. சாதகம் (வேர்) உண்டு. ஆனல், முயற்சி (தாள்) இல்லை. சுவை முதலிய விஷயக்கூட்டம் (பூவின்குலை) இல்லை. சுகதுக்க அனுபவம் (கொய்யும் மலர்) உண்டு. ஆன்ம அனுபவம் (சூடும் தலை) இல்லை. ஜீவபோதம் கிளைத்துத் தோன்றுதலும் இல்லை.

ஜீவனிடத்தில் (அக்கரை) சிவத்தைக் (ஆல் - அமர் - அம் - ஆலமரம்) கண்டு வழிபட்டு வாழ்த்து வோர் பயனடைவர். (மிக்கவர்) வழிபடாதவர், ஐந்து வகையான (அவத்தை, அஸ்மிதை, இராகம், துவே ஷம், அபிநிவேசம் என்ற) துன்பத்துக்கே தக்கவராய்ப் பிறப்பிலேயே தாழ்ந்துகிடப்பார்கள். சிவோகம்பாவனை யால் உலக பந்தங்கள் நீங்கும். சங்கற்ப விகற்பங்கள் (வன்காடு இருகாதம்) அஞ்ஞானத்தால் உண்டாவன. காவல்செய்யும் இந்திரியக் கள்வர் (காப்பிடு கள்வர்) கலந்து நிற்கின்றனர். அவ்வைம்புலக் கள்வர்களை நீக்கி நிற்கும் சிவானந்த வெள்ளப் பெருக்குடைய (வெள்ளர்) அடியார்கள், ஜீவன்முத்தி நிலையினையுடை யவர்களாவார்கள். (அஞ்ஞானமும் இந்திரிய விஷயப் பற்றும் அற்றவர்கள் ஜீவன்முத்தர்கள்)

ஆன்மாவினிடத்தில் (குளத்திடை) சகலமும் கேவலமும் (கொட்டியும் ஆம்பலமும்) பூத்துக்

கிடந்தன. நாமமும் உருவமும் (எட்டியும் வேம்பும்) விடத்தக்கன. ஆதலால், சச்சிதானந்தத்தை அனுபவிக்க அறியாதவர்கள், உலக இன்பங்களாகிய துன்பங்களிலே இளைத்து வருந்துவார்கள். சத்தியும் சிவனும் (பெடைவண்டும் ஆண்வண்டும்) ஏவ, அதனால் பூமியில் பிறந்த (பீடிகை வண்ணக்குடை கொண்ட) ஜீவன் (பாசத்துக் கோலம் கொண்டான்) இழிந்த மனத்தால் (கடைவண்டு) சுக துக்கங்களை அனுபவிக்கும். (தான் உண்ணும்.) திருவருட்சத்தியால் (கண் கலந்திட்ட பெடைவண்டு) அவ்வுயிர் பேரின்பம் பெற்று வாழும். உயிர்களது உலகப்பற்றை நீக்கி, இறைவனது திருவடியிற் கூட்டி இன்புறவைப்பதே திருவருட்செயலாகும். அதன் பின், உயிரானது ஐம்புலக்காட்டைப் பண்படச்செய்யும் வகையினையறியும். திருவருள் கூடாத முன்பு அவ்வுயிர், ஏதும் அறியாது.

வலது மூக்கிலே (தட்டத்து நீரிலே) இரேசகம் (தாமரை) பூத்தது. இடது மூக்கிலே (குட்டத்துநீரில்) பூரகம் (குவளை) எழுந்தது. வலது மூக்கினைப் பிங்கலை என்றும், இடது மூக்கினை இடைகலை என்றும் சொல்லப்படும். நடுநாடியுள் (விட்டத்துள்) கும்பகம் (விளங்க) செய்பவர்கள் பேரின்பவீட்டைப் பெறுவார்கள். காமம் குரோதம் முதலான ஆறு பறவைகள், ஐம்பூதங்களாலாகிய உடம்பின்கண் உள்ளன. மனவெழுச்சியாகிய முயற்சியிலே (நுனிக்கொம்பிலே) பல எண்ணங்கள்(நூறு பறவைகள்) உள்ளன. (கேவலம், சகலம், ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும்) ஏழு பதிகளையும் கடந்தபின் மோட்சம் பெறலாம்.

ஜீவபோதத்தை அடக்கிச் சிவபோதத்தில் இணைத்தால் பேரின்பநிலை மிகும். அந்நிலையைக் கட்டுப்படுத்தி நிலைக்கச்செய்தால் சிவப்பேரொளி எல்லோரிடமும் பொருந்திநிற்கும். பஞ்சபூதங்களின் சேர்க்கையாகிய உடல், இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயமாகும். (ஆலயம் - ஆன்மா சிவத்துடன் இலயிக்கும் இடம்.) உடம்பில் அமைந்த பொறி புலன்கள் மயக்கமுற்றுத் தீய மார்க்கத்தில் செல்லக்கூடாது. அப்படிச் செல்ல நேர்ந்தால், அவ்வுயிர் முன் ஜன்மங்களில் செய்து கொண்ட வினைக்கீடாக நிகழ்வதாகும். இந்திரிய நுகர்ச்சியால் ஏற்படும் பயனே சுக துக்கம் (தாலி இரண்டு) ஆகும். சுக துக்கங்களுக்கும் இந்திரியநுகர்ச்சிக்கும் மேம்பட்ட வலிமையுடையது ஆசை (பாரை) ஆகும். இம்மூன்றைக் காட்டிலும் மிக மேலான வலிமையுடையது திருவருட்சத்தியின் சம்பந்தமாகும்

மாறிமாறி வருகின்ற (கயல்) உலகநிலையைக் கண்டவர், தமக்கு நேரும் பிறப்பு இறப்பினைக் கண்டு கொண்டே இருப்பர். தவத்தால் அடையக்கூடிய இறைவனை, சரியை கிரியை யோகம் ஆகிய இவைகளை யுடையவர் (மூவர்) அடைவார்கள். சமயச் சண்டைகளை நேசமாகக் கொண்டவர்கள், பாசவலையில் கட்டுண்டு பிறப்பினில் உழல்வார்கள். மறைப்பொருளாக உள்ள பிரானைக்கண்ட ஆன்மா, மலம் நீங்கப்பெற்றுச் சிவத்துடன் கலக்கும். ஆன்மாக்களினது சித்தமாகிய குளத்திலே அறிவு என்னும் கோரையானது எழுந்து இருந்தது. ஆரை என்னும் ஆசைச் செடியானது அறிவினைப் படர்ந்து மூடியிருந்தது. (தன்பொருட்டு) மீன்களை உணவாக்கிக்கொள்ள, காலம் பார்த்து நிற்கும் கொக்கைப்போல் அல்லாமல் இறைவன்,

ஆன்மாக்களின் நன்மைக்காகவே பக்குவம் அடையும் காலத்தே உள்ளத்துள்ளே நின்று காத்துக்கொண் டிருப்பான்.

ஓம் என்னும் பிரணவத்துள்ளே அகரமும் உகரமும் மூன்றுமாத்திரை அளவுள்ளன ஆகும். 'ம்' என்னும் ஒன்று அரைமாத்திரை ஆகும். மாத்திரை குறையாமல் ஓதுகின்றவர்கள், வெகுவிரைவில் முத்தியுலகு அடைவார்கள். தவம் கைவரப்பெறும் காலத்தில் ஞானம் மேலோங்கி நிற்கும்; திருவருட்சத்தி பதியும்; மூவகை வினைகளும் சுக துக்கங்களைக் கொடுக்காது; இறைவனும் அத்தருணம் தவறாது வெளிப்பட்டு அருள்புரிவான்.

வெளிவரும் பன்னிரண்டங்குலப் பிராணவாயுவில் வெளியே நிற்கும் நான்கு அங்குலத்தையும் உள்ளே நிறுத்துகின்றவன், பஞ்சேந்திரியங்களையும் வென்றவனுவன். அவனுக்குச் சிவானந்தம் பெருகும். தோணியாகிய உடலைப்பொருந்தித் தொடர்ந்து உலகமாகிய சம்சாரக்கடலில் புகுந்து மறப்பு நினைப்பாகிய வியாபாரங்களைச் செய்துவரும் ஒருவன், (மகளிர்பால் மனதைச் செலுத்தக்கூடாது) மகளிர்பால் மனதைச் செலுத்துவானுயின், சஞ்சலிக்கும் தன்மையுடைய மனத்தில் மாயாகாரியப் பொருள்களனைத்தும் (நச்சுக் கனிபோன்று) நிற்கும். (ஆகவே, அவைகளை இறைவன் திருவருளால் நீக்கப்படவேண்டும்.)

முக்குணவழியில் ஜாக்கிர சொப்பன சுழுத்தி என்னும் மூன்று நிலைகள் உள்ளன. தவத்தினுல் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்கள் பக்குவமாயின. பக்குவப்பட்ட ஆன்மாக்கள் மேம்பட்டன

ஆகும். அப்படிப்பட்ட ஆன்மாக்களே மாதர்போகத்தில் அகப்படாமல் சிவானந்தம் பருகி, அடியார்குழாத்தின் நடுவுள் இருப்பார்கள். (அவர்கட்கு) தோற்றமும் விசேஷமும் பொருந்திய உலக சம்பந்தம் அறியும்; சிவானந்தம் கிட்டும்; நினைப்பும் மறப்பும் அற்று 'அதுவே தாறய்' நிற்கும் நிலையில், ஞானேந்திரியமும் கன்மேந்திரியமும் தாறுகவே அகலும். இவ்வெற்றியின் காரணமாக - அடையாளமாக சங்கொலி முழங்கும் - கேட்கும்.

தோல்வி, வெற்றி, அடக்கம், அடங்காமை ஆகிய இவைகள் அற்பமான மன எண்ணங்களில் நிறைந்து கிடந்தன. அவைகளில் ஈடுபடாது சிவத்தினிடமாக மனத்தைச் செலுத்தினுல் - நிறுத்தினுல் அஞ்ஞானத்தைப் போக்கலாம். தவத்தினுல் எழுந்ததான மொட்டாகிய சிவானந்தம் உள்ளது. யான் எனது என்னும் பற்றினை நீக்கினுல் (மொட்டும் மலரும்) சிவானந்தம் வெளிப்படும். மனதை, பற்றில்வையாது பந்தம்விட்டவருக்கே முத்தி கிட்டும்.

மனம் ஒடுங்கியகாலத்தே இறைவன், சித்தத்துள் புகுந்து வெளிப்படுவன். (இதனைத் திருவருள் பெருதவர்கள் அறியமாட்டார்கள்.) இந்திரியச் சேட்டைகள் அடங்கியதும் சிவானந்தப் பேரின்பப் பெருவெள்ளம் பெருகிநிற்கும். இந்திரியவசப்பட்ட சித்தத்திலே சிவன் நிற்கமாட்டான். அஞ்ஞானத்தையுடைய ஜீவன், சிவகுருவை அடைந்து, உலகினுக்கு முக்குணமாயையே காரணம் என்று அறிந்து தெளிகின்றபோது, குரங்கினையொத்த மனம் அடங்கி நிற்கும். மனத்தை அடக்கும் தன்மையுடையவன் சிவத்தன்மையடைந்தவனுவான்.

இருவினையொப்பால் வந்த இன்பத் துன்பங்கள் சரீரத்தில் இடம்பெற்றுள்ளன. இன்பத்தைக்காட்டி லும் துன்பம் மிகக் கொடியதாகும். இன்பத் துன்பங் கள் இரண்டினையும் சமமாக நோக்கினால், சிவம், ஜீவ னது மனத்தில் இடங்கொண்டு வாழும். (அதனால் ஜீவ னும் வாழும்.) ஐம்புல அனுபவியாகிய ஜீவன், தான் பெற்ற போகங்களாலும் செல்வங்களாலும் அடையும் பயன் யாது? என்றால், பிறந்து இறந்து உழல்வதே யல்லாமல் வேறொருபயனும் இல்லையாம். புகழ்பெற்ற வனுடைய உள்ளத்தே இன்பம் உண்டாகும். இரேசக பூரக கும்பகங்களில் பயிற்சிபெற்றவர்க்குப் பேரின்பம் உண்டாவதோடு தசவித நாதங்களில் சங்க நாதமும் உண்டாகும். காமம் முதலான குற்றங்களையும் ஆசை களையும் ஒழித்தவர்களுக்குப் பிறவி கிடையாது.

இந்திரியங்களில் செல்லும் விருப்பம், உள்ளே புகுகின்ற எட்டு மாத்திரையளவுள்ள பிராணன், அத் துடன் நான்கு விரற்கடையளவான பிராணன் ஆகிய இவைகளை அடக்கினால் மெய்ஞ்ஞான வெற்றி பெற லாம். ஆன்மாக்களினது உள்ளத்திலே (குளத்திடை) ஆசை (பாசி) படர்ந்திருந்தது. அவ்வாசையுள்ளத் துடன் சேர்ந்திருக்கின்ற ஜீவன், இந்திரிய விஷயங்களை ஆய்ந்து அனுபவிக்கும்போது வைராக்கியமானது வழித்துணையாகச் செல்லும். அப்போது, உயிர்களின் சித்தத்துள்ளபாசமானது அழியும். இந்திரியச்சேட்டை கள் ஒழிந்த மனத்தில் (கும்பமலைமேல்) ஓர் இன்பம் (கொம்பு) உண்டு. அவ்வின்பத்துக்கு அப்பாலும் (காற்று) இன்ப உணர்ச்சியும் இருக்கின்றது. ஞான மயமான ஆன்மா (பூ)வின் இதயத்தினுள் வண்டாகிய இறைவன் கலந்து நின்று இன்புறுத்துவான்.

கும்பகம் செய்யும்போது ஐம்புலச் சேட்டைகள் அடங்கும்; முத்தியுலகமும் கிட்டும். அருளைப் பொழி கின்ற சிவம் அகத்தும் புறத்தும் விளங்க, அஞ்ஞா னம் நீங்கி ஞான ஒளிபெற்ற தவப்பேறுடையவர்கள் வாழும் இடம் இந்நிலவுலகமாகும். (தவவொழுக்கம் உடையவர் அஞ்ஞான இருளிலிருந்து நீங்கி ஞான வொளி பெற்று, உள்ளும் புறமும் சிவத்தைக் காண் பார்கள்.) ஜீவர்கள், விருப்பு வெறுப்புக்களினின்றும் விடுதலையடைய, ஆகம சாஸ்திரங்களைச் சிவகுரு வானவர் அவ்வுயிர்களுக்கு உபதேசிப்பார். அதனால், ஜீவர்கள் பிறவியடையாமல் பேரின்பம் அடைவர்.

சமாதி கலையின் உள்ளம் வெளியிலே செல்லும். அதுவல்லாமல் கிரியாமார்க்கத்தையும் (நோன்பு பூஜை இவைகளையும்) மேற்கொள்ளும்; அதனால் எவ்வித பிர யோஜனமுமில்லை. சிவகுருவைத் தியானித்தால் அவர், துணைபுரிவார். அதனால் சமாதி கைகூடும். அஞ்ஞான இருள் கெட்டது என்று, அனுபவங்களாகிய புட்கள் ஒலித்தும் அறியாமையுடைய புலம்பர்கள், ஐம்புல நுகர்வாகிய பெண்களுடன் சேர்ந்து இன்பம் அனுப விக்கின்றார்கள். அப்படிப்பட்ட புலம்பர்கட்கு விடிதல் என்பதே இல்லை. (பிறவியிலேயே உழல்வார்கள்.)

சரீரமாகிய தோணியானது உண்மையுணர்வாரை முத்தித்துறையில் சேர்க்கும். மனத்தை அழுத்தி இந் திரியங்கள் தங்கள் வேலைக்கு ஆரம்பித்ததும், (அஞ் ஞானத்தை வாங்கிக்கொண்டு ஞானத்தை அளிப்பதா கிய) வியாபாரம் செய்யும் சிவகுருவானவர் வெளிப் பட்டு அருள்புரிவர். அஞ்ஞானம் கெட்ட ஜீவன் சிவனாகும்.

18. மோனசமாதி

(2936—2953)

மோன சமாதியினைப் பயில்கின்றவர்கள், அதில் நின்று இருந்து கிடந்தார் என இல்லாமல்,எப்போதும் அச்சமாதியைப் பயில்வார்கள். சித்தமாகிய மன்றத்திலே - மோனசமாதியிலே மறைப்பொருளாகிய பரமசிவன் எழுந்தருளியிருக்கின்றான். சமாதிகூடியவர்கள், அவ்விறைவனுடன் கலந்திருப்பார்கள். அப்பாற்பட்டதான இறைவனை அடையும்நெறியினை ஏட்டில் எழுதி வைத்துக்கொண்டால் எவ்விதமான பயனும் இல்லை. அது, ஆட்டின்கழுத்தில் தொங்கும் அதர் போலவாம். குரு உபதேசப்படி ஒழுகினால் அல்லாமல் இறைவனை அடையமுடியாது. பதி பசு பாச உணர்ச்சியுடையவர்களுக்கு உலக உண்மை தோன்றும்; (மூவகைத்) துன்பங்களுமில்லை. அவ்வுணர்வுடையார்கள், பதியை அறியும் காலத்தில் முப்பொருள்களின் உண்மைநிலையைக் கண்டவர்களாவார்கள்.

மறக்குந்தொழிலையும் மாயா சரீரத்தையும் உடையவன் ஜீவன். என்றும் பிறவாதவனும் பேரருளும் திருவருட்சத்தியையும் உடையவன் இறைவன். சிவயோக சமாதியில் அஜ்ஜீவனுடன் இறைவன் அமைந்திருப்பான் - பொருந்தியிருப்பான். ஜோதி வடிவினனை இறைவன், (ஜீவ சிவ பரம் என்னும்) முத்துரியங்களையும், துரியாதீதத்தையும், நினைப்பு மறப்பினையும் கடந்து நின்று, சொல்லமுடியாத அனுபவத்தினுள்ளே நீங்காது நிற்பவன் ஆவன். உடம்பினுள் இறைவனைக் கண்டு அறிகின்றவர்கள் எவருமில்லை. எட்டுத் திக்கிலுள்ளவர்களனைவரும் இறைவனை வணங்குகின்றனர்.

அண்டங்களைக்கடந்து அளவிலாத பேரின்பத் தொண்டர்கள், அவ்விறைவனை உள்ளத்துள்ளே கண்டு அனுபவித்த துறையை நம்மால் அறியமுடியாது. இறைவனை, காதலர்கள் மருவி அனுபவித்த காம இன்பத்தினைப்போல, உணர்வினால் அறிவதாகும்.

அகக்கண்ணாகிய திருவருட்கண்ணால் - உணர்வினால் அனுபவமாகக் காண்பதே நிலைத்த பேரின்பமாகும். உப்பானது நீரினில் கலந்து ஒன்றாய் நிற்குமாறுபோல, இறைவனும் ஆன்மாவுடன் அணைந்து இரண்டும் ஒன்றாகும். எட்டிப்பழம் பார்ப்பதற்கு அழகாயிருந்தாலும் அதைத்தின்றால் கொல்லும். (உலகமானது, தன்பால் பற்றுவைத்தவர்களைப் பிறவியில் ஆழ்த்தும்.) பருவம் அடைந்த பெண்ணினது இன்பத்தினை அவளது கணவனே அறிவான். அதுபோலச் சிவத்தை வழிபட்டவர்களே சிவத்தால் அளிக்கப்படும் பேரின்பத்தினை அனுபவிப்பார்கள்.

இறைவன், இதய நடுவிலே எழுந்தருளிய பிறகு யோகமும் சமாதியும் கழிந்து - ஒழிந்துவிடும். மணிபூரகத் தானத்திலே உள்ள ஒளிப்பிழம்பாகிய இறைவனை உள்ளத்தால் நோக்கினால் அவ்விறைவனுடன் கலந்துகொள்ளலாம். தனித்திருந்து படபடப்பு (பதறுதல்) இல்லாமல் ஆராய்ந்தும் பஞ்சாட்சர ஜபம் செய்தும் இருந்தால் பாழாகிய மாயை அகலும். அது அகன்றதும் சிவத்தில் ஒடுங்கலாம்.

இறைவனை மனத்தால் இடையறாது தியானித்திருப்போரது இதயத்தில் அவ்விறைவனும் விளங்குவான். அல்லாதார்பால் கூடான். காம இன்பத்தை

நுகர்வதற்கு இருந்தவர்களாகிய பெண்களினுடைய வாய்மொழிகளைக் கேட்டதும் விரைவிலே காமம் வெளிப்படுவதுபோல, இவ்வுலகைத் துன்பம் என்று வெறுத்த பக்குவப்பட்டவர்கள், இறைவனது திருவடியைப் போற்றி வாழ்த்தி வாழ்வார்கள். அதனை இறைவன் கண்டு அவர்களுக்குப் பேரின்பமளிப்பான்.

தேகம், பொருள், மாமிசம், உயிர், பஞ்சபூதங்கள், (நினைப்பு மறப்பினையுடைய) மனம் ஆகிய இவைகளெல்லாம் அழிந்தபின், ஜீவபோதமும் அழிந்ததை நான் (திருமூலர்) அறியவில்லையே! நினைப்பும் மறப்பும் அற்றால், பொருள்களுள் சத்துப் பொருளாய் விளங்கும் சிவத்துடன் விளங்கலாம். இறைவனும் ஆட்கொள்வான்; உள்ளத்துள்ளே நின்று மோகத்தை அழித்து வீட்டின்பத்தையும் அருளுவான். ஒருமுகப்பட்டு, பரம்பொருளையும் சிவகதியினையும் தத்துவ ஞானத்தையும் அறிந்தேன்; பல யுகங்களையும் கண்டேன். (திருமூலர் கண்டார்.)

19. வரையுரை காட்சி

(2954—2956)

ஆன்மா பற்று அற்றபின் இறைவனையே பற்றல் வேண்டும். அவ்வான்மா சிவமானபின், நினைப்பதற்கு வேறொன்றுமே இல்லை. காமத்தை வென்றபின், கண்ணால் கண்டு மகிழ்வது எதுவுமில்லை. (சிவனுருவைத் தவிர) சொல்லிறந்துநின்ற பரம்பொருளை, சொல்லலாம் என்று கூறுகின்ற அறிவிலிகளே! எல்லையற்றதாகிய பொருளை எல்லைகண்டு கூறமுடியாது. தெளிந்த நீர் போன்றுள்ள மாசற்ற சிந்தையினுள்ளே இறைவன்

வெளிப்படுவான். இறைவனை மறவாத மனத்தை யுடையவர்களுக்கு மாயையும் மாயையால் ஏற்பட்ட தன்முனைப்பும் அழியும். தன்னை (ஆன்மாவை) உணர்தலே தத்துவ உணர்வாகும்.

20. அணைந்தோர் தன்மை

(2957—2981)

இறைவனை, ஞானத்தினாலே உறுதியாக அன்புடன் மனத்தின்கண்ணே பதித்துவைப்பவர்களுக்கு மலம், மாசு, மானாபிமானம், குலம், குணங்கள், நலம் ஆகிய இவைகள் எவையும் இல்லையாம். சிவ தரிசனத்தால் பிறவியை ஒழிக்கலாம்; பாசத்தினின்றும் விடுபடலாம்; கடவுளுடன் ஒன்றாகலாம். பிறந்து இறந்து அலைய வேண்டுவதில்லை.

பேரின்பமாகிய அனுபவ வீட்டின்கண் இனிய கரும்பின் சாறு, அமுது, கட்டி, சோலையின் நடுவில் தண்ணீர் ஆகிய இவைகள் உள்ளன. உலக மாதா வைச்சார்ந்த அடியார்க்கு யாதொரு குறைவும் இல்லை யாம். சிவபிரான், ஆன்மாவின் சிந்தையுள்ளே - நாட்டத்துள்ளே புகுந்துவிடுவானாயின் பொறி, புலன், கரணங்கள் ஆகிய இவை அனைத்தும் ஆன்மாவைக் கட்டுப்படுத்தாவாம். எவரிடத்தும் அணுகாது சிறந்த வாழ்வு வாழலாம்.

இறைவன் திருவருள்பெற்றால் வினை மாயைகளைப் பாசம் என்று தெளியலாம்; சிவகதி அடையும் நிலையினை அறியலாம்; ஞான வாளினால் வினைகளை அழிக்கலாம்; உடம்பினையும் அழிந்துபடுமாறு செய்யலாம்.

பின், பேரின்பம் அடைய முந்தலாம். உலகினுக்குத் தெய்வம் ஒன்றேயாம். அத்தெய்வமே உயிருமாகி நிற்கின்றது. நமச்சிவாயம் என்ற பழத்தைத் தின்றால் இனிக்கும். (அனுபவத்தால் பேரின்பம் அடையலாம்.) இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட உயிரானது யான் எனது என்னும் தியக்கை - செருக்கை அற்று வீடு பெறும். சிவானந்தம் பெற்றவர்களது பரிசுத்தமான உள்ளமே இறைவனது இருப்பிடமாகும்.

அன்பு ஒன்றினாலேயே இறைவனை அறியலாம். அன்னையுடனும் அத்தனுடனும் உயிர் கூடப்பெற்றால், அவர்களுடைய பரிபூரணத்தில் - நிறைவில் நின்று அவர்கள் இருவரையும் அவ்வுயிர் அறியும். இறைவன் உயிரின் வசப்பட்டால் உலகத்தார்களும் தேவர்களும் அவ்வுயிரின் வசப்படுவார்கள். இயமதூதர்கள் வந்தால் ஞானவாளால், அவர்கள் ஓட்டம் பிடிக்கும்படி வீச லாம். சிவகணங்கள் வந்தால், அவர்களுடன் மோட்ச உலகம் செல்லலாம். பிறப்பிற்குக் காரணமான இரு வினைகளையும் அறுத்தவர்களுக்குப் பகைவரே இல்லை யாகும்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர், மும்மலங்களை யும் அழித்தவராவர்; சிவமும் ஆவார்; மலபந்தங்களில் அழுந்தமாட்டார்கள். சொல், பொருள் ஆக இவ் விரண்டும் பரவிந்துவாகிய மாயாகாரியம் என்று கருது பவர்கள், சமயச்சண்டைகளையும்விட்டு ஒழிவர். நினைப் பும் மறப்பும் இல்லாதவர்களது நெஞ்சமானது, வினைப் பற்றறுக்கும் நெஞ்சமாகும். அந்நெஞ்சகத்தில் இறை வன் விளங்கி நிற்பான். இறைவனை நாடி நிலைக்கவல்ல வன் என்றும் ஒரேநிலையை உடையவனாவான்.

சிவபிரானை அழைத்தால் உடனே எழுந்தருளி வந்து காட்சியளிப்பான். அப்பிரானே நம்மை ஆட்கொள்பவனும் ஆவான். மனத்தால் இடைவிடாது இறைவனது திருவடிகளைத் துதித்திருப்போமானால், நமது பிறப்பு அடியோடு அறும்; ஐவகை மலங்களும் அழியும். இறைவன் தேவர்குழாத்துடன் எழுந்தருளி வந்து நமது பசு பாசத்தன்மைகளை அறுத்தருளுவான். அவனே நமது தந்தையுமாவான்; நமதுள்ளத்துள்ளேயும் பொருந்தி நிற்கின்றவனும் ஆவான்.

உண்டலும் உறங்கலும் கலந்துள்ள இச்சரீரத்தில் தோன்றுதலும் நினைத்தலும் ஆகிய சிற்றின்பத்தினை மனம் விரும்பி ஆனந்தமாக அனுபவித்தது. அவ்வின்பங்கள் அழியுந்தன்மையுடையன என்று தெளிந்ததும், உண்டலாகிய கரும்பும் உறங்கலாகிய தேனும் முறையே கைத்துப் புளித்தன (உண்டலும் உறங்கலும் ஒழிந்தன). நாம் செய்வன அனைத்தும் சிவன் செயல் என்று காண்போமானால், கருவினை - கருநிலை அடையாது சிவநிலையடையலாம். இறைவனை அன்பால் மனமுருகியும் அழுதும் முறையிடுதலாகிய அரற்றுதலையும் புரியவேண்டும். மற்றும், ஊடுதலையும் உணர்தலையும் மேற்கொள்ளல் வேண்டும். திருவடியின்பத்தில் நிலைத்த மனம், திருவருட்டன்மையில் விரிந்தநிலை நீங்கப்பெற்று, திருவடியில் குவிந்து ஒடுங்கும்; மோன நிலையும் அடையும்.

21. தோத்திரம்

(2982—3025)

இறைவனைக்காண வெளியில் எங்கும்நாடி அலைய வேண்டுவதில்லை. நமது சரீரத்துள்ளேயே இறைவனைக்

கண்டுகொள்ளலாம். மனத்திலே எழுந்தருளியிருக்கின்ற இறைவனுடைய பெருமையை - திருநாமத்தை ஸ்ரீகண்ட ருத்திரரும் நந்திதேவரும் பாடினார்கள். இறைவனைக் காணாது அரற்றுகின்றவர்களை, உலகம் பித்தன் என்று பேசும் - ஏசும். புண்ணியமூர்த்தியும், எல்லாம் அறிபவனும், அடியார்களது நெஞ்சினுள்ளே புகுந்து நின்றவனும் ஆகிய இறைவனைப் போற்றுகின்றேன். (திருமூலர்.)

இறைவன், உயிர்களின் தூலக்கண்ணுள் புகாதவன்; உள்ளத் தாமரையிலே இருப்பவன்; ஞானக் கண்ணுடையோர்களுக்குப் புலப்படுபவன்; தத்துவ ஞானம் உணர்ந்தோரது மனத்தில் வீற்றிருப்பவன். அவனது புகழை இசையின்மூலமாகக் கேட்டு நின்றேன். (திருமூலர்.) ஆயிரம் நாமத்தால் இறைவனை வழிபட்டால் அளவில்லாத இன்பம் பெறலாம். பெரும் வேள்வி செய்தவர்கள், தாம் விரும்பிய அனைத்தையும் பெற்று விருப்பம் அடங்கினவர்களாவார்கள். சரியையிற் சரியை முதலாக உள்ள பதினாறு வகைகளால் தொண்டினைச் செய்து இறைவனை நாடல் வேண்டும். ஆறுதாரங்களின் வழியே பிராணவாயுவின் மூலமாகச் சென்று, அங்குள்ள ஆதாரங்களின் அதிட்டான தெய்வங்களை வழிபடுகின்றவர் சிவானந்தம் பெறுவர்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அடியார்கள் பெறும் பேரின்பம், இந்திரன் முதலானவர்கள் வேண்டினாலும் அவர்களுக்குக் கிடைக்காவாம். (இந்திராதியர்கள் அடைவது மாதர் போகம் மாத்திரமே ஆகும்.) எண்ணங்களால் கலக்கம் அடைந்த மனத்தையுடையவர்கள், சிவத்தன்மையை அறியமாட்டார்கள். சித்தம்

கலங்காது தெளிந்திருந்தால் சிவம் வெளிப்படும்-அருளும். இறைவன், உண்மையடியார்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்குவான். தேவாதிதேவனாகிய சிவபிரானை நாடித் தினமும் தொழுதால், செயல் மாளப்பெற்றுப் பேரின்பம் அனுபவிக்கலாம்.

செயல் மாளப்பெறுவதால் மயக்க உணர்ச்சியில்லாது ஒழியும். காமம் முதலான பகைகளுடன் திரிகின்ற மக்களைச் சிவன், தத்துவ உபதேசம்செய்து உண்மை வழியைக் காட்டுகின்ற வள்ளலாவான். இறைவன், தன்னைக் கள்ளப்பெருமக்கள் காண்பார்களா என்று ஒளித்து நிற்கின்றவன்.

இறைவனைத் தினமும் வழிபட்டுச் சன்மார்க்கத்தில் நின்றவர்களை நாளும் கோளும் வந்தடையாவாம். மேலும், அவ்வடியார்களுக்குக் கண்ணினும் மனத்தினும் வந்து அருள்புரிவான். தொண்டினால் இறைவனை வாழ்த்துகின்ற அடியவர்களுக்கு, அவனது திருவடி வீரசொர்க்கமும் சிவவுலகமும் தீர்த்தமுமாக ஆகும். முக்குணங்களையும் அறுப்பவன் சிவபிரான். ஆனந்த சொரூபியாகிய அப்பிரானது திருவடியைப் பற்றி நின்றேன். (திருமூலர்.)

சிவபிரான், பிரமனுக்குப் பிரமனாகவும், சிவலோகமாகவும், தோத்திரத்திற்குரியவனாகவும், அருளையளிப்பவனாகவும், எல்லாவற்றிற்கும் முடிவானவனாகவும் ஆவான். மேலும், தேவாதிதேவன்; மாதவரின் உள்ளத்துள்ளும் அடியாரது உள்ளத்தும் உள்ளவன்; ஐச்வரியமுடையவன்; பஞ்சகிருத்தியம் செய்பவன்; உயிருடன் கலந்திருப்பவன்; நஞ்சுண்ட கண்டன்; பதினான்கு

உலகங்களுக்கும் தலைவன்; பிறப்பில்லாதவன்; திருக் கயிலையிலுள்ளவன்; பஞ்சாட்சர வேந்தன்; உலகத்தி லுள்ள உயிர்கள், மண், காற்று, தீ, சூரியன், சந்திரன், ஆகாயம், மழை ஆகிய இவைகளுடன் கலந்தும், இவைகளைத் தொழிற்படுத்தியும் நிற்கின்றவன்; முடி விறந்து நிற்பவனாயினும் கலப்புத்தன்மையால் அது வதுவாய் நிற்பவன்; தன்னால் படைக்கப்பட்ட எல்லா வுலகத்துக்கும் தானே பராபரன்; தானே குருவாக வந்து உயிர்களுக்கு நன்னெறியை அருளுகின்றவன். இவை அனைத்தும் அவ்விறைவனுடைய திருவருள் மாண்பாகும்.

சிவலோகமே இறைவனது திருவடியாகும். திரு மேனியே எழுலகமாகும். திருவடி, பாதாளம் ஏழி னுக்கும் அப்பாற்பட்டதாகும். இதனைத் தெளிவில்லா தவர்கள் உணரமாட்டார்கள். ஆதிப் பிரானாகவும், நம்பெருமானாகவும், ஜோதிப்பிரானாகவும், முச்சுடரா கவும், மேல் கீழ் அண்டங்களுக்கெல்லாம் அப்பாற் பட்டவனாகவும் உள்ளவன் சிவபிரான். அப்பிரானே, நம் இதயத்துள்ளும் நின்றருளுள்கின்றான். அப்படிப் பட்ட இறைவனது திருவடியினைக் காணுந்தோறும் தொண்டர்கள், அளவிலா இன்பத்தை அடைகின்ற னர் - அடைவார்கள்.

எல்லா உலகத்தையும் திருவருட்கண்ணால் நோக் கம் செய்து உலகமுழுவதும் வியாபித்து நின்றனன் இறைவன். மேலும், பயனுள்ளவைகளையும் படைத் தருளினான். உலகில் ஞானகுருவாய் விளங்குபவனும், பலவூழிகளைப் புரிந்தருளுகின்றவனும், உலகங்களைத் தாங்கிக் காத்து அருளுகின்றவனும், ஆண்மையுள்ள

இடபத்தையுடையவனும், அனைவராலும் போற்றப் படுபவனும், ஆதாரமும் ஓசையும் ஓசை ஒடுக்கமுமாக உள்ளவனும் சிவபிரானேயாவன். அப்பிரானே பெருந் தெய்வம். அவனே எல்லாப் பொருள்களினிடத்தும் கலந்து நின்று அருள்புரிகின்ருன்.

எல்லாத் திக்குகளிலும் நிறைந்து இருக்கும் பிரா னுக்கு, வேருகத் தனியிடம் ஒன்றுளது என்று கூறு வது மிகையாகும். சிவாக்கினியில் சேரும் பொருள்க ளனைத்தும் ஆதிப்பிரானிடத்திலே தோன்றி நின்று ஒடுங்குவனவாம். இடை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று கலைகளையும் கடந்து அப்பாலுள்ள சிவபிரா னைப் பணிந்து தியானிக்கின்றவர்களுக்குப் பிறக்கும் வினையில்லை. அவர்கள், தேவர்களாலும் துதிக்கப்படு வார்கள். மேலும், அவர்களுக்கு அறியாமையில்லை. அவர்களது உள்ளத்தே இறைவன் குடிகொள்வான்.

இறைவன், என்னுடைய (திருமூலர்) சஞ்சித ஆகாமிய பிராரத்த வினைகளின் வன்மையை அறுத்து ஆட்கொண்டான். ஞானிகளுக்குத் தெரிபவனுதலால் இல்லாதவனும் அல்லன்; அஞ்ஞானிகளுக்குத் தெரி யாதவனுதலால் உள்ளவனும் அல்லன். கல்லையொத்த கடினநெஞ்சமுடையாரையும் உருகவைக்கும் தோற்ற முடையவன், தொன்மையிலுள்ளவன், தூயோன், திரிபு இல்லாதவன், மாசிலாமணி, ஜோதி வடிவினன், ஆகிய இறைவன், நம்மையெல்லாம் தொடர்ந்துநின்று அருளுகின்றவன் ஆவான். தேவர்களும் அசுரர்களும் துதித்து இறைவனது திருவடிகளைத் தினமும் வழிபா டியற்றுவார்கள். இன்பப்பெருக்கு உடையவர்கள், அகத்தும் புறத்தும் ஊன் உயிர் வேறுபாடுசெய்து

வாழ்த்தி வணங்குவார்கள். அவர்களுக்கு இறைவன் வெளிப்பட்டு அருள்புரிவான்.

இறைவன் சர்வ வியாபி; புலன்களுக்கு அப்பாற் பட்டவன்; உணர்வாக உள்நின்று பேரின்பப் பெரு வாழ்வை உயிர்கள் அனுபவிக்கச்செய்யும் தன்மையன் ஆவன். சிவத்தின் ஒளி பலவாம். அன்பர்களது மன வொளி எவ்வண்ணமோ அவ்வண்ணமே இறைவன். நல்வழியில் நில்லாத கொடுமையர்கள் எவ்வண்ணமோ அவ்வண்ணமே பாவமும். இவைகளைப் புறத்தே கண் டும், மக்கள் இறைவனை வழிபடுவதில்லை. அறிவாயும், நுண்ணறிவாயும், எல்லாவற்றோடும் கூடியதாயும், அறிதற்கு நுண்ணியதாயும், உணர்வாயும், உடலாயும், உலகாயும் நிறைந்து நின்று அருள்பவன் சிவபிரான். அப்பிரான், தனது முடிவிலாற்றலால் ஏழுலகங்களைத் தாங்கி நிற்பவன். அணுவுக்கும் அணுவானவன். அவ னது முடிவிலாற்றலுக்கு எட்டு மலைகளும் சப்த சாகரங்களும் இணையாகாவாம்.

எத்தன்மையுடையவரைக் காட்டிலும் மேலான பெருமையுடையவன் இறைவன். அவன் அற்பசரீரத் தையுடைய ஆன்மாவின் உள்ளத்தே கலந்திருப்பவன். தேவர்களாலும் அளவிட்டுக் கூறமுடியாத அளப்பரிய காட்சியன். அவனே மகாதேவன். தன்னைத் தானே உயிர்களுக்கு அறியப்படுத்தும் அருளுடையோனும் ஆவன். ஆலமரத்துக்கு ஒப்பான உடம்பில் சித்த வைராக்கியம் என்னும் முளை கிளம்பிற்று. (அது வளர்ச்சி அடைந்து மரமானபின்) அதிலிருந்து ஆனந்த மாகிய காய் காய்த்தது. பின், அக்காய் சிவபோகமாகிய மாங்கனியாகப் பழுத்தது. அதனைத் திருவருட்பேறு

உடையோர் உண்டனர். மூடர்களால் அக்கனியை உண்ணமுடியாது. ஆதலால், அவர்கள் பிறப்புட்பட்டு துன்பத்துள் அழுந்துகின்றார்கள் - அழுந்துவார்கள்.

22. சர்வவியாபி

(3026—3046)

இறைவனது வியாபகத்துள் அடங்கியிருக்கும் உயிருக்குத் தன்முனைப்பறும்; சிவானந்தம் உண்டாகும்; நிலையுடையனவற்றையும் நிலையற்றனவற்றையும் ஆய்ந்தறியும் அறிவுண்டாகும்; தேகமும் தன்வசம் அடையும். இறைவனை நம்முடைய சிற்றறிவால் அறிய முடியாது. மேலோர் சென்ற ஞானயோக நெறியே செல்லுவோமானால் பூரணம் - வியாபகம் பெறலாம். துன்பம் நிறைந்த உலகத்தில் உடம்போடுகூடி வாழும் உயிர்கள், ஆன்மசித்தொளியால் ஆராய்ந்தால் உடலுக்குள் எழுந்தருளியிருக்கும் தேவனை, இடைவிடாது வரும் அலைபோல எப்போதும் தவறாமல் காணலாம்.

சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் வடிவாகக் கொண்டுள்ள இறைவன், அன்பர்களை விரும்பிச் சென்று, அவர்களுடன் அணுவாகவும் கலந்திருக்கின்றான். தேகாபிமானத்தால் இருவினைவசமாக உழன்று பின், தன்னை வந்து அடைந்தவர்களையும் மன்னித்து அருள்செய்வான். மேலும், அவ்விறைவன் விருப்பு வெறுப்பு அற்ற தவமுடையார்களது உள்ளத்திலும் ஒளியாக விளங்குவான். பொருள்களுக்கெல்லாம் மேலானவனாய் எங்கும் வியாபித்துள்ள இறைவன் ஆஞ்ஞையில் (புருவநடுவில்) நினைத்தவண்ணமாய் இருப்பவர்களுக்கு, அவர்கள் கருதிய வடிவமாகவே

நின்று அருள்புரிவான். கீழே உள்ள எந்தப்பொருளை யும் ஆகாயத்திலிருந்தே வெகு எளிதில் காணும் கருடனைப்போல, இறைவனும் எவ்விடத்துமுள்ள அடியார்களுடைய வினைகளை நீக்கி அருள்புரிவான்.

இறைவன், செயற்கை அறிவு ஒருசிறிதுமில்லாத புண்ணியன்; உயிர்களைவிட்டு நீங்காத பெருமையன். விலைக்கு (கூலிக்கு) வேதத்தை ஓதும் வேதியருக்கு மறைந்துள்ளவன்; எங்கும் வியாபித்துள்ளவன்; மேல் ஏழு உலகங்களுக்கும் அப்பாற்பட்டவன்; (உலகில்) ஏழு கடல்களுக்கும் இப்பாற்பட்டவன்; திருவருள் தன்மையே அவனுடைய அழியாப் பெருமையாகும். இருநூற்று இருபத்துநான்கு புவனங்களுக்கும் சிவ பிரானே முதல்வன்; ஜீவ வர்க்கங்களைச் செலுத்து பவன். உள்ளத்துள்ளே இருந்து இயங்குகின்ற பிராண னும், ஆகாயத்தில் விளங்கும் சூரியனும், பூமியில் உலவும் காற்றும், அன்பர்கள் தமது உள்ளத்துள் வைத்துக் கருதுகின்ற பொருளும் அப்பிரானே ஆவன்.

எட்டுத் திக்குகளிலுமுள்ள அண்டங்கள், பாதாளங்கள் ஆகிய இவைகளுடன் தோன்றித் தன்னிடத்தில் ஒடுங்க, தான் காரணமாக நின்றுளன் இறைவன். மேலும், ஜீவர்களின் அறிவு ஸ்ரூபமானவன். முழு முதலான பழையோன். எப்பிரமாணத்தாலும் அறிய முடியாதவன். புவனங்களில் வியாபித்தவன். பஞ்சபூத காரியமான உடம்பினுள் நின்ற ஜீவனில் பொருந்திய ஜோதியாவன். அழியாத்தன்மையன்.

திருமூலரால் அருளிச் செய்யப்பட்ட மூவாயிரம் பாடலும், முந்நூறு மந்திரமும், முப்பது உபதேசமும் ஆக மூன்றும் ஒன்றேயாம்.

23. வாழ்த்து

(3047)

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

இறைவனது திருவடி வாழ்க. உயிர்களின் மலங்களைப் போக்கும் அவனது பதம் வாழ்க. உண்மை ஞானத்தவனது தாள் வாழ்க. இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கினவனது பாதம் வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

ஒன்பதாம் தந்திரம் முற்றிற்று

திருமந்திரக்கருத்து முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்